1. 2009

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து இசைத் தமிழ் வெளியீடு–XX.

அறம் வளர்த்தான்

இயற்றிய

# பாரதசங்கிரகம்

—:o:—

பதிப்பாசிரியர்:

வித்துவான்

திரு. க. வெள்ளை வாரணனார் அவர்கள்

WITH COURAGE AND FAITH

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால்

வெளியிடப்பெற்றது.

1954

## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பரத சாத்திரம் | 1— 96 |
| 2. | சதுராங்கப் பிரத்தாரசார அந்தாதி | 97—120 |
| 3. | தாண்டவம் நிலக்கடை | 121—125 |
| 4. | இராகம் முப்பத்திரண்டுக்கும் விருத்தம் | 125, 126 |
| 5. | வங்கிய இலக்கணம் | 127—129 |
| 6. | மத்தள இலக்கணம் | 130, 131 |
| 7. | அஷ்டகணம் | 132, 133 |
| 8. | தாண்டவம் பதினாறு | 134—142 |
| 9. | பதினெண் தேசம் | 143—145 |
| 10. | பொருத்த வியல்பு | 146—150 |
| 11. | முதன்மொழிக்குச் சீராவன | 151 |
| 12. | தேவதை ரூப அவினயம் | 152—160 |
| 13. | இராகம் முப்பத்திரண்டுக்கும் வெண்பா | 161, 162 |
| 14. | பிரம்பு லட்சணம் முதலியன | 163—165 |
| 15. | தாளவியல் | 166—186 |
| | செய்யுள் முதற்குறிப்பகராதி | 187— |

# முகவுரை

பரத சங்கிரகமென்னும் இந்நூல் நாட்டிய சாத்திரமாகிய பரதத்தின் இலக்கணத்தினைத் தொகுத்துச் சுருக்கிக்கூறுவது. சங்கிரகம்—சுருக்கம். இதனைப் 'பரதசார சங்கிரகம்' என இந் நூற் பாயிரம் குறிப்பிடுகின்றது. இந்நூலிற் கூறப்படும் பொருள்கள் இயலிசைநாடகமாகிய முத்தமிழ்க்கும் தொடர் புடையனவாகக் காணப்படுகின்றன. பரத நாட்டியத்தின் இயல்பினைச் சிறப்புமுறையில் விரித்துரைக்குமுகமாக அதற் குத் துணையாகிய இயற்றமிழ்க் குறிப்புக்களும் இசைத்தமி ழிலக்கணங்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, சூத்திரமாகிய நூற்பா என் னும் யாப்புவகைகளால் இயன்றதாகும். இதற்குத் தெளிவான உரையொன்றும் அமைந்துளது.

இந்நூலின் முதற்கண் பரதத்தின் தோற்றம், தெய்வசபை, நட்டுவன் இலக்கணம், மத்தளம் முழக்குவோன் இலக்கணம், பாடுவான் இயல்பு, பாடும் முறை, நடனமாதர் இயல்பு, அன் னோர் ஆடும் இயல்பு, அரங்கின் இலக்கணம், தேவாரப் பண், தத்துவ வகை, இசையின் தோற்றம், எழுத்துக்களின் பிறப்பு முறை, ஏழிசை உற்பத்தி, இராக உற்பத்தி, முப்பத்திரண்டு இராகங்கள், மங்கலப் பண் என்பன சங்கீதரத்நாகர லக்ஷண மாகக் கூறப்பெற்றுள்ளன. இவற்றையடுத்துத் தோற் கருவிகளின் இலக்கணமும், வங்கியத்தின் இலக்கணமும் தாளத் துக்குரிய மாத்திரை இலக்கணமும், எழுவகை நிருத்தமும், தாளங்களுக்குரிய தசப்பிராணன்களும் குறிக்கப்பெற்றுள் ளன. இவற்றுடன் பரதசாத்திரத்தின் பொது இலக்கணம் நிறைவுபெறுகிறது. இப்பகுதியை யடுத்துச் சதுராங்கப்

பிரத்தாரம் என்னும் பகுதி அமைந்துளது. இஃது எழுபத்தெட்டுக் கட்டளைக் கலித்துறைகளாலியன்றது. இதன்கண் ஒன்றுமுதல் நாற்பத்தைந்து வரையுள்ள பாடல்களுக்கு உரையுளது. ஏனைய பாடல்களுக்கு உரையில்லை. இப்பகுதி தாள சம்பந்தமான ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவதாகும்.

இதனை யடுத்துத் தாண்டவம், நிலக்கடை என்னும் பகுதி காணப்படுகிறது. இதன்கண் நட்டுவர்கள் கையாளும் தாளச் சதி, தரு நாட்டியம், தீர்மானம் என்பனவும் சுத்த நாடக இலக்கணமும் இடம்பெற்றுள்ளன. இவற்றை யடுத்து முப்பத்திரண்டு இராகங்களும் நான்கு செய்யுட்களால் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. பின் வங்கியத்தின் இலக்கணம், மத்தள இலக்கணம், அஷ்டகணம், தாண்டவம் பதினாறுக்கும் தருவும் தாளமும் வெண்பாவும் ஆகிய குறிப்புக்கள், பதினெண் தேசம், பொருத்த இயல்பு என்பன கூறப்பட்டுள்ளன. இவற்றின் பின் தேவதைரூப அவிநயம் என்ற பகுதி நாற்பத்திரண்டு சூத்திரங்களால் விளக்கப்பெற்றுளது. இந்நூல் நூற்றறுபத்தைந்தாம் பக்கத்துடன் முடிகின்றது. இதனையடுத்துத் தாளவியல் என்னும் பகுதி காணப்படுகின்றது. இதன்கண் கணபதிக்குரிய காப்புச் செய்யுள் ஒன்றுள்ளது. பின்னர், நூற்றெட்டுத் தாளங்களுக்கும், அன்னியதாளங்கள் முப்பத்திரண்டுக்கும் உரிய மாத்திரையும், அங்கங்களின் அடையாளங்களும் தரப்பெற்றுள்ளன. இப்பகுதி தாள இலக்கணங்களைத் தெளிவாக அறிந்து கொள்ளுதற்குப் பெரிதும் துணை செய்வதாகும்.

இங்கு எடுத்துக் காட்டிய இப்பகுதிகள் யாவும் நமக்குக் கிடைத்த பரதசங்கிரகத்தின் ஏட்டுச்சுவடிகள் இரண்டிலும் இங்குக் குறித்த முறையே பிறழாது அமைந்துள்ளன. இவ்வமைப்பு முறையினை நோக்குங்கால் பரதசங்கிரக நூலாசிரியரே இத் தாள இலக்கணத்தினையும் இயற்றியவர் என்பதும்,

இவையனைத்தும் சேர்ந்த தொகுப்பே பரதசங்கிரகமாகிய இந் நூல் என்பதும் நன்கு பெறப்படும்.

இந்நூலகத்தே தேவதைரூப அவினயத்தின் முடிவில் சிறப்புப் பாயிரச்செய்யுள் ஒன்று காணப்படுகின்றது. இப் பகுதி அவினயக் கிரந்தம் என்னும் பெயருடையது என்றும், இதனை யியற்றிய ஆசிரியர் அறம் வளர்த்தான் என்னும் பெய ருடையவர் என்றும், இவரே முற்கூறிய 'பரதசார சங்கிரகம்' என்ற நூலை யியற்றினர் என்றும், இவர் செய்த வேறு நூல்கள் அனுட்டானவிதி, தத்துவரூபம் முதலியன என்றும் அச்சிறப்புப் பாயிரம் கூறுகின்றது.

"சந்ததமும் புரியும் அனுஷ்டானவிதி யின்பூசைத் தத்துவரூபம்
செந்தமிழின் விருத்தமுமுன் சேர்பரத விரிவனைத்தும்
[தேர்ந்து பொன்னின்
அந்தமெனப் பரதசார சங்கிரகந் தன்னொடுவி னயக்கிரந்தம்
நந்திசெய் தறம்வளர்த்தான் ஆசிரியத் தாற்புவிமேல்
[நாட்டினனே".

என்பது அச்சிறப்புப் பாயிரப் பாடலாகும். நாடோறும் செய்தற்குரிய கடமைகளை விளக்கும் அனுட்டானவிதி என்னும் நூலையும், அவ்விதிப்படி செய்தற்குரிய சிவபூசை முறை, தத்துவரூபம் என்னும் பொருள்பற்றிய செந்தமிழ்விருத்தப் பாடல்களையும் முன்னுள்ள பரதசாத்திரத்தின் விரிவினை ஆராய்ந்து வியாழனாகிய தேவகுருவின் துணிபு இதுவென்று சொல்லும்படி பரதநாட்டியத்தின் சாரமாகிய பரதசார சங்கிரகம் என்ற நூலுடன் தேவதைரூப அவினயத்தை விளக் கும் அவினயக் கிரந்தம் என்ற இந்நூலையும் ஆசிரியப் பாவினாற் செய்து, பண்டை நாளில் நந்திதேவர் அருளிய முறையே அறம் வளர்த்தான் என்னும் பெயருடைய பெரியோன் இவ்

வுலகில் நிலைபெறச் செய்தான் என இச்சிறப்புப் பாயிரம் கூறுதல் காண்க.

இதனால், பரத சங்கிரகம் என்னும் இந்நூலை யியற்றிய ஆசிரியர் அறம் வளர்த்தான் என்னும் பெயருடையவர் என்பது நன்கு புலனாகின்றது. இவர் தாம் சொல்லக்கருதிய பரதநூற் பொருளை வடமொழியில் சார்ங்கதேவர் என்னும் ஆசிரியர் இயற்றிய சங்கீதரத்னாகரம் என்னும் நூலை யடியொற்றி விரித்துரைக்கின்றார். இச்செய்தி இந்நூலின் உரைப் பகுதியால் நன்கு புலனாகின்றது. இவ்வாசிரியர் தமக்கு முன்னிருந்த நூலாசியர்கள் கூறிய பொருள்களைத் தம் நூலில் எடுத்தாள்வதோடு அவர்தம் நூலிலுள்ள செய்யுட்களையும் சூத்திரங்களையும் அவ்வாறே எடுத்தாண்டுள்ளார். இம்முறையில் தாளசமுத்திர நூலிலுள்ள வெண்பாக்கள் சிலவும், சிதம்பரப் பாட்டியலிலுள்ள பொருத்த இலக்கணம் பற்றிய விருத்தப்பாக்கள் சிலவும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இவ்வாசிரியர் சிதம்பரப் பாட்டியலை எடுத்தாளுதலால், அந்நூலாசிரியராகிய பரஞ்சோதியார் வாழ்ந்த காலமாகிய கி. பி. பதினாறும் நூற்றாண்டிற்குப் பிற்பட்டு வாழ்ந்தவராதல் வேண்டும். இவர் இந்நூலில் முப்பத்திரண்டு இராகங்களைக் குறித்ததன்றிப் பிற்காலத்தில் வேங்கடமகி என்பார் வகுத்துரைத்த எழுபத்திரண்டு மேளகர்த்தா இராகங்களை யாண்டுங் குறிப்பிடவில்லை. வேங்கடமகி யென்பார் பதினாறும் நூற்றாண்டின் இறுதியிலும் பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தஞ்சை நாயக்க மன்னர்களின் பிரதானியாயிருந்த கோவிந்த தீக்ஷிதரின் புதல்வராவர். இவர், தாம் இயற்றிய சதுர்தண்டிப் பிரகாசிகையிலே எழுபத்திரண்டு மேளகர்த்தாக்களை வகுத்துரைத்துள்ளார். இவர் வகுத்த

எழுபத்திரண்டு மேளராகங்களைப் பற்றி இப் பரதசங்கிரக நூலாசிரியர் குறிப்பிடாமையால், இவ்வாசிரியர் பதினேழாம் நூற்றுண்டில் வாழ்ந்த வேங்கடமகி யென்பார்க்குச் சிறிது காலத்தால் முற்பட்டவராதல் வேண்டும். என்பது பெறப்படும். எனவே, இப்பரத சங்கிரக நூலாசிரியர் காலம் கி. பி. பதினேழாம் நூற்றுண்டின் முற்பகுதியெனக் கொள்ளுதல் பொருத்த முடையதாகும்.

பரதசங்கிரகமாகிய இந்நூலின் அமைப்பினையும், உரையமைதியினையும் இந்நூலாசிரியர் இயற்றிய ஏனைய நூல்களின் பொருளமைதியையும் நோக்குங்கால், இவர் சிவவழிபாட்டு முறைகளை நன்குணர்ந்த நல்ல சைவரென்பதும், கொங்கு நாட்டில் வாழ்ந்தவரென்பதும், வடமொழியும் தமிழும் நன்கு பயின்றவர் என்பதும். நாட்டிய சாத்திரத்தின் இயல்பினை அனுபவமுறையில் கற்றுத் தெளிந்தவரென்பதும் நன்கு புலனும்.

இந்நூலை வெளியிடுதற்கு அடிப்படையாயமைந்த ஏட்டுச் சுவடிகள் இரண்டு, இச்சுவடிகளை நம் பல்கலைக் கழக இசை நூல் வெளியீட்டுக் குழுவினரிடம் அன்புகூர்ந்து கொடுத்துதவியவர் தமிழ்க் கலைக்களஞ்சியப் பதிப்பாசிரியராகிய திருவாளர் ம. ப. பெரியசாமித் தூரன் அவர்களாவர். அவர்கள் இவ்வேடுகளை ஈரோடு செங்குந்தர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியராகிய திருவாளர் தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களிடமிருந்து வாங்கி நம் பல்கலைக் கழகத்திற்குத் தந்தார்கள். இப்பிரதிகள் இரண்டனுள் ஒருபிரதிதான் தொடர்ந்து படித்தற்குரிய வகையில் இருந்தது. அதிலும் எழுத்துச் சிதைந்து விடுபட்ட இடங்கள் சில. மற்றொரு பிரதி மிகவும் பழுதுபட்டு முறிந்து காணப்பட்டது, எனினும் முதற் பிரதியிலுள்ள

நூலுருவத்தை உள்ளவாறு ஒப்பிட்டு உணர்ந்து கொள்ளுதற்கு இரண்டாவது பிரதியாகிய இஃது ஓரளவு துணைசெய்தது. சில ஆண்டுகள் கழிந்தால் இப்பிரதிகள் சிறிதும் பயன்பட மாட்டா. இந்நிலையில் இந்நூலை வெளியிடும்படி இப்பிரதிகளைப் பல்கலைக்கழகத்திற்குக் கொடுத்துதவிய முற்கூறிய அன்பர்களுக்கு நம் நன்றி உரியதாகும். இவ்விரு பிரதிகளையும் கருத்தூன்றிப் படித்து இந்நூலைப் படியெடுத்தேன். பின்னர் ஏடெழுதுவோர் மரபின்படி நேர்ந்த வழுக்களை நீக்கி, இதனை வெளியிடுதற்குரிய வகையில் ஓரளவு திருத்தஞ் செய்தேன். எனினும் மேலும் திருத்த முறுதற்குரிய இடங்கள் பலவுள. வேறு சுவடிகள் கிடைத்தால் இந்நூல் மேலும் திருத்தமடைதல் கூடும்.

இந்நூலிலுள்ள செய்யுட்களும், உரைப்பகுதியும் தமிழ்ப் புலவர்களால் சிறப்பாகப் பாராட்டத்தக்க சொல்வளம் உடையனவல்ல, இஃதொரு தொகுப்பு நூல். இதன் முறைவைப்பும் அவ்வளவு சிறப்பாகத் தோன்றவில்லை. எனினும் பரதநூற் பொருளை அனுபவ முறையில் தெரிந்து கொள்வதற்கு இந்நூல் பெரிதும் துணை செய்யுமென்பது உறுதி. நமக்குக் கிடைத்துள்ள தமிழ் நூல்களில் நாட்டிய சாத்திரத்தின் இலக்கணங் கூறும் பழைய தமிழ்நூல் சிலப்பதிகாரமும் அதன் உரைப்பகுதியுமே யாகும். பிற்காலத்தில் இப்பொருள்பற்றித் தோன்றிய தமிழ்நூல் அரபத்த நாவலர் இயற்றிய பரத சாத்திரமாகும். மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்களின் நூல் நிலையத்திலிருந்து அண்மையில் அடையாறு கலாக்ஷேத்திரத்தாரால் வெளியிடப்பெற்ற பரத சேனாபதியம் என்னும் நூல் நாட்டிய சாத்திரத்தின் அமைப்பினைக் குறித்து ஓரளவே விளக்குகின்றது. இங்ஙனம் பரத நாட்டியத்தின் இயல்புரைக்கும் தமிழ்நூல்கள் அருகிக்

காணப்படுவதால் இத்துறையை ஒருவாறு விரித்துக் கூறுவதாகிய இப் பரதசங்கிரகத்தினை வெளியிடுதல் பரதநூற் பொருள் பற்றிய ஆராய்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிவதாகும் என்னும் நம்பிக்கையால் இந்நூல் பல்கலைக் கழகப் பதிப்பாக வெளிவருகின்றது. இந்நூற் பொருளோடு ஒத்த தமிழ்நூற் குறிப்புக்கள் இந்நூலின் அடிக்குறிப்பாகத் தரப் பெற்றுள்ளன. முத்தமிழ் வளர்ச்சியிற் கருத்துடைய இயவிசைப் புலவர்களும், ஆராய்ச்சியாளர்களும் இந் நூற்பதிப்பிலுள்ள குற்றங்களை நீக்கி நற்பொருள்களை உவந்தேற்றுக் கொள்வார்களாக. இந்நூலை வெளியிட்டுதவிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார்க்கும் இவ்வெளியீட்டிற்குப் பல்லாற்றானும் உதவிபுரிந்த பெரியோர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர்
1—1—1954.

க. வெள்ளைவாரணன்.

உ

# பரதசங்கிரகம்.

## தெய்வவணக்கம்

சற்பனபா டைக்குமிக்க தாம்பரத சங்கிரகம் [1]
உற்பனம தாக [2] முன்னூ லோர்ந்தெடுத்துப்—
பொற்புறவே
சேர்ப்பதற் [3] கிங் காறுமுகச் செவ்வேளு மைங்கரனும்
காப்புமலர் வாணியருட் கண் [4]

சங்கரன் நடம்புரி தருமரங்கத் தொகை
ஐங்கரன் பதமல ரடியிணை காப்பே. [5]

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா. +

---

1. நன்கு இயல்வதாகிய மொழிநடையின்கண் மிக்க சிறப்புடைய பண்ணும் இராகமும் தாளமும் விளக்குவது பரத சங்கிரகம் என்னும் சுருக்க நூலாகும். சர்ப்ப என்னும் வட சொல் 'விரைந்து நட' என்னும் பொருளுடையதாகலின் 'சற்பனபாடை' என்பதற்கு நன்கு இயல்வதாகிய மொழிநடை எனப் பொருள்கொள்க.

2. விரைவில் அறிந்துகொள்ளுதற்கேற்றதாக.

3. முன்னைய நூல்களில் உள்ளவற்றை ஆராய்ந்தெடுத்து அழகுபெற ஒரு நூலாகத் தொகுத்தமைத்தற்கு.

4. செவ்வேளும் ஐங்கரனும் மலர்வாணியும் ஆகிய இவர்களுடைய அருட்கண் காப்பு என முடிக்க.

5. இறைவன் திருநடம்புரியும் இயல்பினை விளக்கும் அரங்கத் தொகையாகிய இந்நூலுக்கு மூத்த பிள்ளையார் திருவடிகள் பாதுகாவலாகும் என்பது பொருள்.

+ இஃது, ஔவையார் பாடிய நல்வழியிலுள்ள கடவுள் வாழ்த்துப் பாடலாகும்.

## நூல்

மன்னும் பிரமத்தில் வானுகி வானில்
வளியாய் வளியதனிற்
றன்னி லழலா யழலின் சலமாய்ச்
சலத்தின் தாரணியாய்ச்
சொன்ன விதனில் மருந்தாகித்
தோற்று மருந்தி லன்னமதாய்
அன்னந் தன்னிற் றுவக்காகி
யாறுதாது வாயினவாம்.

இதன் பொருள்.—நிலைபெற்ற பிரமத்திலே ஆகாசந் தோன்றி, ஆகாசத்தில் வாயு தோன்றி, வாயுவினில் அக்கினி தோன்றி, அக்கினியில் அப்புத் தோன்றி, அப்புவிற் பிருதிவி தோன்றிப், பிருதிவியில் பயிர் தோன்றிப், பயிரில் அன்னந் தோன்றி, அன்னத்தில் தோல் தோன்றித், தோலில் இரத்தந் தோன்றி, இரத்தத்தில் இறைச்சி தோன்றி, இறைச்சியில் மேதை தோன்றி, மேதையில் எலும்பு தோன்றி, எலும்பிலே நரம்பு தோன்றிற்று என்றவாறு. (க)

### பூமித்தோற்றம்

தற்பரமாய்ச் சச்சிவமாய்ச் சத்தியாய் நாதவிந்து
அற்புதமாய்ச் சதாசிவமா யாதிமகேச ருருத்திரராய்ப்
பற்பலமால் வேதன் படைத்தண்டங் காலனலாய்க்
கற்புறவே யப்பாகிக் காசினியாய் வந்தனவாம்.

இ-ள்.—பராபரத்திற் பரந் தோன்றிப் பரத்திற் சிவந் தோன்றிச் சிவத்திற் சத்திதோன்றிச் சத்தியில் நாதந் தோன்றி நாதத்தில் விந்து தோன்றி விந்துவிற் சதாசிவந் தோன்றிச் சதாசிவத்திற் மகேசுரந் தோன்றி மகேசுரத்தில் உருத்திரந் தோன்றி உருத்திரனில் விட்டுணு தோன்றி விட்டுணுவில் பிரமா தோன்றிப் பிரமாவில் ஆகாசந் தோன்றி ஆகாசத்தில் வாயு தோன்றி, வாயுவில் அக்கினிதோன்றி அக்கினியில் அப்புத் தோன்றி அப்புவிற் பூமி தோன்றிற்று. எ-று. (உ)

---

உ. இவ்வாசிரியர் கூறும் பூமித் தோற்றம் சைவ நூல்களுடன் ஒப்புநோக்கி ஆராயத் தகுவதாம்.

பூமிக்காதாரம்

அப்புமேற் கூர்மன் அதன்மேலே அட்டகெசஞ்
செப்பரிய பஞ்சமுகச் சேடனுமாய்—அப்போது
முன்னூல்தேர் மாலயனு மூவர்முதற் சங்கரனும்
பன்னுக மீதுவைத்தான் பார்.

இ-ள்.—ஏக சமுத்திரமாகிய சலத்தின்மேலே கூர்மன், கூர்மன் ஆதாரமாக அட்டகெசம், ஐந்து தலையினையுடைய அட்டநாகம், இதன் நடுவே ஆயிரம் பணமுடியுடைய சேடன், அதன்மேலே பூமி. எ—று. (௩)

உயிர்த்தோற்றவகை

ஊர்வ பதினொன்றும் ஒன்பது மானுடவர்[1]
நீர்பறவை நாற்காலாம் நேர்பத்து[2]—சீரிய
பந்தமாந் தேவர் பதினு லயன்படைத்த
அந்தமில்சீர்த் தாவரநா லைந்து.

---

௩. மண்மகள் தன்னை நீண்ட மலைகளோ ரெட்டுந் தாங்கும்
திண்ணிய கிரிகள்தம்மைத் திறல்கரி யெட்டுந்தாங்கும்
நண்ணுமக் கரிகள்தம்மை நயன்றலை நாகந்தாங்கும்
அண்ணன்மா நாகந்தன்னை ஆதார சத்தி தாங்கும். (௧)

சத்தியைக் கூர்மந் தாங்கும் தகைபெறு கூர்மந்தன்னைச்
சித்தியு முத்தியான சீர்பெறு சிவமே தாங்கும்
இத்தகை யாகின்ற இருநில மகளை நாளும்
பத்தியா இருகை கூப்பிப் பணிந்து வந்தனை
செய்வோமே. (௨)

[பரத சாஸ்திரம் ஒழிபியல்]

என அரபத்த நாவலர் கூறுவது இப்பகுதியொடு சிறிது வேறுபட்டுள்ளமை காண்க.

1. மானுடம்-பா. வே. 2. நீர்பறவை நாற்காலோர் பப்பத்துச். பா. வே.

இ-ள்.—ஊருகிற சீவன் பதினொரு நூறுயிரம் பேதம், மனிதர் ஒன்பது நூறுயிரம் பேதம், பறக்கின்ற பட்சி பத்து நூறுயிரம் பேதம், நாற்கால் மிருகம் பத்துநூறுயிரம் பேதம், நீர்வாழ்சாதி பத்துநூறுயிரம் பேதம், தேவர்கள் பதினுன்கு நூறுயிரம் பேதம், தாவரமாவன இருபது நூறுயிரம் பேதம், ஆக எண்பத்து நான்கு நூறுயிரம் வர்க்கச் சீவாத்துமாவையும் பிரமதேவன் படைத்தான்.—எ-று. (௪)

நாட்டியபரதம்

கடவுள ரிறந்து செல்லுங் காலமுங் கழிந்து கற்றைச்
சடிலசங் காரமூர்த்தி தாண்டவம் புரியத் தையல்
உடனமர்ந் திசைகள் கூற [1] வோதிய புவனமெல்லாம்
படருமுத் தமிழதாகிப் பரதமுண்டாயிற்றன்றே.

இ-ள். பராபர வத்துவினுடைய திருவிளையாடலாகிறது. பிரமா விட்டுணு உருத்திரன் முதலாகிய தேவாதிகளனைவரும் அண்ட பகிரெண்ட பெலங்களும் பெரும்புறக்கடல் முதலாகிய தோற்றமனைத்தும் இற்றகாலத்துக் கற்றைச் சடையினையுடைய சங்காரமூர்த்தியாகிறவர் அந்திகால வேளையிலே நடனஞ் செய்யவேணுமென்று சிந்தித்தபோது ஆதிபரையாகிற மாதா சங்காரமூர்த்தியி லுற்பவித்து இசைகள் கூற அப்பொழுது சங்காரமூர்த்தியாயிருக்கிறவர் நடனம்புரிய வந்த காலங்களிலே பரதமுண்டாயிற்று எ-று. (௫)

---

௪ 'எழு பிறப்புந் தியவை தீண்டா' எனவரும் ௬௨-ம் திருக்குறளுரையில் பரிமேலழகரால் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளது இச்செய்யுளாகும். இவ்வுரை மேற்கோளையே பரத சங்கிரக நூலாசிரியர் தம் நூலிற் சேர்த்துக்கொண்டுள்ளார்.

௫ 1. தேவர் முதலிய எல்லா உயிர்களும் ஏனைப்பொருள்களும் தம் நிலைகுலைந்து அழிதற்குரிய ஊழிக்காலத்தே சிவபெருமான் பலவடிவுகளையும் மீண்டு தன்னிடத்தே ஒடுக்கிக்கொண்டு கொடு கொட்டி என்னும் கூத்தை ஆடியருள்வார் எனவும் அந்நிலையில் உமையம்மையார் அக்கூத்துக்கேற்பச் சீர் முதலிய தாளங்களைத் தருவார் எனவும் கலித்தொகை கடவுள் வாழ்த்துப்பாடல் கூறும்.

"படுபறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்து நீ
கொடுகொட்டி யாடுங்காற் கோடுய ரகலல்குற்
கொடிபுரை நுசுப்பினுள் கொண்டசீர் தருவாளோ"

எனவரும் கடவுள் வாழ்த்துப் பகுதியை நோக்குக.

பரவுகின்ற பவ்வெழுத்தே கூத்ததாகும்
பவ்வென்னு மெழுத்துவந்து பரவியேதான்
அரவுகின்ற ரவ்வெழுத்தே ராகமாகும்
அதனடுத்த தகாரவெழுத் தாகுந்தாளம்
மருவுகின்ற மவ்வெழுத்தே கொட்டுப்பாங்க
மாநிலத்திற் பரதமென வந்தவாறு
திரிபுரத்தை நகைத்தெரித்த தேவர்தேவன்
திருவுள்ள மகிழ்ந்துமைக்குச் செப்பினுரே.

இ—ள். பரவப்படாநின்ற பவ்வெழுத்தே கூத்தாகவும் இவ்வெழுத்துக் கூட்டரவினுலே ரவ்வெழுத்தே ராகமாகவும் அதனையடுத்த தகரவெழுத்தே தாளமாகவும் இதனுல் தழுவப் பட்ட மவ்வெழுத்தே கொட்டுப்பாங்கச் சரிதையாகவும் இந்தப் பரதம் என்கிற சத்தத்துக்குத் திரிபுரமெரித்த சிவனுனவர் உமாமகேசுவரிக்குப் பொருள் விரித்தருளிச் செய்தார்.

எ—று (கூ)

தாளவுற்பத்தி

காள மிடற்றினன் கண்ணுத லண்ணல்தன் காதலிக்கு
நீளங் கடைபோக நிர்த்தத்தைக் காட்டி நியமித்தது
மேளங் களுக்கெல்லாந் தாயென வேவேத சாரத்தினுல்
தாளஞ் செனித்தது தாக்கிய போதரன் ருள்தனிலே.

இ—ள். ஆலகால விடத்தினை மிடற்றிலடக்கியவரும் நெற்றியிற் கண்ணருமாகிய பரமசிவனுனவர் தம்மை யத்தியந் தம் விட்டு நீங்காமலிருக்கிற பார்வதிதேவிக்கு நிருத்தத்தின் விரிவனைத்தையும் அறிவிக்கும் பொருட்டாக மேளங்களுக்குள் மிக்காயிருக்கப்பட்ட வேதசாரமான தாளஞ்செனிக்கத் தக்க தாகத் தம்முடைய பாதத்தினுல் தாக்கினுர். எ—று. (எ)

தாளத்தோனியாவன

ஆதிநடு வீறில்லான் அம்புயப்பொற் ருள்தாக்கிற்
கேதாதெய் யென்றுதா ளம்பிறந்த [1]—வோதைமேல்
அண்டபகி ரண்டநவ கண்டபுவ னங்குலுங்கக்
கொண்டதென்ருன் மாமலயக் கோன்.

எனவும்

தாத்தெயெனத் தாக்கிமற் றத்தத்தித் தொன்னமென
வேத்து நடனமொடா லிக்குமே—பூத்திகழுங்
கொன்றையா னெம்சபைக் கோமான்தா ளஞ்செனிக்க
வன்று முயலகன்மே லாய்.

எனவும் வரும் இவ்விரண்டு வெண்பாவுக்கும் இவற்றின் உண்மை ஆசான் கண்ணகத்தே கேட்டுக்கொள்ளவும். (அ, கூ)

தாக்குமாத்திராவிதி

பஞ்ச லகுவெழுத்தாற் பார்க்குங் கசடதப
செஞ்சொ லொருமாத் திரைகளென்றே— அஞ்சாமல்
அல்லார் குழலரம்பை யபிடேகச் சொக்கனுர்
எல்லார்க்குஞ் சொன்ன ரிசைத்து.

---

அ. 1. பிறப்பும் நிலேயும் இறத்தலும் இல்லாத இறைவ ஞகிய சிவனுடைய தாமரை மலர்போலும் அழகிய திருவடியின் தாக்குதலால், தா–தெய் என்னும் ஓசையுடன் தாளங்கள் உண்டாயின.

மாமலயக்கோன்—பெரிய பொதியமலேத் தலேவஞகிய அகத்தியன்.

கூ. விளங்குகின்ற கொன்றைப் பூமாலேயை யணிந்தவஞகிய அம்பலத்தாடி முற்காலத்து முயலகன் என்பான்மேனின்று தாளங் களெல்லாம் உண்டாகத் தா, தெய் எனத்தாக்கி மற்றும் தத், தித், தொன், நம் என ஏத்தும் திருநடத்தால் ஆரவாரித் தாடினுன் என்பதாம்.

ய. பஞ்ச லகுவெழுத்து – ஐந்து குற்றெழுத்து

அல்லார் குழலரம்பை—இருள்நிறம் வாய்ந்த கூந்தலேயுடைய அரம்பைபோல்வாளே என மகடூஉ முன்னிலே யாக்கிப் பொருள் கூறுக.

மதுரைச் சொக்கநாதப் பெருமானே இப்பரத நூற்பொருளே முதன்முதல் எடுத்துரைத்த முதலாசிரியர் என்பது இந்நூலாசிரியர் கருத்தாம்.

இ—ள். துருதம் லகு குரு புலிதம் இவைகளுக் குரித்தான மாத்திரைகள் அறியில் தெக்கணாதி மார்க்கத்துக்கும் ஏக மாத்திராவிதி கொண்டார் என்றவாறு. அவையாவன கசடதப என்னுமஞ்செழுத்தும் உச்சரித்துக்கண்டு கொள்க. (௰)

தெய்வசபை

நாரா யணனே நடுவா யிரண்டருகும்
பாரோரரா வானோர் இருடிகளுஞ்—சீராக
மன்று ளினிதிடமாய் வாதாடிக் காளியுடன்
அன்றுநடஞ் செய்த சபை.

இ—ள். நாராயணன் முதலானபேர் நடுவாகவும் முப்பத்து முக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிர முனிவர்களும் இரண்டு புறமுஞ் சூழ்ந்திறைஞ்சத் தில்லையிலே பத்திரகாளி யுடன் வாதாகப் பரமேசுவரன் நடனஞ்செய்தது தெய்வசபை யென்றவாறு. (௰௧)

தெய்வமேளத்தில்நின்றபேர்

நந்திவல மத்தளமாம் நான்முகன் கையிடக்கை
யிந்திரனு டுக்கை யெமன்குடுக்கை—சந்திரனீள்
சூரியனே நற்சுருதி தும்புரர்சங் கீதமாய்ப்
பாரினடிப் பித்தாள் பரை.

---

௰. துருதம் அரைமாத்திரை, லகு ஒரு மாத்திரை, குரு இரண்டு மாத்திரை, புலிதம் மூன்று மாத்திரையாம்.

௧௨. "மத்து ஓசைப்பெயர்; இசையிடனாகிய கருவிகட்கெல்லாம் தளமாதலான் மத்தளமென்று பெயராயிற்று" என்றும் "இக்கருவி பல கூத்துக்களுக்கு உரித்தாகலானும் பாடலெழுத்தான் உள்ளே பிறத்தலானும் முழவுகளெல்லாம் இதனுள்ளே பிறத்த லானும் இதனை நான்முகன் என்பர்" என்றும் அடியார்க்கு நல்லார் கூறுவர்.

வினைக்கிரியைகள் இடக்கையாற் செய்தலின் இடக்கையென்று பெயராயிற்று.

குடுக்கையாக அடைத்தலால் குடுக்கையென்று பெயர் ஆயிற்று.

இ-ள்.—பரமேசுவரனை ஆட்டுவித்தவள் பார்ப்பதி. மத்தளங்கொட்டினவன் நந்தீசுவரன். இடக்கை கொட்டினவன் பிரமன். உடுக்கை கொட்டினவன் இந்திரன். குடுக்கை கொட்டினவன் இயமன். சுருதிகாரர் சந்திர சூரியர். சங்கீதம்பாடினவர் தும்புரு நாரதர் என்றவாறு. (௰உ)

### இராசசபை

மன்னவனே யிந்திரனு மாதவியே மந்திரியாய்த் [1]
துன்னுமியற் சங்கீதர் தும்புரராய்—இந்நிலத்தில்
மங்கையரே ஊர்வசியா [2] வண்டமிழோர் [3] தேவர்களாய்ச்
சங்கமுடன் பார்க்குஞ் சபை.

இ-ள்.—சபைக்குள் நடுவேயிருந்த ராசா தேவேந்திரனாகவும், மாதவியே மந்திரியாகவும், மேனகை அரம்பை ஊர்வசி திலோத்தமை சங்கேசி சனவபதி சித்திரசேனை முதலான தெய்வப் பெண்டிர் அடப்பை குஞ்சங் காளாஞ்சி வெண்சாமரை முதலான தொழில் செய்கிறபேர்களாகவும், கின்னரி உருத்திர வீணை நாகவீணை கயிலாசவீணை சுரமண்டலம் இராவணாஸ்த்திரம் இதுமுதலாகிய சங்கீதம் பாடுகிறவர்கள் கின்னரர் கிம்புருடர்கள் சித்தர் வித்தியாதர கந்தர்வராகவும், இராசாவைச் சூழ்ந்து இரண்டுபுறமும் நின்று பார்க்கிறபேர்கள் தேவர்களாகவும் இப்படி இருப்பது இராசசபை.—என்றவாறு.

(௰௩)

---

௰௩ 1. ஈண்டு உவமத்திற்குரிய பொதுத்தன்மை விளங்கவில்லை.

2. உவமையில் ஒருமை பன்மை மயங்கி வந்துள்ளது.

3. வண்டமிழோர்—தமிழ் வல்ல புலவர்கள்.

## [1]நட்டுவன் இலக்கணம்

*பாட்டுவிக்கப் பாடப் பாவித்த தாற்கூத்தை*
*ஆட்டுவிக்க ஆட வருங்கரணம்—பூட்டுவிக்கத்*
*திட்டமுடன் பாடையினைத் தேர்ந்துகற்றுப் பேசுவிக்க*
*அட்டதிக்கும் நட்டுவனே யாம்.*

இ—ள். இயலும் இசையும் தேர்ந்தும் இராக முதலமை யப் பல பாக்களையும் பாடப் பாட்டுவிக்க நாடகம் பரத சாத்திர விதிப்பிரகாரம் ஆட ஆட்டுவிக்க அரிதாகிய கரணங் களைத் தான் செய்து பிறர் மெய்யிலும் பூட்டுவிக்கப் பதினெண் பாடையுந் தான் கற்றுப் பிறரை வருத்துவிக்க இப்படி திக்கு கள் தோறும் மதிக்க வல்லவனுகில் இவன் நட்டுவனு மென்றவாறு. (௰௪)

---

[1] ஆடலாசிரியன் அமைதி.

"இருவகைத்தாகிய அகக்கூத்தின் இலக்கணங்களை யறிந்து, பலவகைப்பட்ட புறநடங்களையும் விலக்குறுப்புக்களைச் சேரப் புணர்க்கவும் வல்லனுகி, அல்லியமுதற் கொடுகொட்டியீருகக் கிடந்த பதினொருகூத்துக்களும் அக்கூத்துக்களுக்குரிய பாட்டுக் களும் அவற்றுக்கு அடைத்த வாச்சியங்களின் கூறுகளும் நூல்களில் விதித்த வழியே தெரிந்து கூத்தும் பாட்டும் தாளங்களும் தாளங் களின் வழிவந்த தூக்குக்களும் தம்மிற்கூடின நெறியையுடைய அகக்கூத்தும் புறக்கூத்து முதலாயின நிகழ்த்துமிடத்துப் பிண்டி பிணையல் எழிற்கை தொழிற்கை யென்று சொல்லப்பட்ட நான் கினையும் நூலினகத்துக் கொண்ட கூறுபாட்டையறிந்து அகக்கூத்து நிகழுமிடத்துக் கூடைக்கதியாகச் செய்த கை வாரக்கதியுட் புகாமலும், வாரக்கதியாகச் செய்த கை கூடைக்கதியுட் புகாமலும், புறக்கூத்தினிடத்து ஆடல் நிகழுமிடத்து அவிநயம் நிகழாமலும், அவிநயம் நிகழுமிடத்து ஆடல் நிகழாமலும், குரவைக்கூத்தும் வரிக்கூத்தும் தம்மில் விரவாதபடியுஞ் செலுத்தியமைந்த ஆட லாசிரியனும்" (சிலப்—அரங்கேற்று ௬௨—௨௫ அடியார்க்கு நல்லார் உரை) எனவரும் உரைப்பகுதி ஈண்டுக் கருதத்தகுவதாம்.

## மத்தள முழக்குவோன் இலக்கணம்

புத்த வமுத மறுவகைப் பாடங்கை பூண்டடரும்
சத்தமுஞ் சாலிநியமமுந் தாக்குத் தகாரிப்புக்கொண்
டத்தக மார்க்கத் திருவட்ட கால்கொ டடங்கவிதம்
மத்தள மூன்றும்வல்லான் நந்தி யாமென்பர் மாநிலமே

இ-ள். புதிய வமுதம் போன்ற அழகங்காத்திரஞ் சிவிறு அடைசுகை நேர்கை துகை ஏறுகை இந்த ஆறுவகைப் பாடங்களையும் பூட்டிச் சத்தஞ் சாலிநியமந் தாக்குத் தகாரிப்புக் குறவணை நறவணை வகையாகக் கொட்டுதலின்றி அகமார்க்கத்தில் திருவட்டகாலத்துக்கேற்க மூன்றுவிதமாயிருக்கிற மத்தளத்திற்குரித்தாகிய சொற்குறிப்பனைத்தையும் தேர்ந்து மத்தளங்கொட்ட வல்லவனை நந்திக்குச் சமனாகச்சொல்லும் உலகம் என்றவாறு. (௰௫)

---

௰௫. "நர்த்தகன் கர முதலியன சேர்க்கும் இடங்களையும், சமபதம் முதலிய பத்துப்பாத வியல்பையும், சுத்தசாரி தேசிசாரிகளையும், பூமண்டலம் ஆகாச மண்டலங்களின் இலக்கணங்களையும், கனராக முதலிய இராக பேதங்களையும், அபிநய விதங்களையும், சுத்தகரண உற்புலிதகரண பேதங்களையும், காந்தைக்கண் முதலிய ஏழு நேத்திர பேதங்களையும், சமசிரம் முதலிய பத்துச் சிரலக்ஷணங்களையும், பதாகை முதலிய அஸ்தபேதங்களையும், முகபேதங்களையும், நவரச பேதபாவங்களையும், அங்க உபாங்கங்களின் இயல்பையும், தாளதசப் பிரமாணங்களையும் அறிந்த புலவனாகியும், அங்கவீனம், சுரவீனம், குலவீனம் இல்லாதவனாகியுமிருக்க வேண்டும்" எனப் பரத சாஸ்திரம் ஒழிபியல் 30ல் நர்த்தகனிலக்கணம் கூறப்பட்டுளது.

"ஆடல் பாடல் இசையே தமிழே
பண்ணே பாணி தூக்கே முடமே
தேசிக மென்றிவை யாசினுணர்ந்து
கூடை நிலத்தைக் குறைவின்று மிகுத்தாங்கு
வாரநிலத்தை வாங்குபு வாங்கி
வாங்கிய வாரத் தியாழுங் குழலும்
ஏங்கிய மிடறும் இசைவன கேட்பக்
கூருகிர்க் கரணங் குறியறிந்து சேர்த்தி
ஆக்கலு மடக்கலு மீத்திறம் படாமைச்
சித்திரக் கரணஞ் சிதைவின்று செலுத்தும்
அத்தகு தண்ணுமையருந்தொழின் முதல்வனும்"

## 11

## பாடுவான் இயல்பு

மிக்க குடிப்பிறந்தோன் மெய்யான் வோசையான்
துக்க மிலாதான் சுகமுடையான்—ஒக்கவே
ஊனப் படாதான் உறுப்பின் மறு வில்லாதான்
தானத் திசையியற்று வான்.

இ-ள்.—மேம்பாடாயிருக்கிற வருணத்தை யுடையவனுய்க் குற்றப்படாத வோசையுள்ளவனுகி எந்நாளுங் கவலையின்றிச் சுகமனுபவிக்கிறவனுய்க் குயிலின் இசையும் வண்டின் முரற்சியும் வலம்புரி முழக்கமுமாக இந்த மூவகை யோசையினுலும் அரிய நிறத்தனவாயிருக்கிற முத்தமிழ் விரிவை யோர்ந்து சாதுரியமிக்கானவன் இந்த (சபைய) கத்துப் பாடப்படும் எ-று (மிகா)

---

(சிலப், அரங், சரு, ருரு) எனவரும் சிலப்பதிகார அடிகளும், " எல்லாக் கூத்துகளும், எல்லாப் பாட்டுக்களும், எல்லா இசைகளும், வடவெழுத்தொரீஇவந்த எழுத்தாலே கட்டப்பட்ட ஓசைக் கட்டளைக் கூறுபாடுகளும், எல்லாப் பண்களும், இருவகைத்தாளங்களும், எழுவகைத் தூக்குக்களும், இவையிற்றின் முடங்களும், இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னுஞ் சொற்களும் என்று சொல்லப்பட்டனவற்றை யுணர்ந்து ஒருருவை யிரட்டிக்கிரட்டி சேர்த்தவிடத்து நெகிழாதபடி நிரம்ப நிறுத்தவும், அவ்விடத்துப் பெறும் இரட்டியை ஒப்பாக உருவானவழி நிற்குமானம் நிறுத்திக் கழியுமானங் கழிக்கவும் வல்லனுய் இப்படி நிகழ்ந்த உருக்களில் யாழ்ப்பாடலும் குழலின் பாடலும் கண்டப்பாடலும் இயைந்து நடக்கிறபடி கேட்போர் செவிக்கொள அமைந்த கரணத்தாற் குறியறிந்து சேரவாசித்தலும் மற்றைக்கருவிகளிற் குறைநிரப்புதலும் அக்கருவிகளின் மிகுதியடக்குதலும் ஆக்குமிடத்தும் அடக்குமிடத்தும் இசையின் இரந்திரம் தோன்றுதபடி செய்தலும் செய்யுமிடத்துக் கைத்தொழில் அழகுபெறச் செய்துகாட்டலும் வல்லனுய் அழகுதக்க தண்ணுமைக் கருவியினையும் அரிய தொழிலினையுமுடைய ஆசிரியன் என்றவாறு" எனவரும் அரும்பதவுரையும் இங்குக் கருதத்தக்கனவாம்.

## பாட்டு விகற்பம்

*பன்னியபாத் தானம் புணர் ... பான்னிறங்கள்*
*மன்னிய பண்ணெ டிராகங்கள்—நன்னுதலாய்*
*சொல்லிய கால முரைப்போ ரிடமாடல்*
*நல்லிசையோர் கண்ட நெறி.*

இ-ள்.—இவை பத்து விகற்பத்தாலும் அறிந்து பாடுக என்றவாறு. (கஎ)

---

கசு "யாழுங்குழலும் சீரும் மிடறும், தாழ்குரற் றண்ணுமை யாடலொடிவற்றின் இசைந்தபாட லிசையுடன்படுத்து, வரிக்கும் ஆடற்கும் உரிப்பொருளியக்கித், தேசிகத் திருவின் ஓசை கடைப்பிடித்துத், தேசிகத் திருவின் ஓசையெல்லாம், ஆசின்றுணர்ந்த அறிவினனாகிக், கவியது குறிப்பும் ஆடற்றொகுதியும், பகுதிப் பாடலுங் கொளுத்துங்கால், வசையறுகேள்வி வகுத்தனன் விரிக்கும் அசையாமரபின் இசையோன்றானும்" எனவரும் அரங்கேற்று காதை யடிகளில் இசையாசிரியன் இயல்பினை இளங்கோவடிகள் விளக்கியுள்ளமை ஈண்டு நினைக்கத் தகுவதாம்.

"யாழ்ப் பாடலும் வங்கியப் பாடலும், இருவகைத் தாளக் கூறுபாடுகளும், மிடற்றுப்பாடலும், மந்தமாகிய சுரத்தினையுடைய தண்ணுமையும், அகக்கூத்துப் புறக்கூத்துப் பதினொராடல் என்னுங் கூத்துக்களும் வல்லவனாய் இவற்றுடனே சேரச் செய்த உருக்களை இசைகொள்ளும்படியும் இரதம் பொருந்தும்படியும் புணர்க்கவும் வல்லவனாய் இருவகைப்பட்ட பாடல்களுக்கும் பொருளான இயக்கம் நான்கினையும் அமைத்துத் தேசாந்தரங்களிற் பாடைகளையுமறிந்து அந்தப்பாடைகள் இசைபூணும் படியையுமறிந்து இயற்புலவன் நினைவும் நாடகப்புலவன் ஈடும் வரவுகளும் இவற்றுக்கு அடைத்த பாடல்களும் தம்மிற் சந்திக்குமிடத்துக் குற்றந்தீர்ந்த நூல்வழக் காலே வகுக்கவும் விரிக்கவும் வல்லனாயுள்ள இசைப் புலவனும்" என்பது மேற்காட்டிய அடிகளுக்கு அரும்பதவுரையாசிரியர் கூறும் பொருளாகும்.

கஎ. இதன் முதலடி ஏடுகளிற் சிதைந்துளது.

### பாவாடை

நாதம் பகர்விந்து வேராகி நன்முளையாய்
வேதங் கவர்காயாய் வீறுபஞ்சாய்ப்— போதநூற்
பூவாடைப் பாவாய்ப் புனைந்தார்நம் வள்ளுவனார்
பாவாடை யென்றே பகர்.

இ-ள். பருத்திவிதையும் வேரும்முளையும் நாதவிந்துவாகவும், இதனுடைய கொம்பு வேதங்களாகவும், இதன் காய் பஞ்சு பிரமா விஷ்ணுவினுடைய மேனியாகவும், இதன் நூல் பரமேசுவரனுடைய ஒளியாகவும் பாவோடி நெய்த வள்ளுவனார் பாவாடை எ-று. (கஅ)

### உடைக்கச்சு

வேங்கையுரித் தோலுடையாய் மென்னாக மேகயிறாய்
ஈங்குமுய லகனுதிர மெண்ணெயாய்ப்— பாங்குடனே
மன்றினடித் தார்செயலால் மானிலத்தில் நிர்த்தகர்க்கும்
வென்றியுள்ள பாவனையா மென்.

இ-ள். வேங்கையதள் உடையாகவும் நாகம் சுற்றுக்கச்சாகவும் முயலகனுதிரம் எண்ணெயாகவும் பரமேசுவரனருளால் பூலோகத்தில் நிர்த்தகர்க்குப் பாவனையாம் எ-று. (கக)

முப்பாணி[1] மூன்று முதல்வரென்று சொல்லலாம்
உட்புறம்பு[2] திங்கள் உதயனும்[3]— எப்போதும்
அங்குட்ட தர்ச்சனிமத் திமையனா மிகைகனிட்டை
அங்குலி[4]நற் றேவரென லாம்.

இ-ள். தோள் பிரமாவாகவும் முழங்கை விட்டுணுவாகவும் மணிக்கட்டு ருத்திரனாகவும் உள்ளங்கை சந்திரனாகவும்

---

கஅ. இசைப்பாவினை ஆடையாக உருவகப்படுத்தியுள்ளார்.

புறங்கை சூரியனாகவும் ஐந்து விரலுந் தேவர்களாம்
எ-று. (உ௰)

## நட்டுவன் மேளத்தில் நின்றபேர்

நட்டுவனே நாதனும் நந்திமலர் வேதனடு
திட்டமுடன் தேவர்கோன் சேரவே— கொட்டியமன்
சுந்தரனேர் சந்திரனுஞ் சூரியனுந் தும்புரரும்
விந்தையுள சங்கீத மென்.

இ-ள். கச்சை கட்டின நட்டுவன் சிவனாகவும் மத்தளக் காரன் நந்தீசுவரனாகவும் இடக்கை கொட்டினவன் பிரமாவாக வும் உடுக்கை கொட்டினவன் தேவேந்திரனாகவும், குடுக்கை கொட்டினவன் இயமனாகவுஞ் சுருதிகாரர் சந்திர சூரியராகவும் பாடுகிறவன் தும்புரு நாரதராகவும் இப்படி பாவனையாம்
எ-று. (உக)

## திக்குப்பாலகர்

இந்திரனோ டக்கினி யியமனிரு திவருணன்
வந்தவா யுவோ டளகையான் [1] — முந்தமரர்
அக்கணியு [2] மீசனுடன் அட்டதிக்குப் பாலகர்பார்
மிக்கவயன் மாலாகு மேல்.

---

உ௰. 1. முப்பாணி—தோள், முழங்கை, மணிக்கட்டு எனக் கூறப்படும் கையின் மூவகைஅங்கங்கள்.

2. உள், புறம்பு—உள்ளங்கை, புறங்கை.

3. உதயன்—சூரியன்.

4. அங்குட்டம்—பெருவிரல், தர்ச்சனி—சுட்டுவிரல், மத்திமை—நடுவிரல், அனுமிகை—மோதிர விரல், கனிட்டை—சுண்டுவிரல். அங்குலி—விரல்.

உஉ. 1. அளகாபுரிக்குத் தலைவனாகிய குபேரன்.

2. அக்கு — சங்குமணி.

இ-ள். கிழக்கு இந்திரன், தென்கிழக்கு அக்கினி, தெற்கு இயமன், தென்மேற்கு நிருதி, மேற்கு வருணன், வடமேற்கு வாயு, வடக்கு குபேரன், வடகிழக்கு ஈசானன், பூமிக்குப் பிரமா, ஆகாசத்துக்கு விஷ்ணுவாம் எ-று. (உஉ)

## [1]பூமிவடிவு

பரவு சலமே பணிகூர்மத் தின்மேல்
விரவு கரியெட்டின் மீதே — கிரிமாறும்
அட்டநா கஞ்சுமக்கு மாதரவா யாவர்க்கும்
இட்டமாம் பூமியிது தான்.

இ-ள். இப்படி யெல்லாமிருக்கும் பூமியென்றவாறு. (உங)

## பூமியை வணங்கி நடம்புரிதல்

நாட்டியத்தை நின்மேல் நயந்து நடனம்புரியுங்
கோட்டி தனை நீபொறுத்தாட் கொள்வாயே—
காட்டுநிறம்
பொன்னே பிரமனக வந்தமே நாற்கோணந் [1]
தன்னேரில் லாதவளே தான்.

---

உங. [1] ஆடலாசிரியன் நடனந் தொடங்கும்போது பூமிதேவியை வணங்கல் மரபாகலின் பூமியின் இயல்பைக் கூறுகின்றார். பூமியை எட்டுமலைகளும், அம்மலைகளை எட்டுயானைகளும், அவ்யானைகளை ஆதிசேடனும், அவனை ஆதாரசத்தியும், அச்சத்தியை ஆதிகூர்மமும், அக்கூர்மத்தைச் சிவமும்தாங்கும் என்றும், பூமிதேவியின் திருமுடி தெற்கும், திருவடி வடக்கும் ஆகுமென்றும், உறங்கச்செல்பவர், தாள முதலிய வாத்தியங்களை ஒலிப்பவர், நடனஞ்செய்பவர், வீடுகட்டக் கால்கொள்பவர், உழுபவர் ஆகிய இவர்கள் வடதிசையை நோக்கி நின்று மலர்தூவி வணங்கி 'நாங்கள் செய்யும் குற்றங்களை யுளங் கொளாது பொறுத்தருளிப் பாதுகாத்தல்வேண்டும்' என வழிபட்டுத் தொடங்குதல் வேண்டும் என்றும் அரபத்த நாவலர் பரதசாத்திரங் கூறுகின்றது.

உச. 1. இத்தொடரின் பொருள் விளங்கவில்லை.

இ—ள்.—யான் நின்மேல் நின்று நடனஞ்செய்கிற கோட்டிகளெல்லாம் பொறுத்துக்கொள்ளென்று பூமியை வணங்கித் தோத்திரஞ் செய்க எ—று. (உச)

## *நடனத்துக்குவந்த பாத்திர இலக்கணம்

கொஞ்சு கிளிமொழிபோற் கூவுங் குயிலிசைபோற்
செஞ்சொலியல் வல்லவுருச் சித்திரம்போல்—
வஞ்சியரில்
மேலாய்க் குடிப்பிறப்பு மேலாய செல்வமிகு
மாலாமின் ஞட்டுவிக்க லாம்.

இ—ள்.—வசனிக்கிறது சாந்தமுடன் கிள்ளையைப்போல விசித்திரமாக வசனிக்க, இசைபயிற்றலில் ஏழிசைகொண்டு வடநூல் முதல் இயற்றமிழ் வல்லமையாய்க் குயிலைப்போலப் பாட, அன்றியும் ஓவியம்போல மாதர்குழுவில் எவர்க்கும் மேன்மையே பெற்றுக் குடிப்பிறப்பும் செல்வமும் பெற்று மிக்காய்க் கண்டவுடனே யாவரும் இச்சிக்கத்தக்கதாக இருக்கப்பட்ட பெண் நாட்டியத்திற்குரித்து எ—று. (உரு)

---

உச. கோட்டி—கூட்டம்.

உரு. நடனத்துக்குரிய பெண்களாவார் ஐயாண்டில் தண்டியம்பிடித்து ஏழாண்டு பயின்று ஆடலும் பாடலும் அழகும் என்று சொல்லப்பட்ட இம்மூன்றினுள்ளும் ஒன்றுங் குறைவுபடாமல் திறம்பெற்று விளங்கும் இயல்புடையார்.

"நன்னர் விருப்புடையோள் நற்குணமு மிக்குயர்ந்தோள்
சொன்னகுலத் தாலமைந்த தொன்மையளாய்ப்—
பன்னிரண்டாண்
டேய்ந்ததற்பி னுடலுடன் பாடலழ கிம்மூன்றும்
வாய்ந்தவரங் கேற்றல் வழக்கு"
என்றார் பரதசேனபதியாரும்.

பெண் நிற்கிறநிலை

செய்யவிரு கால்கூட்டிச் சேர்ந்தமுக மசையாமல்
ஐயமென் றேசபையி லஞ்சாதே—துய்யபரு
வத்துருப்போல் நின்ற வடிபலவும் பேராமல்
சித்திரம்போல் நின்றாள் திரு.

என்பது. இரண்டு காலையுங் கூட்டி முகமசையாமல் சபையிற் பயப்படாமல் பலவடிக் கொள்ளாமல் சித்திரமென்னத் திருவைப் போன்றபெண் நிற்பள் எ—று. (உ௬)

இராசாவைப்பார்த்து நடிக்க

மன்னவனை யேநீள் வலக்கண்ணா லேபார்த்துத்
தன்னுடம்பு வாத்தியமே தானாக—நன்னெறிசேர்
பிள்ளையார் பிரபந்த முதல்நாலுஞ் சாதித்தே
விள்ளமுதல் நிர்த்தமதா மென்.

உ௬. "உருத்திரகணிகையர்மரபில் தோன்றினவளாகியும், ஒப்பில்லாத சிவந்த மேனியையும் அழகையுமுடையவளாகியும், அன்னத்தையொத்த நடையினையுடையவளாகியும் இருப்பவள் அரசனுடைய சிங்காசனத்திற்குப் பத்து முழத்திற்குக் கீழில் நின்று திரைச்சீலையை நீக்கிப் பூரணசந்திரனைப்போலவும் புஷ்பித்த கொடிபோலவும் கறுத்த மேகத்தினின்றும் வெளிப்பட்ட மின்னலைப் போலவும் தோன்றிப் பலவிறங்களையுடைய ரத்தினாபரணங்களைப் புனைந்து பொற்சரிகையுடை பளபள வென்று பிரகாசிக்க நடனஞ் செய்தற்கேற்க இடுப்பிற்றரித்து ரவிக்கைதரித்து தோளில்உத்தரியம் போட்டுப் பொற்பதுமை போலப் புனுகு பனிநீர் களபம் பூசிக் கொண்டு அன்னம்போல வொலிக்கின்ற சதங்கையைக் காலிற்கட்டிக் கொண்டு மிருப்பவள் நாட்டியஞ் செய்யத் தகுதியுடையவளாகும்" எனவும்,

'ஏத்து கூச்சரர்மராடர் விராடர் கோசலர்கள்தங்கள்
கோத்திரந் தன்னில் வந்து குறில்நெடில் பருமை நொய்மை
காத்திர வடுக்கூன்நோய் கான்முடங்கபடங் கோபம்
நீத்து பன்னொன்று தொட்டு மூவொன்பானுண்டீறுற்றோள்'

இது பிற நூற் கருத்து எனவும் நடனத்துக்குரிய பெண்ணின் இயல்பினை அரபத்த நாவலர் விளக்கியுள்ளார்.

எ—து. ஆடுகிற பெண் இராசாவை வலக்கண்ணாலே பார்த்து மேளத்தைத் தன்னிடமாக வைத்துப் பிள்ளையார் பிரபந்தம், புட்பப் பிரபந்தம், சவனிக்காபதம், சாலி யிவை நான்கு பொருளும் நிர்த்தஞ்செய்வள் எ-று. (உஎ)

மண்டலமிருத்தல்

நெற்றிக்கும் உந்திச் சுழிக்குமொரு நேரே நூல்
எற்றிப் பிடித்தங் கிருந்தளவும்—பற்றியுடல்
உன்னிலொரு சாணு முவந்தறிவோர் தன்சபையில்
மன்னியிருப் பார்மண்டலம்.

எ-து. நெற்றிக்கும் உந்திக்கும் ஒரு நூல் பிடித்தும் அந் நூலளவும் பன்னிரண்டங்குலம் பாதம் பகிர்ந்திருந்தது மண்டலமாம் எ—று. (உஅ)

நாட்டிய தசப்பிராணன்

மெய்யே முகங்கண்கள் காலுடனே பண்புதொழிற்
கையே புருவங் குறிப்பறிதல்—செயலென்றார்
அவைவிகற் பத்தி னுலாட லென்றார்
அவைசிறந்த நூல்பலவல் லார்.

எ—து. மெய், முகம், கண்கள், கால், பண்பு, தொழில், கை, புருவம், குறிப்பறிதல், பண் இவை பத்து விகற்பத்தாலும் ஆடப்படும் எ—று. (உகூ)

---

உஎ. தன் உடம்பே வாத்தியமாக என்றது, வாத்தியங்களின் சீரொடு பொருந்தத் தன் உடம்பின் அசைவுகள் அமைந்து நிற்றல்வேண்டும் எனப் புலப்படுத்தியபடியாம்.

தொழிற் பிரிவு

பாதமலர் போம்வழியே பங்கயஞ்சேர் கைசெல்ல
மேதகையி னூடே விழிசெல்லப்—பாதம்
விழித்தார் முகம்நோக்கி மெய்யழகு செல்லச்
சுழித்தாடி னுள்மதியிற் சூழ்ந்து.

எ—து. நிர்த்தம் பண்ணுகையில் பாதம்போன வழியே கைசெல்ல அந்தக் கைசென்ற வழியே விழிசெல்ல ஆடுகிற பெண்ணினுடைய பாதாதிகேசத்தை நோக்கியிருக்கிற இராசாவை வலக்கண்ணாலே பார்த்துத் தன்மெய்யினுடைய அழகு செல்லச் சுழித்து ஆடினுள் புத்தியினுற் சூழ்ந்து எ—று. (௩௰)

மேளக்கூட்டரவு

ஆடுமின் னுளி னேசைக் கடங்கியே பாட வேண்டும்
பாடலிற் றுள மேளம் பரிவுட னடக்கிக் கொண்டு
நீடிய அகமார்க்கத்தில் நிர்த்தமே புரியில்[1] மேளம்
நாடுங்கூட் டரவு மிக்கா மென்றகத்திய னவின்முன்.

எ—து. ஆடுகிற பெண்ணினுடைய பாதத்திலிருக்கிற நூபுரவோசைக் குள்ளடங்கிப் பாட இவைகொண்டு இராகஞ் சிந்து பாடலிற் றுள மத்தள சுதியும் பாங்கமு மதற்குள்ளூற

௩௰. கற்பகப்பூந் தளிரடிபோங் காமரு சா ரிகைசெய்ய
உற்பலமென் முகிழ் விரல்வட் டணையோடுங் கைபெயரப்
பொற்புறும் அக் கையின்வழிப் பொருகயற்கண் புடைபெயர
அற்புதப்பொற் கொடிநுடங்கி ஆடுவபோல் ஆடுவார்.
(திருநாவுக்கரசர் புராணம் ௪௨௰)

எனவரும் செய்யுளில் இத்தொழில்வகைகள் குறிக்கப்பெற்றமை ஒப்புநோக்கியுணர்தற்குரியதாம்.

வடங்கி யிப்படி யகமார்க்கநிர்த்தம் புரிவிக்கையில் மேளக் கூட்டரவு மிக்காமென்று பொதியமலையில் அகத்திய னுரைத் தான் எ—று. (௩௧)

ஆதி யலங்கார மனுக்குப் பதமடவாய்
ஓதிய தேசி யெனுமொத்து—நீதியதாம்
புட் பாஞ்சலிவகுப்பு புனிதர்தில்லை மன்றுளினில்
வைப்பாய் நடித்தார் மகிழ்ந்து.

எ—து. ஆதிபீடம், அலங்காரபீடம், அனுக்குப்பதம், தேசி யொத்து, புட்பாஞ்சலி, அலாரி யிந்த ஆறு பொருளுஞ் சிவன் வைப்பினுற் கொண்டா ரென்றவாறு. (௩௨)

இத்தா ரணிவாக் கியதாண் டவம்புரிய
ஒத்தோசை நாற்கர ணத்தோடே—யத்தர்முன்
நீதி நிழலொரு கால்நிகழ்வைப் பாதமடிப்
பாதியக மார்க்கத் தடைவு.

எ—து. வாக்கிய தாண்டவம், ஒத்து ஓசை கரணம் நீதி நிழலொரு காலக்கவுத்தவம் வைப்பு மடிப்பினுலுங் கொண்டனர் என்றவாறு. (௩௩)

அகமார்க்கச்சாரி

இப்புவியெண் தில்லையிலே யெண்தாளந் தன்னிலுயிர்
வைப்பு வழுவா வகைதெரிந்து—தப்பாமல்
ஆதிமார்க் கச்சாரி யானந்தத் தாளமுடன்
சோதிநடஞ் செய்தான் தொகுத்து.

---

௩௧. அகமார்க்க நிர்த்தமாவது மெய்க்கூத்தாம். இம்மெய்க் கூத்து தேசி, வடுகு, சிங்களம் என மூவகைப்படும். இவை மெய்த் தொழிற் கூத்தாகலின், மெய்க்கூத்தாயின எனவும் அகச்சுவையா கிய இராசதம் தாமதம் சாத்துவிகம் என்பனபற்றி யெடுத்தலின் இவை அகமார்க்கம் என நிகழ்த்தப் படுமெனவும் அரங்கேற்று காதை யுரையில் அடியார்க்குநல்லார் கூறுவர்.

"குணத்தின் வழியதகக் கூத்தெனப்படுமே"

என்றார் குணநூலுடையார்.

"அகத்தெழு சுவையான் அகமெனப்படுமே"

என்றார் சயந்தநூலுடையார்.

எ—து. அகமார்க்கச் சாரி அனங்கதாளம் துதியங்கதாளம் அன்னநாதம் இரதிதாளம் சகணம் தற்பணம் சன்னிதாளம் துரங்கலீலை இவை யொன்பது தாளத்தில் வைப்பினுற் சிவன் நிர்த்தம் செய்தார் எ—று. (௩௪)

ஆழாப்புச்சாரி

எட்டஞ்சு பத்துவட்ட மிக்காறு மவ்வட்டம்
நட்டணை கொள்நாற்பத் தாறுவட்டம்-முட்டவே
ஏற்றிக் கழிக்க வீராறு டாறுமெனச்
சாற்றிலொரு மூன்ருஞ்சா லி

எ—து. பிரபந்தசாரிக்கு ஆதிதாளத்தில் நாற்பத்தாறு வட்டத்தி லிரண்டு மெய்க்கு மெடுத்துப் பன்னிரண்டு வட்டத்தி லிறுக்கிக்கொண்டு ஆறுவட்டத்திலிறுக்கி மூன்றுவட்டத்திற் சிவன் நிருத்தஞ்செய்தார் எ—று. (௩௫)

பிரபந்தசாரி

பாவாப் பதின்மூன்று தாளம் பகர்ந்துமுறை
தாவாப்பிர பந்தசா ரிக்குயரம்—ஓவா
மறைதேடி யுங்காணு வள்ளல் நடித்தார்
மறையோதும் வியாக்ரமுனி முன்.

எ—து. பிரபந்தசாரியைச் சிங்கவிக்கிரீடிதம், திரியச்சிரவன்னம், அபிநந்தனம், மல்லிகாமோதம், சரபலீலை, மதங்கம், அதியட்சணம், பிரீதிதாளம், பெத்தாபரணம், திரிமாத்திரிகை, டேங்கிதாளம், பின்னசதுமுகன், ஆதிதாளம் ஆகப் பதின் மூன்று தாளமுடன் பதஞ்சலி வியாக்கிரர்காணத் தில்லையிற் சிவன் வைப்பினுல் நடித்தார் எ—று. (௩௬)

தோடையத்துக்கு

சச்ச புடமுதலா யைம்பத்து நான்குதன்னிற்
செச்சை யுடன்சவுத சிங்காரம்—நிச்சயமாய்
மன்றுள் நடித்தார் மடிப்பால் வகைதெரிந்து
நன்றிபத்த தோடையத்தி னுல்

எ—து. அகத்தியப் பிரத்தாரத்தில் ஐம்பத்துநான்கு தாளத்திற் சச்சபுட முதற் சவுத சிங்கார மூன்றும் பதமூன்றும தோடையமு மடிப்பினுற் சிவன் நிருத்தஞ்செய்தார் எ—று. (௩,எ)

வெற்றிமாலை சூடினது

நாலு திசையும் நடத்தின் கரம்பிடித்துச்
சால மலருமிகச் சாற்றியே—கோலநறு
மென்மலரோன் காணு விமலனைத் தோர்காணத்
தன்முடியிற் சாத்தினுன் தார்.

எ—து. நான்கு திக்கிலும் நடந்து மண்டலமிருந்து நடுவே நின்று பிரமாவானவன் அன்னமாகப் பறந்துந் தேடியுங்காணு மலிருக்கிற முடியைச் சமத்தமாயிருக்கிற தேவாதிகளனைவோருங் காணத் தாமரைஅறுகு கொன்றை தும்பை எருக்கு என்னும் மலர்களாற் சுவாமி தன்திருமுடியில் வெற்றிமாலை சூடிக் கொண்டார் எ—று. (௩.அ)

முகசாலையத்துக்கு

அட்டதிசைநோக்கி அடிவைத்து மண்டலமுன்
னிட்டேயீ ரெண்கை யியல்பாக—முட்டத்
தகையாம லேநடுவே தானுடி நிற்றல்
முகசா லையமா மொழி.

எ—து. எட்டுத்திக்கிலும் நடந்து திக்குக்கொரு மண்டலமிருந்து பதினுறுகை பிடித்து நடுவில்வந்து தீர்ந்தது முகசாலையமென்றவாறு. (௩,௯)

நிர்த்தமாவன

தாளமுதல் மானக் கிரியைநிகர் மாத்ரை
நாளு முழுவிசை பாணியால்—வாள்விழியாய்
முக்கண்ணன் முன்னொருநாள் மூவகைக்கூத் தாக்கினுன்
எக்கண்ணு மென்றே யியம்பு.

எ—து. முன்சொன்ன மாத்திரைகளாலும் நடைகளாலும் காலக் கிரியைமானங்களாலும் உறுப்புகளாலும் மிக்குங் குறைந்தும் இயற்றும் இயந்திரங்களாலும் முழவினுக்கும் இசைக்கும் தாளத்தினுக்கும் பொருந்த முக்கண்ணன் மூவகைக் கூத்தும் ஆடியமைத்தான் எ—று

வடுகு வன்மைக்கூத்து, சிங்களம் மென்மைக்கூத்து, தேசி சமக்கூத்து, சாத்திகந் தேசி, இராசதம் வடுகு, தாமதஞ் சிங்களம் எனக்கொள்ள இவை ஆகமத்தினுள்ள குணமூன்றினு லும் பெயர் பெறுதலால் அகமார்க்க மென்று பெயர் பெற்று வழங்கப்படு மெனக்கொள்க. [1] (சம)

ஓங்குபுக ழீசன் உயர்விதமாய்க் கொண்டாடப்
பாங்குடைய நாரதனார் பாடினார்—பூங்குழலாள்
பாணி யியற்றினா ளென்றான் பனிவரையில்
வீணை யியற்றியதே வேந்து.

எ—து. இக்கூத்துமாடினான் பரமேசுவரன்; நாரதனார் பாடினார்; பாணிகொண்டாள் கெவுரி; வீணை பொதியமலை அகத்தியன் பணித்தா னென்றவாறு. (சரு)

மாறியாடினது

சாதிவருஞ் சச்சபுடந் தாளமொரு நூற்றெட்டும்
பூதலமெண் புட்பப் பிரபந்த—மீதுறவே
ஓங்கு தகாரத் துயர்தாளத் தொவ்வொன்றாய்த்
தாங்கிவரச் சொக்கர்நடித் தார்.

---

சம. [1] "இவை மெய்த்தொழிற் கூத்தாகலின் மெய்க் கூத்தாயின. இவை அகச்சுவைபற்றி யெடுத்தலின், அகமார்க்கமென நிகழ்த்தப் படும். அகச்சுவையாவன :—இராசதம், தாமதம், சாத்துவிகம் என்பன. "குணத்தின் வழியதகக் கூத்தெனப்படுமே" என்றார் குணநூலுடையார்; "அகத்தெழு சுவையான் அகமெனப்படுமே" என்றார் சயந்த நூலுடையாரு மெனக்கொள்க" (சிலப். அரங்கேற்) என அடியார்க்கு நல்லார் விளக்குதல் காண்க.

எ—து. சச்சபுடமுதற் பெத்தாபரண மீருக நூற்றெட்டுத் தாளமும் பூதலமீதிற் புட்பவிடப் பிரபந்த முதலாகிய பொருள்கள் இலங்கவும் ஒவ்வொரு தாளமாகத் தனித்தனியே இரசதசபையில் சொக்கர் மாறியாடினுர் எ—று. (சஉ)

காலால் நடப்பதெல்லாங் கூத்தாகுங் கைகளின்
பாலாகச் செய்யின் முழவமா—மேலாய
வாக்கினுற் பேசுவன வெல்லா மிசையாகுந்
தாக்கினுற் ருளமே யாம்.

எ—து. கால்களால் நடக்கும் வினைகளெல்லாங் கூத்தாகவும் கைகளாற் செய்வன தொழில் முழவமாகவும் வாக்கினுற் பேசுவனவெல்லாம் இசையாகவும் தாக்கிய தெல்லாம் தாளமாகவு மெடுத்துரைக்கப்படும். *இந்நடை நான்கு வகைப்படும். அவையாவன "நடையே முடுக்கமொடு நாணுத குற்ருேட், டடைவே விசை யெழுதலால்" —எ—து—சொன்ன வளவைகளிலே செய்திகள் பிழையாதபடி நடைமுதலாக வியற்றப்படும் இந்நடைதான் நான்காவன நடை முடுக்கங் குற்ருேட்டு விசையெழுதல் என இவை நான்கு மாத்திரையுடன் வருமாறு சொல்லுதும். (சங)

தூவையால் வந்து நடக்குமாந் தோல் விரவிச்
சாவியால் வாங்கு முடுக்கமாம்—பாவைகேள்
எக்க தாளத்துடனே குற்ருேட்டா மேல்விசையு
மொக்கப்பார்க்கில் விந்து வாம்.

எ—து. நடை நான்கு தாளத்துடன் நிகழுமாறு :— தூவையாலே நடையும், ஆச்சாவாலே முடுக்கும் எக்கதாளத்திலே குற்ருேட்டாம். விந்துவாலே விசையெழுதலா மெனக்கொள்க. இத்தாளங்கட்கு-மாத்திரைகள். க-ளு-இ-வ எனக்கொள்க. (சச)

---

*இங்குள்ள சிலதொடர்களை ஏடெழுதுவோர் விட்டெழுதினர் போலும்.

அவையடக்கம்

மால்பாடும் பாட்டினையும் வார்சடையோன் கூத்தினையும்
மேலாய நான்முகன்றன் பாணியையும்—கோலாதென்
புன்கவியுஞ் சான்றோர்பாற் பொற்புடைத்தா மென்று
மென்கொடியே மேதையால் மிக்கு. [ரைத்தேன்

எ—து. திருமால் பாடின பாட்டினையும் பரமேசுவரன் ஆடிய கூத்தினையும் நான்முகன் கொண்ட தாளத்தினையும் ஓராதே யாதாமொருவர் செய்த புன்கவிகளுஞ் சான்றோரால் இகழப்படா தென்பதனாற் சிறியேன் மேதையாற்பாடின தாளம் எ—று. (௪௫)

அரங்கின் இலக்கணம்

சந்தனந் தமாலந்[1] தாலஞ்[2] சண்பகங் கன்னிகாரம்[3]
கொந்துமந் தாரந்[4] தேமாங் குரா நாகம்[5] பூகங்[6] கைதை[7]
பைந்தளிர்க் குரல[8] கோங்கு பாடலம்[9] நாளிகேரஞ்[10]
சுந்தர ஞாலஞ் சூழ்ந்த சோலைசே ரரங்கந் தானே (௪௬)

---

௪௬. 1. பச்சிலைமரம். 2. பனை. 3. கோங்கின்வகை யென்பர். 4. பூங்கொத்தினையுடைய மந்தாரமரம். 5. சுரபுன்னை. 6. கமுகு. 7. தாழை. 8. குரல—கொத்தினையுடைய. 9. பாதிரி. 10. தென்னை.

சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதை ௯௫ முதல் ௱௧௩ வரையுள்ள அடிகளில் நாடக அரங்கின் இயல்பு விளக்கப்பட்டுள்ளமைகாண்க.

"எண்ணப்பட்ட சிற்பநூலாசிரியர் வகுத்த இயல்புகளின் வழுவாதவகை அரங்கு செய்தற்கு நிலக்குற்றங்கள் நீங்கினவிடத்திலே நிலம் வகுத்துக்கொண்டு பொதியின்மலை முதலாய புண்ணிய வரைப் பக்கங்களிலே நெடிதாகி உயரவளர்ந்த மூங்கிலிற் கண்ணொடு கண்ணிடை ஒருசாணாக வளர்ந்ததுகொண்டு நூல்களிற் சொல்லுகின்றபடியே அரங்கஞ்செய்ய அளக்குங்கோல் உத்தமன் கைப் பெருவிரலில் இருபத்து நாலுகொண்டது ஒருகோலாக நறுக்கி இக் கோலால் எழுகோல்அகலமும் எண்கோல்நீளமும் ஒருகோல் குறட்டுயரமும் உடையதாய், தூணத்துக்கு மீதுவைத்த உத்தரப் பலகைக்கும் அரங்கினிடத்து அகலத்துக்கிட்ட பலகைக்கும் இடைநின்ற நிலம் நான்கு கோலாக உயரங்கொண்டு இத்தன்மையவாய அளவுக்குப் பொருந்த வகுத்த வாயில் இரண்டினையுடைத்தாகச்

அரங்கினதுயரம் நீள மகலமே கிளைசா ணீளம்
திரங்கொள் கோலால் நாலாறு சேர்விரற் கோலால் நீளம்
வரங்கொளெண் கோலேழாகு மகலமீதுயர மோர்கோல்
இரங்குமிவ் வுறுப்பி னுத்திரப் பலகையோ டரங்கத்தின்
[பால் (சுஎ)

செய்திடை நிலைநாற் கோலாய்ப் பூதர்தன்மேலே நந்தி
பெய்துதூ ணிழல் படாமை பெறவிழைத் திடுவீராறு
மெய்திருக் கணேச ருத்திரர் மூன்றரைக் கோடி தேவர்
ஐயிருடிகள் கணங்கள் இந்திரன் வலங்கொண் டாங்கே
(சுஅ)

முன்னமே விரவத் தும்புரு நாரதர் சான்றோர் மற்றோர்
பன்னவை யிடமால் வேதன் பண்கொள்மால் வியானைப்
[பிச்சன்
துன்னுமற் கடகம் பாவை புருஷனு மிருகம் யாவு
யின்னவை யெழுதிப் பூவி லியற்றுத லரங்கென் றோதே.
(சகூ)

வயங்கிய நிர்த்த சாலை வகைமையா லலங்கரித்துத்
தயங்குசிங் காதனப்பூந் தவிசிற் சாமரை யிரட்டச்
செயங்கொ டெண்டிசையோர்போற்றச் செகம்
[புரந்தருளும் வேந்தன்
இயங்குவன் குணபால் மேவி யினிதிருந் தருளுங் காலை(ரும)

---

செய்யப்பட்ட அரங்கினிடத்து, நால்வகை வருணப்பூதரையும் எழுதி மேனிலத்தே யாவரும் புகழ்ந்து வணங்கவைத்துத் தூண்களின் நிழல் நாயகப்பத்தியின்கண்ணும் அவையின்கண்ணும் படாதபடி நிலை விளக்கு நிறுத்தி இடத்தூணிலையிடத்தே உருவுதிரையாக ஒருமுக எழினியும் இரண்டு வலத்தூணிடத்தும் உருவுதிரையாகப் பொரு முகவெழினியும் மேற்கட்டுத்திரையாகக் கரந்துவரல் எழினியும் செயற்பாட்டுடனே வகுத்துச் சித்திரவிதானத்தையும் உடைத்தாய் சந்திரன் குரு அங்காரகன் என்னும் வெண்ணீர்மை பொன்னீர்மை செந்நீர்மை யென்னும் புகழ்மையைத் தமக்குரிமையாகப் பெற்ற முத்து மாலைகளாற் சரியுந் தூக்குந் தாமமுமாக நாற்றிப் புதுமை யுடைத்தாகச் சமைத்த அரிய தொழிலையுடைய அரங்கு" (அடியார்க்கு நல்லார் உரை) எனவரும் பகுதியில் நாடக அரங்கின் இயல்பு விளக்கப்படுதலறிக.

வெண்பா

தெள்ளுபுன லாடிச் சிவனை நினைந் தே களபம்
ஒள்ளியதூ சாபரண முற்றணிந்து—வள்ளிதாய்
வந்து கொலுவிருந்தான் மற்று மறைஞருடன்
இந்திரனைப் போல வினிது. (ருக)

விருத்தம்

புரிவரன் புராண நூலோர் புரோகிதர் புலவர் மிக்க
அரிதின்மெய்க் கணிதஞ் சொல்வோர் அந்தணர்
[குலத்திலுள்ளோர்
பரிவுறு பரதம் வல்ல பாடக ருடகத்தோர்
கருதிடும் வணிகர் வாம பாகத்திற் கலந்து சூழ (ருஉ)

குலவிய மரபு குன்ருக் கொற்றவர் குலத்தி லுள்ளோர்
அலைகடல் மண்ட லீக ரருந்தவ ரமைச்சர் சேனைத்
தலைவர் மெய்க்காவல் செய்வோர் தலம்பெறு காணியாளர்
வலமதில் மகிழ்ந்து நோக்கி வாழுமிவ் வையந் தானே (ருங)

தேடுதற்கரிய சிவனரங்கம் போல்
நாடிய பாரின் நலம்பெறச் சமைத்துக்
கூடிய சித்திரக் குண்டலி செலுத்தி
ஆடிய பூமி யரங்கந் தானே (ருச)

ஆடல் செய்யு மரனரங்கத் தொகை
பாடலுன்னிப் படிப்பவர் கேட்பவர்
நாடுபோற்ற நவில் செல்வம் நல்லருள்
நீடி நிர்த்தகர் நீணிலம் வாழியே (ருரு)

அரங்கலட்சணம் முற்றும்

மத்தள சொரூபஞ் சோதி மலரயன் வடிவதாமே
இத்தலத் தியத்துக் கெல்லா மிதுமுதல் முழுவாமென்னில்
வித்தக ருதவேத மியற்ருெலி நந்திதாருய்ப்
பத்திரி யங்கையாகப் பரிவுட னெடுக்கின்றேனே (ருசா)

சிவாசலபதிதுணை

## அரங்கவிலக்கணம்[1]

திருமகள் மருவரங்கத் திலக்கணத் தரன்செய் நிர்த்தம்
பரவவீ தமைக்க வுன்னிப் பகர்வெகு தானிய வாண்டில்
விரவுபூரணை யோணத்தில் மேவுபஞ்சமிநாட் பூவில்
திரமெ னீசானதிக்கிற் சிறப்புடன் முகுத்தஞ் செய்தே (ருஎ)

செய்கிணைக் கணுவோர் சாணுய்த் திகழுங்கோலினில் நாலாறு
பெய்விர லங்குலத்தாற் பேர்பெறு கீழ்மேற் பன்னுள்
எய்துதற் குத்தரத்தி னிரு நான்கு முழமாய்ச் சூழ
எய்தி வெள்ளியினுற் பண்பி னிசைத்துச் சந்தனத்தூ ணுட்டி (ருஅ)

நாட்டு முத்திரமேற் கைகள் நான்கு திக்கினுங் கொண் டேற்றித்
தீட்டுசெம் பொற்றகட்டாற் றிருந்தமேய்ந்தேமேல் கீழ்பால்
நீட்டு முத்தரத்திற் சாளரஞ்செய்து நிறை(ற) தேக்கிற்பூந்
தோட்டளி முரலும் வாய்தல் துலங்கவுண்டாக்கி யுள்ளாய் (ருகூ)

உள்ளிலங் கங்கு வட்டத் துவார பாலகருங் கீழ்பால்
தெள்ளிய விரவி யங்கித் திக்கினி லனலாந் தெற்கின்
உள்ள தெட்சணு முகூர்த்த முடனிருதியிற் கணேசன்
வள்ளிய வருணனிற் சேனுபதி வாயுதிக்கில் (சுய)

---

நடனமண்டபம் கிழக்குமேற்கு அறுபத்து நான்கு தச்சுமுழ நீளமும் தெற்குவடக்கு முப்பத்திரண்டு தச்சுமுழ அகலமும் உள்ளதாகியும் கீழ்த்திசை வாயிலும் கதவுநிலையும் சாளரங்களு முள்ளதாகியும் இருக்கவேண்டும் என்பர் அரபத்தநாவலர். இது பிற்கால அமைப்பு முறையினைக் குறித்ததாம்.

ருஎ. 1. முன்சொல்லிமுடித்த அரங்கவிலக்கணமே மீண்டும் வருதலின் இப்பகுதி வேறொருவர் கூற்றென்பதும் இது தொகுப்பு நூலாதலின் ஒருபொருள்பற்றிய பலர் கருத்தையும் இணைத்துரைக்கும் முறையால் இப்பகுதி மீளவும் கூறப்பட்டிருத்தல் கூடுமென்பதும் கருதற்பாலனவாம். இப்பகுதியில் சுங முதல் சுஅ வரையுள்ள பாடல்களும் எஉ-ம் பாடலின் முதலடியும் ஏட்டிற் சிதைந்து காணப்படுகின்றன.

திக்கி லாபத்தாரணன் திகள் வடக்கிற் சண்டேசன்
மிக்குறும் வடகீழ்ப்பாலில் வயிரவன் மண்ணில் வேதன்
செக்கர்வான் மாயன்ருனுக் தேவர் மற்ருேருஞ் சூழப்
புக்கு நாடகசாலைக்குட் புனிதன்நிர்த்தஞ்செய் காலை (சுக)

காலையில் நந்திமத்த ளம்புடைத் திடச்சங் கீத
மேலுந்தும் புரர்கள்பாட விதத்திற்பார்ப் பதியார்தாளம்
கோலிடவொத்த தேவர் மற்றுளோ ருவந்திறைஞ்ச
ஆலம துண்டகண்டன் அருநடம் புரிந்தா ணுங்கே (சுஉ)

ஆங்கவ னடம்புரிந்த அரங்கம்போற் சமைத்துப்
பொற்பட்
டோங்குமேற்கட்டி............விதற்பனங்கள்
தேங்கிள நீர்பலம்பூத் திகழ்கணைக் கதலித்தாறு
மாங்குழை கொடிக ளின்ன வயங்கிடவே யமைத்து (சுங)

அமைக்கு நீடரங்கத்தின்பா லாடுதற் குரிய பாவை
இமைக்குரு மாயை யியலுரு வசியார்கச்சி
யுமைக்கு மேகம் பருக்கு முயர்நிர்த்தம் புரியப் பாரிற்
..............................சாதியிற் றளிகையாரில் (சுச)

இனியதேன் கனிபால் கன்ன வியலுந் தெள்ளமுதிற்
செய்த
தனையநல் லுருவங் காம ரதிமலர்த் திருவேயென்னக்
கனைகடற் புவியிற் காமுகர் மடலேந்த............
...ணையின மெழுதிஞலுமெழுதாச்
சேயிழையையாண்டில் (சுரு)

---

சுரு. ஐயாண்டில் என்றது ஐந்தாம் வயதிலேயே பரதம் பயிற்றத் தொடங்கல் வேண்டும் என்னும் மரபினைக் குறித்து நிற்பதாம். "ஏழாண் டியற்றியோ ரீராருண்டிற், சூழ்கழன் மன்னர்க்குக் காட் டல் வேண்டி" என்னும் அரங்கேற்று காதையடிகளுக்கு "ஐயாண் டில் தண்டியம் பிடிப்பித்து ஏழாண்டு இயற்றுவித்துப் பன்னீ ராண்டில் வீரக்கழல் சூழ்ந்த காலினையுடைய சோழன் கரிகாற் பெருவளத்தானுக்கு அவன்அவையரங்கேறிக் காட்டலை விரும்பி" என அடியார்க்கு நல்லார் கூறிய உரை இவண் ஒப்புநோக்கத் தகுவதாம்.

ஆரமாம் பேதை பக்குவத்தருங்...........தங்
தேரவிம் மயிலே யென்னத்திகழ் நெல்லிக் காப்புமஞ்சள்
போரமஞ்சன நீராட்டிப் பொன்...........சாந்து
சேரவே தரித்தும் ஆசான் சிறப்புடனுவக்குங்காலம் (௬௬)

காலம் வேதி...........தியலரங்கேந்த
மாலைகள்நாற்றித்தீபம் வளர்கெவ்வியம் புண்ணியாகம்
கோலவே யியற்றி ஓசை குறைவற வட்டதிக்கி
னுலுஞ் சூழலகபாலர்களையு மர்ச்சித்தன் பாக (௬எ)

அன்பிற்பூசனை...........யோமங்களையியற்றி
இன்பிற்றா பதீபங்கொண் டியல்பாத்தியபூசை செய்து
நன்பினெற்...........தெழுதிச் செய்யப்
பொன்புனைமாதை யந்தப்பூவினில் நிருத்த முன்னில் (௬அ)

முன்னமே சயந்தன் பெற்ற மூங்கில் நன்னீரதாட்டிப்
பொன்னின் பட்டாடையாங்கே புனைந்தே
ஊர்வலஞ் செய்தாங்கே
பன்னுமத்தண்டியத்தைப் பற்றியே நடஞ்செய்விக்கும்
அங்கிலே மேளதாளம் அதிரிடிபோல் முழங்க. (௬௯)

---

௬௫. இந்திரன் அவைக்களத்து ஆடல் நிகழ்த்தும் உருப்பசியும் இந்திரன் மகன் சயந்தனும் ஒருவரையொருவர் விழைந்தமையறிந்த அகத்தியமுனிவரது சாபத்தால் உருப்பசி தளியிலார் குலத்து மகளாகியும் சயந்தன் அவள் ஆடல் நிகழ்த்துங்கால் தலைக்கோலாக வும் இவ்வுலகிடைத்தோன்றினர் என்பது இளங்கோவடிகள் சுட்டும் பழங்கதையாகும். இதனை எ௬ ஆம் செய்யுளில் இந்நூலாசிரியருங் குறிப்பிட்டுள்ளார்.

முழங்கு நன்னடன மீசன் முயல்விதிப்படி செய்வித்து
விளங்கிய கோயிலின்பால் மேவிவீழ்ந் திறைஞ்சிப்
போற்றித்
தழங்கு மங்கிலிய நாணைத் தரித்தபி[2] னில்லமீதில்
உளங்களித் தினிதின்மேவி யுற்றவர் மற்றோர்க்கெல்லாம்
(எ0)

ஆமென விருந்து செய்வித் தன்றுதொட்டேபல் பாடை
பாமிகு மிசையிராக பரதநன் னடம் பயிற்றித்
தேமிகு தேவர் சன்ன தியிலரங் கேற்றி யென்றும்
பூமியில் வாழி நிர்த்தம் புரியுமிவ் வரங்கின் வந்து (எக)

..............................யரசனுக்கிடதுபாகம்
நிரந்தர கோலிணைஞ்சா ணீளத்தினளவே நின்று
பரந்த சங்கீதத்தான பதாகைக்கைத் தலங்கள் தூக்கித்
தரம்பெறு சவுட்டம் வாங்கஞ் சதுரமதாக நின்றாள் (எஉ)

நின்றதோர் விஷ்ணுவாகும் நிறைவிழியொளியதாகும்
மண்டல லிங்கமாகும் வாணுத லுமையே யென்னத்
தெண்டிரை சத்தியாகச் சீர்பெற விதனை யாய்ந்து
வண்டுசேர் குழல்மாதேந்தி அஞ்சலி செய்யலுற்றாள் (எங)

அரங்கலட்சணம் முற்றும்

சந்திநிர்த்தம் புட்பாஞ்சலி

மலரவன் சம்பை மகவான் மட்டையம் அக்கினி
பெலி தாளந்தான் சண்டன்
குலவுசச்ச புடம்நிருதி சாசபுடம் வருணன்
பிறத்தியாங்கங் கூறும்
கலருமணி லன்புயங்கத் திராசிதமாம்வன்னமட்
டிகையே கும்பந்
திலதமதி நுதலணங்கே ரசன்வனம் தாளமெனச்
செப்புந் தானே (எச)

---

எ0. மங்கிலிய நாணைத்தரித்தல் என்பது தளியிலார் மரபில் வந்த பெண்களைக் கோயிற்குரிமையாக்குஞ் சடங்காகும். இதனை இக்காலத்தார் பொட்டுக்கட்டுதல் என்ப. இவ்வழக்கம் ஆடல் மகளிர்க்குண்டென்பதனை முன்னையோர் யாருங் கூறிற்றிலர். எனவே இது மிகமிகப் பிற்காலத்துத்தோன்றியதெனக் கருதவேண்டியுளது.

இருசரணமது குவித்து மிடைநேரே பிரித்து
மிலங்கு மருமந்தோளு மருங்கொசியக்குனித்த
தருமிருகை மலர்விரித்தே தாழ்வாய கழுத்துந்
தயங்கவுள்ளாய் வளைத்துவிழி தட்டமகிழிறையின்
உருமருவ அனுமனைப்போ லுறுதிபெற நின்று
உருபமது தனைக் காட்டியோங்கியிட வினிதாய்
வருவது புட்பாஞ்சலி யாகும்நிர்த்தந் தனையே
மாதொருபாகன் றனக்கு மகிழ்வதியற்றுவாயே (எரு)

இமையவர்கோ னவையிலிருந் துருவசி யாழ் வாங்கி
யியல்வண்ணம் பாடுதல்கண் டிந்திரன் சொற்சயந்தன்
அமையா முகங்கொடமு வதனைப்பார்த் திவளும்
யாழ்விதிபோய்ப் பாழ்படலா யறையவறைந்தவரைச்

---

எரு. இச்செய்யுளிற் குறிக்கப்பட்டகதை "தெய்வமால் வரைத் திருமுனியருள, எய்தியசாபத் திந்திர சிறுவனொடு, தலைக்கோற்ருனத்துச் சாபம் நீங்கிய, மலைப்பருஞ் சிறப்பின் வானவர் மகளிர்" (அரங்கேற் 1 — 4) எனவும் "இந்திர சிறுவன் சயந்தனுகென, வந்தனைசெய்து வழிபடுதலைக் கோல்" (அரங்கேற் - 119—120) எனவும் சிலப்பதிகாரத்து முன்னரே குறிக்கப்பட்ட பழங்கதையாகும்.

"திருந்திய பொதியி லருந்திறலகத்தியன்
சுந்தரமணிமுடி யிந்திரன் மகனை
மாணுவிறலோய் வேணு வாகென
விட்டசாபம் பட்ட சயந்தன்
சாபவிடை யெமக்கருள் தவத்தேயென்று
மேவினன் பணிந்து மேதகவுரைப்ப
அருந்தவ மாமுனி தமிழ்க்கூத்தியர்க்குத்
திருந்திய தலைக்கோற் ருனந்தீருமென்
றவனினி துரைப்ப வாகிவந் தனனென்"

என நூன்முகத்துள்ளும் இக்கதை குறிக்கப்பட்டமை காண்க.

உருப்பசியின் சாப வரலாறு சிலப்பதிகாரம் கடலாடு காதையுரையில் 'வயந்தமாமலை நயந்த முனிவரன்' எனத்தொடங்கும் அகவற்பாவில் விரிவாக விளக்கப்பட்டுளது.

சிமையமலை முனிசெகத்தே தேவர்கள்தங்கணிகை
சேர்மூங்கி லாகவெனச் சபிக்கவவர் பணிய
உமையவள்கோன் நடம்பயில்மின் னுய்த்தலைக்கோ லாகி
உற்றுங்கள் சாபமது நீங்குமென்று னுவந்தே. (எசு)

தேவாரத்துக்குப் பண்

அந்தாளிக் குறிஞ்சி பழந்தக்க ராக மாங்காந்தார
பஞ்சமந்தக்கேசி
இந்தளங் காந்தாரம் வியாழக்குறிஞ்சி யியல் நட்டபாஷை
புறநீர்கொல்லி
தந்தபழம் பஞ்சுரம் பஞ்சமங்குறிஞ்சி தக்கராகஞ்
சீகாமரம் நட்டராகம்
வந்தகௌசிக மேகராகக்குறிஞ்சி வளரீரொன்பான்பண்
தேவாரத்துக் கியற்றே. (எஎ)

அங்கஞ் சிரமு மத்தங் கைவிரல்
தங்கிரு பக்கந் தயங்கிய வல்குல்
பாதமோ டாறும் பகர்ந்தன ரிதற்கே (எஅ)

உபாங்கம் புருவ முயர்தரு நாசி
பாங்கம்பிற கண்ண னுதிய கபோலஞ்
சிபுகமொ டாறுந் தெரிந்தனரிதற்கே (எகூ)

பிறத்தி யாங்கம் பிறங்கிய கழுத்துத்
தரத்தன விருதோள் தாளந்தவுதர
முதுவே யூரு முழங்கிய கணைக்காற்
பொதுவென வாறும் புகன்றன ரிதற்கே. (அ0)

அந்தமுடி கண்கைகாலுமங்கம்
அன்பினிய வுபாங்கமொடு பிரத்தியாங்கம்
வந்ததிறனுகநுனி முகிழ்தோள்மார்பு
வயிறுந்தி விரல்மருங்கு தொடையுபாங்கம்

---

எஎ. இச் செய்யுளிற் குறிக்கப்பட்ட பதினெட்டுப்பண்களும் தேவாரத்தில் பயிலப்பெற்றவை.

சந்தநுதற் புருவமனு கபோலங் காது
பற்கிளரும் பிடர்முதுகு சகணமெட்டு
முந்துவிழி செலாதவிடம் பிரத்தியாங்கம்
முறையறிந்து குறுமுனிவன் மொழிந்தவாறே. (அக)

கச்சை முந்திக்கு வெண்பா

உடை முலேசூள் கச்சைமுன மோங்குமுந்தி பின்தட்
டிடை சுற்றுக் கச்சை யிதனை—யடையப்
பரிவுற்றே ஐவகையும் பத்திரகா ளிக்குச்
சரசுவதி யீந்தவரந் தான். (அஉ)

வெண்பா

ஆத்மதத் துவநாலா ரும்வித்யா தத்துவமேழ்
சாற்றுசிவ தத்துவமைந் தாகுமே—போற்றிலிவை
முப்பத்தா றுங்கருவி முப்பதுடன் முப்பதெனச்
செப்பிற்றெண் ணுற்றுறுந் தேர். (அங)

எ—து. ஆன்மதத்துவம் நாலாறுவன : இதிற்பூதம் ஐந்தாவன பிரிதிவு அப்பு தேயு வாயு ஆகாசம் ஆக—ரு. ஞானேந்திரியம் ஐந்தாவன (பொறிகளாவன) சுரோத்திரம் தொக்கு சக்ஷு சிங்குவை ஆக்கிராணம் ஆக—ரு. கன்மேந்திரியம் ஐந்தாவன வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் ஆக—ரு. கரணம் நான்காவன மனம் புத்தி ஆங்காரம் சித்தம் ஆக—ச. ஆக ஆன்ம தத்துவம்—உச. இனி வித்யாதத்துவம்ஏழாவன காலம் நியதி கலே வித்தை அராகம் புருடன் மாயை ஆக—எ. சிவதத்துவம் ஐந்தாவன சுத்தவித்தை ஈசுவரம் சாதாக்கியம் சத்தி சிவம் ஆக—ரு. ஆகத் தத்துவம் முப்பத்தாறும்கண்டுகொள்க.

---

அங. இத்தத்துவங்களின் விரிவினைச் சிவஞானமாபாடியம் முதலிய சைவசித்தாந்த நூலுரைகளிற் கண்டு தெளிக.

இனிப்புறக்கருவி அறுபதுக்கும் விருத்தம் :—

பூதகாரியமையைந்தும் பொருந்துவசனாதி யைந்தும்
சாதம னாடிபத்துந் தயங்கிய வாயு பத்தும்
ஏதவேஷணைகள் மூன்றும் எய்திய வாக்கு நான்கும்
ஆதியாங் குணங்கள் மூன்றோ டறுபதும் புறமதாமே (அச)

எ.து. இதிற்பூதகாரியம் ஐயைந்தாவன :— இவற்றிற் பிரிதிவின்கூறு மயிர் எலும்பு நரம்பு தோல் இறைச்சி ஆக—ரு. அப்புவின் கூறு நீர் நிணம் உதிரம் சுக்கிலம் மூளை ஆக—ரு. தேயுவின் கூறு பசி சோம்பு பயம் மைதுனம் உறக்கம் ஆக—ரு. வாயுவின்கூறு ஓடல் இருத்தல் நடத்தல் கிடத்தல் தவழ்தல் ஆக—ரு. ஆகாசத்தின் கூறு வெகுளி லோபம் மோகம் மானம் ஆங்காரம் ஆக—ரு. ஆகப்பிரிதிவின்

---

அச. பூத முதலாகிய தத்துவங்கள் பரிணமித்துத் தாத்துவிகங்களாய் உடம்பாமென்பர். "பூதங்களைந்தும் தத்தம் தன்மைநீங்கி மண் உடம்பாயும், நீர் வாயாயும், தீக் கண்ணாயும், காற்று மூக்காயும், ஆகாயம் செவியாயும் நின்று உடம்பாம். பொறிகள்தோறும் வினியோகப் பட்ட புலன் சுவைமுதல் ஐந்துவகைப்படும். இவ்வைந்தும் பொறியைந்தினு மேறி, மண்ணால் உடம்பு ஊறாயும், நீரால் வாய் சுவையாயும், தியாற் கண் ஒளியாயும், காற்றால் மூக்கு நாற்றமாயும், வானாற் செவி ஓசையாயும் வந்து உடம்பாம்" என்பர் அடியார்க்கு நல்லார்.

"மண்ணின்பகுதி நரம்பு இறைச்சி என்பு மயிர் தோல் என ஐந்து. நீரின்பகுதி நீர் மூளை சுக்கிலம் நிணம் உதிரம் என ஐந்து.

"பசி சோம்பு மைதுனம் காட்சி நீர்வேட்கை
தெசிகின்ற தீக்குணமோ ரைந்து—மொசிகின்ற
போக்கு வரவுநோய் கும்பித்தல் மெய்ப்பரிசம்
வாக்குடைய காற்றின் வகை.

என்பது தீயின்குணமும் காலின்குணமும் உணர்த்துகின்றது. ஆவன : பசி, சோம்பு, மைதுனம், காட்சி, நீர்வேட்கை யெனவிவை தீக்குணம். போக்கு, வரவு, நோய், கும்பித்தல், பரிசம் என விவை காற்றின் குணம்.

கூறு உரு. இனி வசனாதி ஐந்தாவன வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆனந்தம் ஆக—ரு. நாடிபத்தாவன இடை, பிங் கலை, சுழுமுனை, காந்தாரி அத்தி சிங்குவை புருடா சங்கினி இலம்புழை ஆக-ம.+வாயு பத்தாவன பிராணன் அபானன் உதானன் வியானன் சமானன் நாகன் கூர்மன் கிருகரன் தேவதத்தன் தனஞ்சயன் ஆக—ம. ஏடணைமூன்றாவன அர்த்த வேஷணை, புத்திரவேஷணை உலகவேஷணை ஆக—௩. வாக்கு நான்காவன சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி ஆக—ச. இனிக் குண மூன்றாவன இராசதம் தாமதம் சாத்துவிகம் ஆக—௩. ஆக அறுபது புறக் கருவியுங் கண்டுகொள்க.

---

ஓங்கும் வெகுளி மதமான மாங்காரம்
நீங்கா வுலோபமுட னிவ்வைந்தும்—பாங்காய
வண்ண முலைமடவாய் வானகத்தின் கூறென்றார்
எண்ணிமிக நூலுணர்ந்தோ ரெண்.

இஃது—ஆகாயத்தின் குணம் உணர்த்துகின்றது. ஆவன : வெகுளி மதம் மானம் ஆங்காரம் உலோபம் எனவிவை." என விளக்குவர் அடியார்க்கு நல்லார்.

இங்கெடுத்துக்காட்டிய பகுதியில் இந்நூலுரை ஒரு சிறிது வேறுபடுதல் காண்க.

வசனம்—உரைத்தல், கமனம்—நடத்தல், தானம்—கொடுத்தல், விசர்க்கம்—விடுத்தல், ஆனந்தம்—இன்புறுதல்.

இவையைந்தும் கன்மேந்திரியமைந்தின் தொழில்களாம்.

+" இடைபிங் கலைசுழுனை காந்தாரி யத்தி
புடைநின்ற சிங்குவை சங்கினி—பூடாவோ
டங்குகு கன்னி யலம்புடை யென்றுரைத்தார்
தங்குதச நாடிக டாம்.

தச நாடிகளாவன : இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிங்குவை, சங்கினி, பூடா, குகு, கன்னி, அலம்புடை எனவிவை" எனவரும் அடியார்க்கு நல்லார் உரைப்பகுதி கொண்டு இந்நூரை யைத் திருத்திக் கொள்க.

அபானவாயு மல மூத்திரங்களைப் பெய்விக்கும். உதானன் கண்டத்தானத்தில் நிற்கும். வியானவாயு போக்குவரவு செய்து இயங்கப்பண்ணும். சமானவாயு அறுவகைச் சுவையையும் அன்னத் தையும் பிரித்து எழுவகைத் தாதுவின்கண்ணும் கலப்பிக்கும். கூர்மன் இமைப்பும் விழிப்பும் உறக்கமும் உணர்ச்சியும் பண்ணும். நாகன் விக்கலையுண்டாக்கும். கிருகரன் கோபத்தைப் பண்ணுவிக்கும். தேவதத்தன் உடம்பெரிப்பைப் பண்ணுவிக்கும். தனஞ்சயன் பிராணன் போனபின்னும் உடம்பை விடாதேநின்று மூன்றுநாள் உதிப்பித்து உச்சந்தலையிற் பிற்கூற்றிலே மூன்று நெற்கிடை வெடித்துப் போகும் என்பர். இவற்றின் விரிவெல்லாம் அரங்கேற்று காதை அடியார்க்கு நல்லாருரையிற் காண்க.

மூன் புகன்ற மூவகைத் தத்துவமாவன : முப்பத்தாறு தத்துவத்தையுங் கூட்டித் தொண்ணூற்ருறு தத்துவம். இதன் பரிணும மனைத்தும் விரித்து உண்மைத் தத்துவக் கட்டளையில் ஆசான்கண் அகமார்க்கமாகக் கேட்டறிந்துகொள்ளவும்.

தத்துவம் முற்றும்.

சரீரத்தின் ஓசை பிறக்குமாறு

ஓசையும் ஈசனும் ஒக்கு மெனவுலகில்
வாசகப் பட்டு வருதலால்—ஓசையை
மெய்யகத்தா லன்றி வினவவொண்ணு தென்னுமிவை
வையகத்தார் சொல்லும் வழக்கு (அரு)

எ—து. இப்படி கண்டுகொள்க. இவ்வுடம்பில் இசைக்குற்ற சரீரத்தினளவு தன்அங்குலியால் தொண்ணூற்ருறு அங்குலி. இதின்மேலே நாற்பத்தேழரையங்குலியும் இதன் கீழே நாற்பத்தேழரை யங்குலியும் விட்டு நடுவில் நின்ற ஓரங்குலமும் மூலாதாரமாமென்றவாறு.

இசைக்கு எழுத்துற்பத்தியாவன

ஆதாரம் பற்றி யசைவு [1]முதலெழுத்தா
மூதார்ந்த மெய்யெழுத்தை [2]முன்கொண்டு-போதாரும்
உந்தி யிடைவளியா லோங்கி [3]யிடை பிங்கலையால்
வந்திடுமே[4] லோசையாம் வைப்பு. (அசா)

---

அரு. என்பது இசைக்குப் பிறப்பிடமாயுள்ள ஆதாரமுணர்த்துகின்றது. இவ்விசைக்குப் பிறப்பிடமாயுள்ள ஆதாரத்தினை

துய்ய வுடம்பளவு தொண்ணூற்ரு றங்குலியா
மெய்யெழுத்து நின்றியங்கு மெல்லத்தான்—வையத்
திருபாலு நாற்பதோ டேழ்பாதி நீக்கிக்
கருவாகு மாதாரங் காண்.

எனவரும் சிலப்பதிகார அடியார்க்குநல்லாருரை மேற்கோள் வெண்பா இனிது விளக்குதல் காண்க.

அசா. இப்பாடல் சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் உரைமேற் கோள்ளாக எடுத்தாளப்பெற்றுளது.

பாடவேறுபாடு – [1]யசைவ. [2]யெழுத்து. [3]யோங்கு. [4]வந்துமே.

எ.து. சரீரத்தினோசை பிறக்குமாறு:—ஆதாரம் பற்றி யென்றது மூலாதாரத்தைப்பற்றி யென்றவாறு. மூலாதார நாதம் மெய்யெழுத்தை முன்கொண்டென்பது. அசைவுமுதலா கிய வுயிரெழுத்துக்கள் மூலாதாரந்தம்[1] மெய்யெழுத்துக்களை முற்கொண்டு உந்திமுதலாய் இடைபிங்கலையி னுதாரத்தாலும் வந்து வாயுவாம் ஓசையா மென்றவாறு. இந்தச்சரீரம் இடை பிங்கலை சுழுமுனையினாலும் பீர்க்கங்கூடுபோன்றிருக்கு மென்றவாறு[2].

உந்தியிற் றோன்றி உதானவளியிற்பிறந்து
கந்தமலி நெஞ்சுதலைக் கண்டத்து-வந்ததற்பின்
நாசிநா வண்ண மிதழெயிறு சேர்ந்தொலியே
பேசு மெழுத்தின் பிறப்பு. (அஎ)

எனவும்

ஐவகைப் பூதமு மாய சரீரத்து
மெய்பட [1]நின்றியங்கு மெய்யெழுத்தாற்—றுய்ய
பொருணடி[2] நின்றியங்கிப் புந்தியா லோங்கி[3]
வருமா மெழுத்துடன்பின் வந்து.[4] (அஅ)

எனவும் இந்த இரண்டு வெண்பாவுக்கும் ஆசான் சொன்ன படி தாற்பரியங் கேட்டறிந்து கொள்ளவும்.

---

[1]மூலாதார அந்தம் – மூலாதாரம் இறுதியாக என்பதுபொருள்.

[2] "தசநாடிகளாவன இடை பிங்கலை முதலியபத்தும். மூலா தாரத்து எழுபத்திராயிர நாடிகளும் பீர்க்கங்கூட்டின் மூன்று கண்ணும்போல இடை பிங்கலை சுழுமுனை யென்னும் மூன்று நாடிகளுமாய் நடுவுநின்ற சுழுமுனையொழிய இரண்டானும் மேனோக்கியேறி இரண்டுமூக்கானும் ஓரோர் பாரிசத்து ஐந்து நாழிகையாகக்கொண்டு ஒருமாத்திரையில் நூற்றிருபத்தைந்து சுவாதமாய் ஒரு சுவாதத்திலே பன்னிரண்டங்குலியளவு புறப்பட்டு நாலங்குலிதேய்ந்து எண்விரலடங்குகின்றது பிராணவாயுவெனக் கொள்க" (சிலப்–அரங். அடியார்க்கு நல்லாருரை) எனவரும் பகுதி ஈண்டு நினைக்கத்தக்கது.

அஅ. *சிலப்பதிகார உரைமேற்கோள் (சிலப் - அரங்கேற்று)

1 மெய்பெற, 2 வொருநாடி, 3 யுந்திமேலோங்கி, 4 வருமா லெழுத்துடம்பின் வந்து. பா. வே,

மகரத்தி ஞெற்றுற் சுருதி விரவப்[1]
பகரக் குறினெடிலாற் பார்த்து[2]—நிகரில்லாத்
தென்னு தெனுவென்று பாடுவரே லாளத்தி
மன்னுவிச் சொல்லின் வகை. (அகூ)

எ.—து.—முன்சொன்ன வெழுத்தினது ஓசையாவன மகரத்தி ஞெற்றிலே நகரத்தையுச்சரித்துக் கொள்கவென்றவாறு. பகரிற் குறில் நெடிலாற் பார்த்தென்பது. முன்சொன்ன நகரத்தினைத் தொழிற் செய்யுமிடத்துக் குற்றெழுத்தானும் நெட்டெழுத்தாலுஞ்[3] செய்யப்படும். அவை அச்சுப் பாரணை

---

அகூ. சிலப் உரைமேற்கோள் (அரங்கேற்றுகாதை)

1. விரவும் 2. பகருங் குறினெடில்பாரித்து. பா. வே. இச்செய்யுட்கு அடியார்க்கு நல்லார் தரும் விளக்கம் பின்வருமாறு:—

"இனி ஆளத்தியாமாறு உணர்த்துகின்றது: "மகரத் ... வகை" முதலிற் பாடுமிடத்து மகரத்தினெற்றுலே நாதத்தை உச்சரிக்கு மரபு பகரிற் பாரித்து முற்கூறிய நாதத்தினைத் தொழில் செய்யு மிடத்துக் குற்றெழுத்தாலும் நெட்டெழுத்தாலும் செய்யப் படும். அவை அச்சு பாரணை யென்று பெயர்பெறும். அச்சுக்கு எழுவாய் குற்றெழுத்து. பாரணைக் கெழுவாய் நெட்டெழுத்து. அச்சு தாளத்துடன் நிகழும். பாரணை கூத்துடன் நிகழும். ஆளத்தி செய்யுமிடத்துத் தென்னு வென்றும் தெனுவென்றும் இரண்டசையுங் கூட்டித் தென்னுதெனு வென்றும் பாடப்படும். இவைதாம் காட்டாளத்தி நிறவாளத்தி பண்ணாளத்தி யென மூன்று வகைப் படும். இவற்றுட் காட்டாளத்தி அச்சுடன் நிகழும். நிறவாளத்தி நிறங்குலையாமற் பாரணையுடன் நிகழும். பண்ணாளத்தி பண்ணையே கருதி வைக்கப்படும்" என்பதாம்.

3 இங்குச் சுட்டப்பட்ட குற்றெழுத்தாவன அ இ உ எ ஒ எனவிவை. நெட்டெழுத்தாவன ஆ ஈ ஊ ஏ ஓ எனவிவை.

"குன்றாக் குறிலைந்துங் கோடா நெடிலைந்து
நின்றூர்ந்த மந்நகரந் தவ்வொடு—நன்றாக
நீளத்தா லேழு நிதானத்தால் நின்றியங்க
ஆளத்தி யாமென் றறி"

யென்னும்பெயராம். அச்சுக்கு எழுவாய் குற்றெழுத்து, பாரணைக்கு எழுவாய் நெட்டெழுத்து, அச்சுக்குள் அகரத்துடன நிகழும். பாரணை ஆகார முதல நெட்டெழுத்துடன் நிகழும். 'நிகரில்லாத் தென்னுந்தென வென்று பாடுவரேல் ஆளத்தி' யென்பது, ஆளத்தி செய்யு மிடத்துத் தென்னுவென்றும் தெனவென்றும இரண்டையுங் கூட்டித் தென்னதென வென்றும் பாடப்படும். அவற்றுள் காட்டாளத்தியாவன அச்சுடன் நிகழும். நிறவாளத்தியாவன நிறங்குலையாமல் பாரணையோடு நிகழும். பண்ணாளத்தியாவன பண்ணையே கருதி வைக்கப்படும்.

எழுத்தினது ஓசை முற்றும், நிறவுற்பத்தி முற்றும்.

---

என அடியார்க்கு நல்லார்காட்டிய மேற்கோள்வெண்பா ஆளத்திக்கு மெலுமுரிய இலக்கணத்தினை யுணர்த்துகின்றது. மெய்யெழுத்தாகிய பதினெட்டெழுத்தினுள்ளும் மவ்வும் நவ்வும் தவ்வுமென இம்மூன்றுமல்லாத மற்றை மெய்யெழுத்துக்கள் ஆளத்திககு வரப்பெறு என இப்பாடலாலறியலாம். இம்மூவகை மெய்யினுள்ளும் மவ்வினம் சுத்தத்திற் குரித்தெனவும் நவ்வினம் சாளரத்திற் குரித்தெனவும் தவ்வினம் தமிழ்க் குரித்தெனவும் இவை இங்ஙனமன்றி ஓரொருகால் விரவவும் பெறுமெனவும் அடியார்க்கு நல்லார் கூறுவர். இசைப்பாவுக்குரிய ஓசையைச் சுத்தம் சாளகம் தமிழ் என மூவகைச் சாதியோசையாகப் பண்டையிசையாசிரியர் வகுத்த முறைமையினைக் கடலாடு காதையுரையில் இவ்வாசிரியர் குறிப்பிடுதலால் இங்கு அம் மூன்றையுங் குறித்தவிடத்தில் சாளரம் என்பது சாளகம் என்னுஞ் சாதியோசை என்பது புலனும். எந்த மொழிக்கும் சிறப்பின் உரிய ஓசைக்கலப்பின்றித் தனித்த நிலையிலுள்ள இசையோசை சுத்தமெனவும், தமிழ் மொழி யொன்றிற்கேயுரிய சிறப்பியல் இன்னோசை தமிழெனவும், பல்வேறு மொழிக்கலப் புடையதா யமைந்த கலப்பிசையோசை சாளகமெனவும் வழங்கப்படுமென ஒருவாறு உய்த்துணரலாம்.

இங்ஙனம் மூலாதாரந் தொடங்கிய எழுத்தின் நாதம் ஆளத்தியாய்ப் பின் இசையென்றும் பண்ணென்றும் பெயராம். இவ்வியல்பு

"பாவோடணைத லிசையென்றார் பண்ணென்றார்
மேவார் பெருந்தான மெட்டானும்—பாவாய்
எடுத்தல் முதலா இருநான்கும் பண்ணிப்
படுத்தமையாற் பண்ணென்று பார்"

என்னும் சிலப்பதிகார மேற்கோள் வெண்பாவினால் இனிது புலனும்.

எழுத்துற்பத்தியாவன :—

நன்னூற்சூத்திரம்

நிறையுயிர் முயற்சியி னுள்வளிதுரப்ப
எழுமணுத் திரள்உரங் கண்டம் உச்சி
மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்
வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே. (௬0)

மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே. (௬௧)

உயிருமுடம்புமாம் முப்பதுமுதலே. (௬௨)

உயிர்மெய் யாய்த முயிரள பொற்றள
பஃகிய இ உ ஐ ஔ மஃகான்
தனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும். (௬௩)

உயிர்மெய் யிரட்டுநூற் றெட்டுய ராய்தம்
எட்டுயி ரளபெழு மூன்றொற் றளபெடை
ஆறே ழஃகு மிம்முப் பானேழ்
உகரமா றைகான் மூன்றே
ஔகான் ஒன்றே மஃகான் மூன்றே
ஆய்த மிரண்டொடு சார்பெழுத்துறுவிரி
ஒன்றொழி முந்நூற் றெழுபா னென்ப. (௬௪)

---

௬0. உயிரினதுமுயற்சியால் உள்ளே நின்ற உதானன் என்னுங் காற்றானது எழுப்ப உந்தியினின்று மேலே எழும் செவிப்புலனும் ஒலியணுக்கள், நெஞ்சு மிடறு தலை மூக்கு என்னும் இந்நான்கிடத்தையும் பொருந்தி உதடு, நா, பல், மேல்வாய் என்னும் இந்நான்கினது முயற்சியால் வேறுவேறு எழுத்தொலியாய்ப் பிறத்தல் எழுத்துக்களின் பொதுப்பிறப்பாம். (நன்–74)

௬௧. மொழிக்கு முதற்காரணமும் அணுத்திரளின் காரியமும் ஆகிய ஒலி எழுத்தெனப்படும். அவ்வெழுத்து முதலெழுத்தென்றும் சார்பெழுத்தென்றும் இருவகைப்படும். (நன்–58)

௬௨. உயிரெழுத்துப் பன்னிரண்டும் மெய்யெழுத்துப் பதினெட்டும் ஆகிய இவை முப்பதும் பிறவொலியின் சார்புவேண்டாது தனித்தனி எழுத்தொலிகளாய்ப் பிறத்தலின் முதலெழுத்தெனப் பட்டன. (நன்–59)

௬௩. உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக் குறுக்கம் மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் ஆகிய இவைபத்தும் பிறவெழுத்தொலிகளைச் சார்ந்து தோற்றுதலின் சார்பெழுத்து எனப்பட்டன. (நன்–60)

௬௪. சார்பெழுத்தின்விரி முந்நூற்றறுபத்தொன்பதாம். (நன்–61)

*அவற்றுள், அ இ உ எ ஒக்குறிலெந்தே.* (௧௫)

*ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்.* (௧௬)

இவைகுற்றெழுத்தும் நெட்டெழுத்துங் கண்டுகொள்க.

ஆவியெனினும் உயிரெனினும் ஒக்கும். அவை.

"அகர முதலாய் ஔகாரமீறாய்
இகலில் புகலெழுத் தீராறு முயிரே" (௧௭)

"எகரஒகரமெய் புள்ளிபெற்றியலும்" (௧௮)

என்றார் ஆசிரியர் அகத்தியனார். மெய்யெழுத்தாவன

கங-சஞ-டண-தந-பம-யர-லவ-ழள-றன எனவிவை.

"ககரவொற்று முதலாய் னகரவொற்றீறாய்ப்
பகருமொற்றெழுத்திவை பதினெட்டுமெய்யே" (௧௯)

இவை பதினெட்டெழுத்தும் மெய்யெழுத்தென்றவாறு.

'மெய்யுடம் புறுப்பொற் றிவைதா மொருபொருள்
செய்யுமென்று செப்பினர் புலவர்' (௨)

'மெய்யினியக்கம் அகரமொடு சிவணும்' (௨௧)

'ககரமுதலாய் னகரமீறாய்
உயிர்மெய் யிருநூற்றொருபத்தாறே' (௨௨)

இவை வல்லினவெழுத்து மெல்லினவெழுத்து இடையின வெழுத்து என மூன்றுவகைப்படும். அவை வருமாறு:—வல்லின வெழுத்து கசடதபற. மெல்லினவெழுத்து ங ஞ ண ந ம ன. இடையினமென்ப ய ர ல வ ழ ல ள எனக் கண்டுகொள்க.

---

௧௫, ௧௬. ஒரு மாத்திரை யளவாய்க் குறுகிய வோசையுடையவை குற்றெழுத்தென்றும் இரண்டு மாத்திரையளவாய் நீண்டவோசை யுடையன நெட்டெழுத்தென்றுங் காரணக்குறி பெற்றன. (நன்–64, 65)

௧௭, ௧௮. இவ்விரண்டும் அகத்தியச் சூத்திரமென இவ்வாசிரியர் காட்டியதற்கேற்பவே பேரகத்தியச் சூத்திரத்து 9, 53 என்னும் எண் பெற்ற சூத்திரங்கள் முறையே இவ்விரு சூத்திரங்களையும் கருத்து வகையான் ஒத்துக்காணப்படுகின்றன.

௧௯, ௨. இச் சூத்திரங்களின் ஆசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை.

௨௧. தொல் - எழுத்து. மொழிமரபு 13.

௨௨. இன்ன நூலைச் சார்ந்ததென விளங்கவில்லை.

மருவுமுயிர் மெய்யிருநூற் றெருபத்தா றய்த
மதுவெட்டா முயிரினள பிருபத்தொன்றேயாம்
அருமையா மொற்றளபு நாற்பத்திரண்டாம்
ஆனகுற்றிய லிகர முப்பத்தேழாகும்
வருவனகுற்றிய லுகர முப்பத்தாறுடனே
வளரைகா ரக்குறுக்க மூன்றௌகாரொன்றே
தருமஃகான் மூன்றுமொற் றய்தமிரண் டணைத்துஞ்
சாற்றில்முந் நூற்றறுபத் தொன்பதெழுத் தாமே. (௱௬)

எழுத்துவகை முற்றும்.

ஆணெழுத்து பெண்ணெழுத்து அலியெழுத்தாவன :
துற்ற வுயிர்க்குறி லும்முயிர் மெய்க்குறில் சுட்டிடிலாண்
நற்று முயிர்நெடி லும்முயிர்மெய்நெடில் நாட்டிற் [பெண்ணும்
ஒற்றுமவ் வாய்தமு மேயலி யென்றுர வோர் மகிழ்ந்து
கற்ற வெழுத்தின் விகற்பமிவ் வாறென்று கண்டனரே. (௱௭)

எ-து. உயிர்க்குற்றெழுத்தும் உயிர்மெய்க் குற்றெழுத்தும் ஆணெழுத்தாம். உயிர்நெட்டெழுத்தும் உயிர்மெய் நெட்டெழுத்தும் பெண்ணெழுத்தாம். ஒற்றெழுத்தும் ஆய்த வெழுத்தும் அலியெழுத்தாம்.

சொல்லுங் கசத நபமவவ் வுற்ற அ இ உ எ ஒ
புல்லு மமுத வெழுத்தாம் புகல்மக ரக்குறுக்கம்
செல்லு முயிரள பொற்றள பாய்தமுஞ் சேர்ந்துடனே
கொல்லுநஞ் சென்பர்க ளாய்தக் குறுக்கமுங் கூடவென்றே (௱௮)

எ-து.—க ச த ந ப ம வ இவ்வேழும் அ இ உ எ ஒ இவ்வைந்தும் ஆகப் பன்னிரண்டு எழுத்தும் அமுதவெழுத்

---

௱௬. இச்செய்யுள் நன்னூல் எழுத்தியலில் சார்பெழுத்தின் விரி கூறிய 6 ஆம் சூத்திரத்தைத் தழுவி யெழுந்ததெனத் தோன்றுகின்றது.

தாகும். மகரக்குறுக்கம் உயிரளபெடை ஒற்றளபெடை ஆய்தம் ஆய்தக்குறுக்கம் இவை யனைத்தும் நஞ்செழுத்தென்ற வாறு.

அந்தணர் சாதிக் குயிர்பன் னிரண்டு க ங ச ஞ ட ண
தந்த பதினெட்டு மாமரசர்க்கு த ந ப ம ய ர
வந்தனவாறும் வணிகர்க்கு ல வ ற ன வென்னுமநான்
கந்தமில் சூத்திரர்க் கா ழ ள வென்றிரண்டாகு
மன்றே. (௭௬)

எ-து.—அந்தணர் சாதிக்கு உயிரெழுத்துப் பன்னிரண்டும் உயிர் மெய்யெழுத்தில் க ங ச ஞ ட ண ஆறுமாகப் பதினெட் டெழுத்துமாம். சத்திரியர்க்கு த ந ப ம ய ர இந்த ஆறெழுத்து மாம். வணிகர்க்கு ல வ ற ன இந்த நான்கெழுத்துமாம். சூத்திரர்க்கு ழ ள இந்த இரண்டெழுத்துமாம். ஆக முப்ப தெழுத்தும் நான்கு வருணத்திற்கும் ஆமென்றவாறு.

ஈரா றுயிர்படைத் தானயன் ஈரொன்ப தாமுயிர்மெய்
பாராரு மீசன் திருமால்செவ் வேள்வா சவனருக்கன்
ஏராருந் திங்கள் இயமன் வருணன் குபேரனென்பான்
பேரா னவர்கட் கிரண்டெழுத் தாகப் பிரித்தறியே. (௭௭)

எ-து.—பிரமாவுக்கு உயிர் பன்னிரண்டெழுத்தும், உயிர் மெய்யில் சிவனுக்கு க ங இந்த இரண்டெழுத்தும், விஷ்ணு வுக்கு ச ஞ இந்த இரண்டெழுத்தும், சுப்பிரமணியனுக்கு ட ண இந்த இரண்டெழுத்தும், இந்திரனுக்குத் த ந இந்த இரண்டெழுத்தும், சூரியனுக்குப் ப ம இந்த இரண்டெழுத் தும், சந்திரனுக்கு ய ர இந்த இரண்டெழுத்தும், யமனுக்கு ல வ இந்த இரண்டெழுத்தும், வருணனுக்கு ழ ள இந்த இரண்டெழுத்தும், குபேரனுக்கு ற ன இந்த இரண்டெழுத்து மாக உயிரும் மெய்யும் ஆகிய முப்பதெழுத்தும் பிரமா முதற் பத்து தேவதைகளுக்கும் இந்த எழுத்தென்றறிக என்றவாறு.

அரியென் றெழுத்துத் தமிழோ கிரந்தத்தி னட்சரமோ
தெரிகின்ற தில்லை யிருநான் கெழுத்துத் தெரிசியப்பா
உருகின் றெழுத்துப் பனிரண் டெழுத்துக்கு மொத்
திருக்கும்
அரியென் றெழுத்துக்கு அட்சர மேதென் றறிந்திலனே.
(௭௮)

விருத்தம்

சோத்திரக் கருவியாகா சத்தினிற் றேன்றிநின்றிட்
டார்த்திடுஞ் சத்தந்தன்னை யறிந்திடு மணங்குதிக்கக்
கோத்தவிச் சத்தந் துத்தங் குரலுழை விளரிதாரம்
ஏத்தரு மிளியினேடு கைக்கிளையிங்கே மென்பார். (௱௯)

எ. து.—சோத்திரக் கருவியாகிய செவியானது ஆகாய மாகிய சிரசளவுந் தோன்றிநிற்கிற நிறைந்த சத்தந்தன்னை யறிந்திடும். அணங்கு உற்பவிக்கத்தக்கதாகக் கோவையாகக் கோத்த இச்சத்தமாவது தானே யேழிசையாமென்றவாறு. அவையாவன குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் எனவேழிசையுங் கண்டுகொள்க வென்றவாறு.

உழை தலையில் மேவுகுர லேமிடற்றி லோதும்
விளரிநெற்றி யிற்றுத்த நாக்காம்—இளிநெஞ்சிற்
கைக்கிளை யண்ணத்திற் கருதுந்தார மூக்கில்
மிக்கவிது முற்றேன்று மென். (௱௰)

எ. து.—உழையென்கிற சத்தந் தலையில், குரலென்பது மிடற்றில், விளரியாவது நெற்றியில், துத்தமாவது நாவில், இளியானது நெஞ்சில், கைக்கிளையானது உண்ணவில், தார மானது நாசியில் உற்பவிக்கும். இந்தமிக்கான இசையானது முற்றேன்றுக என்றவாறு.

---

௱அ. இப்பாடலின் பொருள் நன்கு விளங்கவில்லை.

௱௯. இப்பாட்டு ஏழிசையின் தோற்றத்தைக் குறிக்கின்றது.

௱௰. கண்டம், சிரசு, மூக்கு, உதடு, மார்பு, முகம், நா என்னும் ஏழிடங்களிலும் சுரங்கள் முறையே பிறக்குமென்பர் அரபத்த நாவலர். அன்றியும் அவ்வாசிரியர் பரம், சிவம், ஈச்சுரனுடைய சத்தியோசாத, வாம, அகோர, தற்புருஷ, ஈசானம் என்னு மேழிடங்களில் முறையே தோன்றும் எனச் சுரங்களின் முன்னைப் பிறப்புக்கூறுதலும் இவண் கருதத்தகுவதாம்.

உள்ளாளம் விந்துவொடு நாத மொலியுருட்டு
எள்ளாருந் தூக்கெடுத்த லேபடுத்தல்—தள்ளா
நலிதல்கம் பித்தல் நடிலமெனப் [1]பன்னொன்
றொலிகிரியை யாமெனவே யுன். (௯௧௧)

எ—து. சரீரத்தின் நடுவுந்தியி லுற்பவிக்கின்ற அட்சரமானதுஞ் சிரமளவுஞ் செல்லப்பட்ட வொலி கிரியையானதும் பதினொரு தானத்திற் றுக்குமென்று சொல்லுவதென்றவாறு,

---

௯௧௧. இப்பாடல், சீவகசிந்தாமணியுரையில் நச்சினார்க்கினியர் காட்டிய

" உள்ளாளம் விந்துவட னாத மொலியுருட்டுத்
தள்ளாத தூக்கெடுத்தல் தான்படுத்தல்—மெள்ளக்
கருதி நலிதல்கம் பித்தல் குடிலம்
ஒரு பதின்மே லொன்றென் றுரை "

என்ற வெண்பாவின் சிதைந்தவடிவமாகக் காணப்படுகின்றது.

" பதினொரு வகையிலும் உள்ளாளப்பாட்டுப் பாடுங்கால் இடைபிங்கலையை இயக்கமறுத்து மூலாதாரமுதல் பிரமரந்திரமளவும் இயக்கமாக்கி நடுவுதொழில் பாடுதலென்றறிக " என நச்சினார்க்கினியர் உள்ளாளப் பாடலின் இயல்பினை விளக்கியுள்ளார்.

கண்ணிமையா கண்டந் துடியா கொடிறசையா
பண்ணளவும் வாய்தோன்று பற்றெரியா—எண்ணிலிவை
கள்ளார் நறுந்தெரியற் கைதவனே கந்தருவர்
உள்ளாளப் பாட லுணர்.

எனவரும் இசைமரபு வெண்பாவாலும் இதனியல்பு நன்கு புலனாம்.

எடுத்தல்பாட் டுச்சமா மெண்படுத்தல் மந்தந்
தடுத்து நலிதல் சமமாந்—தொடுத்தியன்ற
தள்ளாத கம்பிதந் தானடுக்கல் நற்குடிலம்
உள்வாங்கிப் பாட லுணர்.

எனவரும் பாடலால் உள்ளாளத்தில் நடுநடுங்கியிசைத்தலாகிய கம்பிதங்கலப்பின் குறையாம் என்பது விளக்கம் பெறும்.

1. குடிலமெனப் பாடத்தைத் திருத்திக் கொள்ளுதல் வேண்டும்.

சங்கு குயிலோ டியானை மயில் வாம்புரவி
பொங்குபுன லன்னம் புகைக்காடை — துங்கனும்
ஏழிசையி னுட்பொருளைச் சொன்னு ரிசைப்புலவோர்
நாளுமே நன்ருய் நவின்று. (௩௧௨)

எ—து—சங்கு குயில் யானை மயில் குதிரை அன்னம் காடையென இவ்வேழுவகையும் ஊர்வன பறப்பன நாற்கால் மிருகத்தில் ஏழிசைக்குப் பொருந்தின தொனிவடிவம் ஈதென்றும் அரிதாகிய பொருளை யுணர்ந்தோர்கள் சொல்லுவரென்றவாறு.

கலித்துறை

குரல்சங்கு வேதன்துத் தங்குயி லாதிரை யன்கைக்கிளை
பரவு முயர்வுக்குப் பாரத்து வாசன் பரமுழைமா
யுரவியத் தங்கிய னேயிளிவாம் பரிசேய்விளரி
தரமுறு மன்னங் கதிர்தாரங் காடைநற் ருசுகமே.
(௩௧௩)

எ—து—குரலினுடைய சத்தம் சங்குத்தொனியைப் போன்றிருக்கும். இதற்குத் தேவதை பிரமா. துத்தமாவது குயிலின் சத்தம்போன்றது, சிவன் இதற்குத் தெய்வம். கைக்கிளை யானையினுடைய சத்தம், இதற்குப் பாரத்துவாச இருடி. உழையினுடைய தொனி மயிலின்சத்தம் போன்றது. *இதற்குத் தெய்வம் சுப்பிரமணியர். விளரியாவது அன்னப் பட்சியின் தொனி போன்றது இதற்குத் தெய்வம் சூரியன் தாரமென்கிற சத்தம் காடைத் தொனியைப் போன்றது. இதற்குத்தெய்வதமே வாசுகியாகிற வாயுவாம். இவ்வாறு ஏழிசையினது வடிவமும் தேவதையும் கண்டுகொள்க என்றவாறு.

---

௩௧௩. 'மயில், ரிஷபம், ஆடு, கொக்கு, குயில், சாதி அசுவம், யானை யென்னுமேழும் சுரத்தொனியுவமைகளாம்' என்று அரபத்த நாவலர் கூறுவர்.

அக்கினி, பிர்ம்மா, சரசுவதி, அரன், அரி, விநாயகன், சூரியன் என்னும் எழுவரும் முறையே ஏழு சுரங்களின் அதிதெய்வம் என்பது அரபத்தநாவலர் கொள்கை *'இதற்குத் தெய்வம் அக்கினி. இளியினுடைய தொனி குதிரையின் சத்தம் போன்றது' என்ற தொடர் இங்கே விடுபட்டிருத்தல் வேண்டும்.

* நாலா நரம்பினுக் கேழு நட்பாம் ஐந்து நற்கிளையாம்
பாலான வாறுநரம்புக்கு மூன்று பகையென்றுரை
மேலாம் குரல்கைக் கிளை தார மாளிளி துத்தம்விளரி
சூலாகும் பெண் ணுழை தானலியாமென்று சொல்லுதுமே. (௱௧௪)

எ—து. நாலாம் நரம்புக்கும் ஏழாம் நரம்புக்கும் உறவு. ஐந்தான நரம்பு பந்து வர்க்கம். ஆறும் நரம்புக்கும் மூன்றும் நரம்புக்கும் பகையென்றவாறு. இனி குரல் கைக்கிளை தாரமும் ஆண். இளி துத்தம் விளரி பெண். உழை அலியெனக்கொள்க என்றவாறு.

*குரல்துத்தம் நான்கு கிளைமூன் றிரண்டு
வரையா ருழையிளி நாலாம்—இரையா
விளரியேழ் மூன் றிரண்டு தாரமெனச் சொன்னார்
களரிசேர் கண்டுற் றவர். (௱௧௫)

எ—து. குரல்துத்தம் இளி நாலுமாத்திரை கைக்கிளையும் விளரியும் மூன்று மாத்திரை. தாரமும் உழையும் இரண்டுமாத்திரை என்று சொல்லுவரென்றவாறு.

ஏதுவெனில் ஆஈஊ ஏஐஓ ஔவிதனுட்
காதும்அஇ உஎஒ காட்டுமே—பாதலத்தில்
சூழிசையு மார்கலியிற் றோன்றவுளத் துற்பவிக்கும்
ஏழிசையு மேழெழுத்த தே. (௱௧௬)

எ—து. இசைக்குமரபாகிய உயிர் பன்னிரண்டெழுத்தும் உள்ளத்தி லுற்பவிக்கப்படாநின்ற ஏழிசைக்குங் குற்றெழுத்தைந்தும் நெட்டெழுத்துடனே சேர்ந்தும் ஏழெழுத்தாய் நிற்குமென்று சொல்லுக என்றவாறு.

---

௱௧௫ * குரறுத்த நான்கு கிளைமூன் றிரண்டாங்
குரையா வுழையிளி நான்கு—விரையா
விளரியெனின் மூன்றிரண்டு தாரமெனச் சொன்னார்
களரிசேர் கண்ணுற்றவர்

எனச் சிலப்பதிகார ஆய்ச்சியர்குரவையில் மேற்கோளாகவந்த பாடலே இங்கு இவ்வேறுபாட்டுடன் எடுத்தாளப்பட்டுளது.

குன்றுக் குறிலைந்துங் கோடா நெடிலைந்தும்
நின்றூர்ந்த மந்நகரந் தவ்வொடு — நன்றாக
நீளத்தா லேழு நிதானத்தால் நின்றியங்க
ஆளத்தி யாமென் றறி.

எ—து.—உயிரெழுத்தில் அ இ உ எ ஒ ஆ ஈ ஊ ஏ ஓ எனப் பத்தெழுத்தும், மெய்யெழுத்தில் மவ்வும் நவ்வும் தவ்வும் என இந்த மூன்றெழுத்து மல்லன இசையுமரபுக்கு வேறு எழுத்து வரப்பெறாவென்ற வாறு. (௱௧௭)

சூழுங் குரல்துத்தங் கைக்கிளை யோடுழையே
தாழும் இளிவிளரி தாரமிவை — யேழிசையாங்
காலை முதிர்காலை கதிருச்சி பாடவந்தி
மாலைநிசி நாள்வைகறை.

எ—து.—குரல் துத்தங் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என ஏழிசையுங் கண்டுகொள்க. (௱௧௮)

மகரத்தி னொற்றாற் சுருதி விரவப்[1]
பகரிற் குறில்நெடிலாற் பார்த்து[2] — நிகரில்லாத்
தென்னா தெனாவென்று பாடுவரே லாளத்தி
மன்னாவிச் சொல்லின் வகை.

எ—து.—மகரத்தி னொற்றினாலே நாதத்தை யுச்சரித்துக் கண்டுகொள்க வென்றவாறு. (௱௧௯)

ஏழிசையுற்பத்தி லட்சணம் முற்றும்.

இராக உற்பத்திவரலாறு

சரிகம பதநியெனுஞ் சத்த[1] வெழுத்தால்
வரிபரந்த கண்மடவாய் வைக்கத்—தெரிவரிய
ஏழிசையுந் தோன்று மிதனுள்ளே பண்பிறக்குஞ்
சூழிசையாய்த் தான்வந் துறும். (௱உ0)

எ—து இதுவும் வெண்பா

---

௱௧௯, ௱உ0 இவையிரண்டு பாடல்களும் சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரை மேற்கோள். 1. விரவும், 2. பகருங்குறில் நெடில் பாரித்து. பா வே.

௱உ0 சரிக மபதநியென் றேழெழுத்தாற் றானம்
வரிபரந்த கண்ணினாய் வைத்துத்—தெரிவரிய
ஏழிசையுந் தோன்று மிவற்றுள்ளே பண்பிறக்குஞ்
சூழ்முதலாஞ் சுத்தத்துளை.

(சிலப் அடியார்-உரை மேற்கோள்)

எனவரும் பாடலின் திரிந்த பாடமே இப்பாடலாகும்

இருக்குவே தத்துதித்து எங்கும் பரவிப்
பரித்தபூ பாள பயிரவியும்—விரிக்கில்
கமலத் துதித்த குலங் கண்ட நிறந் துப்பே
அமலனிவ ளுமென்ன லாம். (௱உக)

பாங்குடைய பூபாளப் பண்ணுடையான் பாகத்தாள்
ஆங்கவளா ரென்னிலவள் ஆகிரியுந்—தீங்கிலா
மற்ற மலகிரியும் வாழ்பவுளி மூவரையுங்
குற்றமற மாதெனவே கூறு. (௱உஉ)

பண்சேரு மாகப் பயிரவியான் பாகத்தாள்
விண்சேரு மேகரஞ்சி மெய்க்குறிஞ்சி—கண்சேருங்
கேள்வியுள்ள தேவக் கிரிகையுடனேயவன்றன்
வாள்விழியைச் + சொன்னார் வகுத்து (௱உங)

---

௱உ௰. சத்த என்னுஞ்சொல் ஏழு என்னும் பொருளது.

சரிகம பதநி யென்னும் ஏழெழுத்தினையும் மாத்திரைப் படுத்தித் தொழில் செய்ய இவற்றுள்ளே சட்சம் முதல் ஏழிசையும் பிறக்கு மெனவும் இவ்வேழிசையினுள்ளே ஏனைப்பண்களெல்லாம் பிறக்கு மெனவும் பண்டைத் தமிழுரையாசிரியர் கூறுவர்.

௱உக. 'இருக்குவேதத்து' எனத்தொடங்கும் வெண்பா முதல் 'நானிலமுங்கொண்டாடும்' எனத்தொடங்கும் வெண்பா ஈறாக உள்ளபன்னிரண்டு செய்யுட்களும் இருக்கு, யசுர், சாமம்,அதர்வணம் என்னும் நான்கு வேதங்களிலும் முறையே தோன்றிய இராகங்களும் அவற்றின் குலம் நிறம் முதலியனவும் குறிப்பன.

கமலத்துதித்தகுலம்—வேதியர்குலம்

௱உங. + வாள்விழியெனச் பா. வே.

மன்னுமெசுர் வேதத்தில் வந்துபிறந்தோர்குலத்திற்
பன்னரிய சத்திரியர் [1]பண்பினிறம் — பொன்னுகும்
சீரா கமுடன் திகழ்ராக பஞ்சரியும்
ஆராய்ந் திடிற்புருட னும். (௱௨௪)

தண்ணுலவு சீராகத் தான்பாகத் திந்தளமும்
எண்ணு முகாரிபா டிலைமூன் றும் — பண்ணிலகப்
பாங்குடனே யோதிப் படித்தபெரி யோருடனே
ஓங்குபுகழ் மானெனவே யோது. (௱௨௫)

பத்தியுடனே நாக பஞ்சரிதன் பாகத்தாள்
எத்திசையெண் தேசி லெளிதையுடன் — சத்தியே
பாரிணங்குஞ் சங்கரா பரண மிவைமூன் றும்
ஆரணங்கென் றேயோத லாம். (௱௨௬)

வேதவிதி யார்சாம வேதத்தி லேபிறந்தோர்
ஆதி வசந்தன் ஆள்வசியன் — ஓதுநிறம்
பச்சையென வேதெரிந்தே பார்மீதி லேயவரை
இச்சையுட னேபுருட னென். (௱௨௭)

வைய முழுதெண் வசந்தன்மனை யாளுரைக்கில்
ஐயமற நாமக்கிரி யாளுடனே — வெய்யதொரு
சாமந்தந் தோடிசைந்து சாரவா ழிம்மூன்று
மாமந்த மாதென் றறி. (௱௨௮)

அஞ்ச லெனுமா ளவியுடையான் பாகத்திற்
கொஞ்சுமொழி யாள்கெவுட குச்சரியும் — விஞ்சியதோர்
கொங்கையார் தேசாட்சிக் குண்டக் கிரிகையெனு
மங்கையார் மேவும் வரத்து. (௱௨௯)

---

௱௨௪ சத்திரியர் — அரசர். க்ஷத்திரியர் என்னும் வடசொற் சிதைவு.

௱௨௭ வசியன் — வணிகன். வைசியன் என்னும் வடசொற்சிதைவு

ஐந்தருவே போன்ற அதர்வணவே தத்துதித்தோர்
பைந்தமிழ்வங் காளம் படர்நாட்டை—முந்துகுலம்
பாரவிறம் வெள்ளை யென்றே பார்மீதிலே யவரை
யாரமுட னுணென் றறி. (௱௩ ௰)

சூருலவு வங்காளத் தோடணை மாமனையாள்
பாருலகெண் கன்னடமா பண்கெவுளை—காருலவும்
பூரணஞ்சேர் காம்போதி போதுந் தனுசியுடன்
ஆரணங்கு தானென் றறி. (௱௩க)

நானிலமுங் கொண்டாடும் நாட்டையின் றன்பாகத்தாள்
ஆனபுகழ் சேர்நா ரணகெவுளை—தேனடரும்
மாயிலியாள் கேதார மாகுமிவர் மூவரையும்
வேயனைய தோளியென்றே மேவு. (௱௩உ)

முதற்சாம முதலான சாமத்துக்குப் பண்

காலையில்தே வக்கிரிகை காந்தாரி யேகுறிஞ்சி
நாலும்வயி ரவிபிரண்டாஞ் சாமத்—தேலாகும்
வேளா கிரிபவுளி மலகிரி மேகரஞ்சி
யாளாமூன் றுஞ்சாமத் தாம். (௱௩௩)

சீராக மிந்தளமு காரியுடன் தேசியோர்
நாலாஞ் சாமத்தில் லளித்தை—தாராகாம்
போதிசங்க ராபரணம் ராகபஞ் சரிபுகழ்சேர்
ஆதியஞ்சாஞ் சாமத்துக் காம். (௱௩௪)

வசந்தன்சா மந்தம் வராளிநா மக்கிரிகை
யிசைந்தவா றுஞ்சாமத் திற்கே—நிசங்கெவுட
குச்சரி குண்டக்கிரிகை யாயிலி மாளவியா
மெச்சுமெழாஞ் சாமத்தின் மேல். (௱௩௫)

தனுசிவங் காளங்கன் னடகெவுளை தேசாட்சி
யினுமெட்டாஞ் சாமத்தி னுக்கே—சுகேதாரம்
பூபா ளநா ரணகெவுளை நாட்டையுடன்
மாபடலி யைநித்தம் வாழ்த்து. (௱௩௬)

சாமமெட்டுக்குந்தெய்வமாவன

மறையோன் திருமால் உருத்திரன்மா கேசன்
இறையோன் இரவியிந்து வானென்—றறையுமெண்மர்க்
கெட்டாகுஞ் சாம மிராகமுப் பத்திரண்டு
நட்டாமோர் நாட்பண் வகை. (௱௲௭)

முதனினைப்புக் கவி

மருவிருக்கு பாங்குபண்சேர் மன்னுதண் ணும் பத்தி
திருவேதம் வையமஞ்ச லாமைந்—தருசூரு
நானிலமீ ருகவென்பர் ராகமுப்பத் தோரிரண்டுந்
தானினைவாய்க் கூறுமுறை சாற்று. (௱௲௮)

எ.து.—இரவும் பகலும் நாளொன்றுக்கு நாழிகை யறுப தாகவும் எட்டுச்சாமத்துக்கு முப்பத்திரண்டு ராகமும் பாடி முடிக்கவும்.

மங்கலப் பண்

தக்கேசி காந்தாரங் கௌசிகஞ் சாதாரி
திக்கார் புறநீர்மை செந்துருதி—தொக்கவியற்
செங்கயற்கட் பூங்கொடியே சீகா மரஞ்சிகண்டி
மங்கலப்பண் ணுமென்னு மாறு. (௱௲௯)

ஆக எட்டுப் பண்ணுங் கண்டுகொள்க — பஞ்சமரபு —

இராக முப்பத்திரண்டுக்கும் வெண்பா முற்றும்.

பண்ணோர் பதினேழாம் பண்ணியற்பத் தேழாம்
எண்ணுந் திறமிரண்டும் பத்தென்ப—நண்ணிய
நாலாந் திறத்திறமோர் நான்கு முளப்படப்
பாலாய்ப்பண் ணூற்றுமூன் றும். (௱௪௰)
—பஞ்சமரபு

எ.—து —நூற்றுமூன்று பண்விரிவும் பரதத்திற் கண்டு கொள்க.*

* இங்குக் குறித்த பரதம் என்பது இன்னமொழியினது என்பது புலப்படவில்லை. இவர் வடமொழிப் பரதத்தைக் குறித் தனரெனக் கொள்ளின் அந்நூலகத்து இசை நாடகத்தமிழுக்குரிய பண்முதலிய புலப்படுதற்கிடனில்லை. எனவே இவ்வுரையாசிரியர் நாடகத் தமிழ்நூலாகிய பரதத்திற்கும் பிற்கால வடமொழிப் பர தத்திற்கும் உள்ள வேற்றுமையை உணரவில்லையெனத் தெரிகிறது.

* தண்டைக்கு லட்சணம்

பரவு செம்பாலையிற்பிறக்கும் பண்ணோ ரெட்டும்
படுமலைப்பாலையி லிருபத் திரண்டு பண்ணும்
வரவுறு செவ்வழிப்பாலை வயங்கி ராறே
வரும் அரும்பாலையிலிருபத்தாறு பண்ணும்
விரவுகோடிப் பாலையிற்பன் னிரண்டா மென்றும்
விளரிப்பாலைப் பண்ணைஞ்சு மேற்செம்பாலை
தரவிலகு பதினெட்டு மாகப் பேரியாழ்
தனைவல்லோர் நூற்று மூன்று பண்ணெனச்
[சாற்றினரே (௱சக)

வெண்பா

சுத்த மறையோர்க்காஞ் சாளவஞ் சோர்விலா
மத்தக் களிற்றுனை மன்னர்க்காம்—வித்தகனூர்
செய்த தமிழ்வணிகர் வேளாளர்க் கென்றுரைத்தார்
பொய்யில்லா நூலோர் பொதிந்து. (௱சஉ)

---

* தண்டை யென்னுஞ் சொல்லின் பொருள் நன்கு விளங்க வில்லை.

௱சக ஏழ்பெரும் பாலையினின்றும் நூற்று மூன்று பண்கள் தோன்றும் வகையினை இப்பாடல் குறிப்பிடுகிறது. "பன்னிரு பாலையினுரு தொண்ணூற்றொன்றும் பன்னிரண்டுமாய்ப் பண்கள் நூற்று மூன்றாதற்குக்காரணமா மெனக் கொள்க" எனச்சிலப்பதிகார அரங்கேற்றுகாதையுரைக்கண் அடியார்க்கு நல்லார் கூறும் குறிப்பினை உய்த்துணர்தல் இயலிசை ஆராய்ச்சியாளர் கடமையாகும்.

௱சஉ இசைப்பாக்களுக்குரிய ஓசை சுத்தம், சாளகம், தமிழ் என மூவகைப்படும் எனவும் இச்சாதியோசைகளைப் பெற்றுவரும் இசைப்பாக்கள் ஒன்பது வகைய எனவும் கூறுப. சுத்தம் சாளகம் தமிழ் என்னும் சாதியோசைகள் மூன்றினுடனும் கிரியைகளுடனும் பொருந்தும் இசைப்பாக்கள் ஒன்பது வகையென்ப. அவை :— சிந்து, திரிபதை, சவலை, சமபாத விருத்தம், செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி வண்ணம்என இவை; என்னை? 'செப்பரிய சிந்து திரிபதை சீர்ச்சவலை, தப்பொன்றுமில்லாச் சமபாதமெய்ப்படியுஞ், செந்துறை வெண்டுறை தேவபாணி வண்ணமென்ப, பைந்தொடியா யின்னிசையின் பா' என்றார் பஞ்சமரபுடைய அறிவனா ரென்னும் ஆசிரியரென்க" எனவரும் அடியார்க்கு நல்லார் உரைக்குறிப்பு இவண் கருதத் தகுவதாம்.

எ—து சுத்தம் சாளவம் தமிழ் என்னுஞ் சாதியோசை மூன்றினும் அந்தணர் சாமவேதம் பாடுமிடத்துச் சுத்தம்பாடு வர். அரசர் சந்தமென்கிற நிறத்திற் சாளவம் பாடுவர். வணி கரு[ம் வேளாளரும் தமிழ்பாடுவர் என்றவாறு].

தண்டைக்கூத்தெய்வம்

மேயகீள்பூண் வெற்றிவேலோன் கீழங் காவையதாட்
டுயகலைமகளே தனு வாதவன் சொல்லசனி
ஆயுமதிகய மேறை நாதம் அரனென்றுமே. (௱௪௩)

வாய்த்த மலரிற் றிருமடந்தை மதங்கி மிகக்கீழரசு
சேர்த்த கணங்கள் கணபதியாஞ் சிறந்தமேலரசு
[வயிரவனும்
ஏத்துகால முருகனிரு தாரரை
மூத்தவிடையோ னடுவிருப்ப மூணைமேற் காளிமொழி
[வதுவே. (௱௪௪)

இசையும் புணர்ப்பும்

வெண்பா

இடையீடு தொட்டுக்கோள் கூட்டிசை வேறுபா
டடையு மிரட்டைப்பா வைந்துந்—தொடையிசையாம்
நெய்தல் முகத் தல்லாய்தல் நேர்நுழைத வின்நான்கும்
எய்து புணர்ப் பென்றே யியம்பு. (௱௪௫)

இவையெல்லாங் கண்டுகொள்க வென்றவாறு[1]

சங்கீத ரத்திஞகரலட்சணம் முற்றும்[2]

சிவாசலபதி துணை

---

௱௪௩. இப்பாடலின் முதலடி ஏடெழுது வோரால் விடப்பட்டது. இரண்டாம் அடியின் யாப்புருவம் நன்கு புலப்படவில்லை.

௱௪௪. இப்பாடற்பொருள் தெளிவாக விளங்கவில்லை.

௱௪௫. இடையீடு, தொட்டுக்கோள், கூட்டிசை, வேறுபாடு, இரட்டைப்பா என்னுமிவ்வைந்தும் இசைப்பாடல்களின் தொடையிசை விகற்பமெனவும், நெய்தல், முகத்தல், ஆய்தல், நேர் நுழைதல் என்னும் நான்கும் இசைப்பாடலில் இசைபுணர்த்தல்முறை யெனவும் பொருள் கூறுதல் பொருந்தும்.

1. இவ்விகற்பமெல்லாம் ஆசிரியன் முகமாக நேரேயறிந்து கொள்ளுதற்குரியன என்றவாறு.

2. இத்தொடரால் ஈண்டு எடுத்தாண்ட இசைப் பகுதிகளுக்குச் சங்கீதரத்திஞகரம் என்னும் இசைநூல் ஆதாரமென்பதனை ஆசிரியர் புலப்படுத்துகின்றார். சங்கீத ரத்நாகரமென்பது 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சாரங்கதேவர் என்னும் வடநாட்டாசிரியரால் வடமொழியில் இயற்றப்பெற்ற இசைநூலாகும். இந்நூலாசிரியர் நம் தமிழ் நாட்டிற்கு வந்து இங்கு வழங்கும் தேவாரப் பண்களாகிய இசைத்தமிழ் இயல்பினை நன்குணர்ந்து அவற்றுட் சில வற்றைத் தம் நூலில் இனிது விளக்கியுள்ளார்.

தோற்கருவி முப்பதுக்கும் வன்மை மென்மை சமம்

சீருறு பேரிகைத் தேசி படகம்
இடக்கையுந் திகழும் உடுக்கை மத்தளஞ்
சல்லி கரடி திமிலை சார் குடுக்கை
குடமுழாத் தக்கை குண்ணப் பறையுந்
தமருகந் தண்ணுமை தடாரி யந்தரிமா
முழவோ டேருறு சந்திர வலைய
மொந்தை முரசே கண்ணிடு தூம்பு
நிசாளமோடு துடுமை
சிறுபறை யும்பா ரிலகு மடக்கந்
தகணிச் சம்விர லேறு பாங்கி
பாகம் பெரும் பறை துடிமுப் பதுமே. (௱௭௯)

எ.-து.—இவை தோலாற் செய்யப்பட்ட ஆதிக்கருவிகள் முப்பது மென்றவாறு. அவை வன்மை மென்மை சமம் என்று மூன்றுவகைப்படும். இவை,

௱௭௯. பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரிமுழவு, சந்திரவளையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி, பெரும் பறை என இவை முப்பதும் தோலாற் செய்யப்பட்ட கருவிகளாம் இவற்றை,

"பேரிகைபடக மிடக்கை யுடுக்கை, சீர்மிகுமத்தளஞ் சல்லிகை கரடிகை, திமிலை குடமுழாத் தக்கை கணப்பறை, தமருகந் தண்ணுமை தாவில் தடாரி, யந்தரி முழவொடு சந்திரவளையம், மொந்தை முரசே கண்விடு தூம்பு, நிசாளந் துடுமை சிறுபறையடக்க, மாசில் தகுணிச்சம் விரலேறுபாகம், தொக்கவுபாங்கந் துடிபெரும் பறையென, மிக்கநூலோர் விரித்துரைத்தனரே" எனவரும் அடியார்க்கு நல்லார் உரை மேற்கோட் சூத்திரத்தா லுணரலாம்.

மேற்காட்டியவற்றுள் சல்லிகை, கரடிகை என்பன முறையே சல்லி, கரடி யெனவும், கணப்பறை என்பது குண்ணப்பறை யெனவும், தகுணிச்சம் என்பது தகணிச்சம் எனவும் உபாங்கம் என்பது உபாங்கி யெனவும் இச்சூத்திரத்துச் சிதைந்துள்ளமை காண்க. சிலப்பதிகாரமேற்கோட் சூத்திரத்திற் கூறப்பட்ட நாழிகைப்பறை இச்சூத்திரத்திற் குறிக்கப்பட்டிலது. அதன்கட் குறிக்கப்படாத தேசி என்னும் பறை யொன்று இச் சூத்திரத்திற் புதிதாகக் குறிக்கப்பெற்றுளது. நாழிகைப்பறை யென்பதும் தேசி என்பதும் பொருளான் ஒன்றோ வேறோ என ஐயுறவேண்டியுளது.

நிசாளந் துடுமை முரசே பேரிகை
தேசி திமிலை குடமுழாப் பாகப்
பறையே யடக்கஞ் சிறுபறை மொந்தை
முறையே பெரும்பறை நாழிகைப் பறையொடு
துடியென வைத்துத் தொகுத்தனர் நூலோர்
வன்மைக் கருவி யாக வைத்தே.

இவை வன்மைக் கருவி பதினான்கு மென்றவாறு. (௱சசு)

மத்தளஞ் சல்லி படகங் கரடி
யித்திறம் நான்குஞ் சமமென மொழிப.

இவை நான்கும் சமக்கருவியென்றவாறு. (௱சஎ)

தக்கை குடுக்கை தகணிச்சந் தண்ணுமை
மிக்க வுடுக்கை விரலே றுபாங்கி
அந்தரி முழவொடு சந்திர வலையம்
மொந்தை மொழிந்த பைந்தொழிற் றடாரி
கண்விடு தூம்பே தமருக மென்றிவை
மண்மிசை மென்மைக் கருவியாய் வைத்தே.

இவை பன்னிரண்டும் மென்மைக் கருவியென்ற வாறு. (௱சஅ)

இதனுள் முதல் இடை கடை வன்மையென நான்கு வகைப் படும். அவையாவன :—

மன்னியசீர் மத்தளஞ் சல்லி யிடக்கையுடன்
பின்னுங் கரடிகைநற் பேரிகையுஞ் — சொன்ன
படகங் குடமுழவம் பாங்காயிவ் வேழும்
அடைவே முதற்கருவி யாம்.

இவையேழும் உத்தமமான முதற்கருவியென்றவாறு. (௱சகூ)

தண்ணுமை தக்கை யுடுக்கை தகணிச்சங்
கண்விடு தூம்பு விரலேறு—வண்ணந்
தமருகந் தடாரி சார்துடியு பாங்கி
யமுதகுண்டி யந்தரி யென்.

மத்திமமான இடைக்கருவி யென்றவாறு (௱ரு௰)

---

கசசு. வன்மைக்கருவி – வல்லோசையுள்ள தோற்கருவி.

கசஎ. சமக்கருவி – வன்மையும் மென்மையுமின்றி இடை நிகர்த்த தாகிய ஓசையினையுடைய கருவி.

கசஅ. மென்மைக் கருவி – மெல்லோசையுள்ளகருவி.

கசகூ. தோற்கருவிகளுள் முதலாக ஏற்றுக்கொள்ளத் தகுவன இவ்வேழுமே யென்றவாறு.

பறையே பாகஞ் சிறுபறை யடக்கம்
கறைவேற் கண்ணுய் கடையாங் கருவி.

இவை நான்கும் அதன்மமான கடைக்கருவி யென்வாறு. (௫௩௧)

முரசே நிசாளந் திமிலை துடுமை
அரசற் கெய்து மரிய தென்ப.

இவைநான்கும் வன்மையாகிய வீரமுழவமாமென்றவாறு (௫௩௨)

அகமே புறமே புறப்புறம் பன்மை
நாளே காலமென் ருறும் வகுத்து
வாள்போல் விழியாய் வைத்தனர் முன்னோர்.

எ—து—அகமுழவு புறமுழவு புறப்புறமுழவு பன்மைமுழவு நாள்முழவு காலமுழவு, என அறுவகைப்படும். அவற்றுள் உத்தமமான முதற்கருவிகளேழும் அகமுழவென்றவாறு. இனி மத்திமமான தண்ணுமை முதலான பன்னிரண்டும் இடைக்கருவி புறமுழவென்றவாறு. அதன்மமான பறைமுதலான நான்குங் கடைக்கருவி புறப்புறமுழவென்றவாறு, இனி முரசு முதலான வீரமுழவு நான்கும் பன்மை முழவாமென்றவாறு. நாள்முழவாவது நாழிகைப்பறை யென்றவாறு. காலமுழவாவது துடியென்றவாறு. இவ்வறுவகையுங் கண்டுகொள்க. (௫௩௩)

---

௫௩௩. அகமுழவு அகப்புறமுழவு புறமுழவு புறப்புறமுழவு பண்ணமைமுழவு நாண்முழவு, காலைமுழவு என எழுவகைப்படும் என்பர் அடியார்க்கு நல்லார். "அவற்றுள் அகமுழவாவன முன் சொன்ன உத்தமமான மத்தளம் சல்லிகை இடக்கை கரடிகை பேரிகை படகம் குடமுழா எனவிவை. அகப்புறமுழவாவன முன் சொன்ன மத்திமமான தண்ணுமை தக்கை தகுணிச்ச முதலாயின. புறமுழவாவன முன்சொன்ன அதமக்கருவியான கணப்பறை முதலாயின. பண்ணமை முழவாவன முன்சொன்ன வீரமுழவு நான்கும். அவையாவன முரசு, நிசாளம், துடுமை, திமிலையெனவிவை" என அடியார்க்குநல்லார் விளக்கியுள்ளார். சிலப்பதிகாரவுரையிற் பண்ணமைமுழவு என்பதற்குப் பன்மைமுழவு என்னும் பாட வேறுபாடுங் காட்டப்பட்டுளது. 'இவை நான்கும் வன்மையாகிய வீர முழவாம்' என இந்நூலுரையிற் குறிக்கப்படுதலான் வன்மைமுழவு என்னுஞ்சொல்லுருவமே பன்மைமுழவு எனவும் பின் பண்ணமை முழவு எனவும் திரிந்து வேறுபட்டிருத்தல் கூடும் என எண்ண வேண்டியுளது. சிலப்பதிகாரவுரையாசிரியர் எழுவகை முழவெனக் குறித்தவற்றுள் அகப்புறமுழவினை விலக்கி ஏனையாறினையுமே இந்நூலாசிரியர் அறுவகை முழவெனக் குறித்தனர் போலும்.

நான்முகனுர் மத்தளஞ் சல்லி திருமாலாம்
ஆனவிடை யேறூர்தி யாவஞ்சி—மானக்
கறைகேழ்வேற் கண்மடவாய் காதலுடன் மூன்றின்
முறைமையுமீ தென்று மொழி.

எ—து. முதல் முழவு மூன்றிற்கும் அதிதேவதை யுணர்த்துகின்றது. மத்தளத்துக்கு நான்முகன் தெய்வம். இதற்கு மெல்லென்பதோசையாதலால் மத்தளமென்று பெயராயிற்று.[1] இக்கருவி பலகூத்துக்கு முரித்தாதலானும் பாடலெழுத்துக்கள் இதனுள்ளே பிறத்தலானும் முழவுகளெல்லாம் இதனுள்ளே பிறத்தலானும் இது நான்முகனென்று பெயராயிற்று. இனிச் சல்லியென்கிற முழவுக்கு அதிதேவதை நாராயணன். இது சல்லென்கிற வோசையுடைத்தாதலால் சல்லியென்று பெயராயிற்று[2]. இவை வஞ்சியெனினுமாம். ஆவினுடைய வஞ்சித்தோலைப்போர்த்ததாதலால் ஆவஞ்சியென்று பெயராயிற்று. இதற்குத்தேவதை உருத்திரன். குடுக்கையாக வுடைத்தாதலாற் குடுக்கையென்று பெயராயிற்று. இவ்வினைக்கிரியை இடக்கையினுலே செய்தலால் இடக்கையென்று பெயராயிற்று[3]. இவற்றின் முறைமை யிவ்வாறென்று மத்தள முதற்முளங் கொள்ளுமிடத்துத் தகாரங் கொள்ளுதலால் இதற்கு முதற்கருவியென்று பெயராயிற்று[4]. இடைக்கோளாவது சல்லியாதலால் இடைக்கருவியென்று பெயராயிற்று[5]. குடுக்கை கடைக்கருவியென்று வழங்கப்படும்[6].

---

௱௫௪. 1. "மத்து ஓசைப்பெயர். இசையிடனுகிய கருவிகட்கெல்லாம் தளமாதலான் மத்தளமென்று பெயராயிற்று. இக்கருவி பல கூத்துக்களுக்கு உரித்தாகலானும் பாடலெழுத்தான் உள்ளே பிறத்தலானும் முழவுகளெல்லாம் இதனுள்ளே பிறத்தலானும் இதனை நான்முகன் என்பர்." (அரங்கேற்றுகாதை அடியார்க்கு நல்லாருரை).

2. "சல்லிகையென்றது சல்லென்ற ஓசையை யுடைத்தாதலாற் பெற்றபெயர்."

3. "ஆவஞ்சி யெனினும் குடுக்கையெனினும் இடக்கை யெனினும் ஒக்கும். அதற்கு ஆவினுடைய வஞ்சித்தோலைப் போர்த்தலால் ஆவஞ்சியென்று பெயராயிற்று; குடுக்கையாக அடைத்தலாற் குடுக்கையென்று பெயராயிற்று; வினைக்கிரியைகள் இடக்கையாற்செய்தலின் இடக்கையென்று பெயராயிற்று."

4. இவற்றுள் முதலிற் கரங்கொள்வது மத்தளமாதலின் முதற்கருவியாயிற்று.

5. இடைக்கருவி சல்லி; இடைக்கொளவைத்ததாகலின்.

6. கடைக்கருவி உடுக்கை; கடைக்கட்டட்டுக்கு உரித்தாகலின். (அரங். அடியார்க்கு நல்லார்)

இவை உதய மதியம் உபயம் உதய மென்பது. சந்திர உபயமென்பது இண்டையுங் கூட்டியதோர் பெயர். முன் சொன்ன மூன்று முழவினையும் சூரியாங்கமென்றும் (சந்தி ராங்கமென்றும்) உபயாங்கமென்றும் சொல்லவும் அமையுங் கருத்தா லென்பது. பதங்கள் மேலோதிய வாச்சியங்களாலே கீதவழிக்கிசையப் பாடப்படு மென்றவாறு 1. (௫௪)

மூன்று முதற்கடவுள் மூன்று மிடைக்கடவுள்
ஆன்ற கடையு மஃதென்ப — ஏன்றுலகில்
மன்னவரு மூவரே வாணெடுங்கண் மாமாதே
துன்னுங் கருவிக்குச் சூட்டு.

எ–து. மூன்று முதற்கடவுளென்பது பிரமா விட்டுணு உருத்திரன் இவர்கள் மூவர்க்கும் இயற்றப்படுவன. முன் சொன்ன முதற்கருவிகள் ஏழு மென்றவாறு. மூன்றுமிடைக் கடவுள் என்பது வயிரவன் முருகன் துர்க்கை என இவர்கள் மூவர்க்கும் இயற்றப்படுவன இடைக்கருவி பன்னிரண்டு மென்ற வாறு. கடையான மூவரென்பது காளி சாத்தன் காடுகாள் இவர்களுக்கு இயற்றப்படுவன கடைக்கருவி நான்கு மென்ற வாறு. மன்னவரு மூவரென்பது சேரன் சோழன் பாண்டியன் இவர்களுக்குரியன முன் வீரமுழவு நான்கு மென்றவாறு. துன்னுங் கருவிக்குச் சூட்டு என்பது இவையிற்றுக்கு இதுவே முறைமையென்றவாறு. (௫௫)

அகரமுதல் ஔகார மீறாய நீக்கி
நிகர்வல் லினம்மெல் லினமே—பகரும்
இடையினத்தில் ரவ்வு மெழிற்புள்ளி கூட
வடிவுடைய வாச்சியத்திற் காம்.

எ–து—வாச்சியத்துக்குப் பாடவெழுத்தாவன வல்லின மாகிய க ச ட த பறவும், மெல்லினமாகிய ங ஞ ண ந ம னவும்

---

1. இத்தொடர்களின் பொருள் நன்கு விளங்கவில்லை.

௫௫. முன்கூறிய முதல் இடை கடை யென்னும் கருவிகள் முறையே எவ்வெத்தெய்வங்களுக்குரியன என்பதனை இச்செய்யுளின் உரை புலப்படுத்துகின்றது.

இடையினத்தில் ரகாரமும், ஆய்தமுமாகப் பதினேழெழுத்தும் வாச்சியதானத்துக்குப் படுமென்றவாறு. (௫௫௬)

கோவும் பசுப்பெற்றங் கூறுமகங் கொள்கபிலை
ஆவுந்தே னுஞ்சுரபி யாமென்றே—நாவலர்கள்
தோற்கருவி முப்பதுக்குஞ் சொன்னா ரிதன்றோலே
ஏற்கத் தகுவதென் றே.

எ-து—பிண்டத்திற்குரித்தான தோல் கொள்க வென்றவாறு. (௫௫௭)

தோற்கருவி முடிந்தது.

---

தோற்கருவிக்குப் பிண்டமரபு I

கருங்காலி செங்காலி வேம்புபலாக் கஞ்சம்
நெருங்கிய சீர்குரவ மண்ணும்—பொருந்திய
ஆனமில் லாமலை யாநிலத்துத் தோன்றியவா
மானின் விழிமடவாய் வைப்பு.

எ-து—கருங்காலி செங்காலி வேம்பு பலா சீர்குரவம் கஞ்சம் மண் இவற்றுள் கஞ்சத்தாற் செய்வது உத்தமம். மரத்தாற் செய்வது மத்திமம். மண்ணாற் செய்வது அதன்மம். இம்மரங்கள் தாம் வடுப்படாதே பொத்துப்படாதே சாவாதே மூவாதே இளமையின்றி நடுவயதாய் உயர்ந்த தலமான நிலத்துளவான மரங்கள் முழவுகளுக்காமென்றவாறு. இவைகளுள் கஞ்சத்தாற் செய்வது குடமுழவு, கருங்காலியாற் செய்வது இடக்கை, செங்காலியாற் செய்வது சல்லி, இடக்கை யொழிந்தன வெல்

---

௫௫௬. மெய் பதினெட்டனுள் வல்லெழுத்தாறும் மெல்லெழுத்தாறும் இடையினத்தில் ரகரமெய்யும் ஆய்தவெழுத்தும் ஆகிய இப் பதினென்கெழுத்துக்களுமே தண்ணுமை முதலிய தோற்கருவிகளில் பாடவெழுத்தாக வாசித்தற்குரியன என்பது கருத்து. இதன் கண் எழிற்புள்ளியென்றது புள்ளிவடிவினதாகிய ஆய்தவெழுத்தை.

I. தோற்கருவிகளின் முழுவடிவத்தினையே பிண்டமென்றார். அதனை அமைக்கும் முறையைப்பற்றியது இப்பகுதியாகும்.

லாம் இவையொன்றும் பெறாத காலத்து மண்ணாற் செய்வது உத்தமம். இவையொழிய இவையிற்றுக்கு வேறொன்றும் வரப் பெறாவெனக் கொள்க. (ஈருஅ)

எத்திறமுழவும் இத்திற மாமே

மற்றுமுழவுகளுக்கும் இவையல்லது மரமில்லை யெனக் [கொள்க

இனி அவற்றின் அளவுகளைச் சொல்வது பரதமென்றவாறு. (கருகூ)

மத்தளத்துக்குப் பிண்ட லட்சணம்

வேங்கை கருங்காலி வீரும் பலாவுசிலை
தாங்கும் மலையாத்தி தானும் — பாங்குநிம்பம்
செம்மரமு மாமே சிறப்புடைய மத்தளத்துக்
கிம்மர மாமென் றியம்பு.

எ – து வேங்கை கருங்காலி பலா சிலை மலையாத்தி வேம்பு செம்மரம் இந்த எழுவகை மரமும் மத்தளத்துக்கா மென்றவாறு. (ஈசூ0)

உண்மைதிக ழும்விதிவத்* துற்றமரத் தால்நாற்பத்
தெண்விரலி னீள மிடப்புறத்தில் — நண்ணும்
பதினால் விரல்வலம்பாற் பண்புபதின் மூன்றாய்
மதியரைவி ரற்பிண்ட மாம்.

---

ஈசூ0. மத்தளஞ் செய்யப் பலாமா விலிங்கு நுணா
உத்தம சாதி யொளிர் வேம்பாம் — சொற்ற
மூன்றுசா ணீளமா மொய்குழலே சாணும்
ஆன்றகண்க ளின்னளவென் பார்.

நடுவிட்ட மொன்றரைச்சா ணல்லமதி சோதி
மடுகண்ணா மார்ச்சனையே மாலாம் — படிபுகழும்
மேல்வளையம் ஊர்கோளாம் மேதருவார் சத்தியாம்
பால்மொழியே கூறும் பரிசு.

(பரத சாஸ்திரம், ஒழிபியல் கக, க௨)

எனவரும் வெண்பாக்களால் அரபத்த நாவலர் மத்தளத்திற் குரிய இயல்பினை விளக்கியுள்ளார்.

ஈசுக * விதிவத் என்பது விதிப்படி யெனப்பொருள்படும் வட மொழிச்சொல் நடை.

எ—து. விதிவத்தாயுற்ற [விதிப்படி பொருந்திய] மரத்தில் நாற்பத்தெட்டுவிரல் நீளமும் இடப்புறத்தினகலம் பதினன்கு விரலும் வலப்புறத்திற் பதின்மூன்று விரலகலமும் வட்டங் கொண்டு அரைவிரற்கனத்தையுடையதாய்ப் பிண்டமமைக்க என்றவாறு. (௱௬௧)

கண்ட மிருவிரலாய்க் காமுற் றெழுந்திரண்டு
பண்டியு மொத்திரும்பாற் பார்வாரார்—கொண்டுவரு
சக்ரவளை யம்பொருந்தத் தான்துளையீ ரெட்டினில்
மிக்கசுத்த மத்தளத்தின் வீறு.

எ—து. கண்டம் இருவிரலுயரம் உயர்ந்தெழுந்து இரண்டு பண்டியுமொத்து இரும்பினலாவது வாரினலாவது சக்கரவளைய மாகச் செய்து பதினறுதுளையிட்டு நன்மைமிக்கான சுத்தமத் தளத்திற்கு இவை பொருந்த விதிப்ப தென்றவாறு. (௱௬௨)

தட்டிரவி தாழ்மதியாய்ச் சார்கண் ணுருத்திரராய்
முட்டுவார் பாரமாய் மூடிவான் — வட்டமதாம்
அன்ன மறுவிர லாகவமைத் தேயிரும்பாற்
றுன்னுமிரட் டித்த துளை.

எ—து. பசுமாட்டிற் சூடுபடாததாய் இளைப்பில்லாமல் நோயில் நுடங்காததாய் ஆறு மாசத்துக் கன்றில் தற்சாவாக நொடியில் மரித்த மாட்டின் தோலைச் சூரிய சந்திராங்கமாகத் தட்டையறுத்துத் துளைக்கண் உருத்திரராகவும் வாரானது பாம்பாகவுந் துளையிற்கோத்துக் கொளுத்திறிக மூடியபின்[1] வானவட்டம் போன்றிட ஆறுவிரற் பிரமாணம் அன்னத்தை யோர் தட்டின்மேற் பொதிந்து நடுவிரலிருபாலும் இரட்டித்த துளையிடுவ தென்றவாறு. (௱௬௩)

---

௱௬௨. பாரவரால் – பா. வே.

பண்டியென்னுஞ்சொல் வயிறுபோன்ற மத்தளத்தின் பக்கத் தினைக் குறித்தது.

௱௬௩. முட்டிவுறு வார்பார மாய்முடிவொன் — னுட்டமதா பா. வே.

1. கோமூத்திரிகமாக மூடியபின் — எனத்திருத்திக் கொள்ளு தல் வேண்டும்.

ஈட்டுகுண்ட லிப்புறத்தே யெண்விரல்மா னங்குலத்தில்
நாட்டு மரையமைநா ணன்கிசைத்துப்—பாட்டெழுத்தி
ளுதத் தினிலையே நாடித்தத் தித்தொன்னென்
ளேுதமோ தித்தனிநே ருற்று.

எ—து. குண்டலிப் புறத்தே எண்விரற் பிரமாணம் வரு விக்கப்படா நின்றதில் அரைக்கே அமைக்கப்பட்ட நாணையினி தாகப் பிரித்துப் பாட்டுக் குற்பத்தியெழுத்தினது நாதத்தி னுடைய நிலையை விரித்துத் தத் தித் தொன்னென்று மோதி யின்றுனியினுடைய கொள்கையை நேராகவுற்றறிவ தென்ற வாறு. (௱௬௪)

சுத்த மிகுதேசி தோன்றத் துரிதமிகும்
மத்திம விளம்பிதமூன் ருயிலங்கு—மத்தளத்தைத்
தாங்கிப் புறக்கையினுற் ருனந்தி கொட்ட வரன்
ஈங்குநட னம்புரிந்தா னென்.

எ—து. சுத்த முதலாகிய தேசியின் விதந்தோன்றத் துரித மத்திம விளம்பித லயத்துடனே புணர்க்கப்பட்டு மூன்றுவகை விகற்பமாய் விதிக்கப்படாநின்ற மத்தளத்தை நந்தியானவன் கொட்டத்தக்கதாக அரனுனவர் நடம்புரிந்தாரென்றவாறு. (௱௬௫)

இடமுகத்தி லிந்துடன்மா லாம்வலத்திற் பானுத்
தடமலரோ னன்னமுமை தானும்—நடுவீசன்
இந்திரனே வீறுதுளை ராகுவார் மத்தளத்தின்
நந்துதொனி நாதவிந்து வாம்.

எ—து. இடமுகத்திற் றட்டு சந்திரனுகவும் இதற்குத் தேவதை விட்டுணுவாகவும் வலமுகத்திற் றட்டு சூரியனுகவும் இதற்குத் தேவதை பிரமாவாகவும் இதிலமைக்கப்பட்ட அன்ன மானது உமையவளாகவும் இதற்கு நடுவே ஈசுரனுகவும் துளை யானது இந்திரனுகவும் இதற்குப்பொருந்தின வாரும் நாணும் இராகு கேதுவாகவும் ஆம். இவையனைத்தையும் உடைத்தா

யிருக்கப்பட்ட மத்தளத்தில் தாக்குகின்ற தொனியானது நாத விந்துவாம். எனவே சத்தியுஞ் சிவமுமாமென்று சொல்லுக வென்றவாறு. (௬௬)

தாக்கினன் மத்தளத்தைத் தாரணி தன்னில் நின்று
வாக்கினு லெடுத்த சொல்லை வகைவகை யாகக்கையால்
நோக்கிய ஈசர்முன்னே நுண்ணிமை யாகக் கொண்டு
தூக்கிய தாளைக் கண்டு தொம்மென முழக்க லுற்றான்

(௬௭)

முழங்கிய நாதந் தன்னை முடியின்மேற் சேடன்காண
விளங்கிய வேதமென்று விதித்தன னுலுசொல்லை
இளங்கொடி மடந்தைபாக ரீசனுர் முன்னே நந்தி
உளங்கரின் வடிவதென்றே உரைத்தன னுண்மைதானே

(௬௮)

மத்தள லட்சணமுற்றும்.

---

பேரொடு முறையே பிண்ட மெழுத்தே
வாரணி முலையாய் தோலின் வகையே.

இவை நான்குமெனக் கொள்க. (௬௯)

கன்னி யிளம்பசுவின் காமப் புறத்தோலாம்
பின்னு மதனுளுந் தரிகையாம்—பன்னிய
பக்கத்தோல் வார்கொள்ளப் பார்க்கிலிதன் கொம்பு
மிக்க குடுப்பாகு மென்.

எ-து—முழவுகளுக்குத் தோல்கொள்ளுமாறு வரலாறு: ஈனுத காரா வயதிலே சூடுபடாமற் செத்த பசுவின்தோலைச் சீவியேறிடுவது பன்மை முழவினுக்கும் [1] இதனுளுத்தரத்தைப் போர்த்துக்கிடந்த தோலை[2] மென்மை முழவினுக்கும் போர்க்கப் படும். இதன் பக்கத்தோலை வாராகக் கொள்க வென்றவாறு. (௱௭௰)

பஞ்சமகா சத்தம்

சொல்லிடு நற்றோல் துளை துய்ய மென்னரம்பு
கல்விமிக்க கஞ்ச மிடறெனவே—வெல்லுமதன்
அஞ்சப் படும்விழியாய் ஆயு மிவையைந்தும்
பஞ்சமகா சத்தமெனப் பார்.

எ-து—அவை தோல் துளை நரம்பு கஞ்சம் மிடறு எனச் சொல்லப்பட்டன ஐந்து மென்றவாறு. (௱௭௧)

அவற்றின் பகுதி யாவையோவெனின் தோற்கருவியாவன மத்தளம் சல்லி கரடி முதலாயின முப்பது மெனக்கொள்க.

துளைக்கருவியாவன :—

வங்கியங் கொம்பு தாரைகுழல் காளஞ்
சங்கு கலியச் சாற்றினர் புலவர். (௱௭௨)

நரம்புக் கருவியாவன :—

யாழ்வீணை கின்னரம் இவை முதலியவே [3]. (௱௭௩)

கஞ்சக் கருவியாவன :—

கைமணி காளங் கஞ்ச தாளங்
கொண்டி யென்று கண்டனர் புலவர். (௱௭௪)

---

1. பன்மைமுழவு—வன்மை முழவு, வீரமுழவு.

2. 'இதனுளுதிரத்தைப் போர்த்துக்கிடந்த தோலை' எனத் திருத்திக்கொள்ள வேண்டுமெனத் தோன்றுகின்றது.

3. "சித்திர கோஷாவளி சித்திரிகை கூர்மிகை, உற்ற சாரங்க முயர்ராவணுசுரம், கின்னரி வராளி கீஸ்தி குச்சிகை, பன்னு விபஞ்சிகை பரிவாதினியே, சகள வல்லகி சரவீணை யநாவிதம், மகதி பிரகதி லகுலாக்ஷி ருத்திரிகை, களாவதி கச்சளா காந்தாரி யநுமதம், என்னும் வீணை யிருபா னிரண்டே" இவற்றுள் மகதி நாரதருக்கும், பிரகதி தும்புருவிற்கும், கச்சளா சரசுவதிக்கும், களாவதி விச்சுவாவசுக்கும், அனுமதம் அனுமாருக்கும் இராவணுசுரம் இராவணனுக்கும் உரியனவாம்" (பரத சாத்திரம் ஒழிபியல ௬௫)

காளம் கஞ்சக்கருவிக்குந் துளைக்கருவிக்கும் பொதுவாதலின் இரண்டுங் கூறினர். மிடற்றுக்கருவியாவன பண்ணும் இசையு மென்று சொல்லப்பட்ட பலவிதப் பாடலுமென்றவாறு. இப் படிச் சொல்லப்பட்ட ஐந்துகருவியும் ஒக்க இயற்றுமது பஞ்சமகாசத்த மென்றவாறு.

பூரிகை[1] நாககரம்[2] பொற்சின்னம் எக்காளை
தாரை நவரிசங்கு வாய்வீணை[3]—வீரியஞ்சேர்
கொம்புதித்தி காளை குழலுடன் ஈராறும்
இன்பார் துளைக்கருவி யென்.

எ—து. இவை பன்னிரண்டுந் துளைக்கருவியென்றவாறு. (௱௭௫)

தாளம் எறிமணி கிண்கிணி சேர்சதங்கை
நீளுஞ் சிலம்பினுயர் கைமணியும்—மேளமுறு
மஞ்சல மாணைசெம் மக்கலமென் றிவ்வெட்டும்
கஞ்சக் கருவியென்றே காண்.

எ—து. இவையெட்டுங் கஞ்சக்கருவியென்று சொல்லப் படுமென்றவாறு. கின்னரி, தம்பூருத் தண்டை, யாழ் தன் னுடனே சற்பவீணை இராவணஸ்த்திரம், ...... மிசைமட்டும்[1] ருத்திரவீணை யெனவெட்டும் நரம்புக்கருவி யென்றவாறு. (௱௭௬)

பஞ்சமகாசத்த லட்சணம் முற்றும்.

---

௱௭௫ 1. ஊதுகுழல்.

2. நாகசுரம் செய்வதற்கு மூங்கில், சந்தனமரம், வெள்ளி, வெண்கலம், கருங்காலி மரம், செங்கருங்காலி மரம், யானைத் தந்தம் ஆகிய ஏழுமாகுமென்றும், நாகசுரம் இருக்குவேதத்தினின் றுந் தோன்றிய தென்றும் அதன் அடிவட்டம் சூரியனாகவும் மேற் சுற்று அட்ட நாகமாகவும் மேலிடுசில் சந்திரனாகவும் மேற் சிறு துளை சத்தியாகவும் உட்பெருந்துவாரம் திருமாலாகவும் அமைந்தன வென்றும் முப்பத்திரண்டு விரல் நீளமும் நாலரைவிரல் சுற்றளவும் மேற்றுளை நெல்லளவுமாக இருக்கவேண்டுமென்றும் அரபத்த நாவலர் பரதங் கூறும்.

3. இதனை முகவீணையென்றுங் கூறுவர். தித்தி—துருத்தி வடிவில் அமைந்த ஒருவகை வாத்தியம்.

௱௭௬. செம்மக்கலம்—சேமக்கலம். கஞ்சக்கருவி—வெண்கலத் தாலியன்ற இசைக்கருவி.

1. இத்தொடர் ஏட்டில் சிதைந்துளது.

நரம் பொடு குழலே மிடற்றொடு தொகையே
இரங்கிய மூவிசை யாகு மென்ப.

மூவிசையாவன இவையெனக் கண்டுகொள்க. (௱எஎ)

வங்கிய லட்சணம்

கருங்காலி செங்காலி கஞ்சமமை சந்தைந்
தொருங்காமே வங்கியத்தினுக்கு — வருங்காண்
அளவு பெருவிரலா லேநான்காம் பிண்டம்
வளைசிரு பாலுங்கவை [1]. (௱எஅ)

சுற்றளவு நால்விரலாஞ் சொல்முகத்தெட் டுத்துளையாம்
உற்றவிரு பாற்றுளையு மோர்நாலாங்—துற்றகண்டை
வில்லை [2] சீவாளப்புல் [3] மேவுமுகத் தேழ்துளையேழ்
நல்விரலி சையெழவே நாடு. (௱எகூ)

வங்கியந் தின்னடி யிற்பூமி மேற்புனல் வளைசுருக
அங்கிநற் கண்டை யனிலன்விண் வாய்வில்லை யாரும்
[புல்லுத்
தங்கிய நாதஞ் சிவனெனு மோசை தயங்குமிது
இங்கித மாந்திரு மாலுக் குகந்த தெனவுரையே.

---

௱எஅ. வேய்ங்குழல் இலக்கணம் உணர்த்துகின்றது. கருங்காலி மரம், செங்காலிமரம், வெண்கலம், மூங்கில், சந்தனம் என்னும் ஐந்தும் வங்கியஞ்செய்யப் பொருந்து வனவாம்.

வங்கியத்தின் நீளம் இருபதுவிரல், பிண்டம்-வடிவு.

1 ' வளைசிருபாலுமேவை ' எனப்பாடங்கொள்ளுதல் பொருந்தும். வளைசு — வெண்கலத்தாலே யமைக்கப்பெற்ற மெல்லியபூண். இது புல்லாங்குழலின் முனையில் மரத்தொடு அணைக்கப்பெறுவது. இதனை ' அணைசு ' என வழங்குவர் அடியார்க்கு நல்லார்.

௱எகூ. இக்குழலின் சுற்றளவு நால்விரல், இதன்கண் எட்டுத் துளையிடப்படும். இவையன்றி இருபக்கத்தும் வேறுநான்குதுளையும் உண்டு எனக்கூறும் இச்செய்யுளின் கருத்து ஆராயத்தகுவது. துற்ற – நெருங்கிய. கண்டை, வில்லை, சீவாளப்புல் என்பன இவையென விளங்கவில்லை. சீவாளம் என்பது தம்பூருவின் இசையை நுண்ணிதாக அளவுபடுத்தற்கு அதன் நரம்பில்தொடுக்கும் சிறுநூல்' எனச்சென்னைப்பல்கலைக்கழக அகராதியிற் குறிக்கப்பட்டுள்ளது.

வங்கியத்துக்குப் பிண்டமரபும் அளவுந்தொகையும் இதற்குத் தேவதையுங் கண்டு கொள்க. (௱அ௰)

வங்கிய லட்சண முற்றும்

---

௱அ௰. வங்கியத்தின்கண் அமைந்த ஐம்பூதக்கூறு முதலிய வற்றைக் குறிப்பிடுவது இக்கலித்துறைச் செய்யுளாகும்.

"குழல் என்பது வங்கியம். அதற்கு மூங்கில், சந்தனம், வெண் கலம், செங்காலி, கருங்காலியென ஐந்துமாம் ... ... ... இவற்றுள் மூங்கிலிற் செய்வது உத்தமம்; வெண்கலம் மத்திமம்; ஏனைய அதமமாம். மூங்கில் பொழுது செய்யும்; வெண்கலம் வலிது; மரம் எப்பொழுதும் ஒக்கு நிற்கும். இக்காலத்துக் கருங்காலி செங் காலி சந்தனம் இவற்றுற் கொள்ளப்படும். கருங்காலி வேண்டு மென்பது பெருவழக்கு. இவை கொள்ளுங்கால் உயர்ந்த ஒத்த நிலத்திற் பெருக வளர்ந்து நாலுகாற்று மயங்கின் நாதமில்லையா மாதலான் மயங்கா நிலத்தின்கண் இளமையும் நெடும்பிராயமு மின்றி ஒரு புருடாயுப் புக்க பெரிய மரத்தை வெட்டி ஒருபுருடா காரமாகச் செய்து அதனை நிழலிலே ஆற இட்டுவைத்துத் திருகுதல் பிளத்தல் போழ்ந்து படுதலின்மையை யறிந்து ஓர்யாண்டு சென்ற பின் இலக்கணவகையான் வங்கியஞ் செய்யப்படும்.

இதன் பிண்டியிலக்கணம்:—நீளம் இருபது விரல்; சுற்றளவு நாலரை விரல். இது துளையிடுமிடத்து நெல்லரிசியில் ஒருபாதி மரன் நிறுத்திக் கடைந்து வலமுகம் வெளியாக விடப்படும்.

இனித்துளையளவிலக்கணம்:—அளவு இருபது விரல். இதிலே தாம்பு முகத்தின் இரண்டுநீக்கி முதல்வாய் விட்டு இம்முதல் வாய்க்கு ஏழங்குலம் விட்டு வளைவாயினும் இரண்டு நீக்கி நடுவில் நின்ற ஒன்பது விரலினும் எட்டுத்துளையிடப்படும். இவற்றுள் ஒன்று முக்கிரையென்று கழித்து நீக்கி, நின்ற ஏழினும் ஏழுவிரல் வைத்து ஊதப்படும். துளைகளின் இடைப்பரப்பு ஒரு விரலகலம் கொள்ளப்படும்.

இவ்வங்கியம் ஊதுமிடத்து வளைவாய் சேர்ந்த துளையை முத் திரையென்று நீக்கி முன்னின்ற ஏழினையும் ஏழுவிரல் பற்றி வாசிக்க.

ஏழுவிரலாவன:—இடக்கையிற் பெருவிரலும் சிறுவிரலும் நீக்கி மற்றை மூன்று விரலும், வலக்கையிற் பெருவிரலொழிந்த நான்கு விரலும் ஆக ஏழுவிரலும் என்க.

இவ்வங்கியத்து ஏழு துளைகளில் இசைபிறக்குமாறு:—அஃது எழுத்தாற் பிறக்கும். எழுத்து, ச ரி க ம ப த நி என்பன. இவ் வேழெழுத்தினையும் மாத்திரைப்படுத்தித் தொழில் செய்ய இவற் றுள்ளே ஏழிசையும் பிறக்கும் ... ... இவை பிறந்து இவற்றுள்ளே பண்கள் பிறக்கும்" எனவரும் அடியார்க்கு நல்லார் உரைப்பகுதி யாலும் அதன்கண் அவர் எடுத்துக்காட்டிய மேற்கோள்களாலும் இவ்வங்கியத்தின் இயல்பு ஆராய்ந்து உணரத்தகுவதாம்.

மாத்திரா லட்சணம்

[1]கடிய கணமிலவங் காட்டை நிமிடந்
துடிதுருதந் துய்யலகுத் தொன்மை—நெடிய
குருப்புலிதங் காகுவெனக் [1] கூர்வடிவு பத்தும்
விருப்பமுறக் [2] காலமென வேண்டு. (௱அக)

*அர்க்க வுதயத்தி லாரம் புயமாதல்
எற்குவளை யாத விதழெட்டுக்—கிற்குமதில்
ஊசி முனைதெறித்தா லோரிதழிற் செல்கால
மாசில் கணமாய் வரும்.

எ-து—ஆதித்தன் உதயத்திலே அலரப்பட்ட தாமரை செங்கழுநீர் நெய்தலாதல் நூற்றெட்டிதழ்அடுக்கி அந்த அடுக்கிலே ஊசியைத் தெறித்தால் அவ்வூசி ஓரிதழில் தாக்குகின்ற காலம் கணம். எ-று (௱அ௨)

*காட்டுகண மெட்டிலவங் காட்டை யிலவமெட்டுத்
தீட்டரிய வெங்காட்டை சேர்நிமிடம்—நாட்டுபுவி
யேற்ற கிரியையிதற் கெட்டா விமையவர்முன்
தோற்றிவரு நான்குந் தொகுத்து.

எ—து. கணம் எட்டுக்கொண்டது லவம். லவம் எட்டுக்கொண்டது காட்டை. காட்டை யெட்டுக்கொண்டது நிமிடம். இந்த அருபாரூபமான நான்கும் பூமியின்கண்ணுள்ளோர்க்குக் கிரியைகளாற் காணப்படாது இந்திரன் சபையிற் காணப்படுமென்றவாறு. (௱அ௩)

* வாராய் நிமிடம் வகையெட்டும் வந்தேறித்
தோராது தோன்றித் துடியாகும் — பேரா
விரண்டு துடியா லெழுந்துதுரு தம்பின்
னிரண்டு துருத லகு.

---

* இக்குறியிடப்பட்டவை தாளசமுத்திர வெண்பாக்களாம்.

௱அக. காட்டை – நிமிடம் – துடி – துருதம் – லகு – குரு – புலுதம் – காகபதம் என்று சொல்லப்பட்ட பத்துவடிவுங் காலங்களாம் என்றவாறு.

1. காகபதங் – பா. வே, 2. விருப்புறவே – பா. வே.

எ—து. நிமிடம் எட்டுக்கொண்டது துடி. துடியிரண்டு கொண்டது துருதம். துருதம் இரண்டு கொண்டது லகு வென்றவாறு. (௱அச)

* கொற்ற லகுவிரண்டுங் கூறுங் குருவாகுங்
கொற்றலகு மூன்றுங் குளிர்புலுதங் — கொற்றவிழி
மானே லகுநான்கு வண்காக பாதமெனப்
பானேர் மொழியாய் பகர்.

எ—து. லகுவிரண்டு கொண்டது குரு. லகுமூன்று கொண்டது புலிதம். லகு நான்கு கொண்டது காகபத மென்றவாறு.

கணம் லவம் காட்டை நிமிடம் துடி துருதம் லகு குரு புலிதம் காகபதம் இவை மாத்திரைக்குப் பத்துவிகற்பமுங் கண்டுகொள்க. (௱அரு)

சீரொத்து நின்ற சிறந்தவடி வின்பிறப்பைப்
பாருற் றறியப் பகரக்கேள் — காருற்ற
கொன்றைச் சடையர்கையிற் கொண்டகபா லத்தினடு
வொன்றுசுழி யிற்பிறந் துற்று. (௱அசு)

ஈசன்கை மாத்திரைக்கோ லீன்ற தொருலகுவாந்
தேசோன் பிறையளித்த தேகுருவா—மூசுபிணி
ஆர்த்தல் மலிபுலித மாமுயல கன்முதுகிற்
சேர்த்தகா லிற்காகுச் சீர்.

---

௱அச, ௱அரு, * தாளசமுத்திர வெண்பா. இந்த இரண்டு கவியும் ஒரு தொடர்.

௱அசு, தாளத்திற் சீரொத்த மாத்திரைவடிவின் பிறப்பைக் கூறுங்கால், சிவபெருமான் கையிற்கொண்ட கபாலத்திற் பொருந்திய சுழியிற் பிறந்தது அக்குறியீடு என உணர்தல் வேண்டுமென்பது இச் செய்யுளின் கருத்தாகும்.

எ—து. இவ்விரண்டு வெண்பாவி னுள்ளும் மாத்திரை வடிவுற்பத்தியானவாறு காண்க. உ ல ட ஓ (௱அஎ)
யாப்பருங்கலச் சூத்திரம் :—

"கண்ணிமை கைநொடி யளவே மாத்திரை
நுண்ணிதி னுணர்ந்தோர் கண்டவாறே"

"உன்னல் காலே யூன்ற லரையே
முறுக்கல் முக்கால் விடுத்த லொன்றே"

நன்னூற்சூத்திரம் :—

"இயல்பெழு மாந்த ரிமைநொடி மாத்திரை"

இப்படிச் செபித்துக் கண்டுகொள்க. மாத்திரைக்கு நிகண்டுப் பெயராவன :—

*விந்து விரதி விராமங் கிளர்புள்ளி
பந்த மனுக்குப் படரொற்று—முந்துதுடி
சொன்னார்கால் மாத்திரைக்குச் சொக்கனூர் மிக்கதமிழ்
நன்னு வலர்முன் னயந்து.

இது, விராமத்துக்குப் பெயர். (௱அஅ)

*சுழிகொம்பு வட்டந் துருதஞ் சுகடீரம்
விழிகண்ட சக்ரம் வியோமம்—மொழிதிங்கள்
வெஞ்சனமே விந்துகமே மிக்கவரை மாத்திரைக்கென்
றஞ்சனவேற் கண்ணு யறி.

இது துருதத்துக்குப் பெயர். (௱அகூ)

---

௱அஎ. ஈசன்கையிலுள்ள மாத்திரைக் கோலிற் பிறந்தது லகுவின் அடையாளம். இறைவனணிந்த பிறையிற் பிறந்தது குருவின் அடையாளம்.

இறைவன் முயலகன் முதுகில் ஊன்றிய திருவடியிற் பிறந்தது காகபதத்தின் வடிவாகும்.

*தாள சமுத்திர வெண்பா.

௱அஅ. விந்து, விருதி, விராமம், கிளர், புள்ளி, பந்தம், அநுக்கு, படர் – ஒத்து – துடி இப்பத்துங் கால்மாத்திரைக்குப் பெயர் என்பர் தாளசமுத்திர உரையாசிரியர்.

௱அகூ. சுழி, கொம்பு, வட்டம், துருதம், சுகடீரம், விழி, கண்டம், சக்கரம், வியோமம், திங்கள், வியஞ்சனம், விந்துகம், இப்பன்னிரண்டும் அரைமாத்திரைக்குப்பெயர்.

சுழி, விழி என்னுந் தமிழ்ச் சொற்கள் சுளி, விளி என ஏட்டில் திரித்து எழுதப்பட்டுள்ளன.

வாளிசர மங்கோல் மாத்திரிகங் கால்செவ்வை
நீளு மிரச்சுவமே நேர்கேற்று—நாளுமகிழ்
மிக்க வியாபகமே மேவு மிரேகையெனத்
தக்க லகுப்பெயராய்ச் சாற்று. (௧௱௰)

இது லகுவின்பெயர்.

வல்லதிவி மாத்திரையே வான்கலையே வச்சிரமே
நல்லபிறை தீர்க்கம் நயந்தபரம்—வில்லுக்
குடிலங் தனுச்சாபங் குருதனக்குச் சொன்னார்
சடிலமுடிச் சொக்கனார் தாம். (௧௱௧)

இது குருவுக்குப்பெயர்.

சீரிய கோமூத் திரிகங் திரியங்கம்
பாரிய சாமோ பலநாகம்—பேரிய
செய்யதிரு மின்னூந் தீத்தமுயி ரோகாரங்
துய்யபுலி தப்பெயராய்ச் சொல். (௧௱௨)

இது புலிதத்தின்பெயர். தீத்தமென்பது தீபமென்றவாறு.

ஓசையி லன்னபத மொண்காக பாதமுடன்
நேசமிகு புள்ளடியே நிச்சத்தம்—பேசாச்
சுவத்திகமே யென்றெண்ணிச் சொற்காகுவுக்குத்[1]
தவத்தலைமைச் சொக்கருரைத் தார். (௧௱௩)

இது காகபதத்தின் பெயர்.

---

௧௱௰—௧௱௩. தாளசமுத்திர வெண்பா.

௧௱௰. "வாளியே சாளகங்கோல் மாத்திரிகங் கால்செவ்வே
நீள நிரைச்சுகமே நேர்கேற்று—நாளுமகிழ்
மிக்க வியாபகமே மேவு மிரேகையெனத்
தக்கலகுப் பேராகச் சாற்று"—பா. வே.

௧௱௧. "வல்லதுவி மாத்திரையே வான்கலையே வக்கிரமே
நல்லபிறை தீபகமே நாடுபரம்—வில்லு
குடிலங் தநுசாபங் குருதனக்குச் சொன்னார்
சடிலமிளிர் சொக்கனார் தாம்"—பா. வே.

௧௱௨. "சீரிய கோமுத் திரிக முடனுகம்
பாரிதிரி மாத்திரிகம் பற்றிநேர்—கூரிய
செய்யதீர்த் தம்மாவி தென்மதுரைச் சொக்கனார்
துய்ய புலிதமென்றூர் சூழ்ந்து"—பா. வே.

௧௱௩. 1 சுவத்திகமென் றெண்ணிச் சொலுங்காகுவுக்கு-பா. வே.

மாத்திரைவடிவு

வட்ட மதிதுருதம் வானவர்செங் கோலகுவாங்
தட்டு மிளம்பிறையே தான்குருவா—முட்டவே
ஆடுநா கம்புலிதம் அன்னபதங் காகுவெனப்
பாடினுன் வேதமுனி பார்த்து. (கஙச)

துன்றுந் துடிகால் துருதம் அரையாகும்
ஒன்றுலகுத் தான்குருவே யோரிரண்டாம்—நின்றுவளர்
மூன்ருகு மேபுலித மொய்காகு நான்கெனவே
சான்ருகுஞ் சொக்கருரைத் தார். (கஙரு)

மாத்திரைக்குத் தேவதை

பந்தம் வருணன் படர்கொம்பு பஞ்சமுகன்
அந்தலகுச் சத்தி யடுத்தகுருச்—சந்திரன்ருன்
அம்பிகை யாம்புலித மான திரி மூர்த்திகளே
நம்புதிசை வான்காகு நாட்டு. (கஙசு)

---

கஙச. துருதத்தின் வடிவு வட்டமதி O; லகுவின் வடிவு செங்கோல் 1; குருவின் வடிவு இளம் பிறை ௳; புலிதத்தின் வடிவு படமெடுத்தாடும் நாகம் ஒ; காகுவின் வடிவு அன்னபதம் +, என்றவாரும்.

கஙரு—கஙஅ. தாள சமுத்திர வெண்பா. விராமம் கால்மாத்திரை, துருதம் அரைமாத்திரை, லகு ஒருமாத்திரை, குரு இரண்டு மாத்திரை, புலுதம் மூன்றுமாத்திரை, காகபதம் நான்குமாத்திரை.

எ. று.

கஙசு. "பந்தம் வருணன் படர்கொம்பு பஞ்சமுகன்
அந்தலகு சத்தி யடுத்தகுரு—சந்திரனும்
அம்பிகையா கும்புலுத மந்தத் திரிமூர்த்தி
நம்புதிசை விண்காகு நட்பு"

எனப் பாடம்வேறுபட்டுளது. விராமத்துக்குத் தேவதை வருணன் ‿. துருதத்துக்குத் தேவதை பரமேசுரன் O. லகுவுக்குத் தேவதை பரமேசுவரி 1. குருவுக்குத் தேவதை சந்திரன் ௳. புலுதத்துக்குத் தேவதை அம்பிகை ௨. காகபதத்துக்குத் தேவதை திரிமூர்த்திகள் விரும்பத்தக்க திசையாகிய ஆகாசமாம். என்றவாறு. இக்காலத்தில் விராமத்துக்கு வடிவம் அர்த்த சந்திரன் பிறை என்று வழங்கி வருகின்றனர். குருவுக்கு ஒடிந்த தநுவென்றும் புலுதத்திற்கு ஒடிந்த தநுமேற் சுழித்தலென்றும் வழங்குகின்ருர்கள். இவை ஷடங்கமாம்.

வெய்ய விராமம் விளங்கத் தனியாது
துய்ய வினமாகத் தோன்றாது—பையக்
குருப்புலிதங் கூடாது கொம்புக் கணைமேல்
உருப்பெறுமென் றுன்மதுரை யோன்.

...லகுவிலுந் துருதத்திலுங் கூடியினமா மென்றவாறு. (கக௭)

முந்தத் தனியாது முன்னிடையின் மூளாது
சந்தக் குருமுன்பின் சாராது—செந்திருவே
பேணிவருந் தாளநிலைப் பின்னே சுழிகோல்பின்
காணவருங் காகபதங் காண். (கக௮)

எ.-து. காகபதம் தனித்துநில்லாது; குருப் புலிதங்களுடன் முன் பின் வராது. யாதொரு தாளத்தின்பின்னே துருதத்தின்பின் லகுவின்பின்னுகவருமென்றவாறு.

---

கக௭. இச்செய்யுளின் உரை ஏட்டிற் சிதைந்துளது

"நிறுத்த முறையானே" அச்சொரூபங்கள் கலந்து நிற்குங் குறைகுணங்கள் கூறுகின்றது.

(இ-ள்) விராமம் தனித்து நில்லாது; இனமாகவும் நில்லாது, குரு புலுதத்தின்மேலும் வராது. லகுவிலும் துருதத்திலும் வருமென்றவாறு. லகுவிலும் துருதத்திலும் விராமம் வருதற்கு வடிவு ௪ இவற்றில் முன்னையதற்கு லகுவிராமமென்றும் பின்னையதற்குத் துருதவிராமமென்றும் பெயராம். இவற்றை முற்கூறிய ஐந்தங்கத்துடன் கூட்டியுற்ற ஏழாம். வடநூலார் இவற்றைச் சப்தாங்கமென்று கூறுவார்."

எனத் தாளசமுத்திர உரையிற் காணுங் குறிப்புக்கள் இவண் ஒப்பு நோக்குதற்குரியன.

கக௮-ககக. O-I-ட-உ துருதம்-லகு-குரு-புலுதம் இவை வெவ்வேறாகவும் இனமாகவும் ஒரு வடிவாகவும் கலந்தும் வருமென்றவாறு. இந்த நான்கும் ஒருவடிவாகவும் வருமென்றமையால் அதற்கு வடிவம் காட்டப்படுகின்றது. அவையாவன.

OI—Oட—Oஉ—ŎI—Ŏட—Ŏஉ

இவையாம். இவற்றிற்கு முறையே லகுதுருதம், குருதுருதம், புலுதத்துருதம், லகுதுருதவிராமம், குருதுருதவிராமம், புலுதத்துருதவிராமம் என்று பெயர்களாம். அன்றியும் அனைத்தும் கலந்துவருமென்றமையான் விராமம் குருவின்மேலும் புலுதத்தின்மேலும் வருமென்றதாயிற்று. அதற்குவடிவம் ட̆ உ̆ இவையாம். இவற்றிற்கும் குருவிராமம், புலுதவிராமம் என்று பெயராம். இதன்றியும் இனமாகவும் வருமென்றதற்கு வடிவம் OI-Oட-Oஉ — ௪I-௪ட-௪உ

***வட்டங் கணைவில்லு வான்புலிதம் வேறினமாஞ்***
***சட்டம்பெறவே தனித்தனியா—மிட்ட***
***மணைத்துங் கலந்துவரி லாமெனவுஞ் சொன்னார்***
***இனத்தொங்கற் கூடற் கிறை.*** **(௧௬௯)**

**எ.–து.** துருதம் லகு குரு புலிதம் இவை வெவ்வேறேயினமாக வரும்; இப்படி யொவ்வொரு வடிவாகவும் வரும் நான்கு வடிவமும் கலந்து வருமென்றவாறு.

---

இவையாம். இவற்றிற்குப் பெயர் முன் கூறப்பட்டுள்ளன. இவற்றை வடநூலார் அஷ்டாங்கமென்பர். இவ் வெட்டங்கத்துடன் முற் கூறிய ஏழங்கத்தையும் கூட்டி யுறழப் பதினைந்தங்கமாயின வாறு காண்க.

'முந்தித்தனியாது முன்னிடையின் வாராது' பா. வே

இப்பாடல் தாளசமுத்திர ஏட்டில் 'வட்டங்கணை' என்னும் அடுத்த பாடலின்பின் வைக்கப்பட்டுளது.

முற்கூறிய பதினைந்தங்கத்துடன் ஈண்டுக் கூறிய காகபதத்தையும் கூட்டப் பதினாறங்கமாயிற்று. இதனை வடநூலார் சோடசாங்கமென்று கூறுவர். இச்சோடசாங்கத்தையும் அவற்றின் பேரையும் மாத்திரைகளையும், அக்ஷரகாலங்கள் முதலியவைகளையும் விவரித்துக்காட்டுகின்றோம்.

| பெயர் | வடிவம் | மாத்திரை | அக்ஷரகாலம் |
|---|---|---|---|
| விராமம் | ‿ | வ | ௧ |
| துருதம் | O | இ | ௨ |
| துருதவிராமம் | ४ | ஒ | ௩ |
| லகு | । | ௧ | ௪ |
| லகுவிராமம் | ‿। | ௧ வ | ௫ |
| லகுதுருதம் | O। | ௧ இ | ௬ |
| லகுதுருதவிராமம் | ‿O। | ௧ ஒ | ௭ |
| குரு | ட | ௨ | ௮ |
| குருவிராமம் | ‿ட | ௨ வ | ௯ |
| குருதுருதம் | O ட | ௨ இ | ௧௰ |
| குருதுருதவிராமம் | ४ ட | ௨ ஒ | ௧௧ |
| புலுதம் | ௨। | ௩ | ௧௨ |
| புலுதவிராமம் | ‿௨। | ௩ வ | ௧௩ |
| புலுததுருதம் | O௨। | ௩ இ | ௧௪ |
| புலுததுருதவிராமம் | ४ ௨। | ௩ ஒ | ௧௫ |
| காகபதம் | + | ௪ | ௧௬ |

வந்தவாறு காண்க''

எனவரும் தாளசமுத்திரவுரைப் பகுதி ஈண்டு நோக்குதற்குரியது.

அரையில்விரா மங்கால்மற் றம்பில்விரா மம்மரையாம்
குருவில்விரா மம்புலிதங் கொள்ளுங்—கருதி
இவைகாண வேண்டு மிதனையறிந் தக்கால்
அவர்காணுங் கட்டளைப்பட் டார். (உ00)

அரையில்விர லொன்றெடுக்க வம்பு விரலிரண்டு
குருவில்விரல் நாலுசுழி கொள்ளும்—இரதி
வகையதனை யிப்பொழுது மாநிலத்தோர் காணத்
தகைமையுடன் சொக்கருரைத் தார். (உ0க)

துடியொன்று ரங்குலமாய்த் தோன்றுந் துருதங்
கொடியேகேள் நாலங்குலமாய்—வடிவிலகு
எட்டங் குலமா யெடுத்தொத்து மாத்திரையைத்
தொட்டங் குலமாய்த் தொடர். (உ0உ)

தாக்குவிரல் நான்காந் தனித்துருத தாளலகு
நோக்குவிர லெட்டாகு நூற்செவ்வை—நீக்குகுரு
எட்டங் குலத்தா லிசைய வெடுத்தொத்தி
யெட்டங் குலத்தா லிறக்கு. (உ0௩)

இருபத்துநாலங் குலத்தா லிசையச்
சுருபத்தி லொத்திச் சுழித்துப் — பருவத்தில்
விட்டாற் புலிதமாம் வேறுமுப் பத்திரண்டு
தட்டார்து நிச்சத்தந் தான். (உ0௪)

---

உ0க, உ0உ. என்பவற்றின் கருத்தினை அடியொற்றியதாக

'விளங்கு.விராமம் விரலுயரம் (இ)ரண்டே
வளங்கொள்சுழி கோல்மீதில் வந்தால்—உளங்கனியத்
தற்சனியி னீக்குவது தானென்றூர் நீள்சடையில்
நச்சரவம் பூண்டசொக்க னூர்'

என்பது விராமம் இரண்டங்குலப்பிரமாணம் எடுத்தொத்தவும், இஃதன்றி — துருதத்தின்மீதாகிலும் லகுவின்மீதாகிலும் விராமம் வந்தால் தற்சனி இரண்டுவிரலுயரம் நீக்கவும்" எனவரும் தாளசமுத்திரப் பகுதியமைந்துள்ளது.

உ0௩ முதல் உ0௫. வரையுள்ள வெண்பாக்கள் தாளசமுத்திர நூலிலுள்ளன.

"துருதம் நாலங்குலப் பிரமாணம் எடுத்தொத்தவும். லகு எட்டங்குலப் பிரமாணம் எடுத்தொத்தவும். குரு எட்டங்குலப் பிரமாணம் எடுத்தொத்தி எட்டங்குலப் பிரமாணம் இறக்கவும். புலுதம் எட்டங்குலப்பிரமாணம் எடுத்தொத்தி எட்டங்குலப் பிரமாணஞ் சுழித்து எட்டங்குலப் பிரமாணம் இறக்கவும் :

இடம்வல மேல்கீழ்தா ணிச்சயக்கை காட்டக்
கடவது காகபதங் காணென்—றிடவுரைத்தார்
பூலோகஞ் சென்னியிலே பூரித்துப் போற்றுமையாள்
ஆலோகங் கண்ட சொக்க ராய்ந்து. (உ0௫)

எ—து. இந்த மூன்றுவெண்பாவினுஞ் சொல்லியது துருதத்துக்கு நாலங்குலப் பிரமாணம். லகு எட்டங்குலப் பிரமாணம், குருவுக்கும் எட்டங்குலப் பிரமாணத்தி லிரட்டித்து ஒத்தப் புலிதத்துக்கும் எட்டங்குலப் பிரமாணத்தி லொத்தி யெட்டங்குலப் பிரமாணத்திற் சுழித்தும் எட்டங்குலப் பிரமாணத்திலிறக்கவும் - காகபதம் எட்டங்குலப் பிரமாணத்திலே இடம் வலம் மேல் கீழ் கைகாட்ட என்றவாறு.

பச்சை விராமம் பகர்வட்ட நீலமாம்
உச்சிதக் கோல்வெள்ளை யொண்சிவப்பு—மிச்சகுருப்
பொன்மை புலிதமாம் புள்ளடிக்குப் போற்றுநிறம்
தன்மமிகு பஞ்சவன்னந் தான். (உ0௬)

மாத்திரைக்குச் சாதி

அந்தண னேதுருதம் அம்பே யரசனும்
வந்த விராமம் வசியனுங்—கந்தமலர்ச்
சாபந் தனைமதிக்கிற் றுன்சூத் திரனென்று
கோபவிழி மானனையாய் கூறு. (உ0௭)

---

காகபதம் இடத்தே எட்டங்குலம் வலத்தே எட்டங்குலம் மேலே யெட்டங்குலம், கீழேயெட்டங்குலம் வீசிப்போடவும் எ—று. என்பது தாளசமுத்திரவுரை.

உ0௬. இத் தாளசமுத்திர வெண்பா, மாத்திரைக்கு நிறங்கூறுகிறது.

விராமம் பச்சை நிறம், துருதம் நீலநிறம், லகு வெள்ளைநிறம், குரு செந்நிறம், புலுதம் பொன்னிறம், காகபதம் பஞ்சவன்னம் எ—று.

உ0௭. துருதம் அந்தணர்குலம், அம்பு அரசர்குலம், விராமம் வணிகர்குலம், வில் வேளாண்குலம்.

வெய்யோன் புலித மியன்றதோர் காகபதம்
பையப் பலசாதி பாவலரே—ஐயுற்று
நின்றநிறம் புள்ளி நிறைந்தவடி வீதென்றே
மன்றல்கமழ் மானே மதி. (உ0அ)

துடிவரு ணன்துருதம் துர்க்கைதுழாய் சூடும்
நெடியோன் குருவிரிஞ்ச னேராம்—படிமீ
தொருமூவ ராம்புலித மோசையா லீசன்
வருதே வதையென்வே வாழ்த்து. (உ0கூ)

சுளியிற் பரமவணுத் தோன்றிலொரு கோலாய்
வெளியிற் குருப்புலித மெய்யாய்—ஒளிதிகழும்
புள்ளி துடிதுருதம் போந்தறிய வல்லார்க்கு
வெள்ளிமலை யானிருக்கும் வீடு. (உக0)

மாத்திரா லட்சணம் முற்றும்.

மாத்திரைக்குக் கணசங்கை.

சொற்பரவு கணமெட்டுக் கோளிலவ மெட்டன்
தொகையறுபத்துநான்காச் சூட்டுங்காட்டையெட்
டிற்றொகையஞ் ஞூற்றொருபத் திரண்டாகும் நிமிடம்
இதன்றொகை நாலாயிரத்துத் தொண்ணூற்றாறேயாம்
நற்றுடியினிரட்டி யெண்ணாயிரத்தொருநா றுடனே
நவில் தொண்ணூற்றிரண்டாகுந் துருதமதுவிரட்டி
யுற்றதொகை பதினாறாயிரத்து முந்நூற்றெண்பத்
தொருநாலுகூடிலகு வொன்றாமென்றுரையே. (உகக)

---

உ0கூ. மாத்திரைக்குத் தெய்வம் கூறுகின்றது.

துடிக்கு வருணன், துருதத்திற்குத் துர்க்கை, குருவுக்குத் திருமால், நேருக்குப் பிரமன், புலிதத்திற்கு மும்மூர்த்திகள், இவற்றின் ஓசைக்கு ஈசன் தெய்வமாம் என்றவாறு,

துழாய்—துளசி. நெடியோன்—திருமால். விரிஞ்சன்—பிரமன். படி—பூமி.

உக0. இவற்றின் இயல்பினையறிய வல்லார்க்கு வீடுபேற்றின்பம் உளதாம் என்பது கருத்து.

உகக. கணம் (8) கொண்டது இலவம். இலவம் (8) கொண்டது காட்டை. காட்டை (8) கொண்டது நிமிடம். நிமிடம் (8) கொண்டது துடி. துடி (2) கொண்டது துருதம். துருதம் (2) கொண்டது இலகுவாம். இலவம் 8 கணம் உடையது. காட்டை $8\times8=64$ கணம் உடையது. நிமிடம் $64\times8=512$ கணம் உடையது. துடி $512\times8=4096$ கணம் உடையது. துருதம் $4096\times2=8192$ கணம் உடையது. லகு $8192\times2=16384$ கணம் உடையது என்பது கருத்து.

### லயத்தொகுதி.

கொம்புபயங் கூடுநடுக் கோலுபயங் கூடுநடுக்
கொம்பனுக்கு கோலனுக்கு [1] கூடுநடுக்—கொம்புகோல்
கூடுநடுக் கொம்பு கூடுநடுக் கொம்பணையாய்
தேடிலயக் கூறுகச் செப்பு. [2] (உகஉ)

குருநடுவிற் கூர்காலங் கொற்றப் புலிதங்
தருநடுவிற் றுக்காத காலங்—தெரிவரிய
காகு நடுவதனிற் காணாது காலங்கள்
ஆகுமில யத்தொகுதி யாய்ந்து. (உகங)

எ—து இது தாளலயத்துக்கு இலக்கணம் வரலாறு :—இரண்டுதுருதம் நடுவிற்காலமும் இரண்டுலகு நடுவிற் காலமும் துருதமொடு விராமமும்—லகுவும் கூடும் நடுவிற்காலமும் துருதமும் லகுவும் கூடும் நடுவிற்காலமும் குரு நடுவிற்காலமும் காகபதம் நடுவிற்காலமும் லயமாகும். இதனின் இம்முறையே வருகிற பேதகாலங்களை நிரூபித்துக் கண்டுகொள்க.

... எட்டுக்கண மெட் டிலவ
எட் டிலவங்காட்டை யேநிமிஷ—மெட்டும்
பொருந்து நிமிஷமுன் போற்றுதுடி நான்கும்
வருந்துமொரு மாத்திரையின் வைப்பு. (உகச)

---

உகஉ—உகங. தாளசமுத்திர வெண்பாக்கள்.

[1] கொம்பனுக்குங் கோலனுக்குங் கூடுநடு. பா. வே.

[2] தேடுலயத் தொத்திதெனச்செப்பு. பா. வே.

உகங. " குருநடுவிற் கூர்காலங் கோத்தடுவிற்புலுதங்
தருநடுவின் றுகாத காலங்—தெரிவரிய
காகு நடுநடுவிற் காணாத காலங்கள்
ஆகும் லயத்தொகுதி யாய் " பா. வே.

மார்க்கம்

[2]வளர்ந்தயதிக் குள்ளபடி வைக்குந் துருதங்
கிளர்ந்தகணை விற்புலுதங் கீறி—அளந்தவற்றால்
எத்தனைதா னேற்றதமி ழெத்தனைதா னேற்றவியல்
அத்தனையு மார்க்கமென லாம். (கஉரு)

எ.து முன் சொல்லப்பட்ட யதிபேதங்களி லிருக்கின்ற துருதம் லகு குருப் புலுதங்களுடைமைகளாவன மாத்திரைகள் ஏற்றம் இத்தனை குறைச்சல் இத்தனை யென்றறியுமது மார்க்கமென்றவாறு.

[3]ஆன பலமார்க்கம் ஆறு வகையாகும்
மானமுயர் தெக்கணமே வார்த்திகமே—தேனனையாய்
சித்ரமே சித்ரதரஞ் சித்ரசமஞ் சேர்ந்தவதி
சித்திரமு மென்றே தெளி. (உகசு)

எ—து. மார்க்கபேதம் ஆறுவகையாவன வரலாறு: தெக்கணம், வார்த்திகம், சித்திரம், சித்திரதரம், சித்திரசமம், அதிசித்திரம் ஆக ஆறுமார்க்க மென்றவாறு.

---

உகரு—உகசு. இப்பாடல்கள் தாளசமுத்திர நூலிற் பின்வரும் பாட வேறுபாடுகளுடன் அமைந்துள்ளன :—

வாய்ந்த யதிக்குள் வகுக்குந் துருதங்கள்
ஆய்ந்தகணை விற்புலுத மாங்கெழுதில்—ஏய்ந்திவற்றில்
இத்தனை தானேற்ற மித்தனைதாழ் வென்றறிவ
தத்தனையு மார்க்கமென லாம்.

எ—து. முன் சொல்லப்பட்ட யதிபேதங்களிலிருக்கின்ற துருதம் லகு குரு புலுதங்களுக்கு உடைமைகளான மாத்திரைகளில் ஏற்றமித்தனை தாழ்வித்தனை யென்றறியும் வகை மார்க்கம் எ. று
தா. சமு—ருச.

ஆன பலமார்க்கம் ஆறு வகையாகும்
மானமுயர் தெக்கணமே வார்த்திகமே—தேனனையாய்
சித்திரமே சித்ரதரம் சேர்ந்த வதிசித்ரம்
சித்ரசம மென்றே தெளி.

எ—து. மார்க்கபேதம் அறுவகையாம். அவையாவன :—தெக்கணம், வார்த்திகம், சித்திரம், சித்திரதரம், அதிசித்திரம், சித்திரசமம் ஆம் எ. று.
தா. சமு—ருரு.

தெக்கண மெட்டுத் திகழ்வார்த் திகம்நான்கு[1]
வைக்கரிய சித்ர வழியிரண்டு[2]—தக்கபடி
யொன்றுபெறுஞ் சித்ரதர மோங்கவரை[3] சித்ரசமம்
கன்றுமதி சித்திரந்தான் கால். (உகஎ)

எ—து. ஆறுமார்க்கத்துக்கும் மாத்திரையளவை வருமாறு: தெக்கண மார்க்கத்துக்கு எட்டு மாத்திரையும் வார்த்திகமார்க்கத்துக்கு நான்கு மாத்திரையும் சித்திரமார்க்கத்துக்கு இரண்டு மாத்திரையும் சித்திரதர மார்க்கத்துக்கு ஒருமாத்திரையும் சித்திரசம மார்க்கத்துக்கு அரைமாத்திரையும் அதிசித்திர மார்க்கத்துக்குக் கால்மாத்திரையும் ஆமென்றவாறு.

கலித்துறை

துடி மேலிற் சொல்லட்டடஞ்[1] சாக்கிரஞ் சொற்பனஞ் சொல்லகுவில்
முடிவாஞ் சுழுத்தி துரியம் புலுதம் மூலத்ததீதம்
படிமேனிச் சத்தமா ருதாரமாக் கினைப்[2] பன்மனுண்மை
வடிவாகு முற்று மிவைநாடி யாவுமறிந்துகொள்ளே.

மாத்திரைக்கு ஆருதாரமும் அவத்தைகளும் வந்தவாறு காண்க. (உகஅ)

---

உகஎ. மார்க்கம்-மாத்திரையின் அறுவகைக் காலத்தைக் குறிப்பது. இதனை இக்காலத்தார் ஷட்காலம் என வழங்குவர். தக்கணம்-எட்டு மாத்திரையின் அளவுடைய முதற்காலம். வார்த்திகம் நாலுமாத்திரையளவுடைய இரண்டாங்காலம். சித்திரம்-இரண்டு மாத்திரையளவுடைய மூன்றுங்காலம். சித்திரதரம்-ஒரு மாத்திரையளவுடைய நாலாங்காலம். சித்திரசமம் - அரைமாத்திரையளவுடைய ஐந்தாங்காலம். இதனை அர்த்த சித்திரம் என வழங்குதலுமுண்டு. அதிசித்திரம்-கால் மாத்திரையளவுடைய ஆறுங்காலம். இவற்றை இக்காலத்தார் முறையே 32, 16, 8, 4, 2, 1 மாத்திரைகளாகக் கொண்டு தொழில்செய்வர். இது தாளசமுத்திர வெண்பா.

1. தெக்கணமா மெட்டுத் திகழ்வாத் தியநான்காம் பா. வே.

2. வைக்கரிய சித்திரமே வாளிரண்டு பா. வே.

3. மோங்குமரை பா. வே.

உகஅ. 1. சொல்வட்டம் என்று திருத்திக்கொள்க

2. மாய்க்கினை பா. வே.

தாளமரபு.

மறையோன் திருமால் மதிமுடியோ னென்னும்
இறையோரை யெல்லாமிறைஞ்சி—முறைமுதலாம்
பாடல்முத லாமூன்றும் பண்பாய்ப் பரிந்தியற்ற
நாடினேன் தாளத்தி னன்கு. (உகக)

எ-து. தாளத்திலக்கணம் வரலாறு : திரிமூர்த்திகளையும் பணிந்து பாரிடத்திற் பாடல் முதலாகச் சொல்லப்பட்ட இசையு முழவுந் தாளமும் என்கின்ற மூன்றினையும் அளவுமானங் களும் பிழையாதபடி இயற்றுதற்கு நாடினேன் தாளத்தின் பகுதியை யென்றவாறு.

வளமாகு மாடற்கும் பாடற்குந் தோற்குந்
தளமாத லிற்றுளமாகும்—உளமதித்துத்
துன்னலே காலஞ் செயல்கிரியை மானமிடைத்
துன்னுங் கருவிக்குச் சூட்டு. (உஉ0)

எ-து. ஆடற்கும் பாடற்குந் தோற்கருவிக்குந் தளமாத லால் தாளமென்று பெயராயிற்று. இது நீட்டுவழிநீட்டித் தாளமாயிற்று[1]. இத்தாளம் மூன்று காலத்தாலும் நிகழும்; அவை காலங் கிரியை மானம் என்பன. இவற்றுள் காலமாவது ஒன்றைச்செய்ய நினைத்தல். கிரியையாவது செய்தல். மான மாவது கிரியைசெய்த பின்பு அக்கிரியை செய்வதற்கு முன்னும் நடுவும் நின்ற அளவு என்றவாறு.

கஞ்சதாளப் பிரமாணம்

கனஞ்சுத்த சாளவஞ் சங்கீர்ண தாளம்
இனம்பெற் றிரண்டுநான் கெட்டாம்—புனைந்துவிரல்
முற்று மிரண்டே யிரண்டரையே மூன்றென்றார்
எற்று மகலத் தியல்பு. (உஉக)

எ.து. கஞ்சதாள விலக்கணம் வருமாறு. சுத்தம் சாள வம் சங்கீர்ணம் என மூன்றுவகைப்படும். அவற்றுள் சுத்த தாளத்துக்கு இருபல வெண்கலம். சாளவதாளத்துக்கு நாற் பல வெண்கலம். சங்கீர்ணதாளத்துக்கு எண்பல வெண்கலம். இனிச் சுத்ததாளத்தின் வாயகலம் இருவிரல். சாளவதாளத் தின் வாயகலம் இரண்டரைவிரல் சங்கீர்ணதாளத்தின் வாயகலம் மூன்றுவிரலாம் எ-று.

---

1. நீட்டும் வழி நீட்டல் என்றது செய்யுள் விகாரங்களுள் ஒன்று. தளம் என்ற சொல் தாளம் என நீண்டது என்பது இவ்வா சிரியர் கருத்தாகும்.

பொற்குமிழொன் ஞென்றேகால் பொற்பொன் றரை விரல்கள்[1]
முற்க முளுந்துசண[2] முற்று துளை—வற்கமல[3]
மால்கபித்த மாதித்தன் வட்டங் கமலை குமிழ்
கால்துளைக்குத் தேவதையாங்[4] காண். (உஉஉ)

எ.-து. சுத்த தாளத்தினுடைய குமிழ் ஒரு விரலாம். இதன் குமிழ் துளையளவு பாசிப்பயறு. சாளவ தாளத்தினுடைய குமிழ் ஒன்றேகால் விரல். துளையளவு உளுந்து. சங்கீர்ண தாளத்தினுடைய குமிழ் ஒன்றரை விரல். துளையளவு கடலை. இதற்கு அதிதேவதைகள் வருமாறு :—வலக்கைக்குத் தேவதை மகாவிட்டுணு. கை கபித்தம் பிடித்த வலக் கையிற் ருளவட்டத்துக்குத் தேவதை ஆதித்தன். ஆக தாளத்தினுடைய குமிழுக்குத் தேவதை இலக்குமி. துளைக்குத் தேவதை வாயுவென்றவாறு.

இடமலரோன் சொற்கடக மேந்துமதி வட்டத்
தடமுகிழ்மேல் நன்ஞற் றலைவி—விடுதுளைகால்
நாதஞ் சிவமுபய நாணிரா குக்கேது
சூதஞ் சினமுலையாய் சொல். (உஉ௩)

எ.-து. இடக்கைக்குத் தேவதை பிரமன். இடக்கை கடகக் கைபிடிக்க இடக்கைத் தாளவட்டத்துக்குத் தேவதை சந்திரன். இரண்டு தாளக்கயிற்றுக்கும் இராகு கேதுக்கள். குமிழுக்குச் சரசுவதி. துளைக்கு வாயு. நாதம் சிவமாமென்றவாறு.

---

உஉஉ-உஉஅ. தாளசமுத்திர வெண்பாக்கள்.

1. போற்ஞென்றரைவிரலா பா. வே.

2. சணகம் என்பது சணம் எனக் கடைக்குறைந்துநின்றது. இனி சணல் எனப் பாடங்கொண்டு சங்கீர்ண தாளத்தினுடைய குமிழின் துளையளவு சணல்விதை என உரைகூறிய ஏடும் உண்டு.

3. வற்கமுற. பா.வே. 4. தெய்வவகை. பா.வே.

உஉ௩. கடகக் கையாகப் பிடித்த இடக்கைத் தாளவட்டத்துக்கு உ. வே.

வண்ண மணிக்கட்டு மலரோன் பெருவிரற்குக்
கண்ணனே தற்சனிக்குக் கங்காளன்—எண்ணரிய
மத்திமைக்கு வேலோன் வகுத்த வனுமிகை தீ
மெத்துகனிட் டங்காம வேள். (உஉச)

எ—து.—மணிக்கட்டுக்குப் பிரமாவாகவும் பெருவிரற்கு விட்டுணுவாகவும் தற்சனிக்கு உருத்திரனாகவும் மத்திமைக்கு வேலோனாகவும் அனாமிகைக்கு அக்கினியாகவும் கனிட்டைக்கு மன்மதனாகவும் உள்ளங்கை புறங்கைக்குச் சந்திர சூரியராகவும் கைக்குத்தேவதை சொல்லியதென்றவாறு.

நீக்கரிதாம் ஆபாவம் நிட்கிராமம்[1] விக்கேபந்
தாக்கு பிரவேசஞ் சம்மியமும்[2]—வாக்குடைய
தாளமே சன்னிபதந் தக்கவிய லேழென்றான்[3]
மாளிகைசூழ் கூடலான் வந்து. (உஉரு)

எ—து. கபித்தக்கையுங் கடகக்கையுமாகப் பிடித்த இரண்டு கஞ்சதாளத்துக்குக் கிரியையாக ஏழியற்றுண்டு. அவையாவன ஆபாவம், நிட்கிராமம், விக்கேபம், பிரவேசம், சம்மியம், தாளம், சன்னிபாதமென ஏழியிற்றும். இவற்றின் இலக்கணம் வருமாறு.

இடக்கை விரலசைதல் எண்ணுமா பாவம்
மடக்கொடியே[1] யவ்விரல்கள் வந்து[2]—துடக்கறவே
நேர்ந்தவகை யில்லாமை நிட்கிராம மென்றுரைத்தார்[3]
ஆய்ந்தவிய னுடுவா ராம்[4]. (உஉசு)

ஆன வலக்கை யகற்றியுடன் தூக்குமது[1]
மீனவிழி மானனையாய் விக்கேபம்—போன
வலக்கை யிடக்கையினில்[2] வந்துறவே தாக்கிற்
றலத்தபிர[3] வேசமெனச் சாற்று. (உஉஎ)

---

உஉச. மணிக்கட்டு விரலுக்கு அதிதேவதை கூறுகின்றது. பெருவிரல்-கட்டைவிரல், தற்சனி-சுட்டுவிரல். மத்திமை-நடுவிரல், அனாமிகை-மோதிரவிரல், கனிட்டை-சுண்டுவிரல்

உஉரு. 1. நிக்கிரகம். பா. வே. 2. சம்மையுடன் பா. வே.
3. தாக்குமியற்றேழென்றான்.

உஉசு 1. மடக்கொடியாய். 2. வந்தால். 3. நிக்கிரகமென்றுரைத்தார். 4. வாய்ந்த வியனுவொர். பா. வே.

உஉஎ. 1. கிரியையுடன் றூக்கிலது. 2. வளைக்கையிடக்கையிலே. 3. தளைத்த. பா. வே.

சாற்று மிருகரமுந் தம்மி லுடன்பகர்ந்தார்
ஏற்றுவலக் கைப்பே ரெழிற்சம்மியம்—போற்றிய
வாமக்கை தாளமாம்[1] வாய்த்தமலர்க் கையிரண்டுந்
தாமொத்திற் சன்னிபாதம். (உஉஅ)

தாளக்கிரியை ஏழியற்றுங் கண்டு கொள்க.

விருத்தம்

சுளியிலே யுகார முன்னிச் சுற்றெலாம் விரவி வீசி
வெளியிலே ரேகை கூட்பி விசையெலாந் தனுவாய் விம்ம
ஒளியிலே நிறைந்த நாதத் துணைவிலே தழாத தள்ளிச்
சளியிலே முகந்து வாசத் தவ்விலே பிறந்த தாளம். (உஉகூ)

தாள மிரண்டெழுத்தின் றன்பெருமை தன்னைமிக
வாளகிரி சூழு மகிதலத்தோர்[1]—கேளுந்[2]
தகரவுரு வஞ்சொக்கர் தானும் ளகரம்[3]
பகரங்[4] கயற்கண்ணி பற்று. (உநo)

எ.-து. தாள மென்கிற விரண்டெழுத்தின் தன்மை யாவது தகார சொரூபம் அழகிய சொக்கர், ளகார சொரூபம் அங்கயற்கண்ணம்மை. இவை உபய சொரூபக் கூட்டரவாலே தாளமென்ற பெயராயிற்றென்றவாறு.

வட்ட மிருசுழிபூ மாதே குமிழ்துளையாம்
இட்ட நமன்வாய்க் கிருகயிரும்—கொட்டுகின்ற
ஓசை சிவன்சிவனென் றோங்குமிரு கைத்தாளம்
பேசுமய ஞேடரியாம் பின். (உநக)

---

உஉஅ. "இந்த மூன்று கவியினும் ஏழுகிரியை கூறப்பட்டிருக்கின்றது. இதை நந்திபரதத்திற் கண்டுகொள்க. வாமக்கை என்பது இடங்கை; தெக்ஷணக்கை என்பது வலங்கை" எனவரும் தாள சமுத்திர உரைக்குறிப்பு இங்கே கருதத்தக்கது.

1. தாளமுற – பா. வே.

உஉகூ. இப்பாடற் பொருள் இனிது விளங்கவில்லை.

உநo. 1. மகிதலத்திர், 2. கேளீர், 3. தகாரவுருச்சொக்கர் தனியார் ளகாரம், 4. பகாரங் – பா. வே.
வாளகிரி – சக்கரவாளமலை.

நவதாளம்

செயதாள மர்மம்செய் பீலிமிடை தாளம்
அயமா விடம்பிடியே கையாஞ்—சயமேர்
தவமாங் துருவநிரை விந்தமெனச் சாற்றில்
நவதாளத் தின்னுமை மாம். (உ௲உ)

எ.து. செயதாளம், மருமதாளம், பீலிதாளம், மிடை தாளம், விட்டதாளம், கைத்தாளம், தவதாளம், துருவதாளம், நிரைவிந்ததாளம் என ஒன்பதுவகைத் தாளத்துக்கும் நாம மென்று பெயர்பெற்று வழங்கப்படுமென்றவாறு.

தாளமுரைத்தபேர்

தருசதா சிவனேரைந்து தமிழ்க்குறு முனிநூற் றெட்டாம்
அருளருச் சுனனே யொன்பான் அனுமனும்
நூற்றெட்டாகும்
கெருடனே ரைந்துபாய்மாக் கேழ்கிளர்நகுலனிரண்டும்
வருணனு மைம்பதாகும் வகுத்தனர் தாளந்தானே. (உ௲௩)

குதகிடவென் னுங்கவுத்வங் கூறும் பொருளை
அடைவுடனே சொல்லவல்லீ ரானல்—தடவலையம்
ஏழுங்குடையா விருநிட்ட நட்டுவரே
தாளம் பிடித்ததெனத் தான். (உ௲௪)

தாளத்துக் குணர்வேது சத்தமேது
தாளந்தா னென்கிற தனுவங்கேது
நாளத்துக் கப்பாலோ விப்பால்முன்பின்
னடுவெளியோ பார்விசும்போ நாதன்சோதி
வேழத்தின் பார்வைவித மொன்றோரண்டோ
விரிகமலத் தருநடன மெய்யோ பொய்யோ
வேளைக்கண் ணுதலெரித்த முன்னேபின்னே
விரும்பினீர் பரதவிதம் விளம்பிடீரே (உ௲௫)

தாளத்து வட்டந் தவறுமா றுனடிக்கு
மேளத்தைப் பாட்டுக்குள் மீறுமல்—தாளத்தை
யொக்கடிக்கில் மாத்திரை விட் டோடாம லேயதனை
யொக்கறுத்துங்............... (உ௲௬)

---

உ௲௩. வருணனைம்பத்துநான்கு பா. வே.

உ௲௬. இப்பாடல் ஒரேட்டில் இல்லை. இதன் ஈற்றடி சிதைந் துள்ளது.

வைத்ததோர் தாளந்தன்னை வடிவறிந் தெடுக்கில் வட்டம்
உய்த்ததோர் பீடமாகு முன்குமி ழதுவே லிங்கம்
அத்தனு ரென்றறிந்தே அன்புடன் கமலக் கையைப்
பத்திரியாகச் சாத்திப் பரிவுடனெடுக்கின் றேனே. (உகஎ)

தென்றல் வடிவுஞ் சிவனுர் திருவடிவும்
மன்றல்வடிவு மதன்வடிவும்—குன்ருத
வேயி னிசைவடிவும் விண்வடிவ [1]முங்காணில்
ஆயதா ளங்[2]காண லாம். (உகஅ)

இதுநிற்க. இனிமேல் வருகிற விகற்பம் கலித்துறை.

துடிகோலீ சான முகந்தற் புருடந் துருதலகு
வடிவகோ ரங்குரு வாமமா கும்பாணி மன்னுசத்தி
முடிவுநிச் சந்தந் தருமூர்த் துவமுகத் துற்பத்தியைப்
படிமிசைத் தாள விதிக்கான மேருப் பதித்ததன்றே (உகக)

அந்நாட் பொன் மேரிற் பதித்தது கண்டுள் ளதிசயித்து
முன்னுன் மறைப்பொரு ளாரறி வாரிச்சொல் மூதறிவோ
என்னு லறியப் படாகர்த்த னேயென் றியம்பிக்கும்பன்[1]
சொன்னுனித் தாள விதியொரு நூற்றெட்டுத்
தொல்புவிக்கே. (உசo)

---

உகஎ. தாளத்தின் வட்டம் சிவலிங்கத்திருமேனியின் பீடமாக வும் தாளத்தின் குமிழ் இலிங்கமாகவும் கருதித் தாளத்தினைச் சிவன் வடிவாகவே எண்ணிக் கைகளை அருச்சிக்கும் இலைகளாகத்தொட்டு அதனை யெடுத்தல்வேண்டும் என்பது கருத்து. பத்திரி—இலை

உகஅ. 1. வீணைவடிவும், வேதவடிவும் 2. ஆதிதாளம் பா. வே.

"இங்ஙனங் கூறப்பட்டுள்ள ஆறுவடிவங்களையும் காணில் தாள வடிவங்காணலாம்" என்பது தாளசமுத்திரவுரை. மன்றல்—நறு மணம், மதன்-மன்மதன் ; உருவில்லாதவன், விண்—ஆகாயம். இவற் றின் உண்மைவடிவினைக் காணமுடியாதவாறுபோலத் தாளத்தின் இயல்பினையும் காணுதல் அரிதென்பது கருத்து.

உகக. இதன்பொருள் ஆராயத்தக்கது.

உசo. 1. கும்பன்—அகத்தியமுனிவன் ; குடத்திற்பிறந்தவர் என்பது கதையாதலால் இவரைக் கும்பன் என வழங்கினர்.

சந்திர சூரியன் ருை மிருகையிற் ருளந் தன்னை
இந்திடு நாணது வுங்கேது ராகு மெனவறைவீர்
இந்து வினைவிடந் தீண்டிடி லக்கண மேயகலுந்
தந்திடு தாளத்தை விட்டகலா தென்றுஞ் சார்வதென்னே.

சார்ந்திடுந் தாளத்திற் கேசத்தி தான்சிவந் தானெனவே
யார்ந்திடு வாரத ளுலவர் கண்ணிந்து வார்பருதி
கூர்ந்த சினவிடங் கூட்ட ரவானது கொண்டிருகை
சேர்ந்திடு தாளத்தி ஞெனுன் றினதென்று செப்புவரே.
(உ௪உ)

விருத்தம்

ஈசன் முப்பானிரண்டுமைப்பத் தெழிற்கங்கை மூன்ரும்
இராகவன்பத்திலக்குமி யொன்றிறைவ ஞன்கொர்வாணி
பேசிடு மைங்கரனைந்தாருஞ் சேய்குஞ்சரிதான்
பிறள்மாதொன்ரும் வே ளிரதியுமொன் ருென் றேழாம்—
மாசகல் கன்னியர், திக்குப் பாலர், சசி,
வாசவன், துர்க்கை, நவக்கிரகம், அனுமனெடு, சாத்தன்,
தேசு வயிரவன், கருடன், வீரபத்திரன் இவர்பாற்
திகழ் நூற்றெட்டுத் தாளத்தி னுற்பத்தியே[1] (உ௪௩)

எ.-து. இந்தத் தேவதைகளாலுண்டான தாளவுற்பத்தி நூற்றெட்டுங் கண்டுகொள்க வென்றவாறு.

முன்னைத் தபோதனர்த மிதயமா னதவாவி முதுஞான
முளரி நறவார்
அன்னத்தின்[1] வடமொழிப் பெயர்பெற்று நடைபயிலும்
அறுமூன்று விஞ்சை வரிவான்
பன்னப் பொதிந்த தீ வினைநீரி னற்குணப் பால்பிரித்
துண்டுகளியா
மன்னப் படுஞ்சிறைப் புள்ளினையை நாடொறும்
வழுத்துது மலர்க்கமலையே. (உ௪௪)

தாளஉற்பத்திவிதத்தில் தோன்றிய பரத சாத்திரம்முற்றும்.

---

உ௪க, உ௪உ. இவ்விரண்டு செய்யுட்களும் வினவும் விடையுமாய் அமைந்திருத்தல் காண்க.

உ௪௩. 1 தாளத்தினதுற்பத்தியே. பா. வே.

உ௪௪. இப்பாடல் கலைமகள் வாழ்த்தாகத்தோன்றுகின்றது.

## பரமேசுவரன் நடனஞ்செய்த தாண்டவம்

### வெண்பா

குன்றவில்லி யேக குரவன் அருட்பரதன்
மன்றறிய ஓதும் வடநூலை—நின்ற
நிருத்தமுத லேழிணையும் நேர்தமிழாற் கூறக்
கருத்துடைய ஐங்கரனே காப்பு. (உசரு)

அரிய திருத்தாண் டவம்நிர்த்தம் நாட்டியங்
குரவைவரி கோலம்வகைக் கூத்தேழ்—பரவுமிது
சாந்தம் விநோதம் வகைக்கூத் தெனமூன்றாய்
ஓர்ந்துணர்ந்தோ ராய்ந்த வுரை. (உசசா)

எ-து. தாண்டவமாவன இரண்டு வகைப்படும். அவை யாவன சொக்கர் தாண்டவமென்றும் ஆனந்தத் தாண்டவமென்றும் இரண்டு வகைய - நூற்றெட்டுங் கரணக்கூத்தென்றவாறு. இதிற் சொக்கர் தாண்டவமாவது ஒரு காலத்தில் சமஸ்த்தமாயிருக்கிற தேவதைகளனைவர்களும் பார்த்திருக்கத்தக்கதாகச் சுவாமி நிருத்தம் பண்ணினார். அப்படி நிருத்தம் பண்ணுகையில் காதிலேயிருக்கிற குழை கழன்று கீழே விழுந்தது. அப்போது நிருத்தம் பண்ணுகிற பாதத்தினாலே திரும்பவுமெடுத்துக் குழையைக் காதிலே தரித்துக்கொண்டார்.

---

உசரு. குன்றவில்லி—மேருமலையினை வில்லாக வுடைய இறைவன். அருட்பரதன்—பரதமுனிவர். அவர்செய்த வடநூல் ஒன்று உண்டென்பதும் அதனையே இவ்வாசிரியர் தமிழில் மொழிபெயர்த்துரைக்கின்றார் என்பதும் இப்பாடலாற் புலனும்.

இதுவன்றிப் பண்டைக் காலத்துத் தமிழ்க் கூத்தின் இயல்பினை விளக்கும் நாடகத் தமிழ் நூல்களுள் 'பரதம்' என்னும் நாடகத் தமிழ் நூலொன்று இருந்ததென்பது "நாடகத் தமிழ் நூலாகிய பரதம் அகத்தியம் முதலாகவுள்ள தொன்னூல்களும் இறந்தன" என அடியார்க்கு நல்லார் கூறுதலால் இனிது புலனும். அவர் கூறியபடி வழக்கிழந்த தமிழ் நாடக நூல்களினின்றும் எடுத்துக் கொண்ட கருத்துக்களே இந்நாட்டில் வழங்கும் பரத நூலுக்கு அடிப்படையாவன என்பது அறிஞர் கருத்து.

சொக்கம் என்றது சுத்தநிருத்தம். அது நூற்றெட்டுக்கரண முடைத்து என்பர் அடியார்க்கு நல்லார்.

இந்தக் காரணம் பார்த்திருந்தபேர்கள் அறிந்தவர்களல்லர். எல்லாரும் தற்செயலின்றிப் பரவசமடைந்து ஓவியம் போலே யிருந்தார்கள். நிருத்தமெல்லாம் முடிந்தபிற்பாடு சுவமியார் சகலதேவதைகளையும் அழைத்து 'நிருத்தம்புரியச்சே பார்த் திருந்தீர்களே. அதிலே நீங்கள் கண்ட அதிசயமுண்டோ' வெனக்கேட்டார். அப்போது 'தேவரீர் நிருத்தம் பண்ணச்சே நாங்கள் வேறு அதிசயமென்ன சொல்லப் போகிறோம்' என்று எல்லாரும் தோத்திரமாகச் சொன்னார்கள். அதன்பிற்பாடு தேவதைகளெல்லாரையும் அழைத்து, இன்ன விடத்திலே வள்ளுவனிருக்கிறான், அவன்கிட்டப் போய்வரச்சொல்லிக் கட்டளையிட்டார். அந்தப் பிரகாரத்துக்கு அவன் வளவை நோக்கிக்கொண்டு போனார்கள். அவர்களெல்லாரும் வருகிறதை அவன்பெண்சாதி முற்றத்திலேநிற்கிறவள் கண்டு ஓடிப் போய்ப் புருஷனுடனே சொன்னாள். அந்நேரமே நெய்கிறதை விட்டுப்போட்டுச் சீக்கிரகெதியாகத் தன்மனைக்கும் அப்பால் அநேகந்தூரம் போய்ச் சகலதேவதைகளையுங் கண்டு சாஷ் டாங்கமாக நமஸ்கரித்துத் தேவரீரனைவோரும் இங்கே யெழுந் தருளினதென்ன வென்று கேட்டான். சுவாமி உன்பக்கல் போகச் சொன்னாரென்று சொன்னார்கள். அப்போது அவன் சொன்னது :

பூவிலயனும் புரந்தரனு மூவுலகைத் [1]
தாவி யளந்தோனுந் தானிருக்க [2]—நாவில்
இழைநக்கி நூல்நெருடு மேழையறிவேனோ
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து. (உசஎ)

என்றவெண்பாவினை அவன் சொல்லக்கேட்டவுடனே சகல மான தேவதைகளும் மனம் அழுங்கி, இவனொரு நீசன் தன் வளவிலே[3] நெய்துகொண்டிருந்தவன் கண்டான். நாமெல்லோ ரும் சுவாமிநிர்த்தம் பண்ணச்சே கிட்டப்பார்த்திருந்துங் காணு

---

உசஎ. "திருவாலங்காட்டுத் திருநடனங்கண்டீரோ ? என்று முனிவர்கேட்க வள்ளுவர்பாடியது"

என்னுந்தலைப்பில் இப்பாடல் தமிழ் நாவலர் சரிதையிற் காணப் படுகின்றது. இங்கு எடுத்துக் காட்டப்பெறும் வள்ளுவர்கதை பிற்காலத்தவராற் புனைந்துரைக்கப்பட்ட தெனத் தெளிக.

1. பூவுலகை, 2. தாமிருக்க. பா. வே. 3. தன் வீட்டினுள்ளே.

தேபோனேம். இப்படியாச்சுதென்றால் நம்முடைய தேவதத்து வமும் அறிவுந் தியானமுஞ் செயலும் பெருமையும் என்ன போலே யாச்சுதென்று ஒருத்தரை யொருத்தர் பாராமல் சகல தேவதைகளுமிகவுந் துயரத்தை யுற்றுத் திரும்பப் போனார்கள். இவர்களெல்லோரும் வருந்தி வருகிற வகையைச் சுவாமி கண்டு திரும்பவும் ஆனந்தத் தாண்டவ நடனம் நிர்த்தம் பண்ணத் தொடங்கினார். இந்த நிர்த்தங் கண்டபோதே தாங்கள் போய் வந்தவாறும் முன்னிர்த்தங் காணாத துயரமும் ஒழிந்து சகல மான தேவதைகளும் ஆனந்தாச்சரியம் பொழிய மிகவும் அதி சயச் சந்தோஷத்தை யடைந்தார்கள். இதுதான் தேசி நிர்த்த மாவது[1]. இந்தத் தொழிலை முற்றுஞ் செய்தவர்கள் நடனம் புரிவிக்கையில் பரமேசுவரன் திருமுன்பல்லது ஆடப்பெறா ரெனக்கொள்க. இவை

மூவகையாடலு முற்றிய வதன்பின்
சூழெனமொழிவ ருணர்ந்திசினோரே.— (உசஅ)

இப்பால் நாட்டியமாவது இயலும் இசையுந் தழுவிய நாடக விதிப் பிரகாரம் வழுவாமல் நடனம் செய்விப்பதென்றவாறு. இவை தாண்டவம் நிருத்தம் நாட்டிய மென வரும் மூவகைக் கூத் தெனவும்[2], குரவை யாவது[3] பதினாறாயிரங் கோபஸ்திரிகளுங் கிருட்டினனை நடுவே நிறுத்தித் தாந்தாமுடைய கைகளைக் கோத்துங் கொட்டியுங் கை கால்களை ஆலீடமாக்கியும் அவன் பிரதாபமும் வீரமும் அழகும் பாடி வகுப்பு வகுப்பாய்ச் சோடு சோடான ஸ்ரீகள் நடிப்பதென்றவாறு. அந்தப் பெண்கள் வன்னக்கோல் பிடித்தாடுவதென்றவாறு.

---

1. இயல்புக்கூத்து, தேசிக்கூத்து எனக்கூத்து இருவகைப்படும். 'இருவகைக்கூத்தாவன: தேசி, மார்க்கம் என இவை' என்பர் சிலப்பதிகார அரும்பத வுரையாசிரியர். "கொண்ட தேசிப் பகுதி யெல்லாம், மண்டிலநிலையின் வருதகவுடைத்தே" எனவரும் சிலப் பதிகார வுரைமேற்கோளால் இக்கூத்தின் இலக்கணங் கூறப் பட்டது.

2. "தாண்டவம் நிருத்தம் நாட்டியம் என்னும் மூன்று கூறு பாட்டினும் நாட்டியம் என்றது புறநடத்தை" என்பது அரும்பத வுரை.

3. காமமும் வீரமும் பற்றிய இசைப் பாடற்கேற்ப மகளிர் எழுவர் அல்லது எண்மர் ஒன்பதின்மர் ஆக நின்று கைகோத்து ஆடும் கூத்து குரவை எனப்படும். இக்காலத்துக் குலவை யெனச் சிதைந்துவழங்கும்.

வரியாவது[1] கொம்பு வருத்திக் கொடியம்மானை பந்துவில் பத்திர[2] முதலானவற்ருலாடப்படும் ஸ்ரீகள் கோலத்திஞ லென்றவாறு. ஸ்ரீகள் கோலமாவது, குறள் - மறஞ் - சித்துச் - சோனகம் - பார்ப்பான் சடாதாரி பறை இவையாயின பல கோலமுந் தவருமல் அந்தக் கோலமும் வசனமும் வழுவாமல் ஆட்டுவிக்கப்பட்டதான கோலமென்றவாறு. ஸ்ரீகளைக் குச்சரியப் பெண்கோலங்கொண்டு கையின் வாள்கொடுத்து வசனந்தப்பாமற் சாதி முறையாய் ஆட்டுவிக்கப் படுமென்றவாறு. இவை,

'குரவை வரியே கோல மூன்றும்
விரவிய விஞேத மாகு மென்ப'

எனவும், வகைக் கூத்தாவது, (உசகூ)

கடையமயி ராணிமரக் கால்விந்தை கந்தன்
குடைதுடிமால் அல்லியங் கும்பங்—துடியிடையீர்
பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங்கங்
கொட்டிபதி ஞென்ருகுங் கூத்து. (உரு௰)

இவை, பதிஞே ராடலின் பகுதியெல்லாம்
முதிரா வகைக்கூத்தாகு மென்ப. (உருக)

சூத்திரம்

தாண்டவம் நிருத்தம் நாட்டியங் குரவை
வரியே கோலம் வகைக்கூத் துட்பட
வரிமலர்க் கண்ணுய் வன்ருெழிற் கூத்தே. (உருஉ)

எனக்கண்டு கொள்க. இந்த எழுவகைக் கூத்தின் விரிவு மூன்று வகைப்படுத்தி யாராய்ந்து பெரியோர்களால் உரைக்கப் பட்ட தென்றவாறு.

எழுவகை நிர்த்தலட்சணம் முற்றும்

சாந்தி விநோதம் வகைக்கூத் துட்பட
முந்தி யாடலம் மூவகைப் படுமே. (உருங)

1. வரியாவது விஞேதக்கூத்து விகற்பங்களுள் ஒன்று.
2. பத்திரம்—வாள்.

உசகூ, உருக. இச்சூத்திரங்கள் இன்னநூலைச் சார்ந்தனவென்று விளங்கவில்லை.

உரு௰. சிலப்பதிகார உரைமேற்கோள்.

உருஉ, உருங. இவை எந்தநூலைச் சாந்தன என்பது தெரியவில்லை

தாளம் ஐம்பதுக்குந் தசப்பிராணன்

தாளமைம்ப தாம்விதியைச் சாற்றினன் ஏழைமண
வாளன் கனகசபை மன்றுளான் [1]—வாழ்வாகப்
பாகுமமு துங்குழைத்த பண்பெனவிப் பார்போற்ற
லாகுந் தசப்பிராண னும்[2]. (உருச)

விருத்தம்

காலவித மொன்பானும்[1] வடிவு நான்குங்
கருதிற்பிரஸ்த்தார மொருபத் துஞ்சாதி[2]
மேல் நான்குங் கிரியையெட்டும் லயமூன்றும்
மேன்மொழிந்த யதியிரண்டு கிரக மூன்று
மாலமுது கதியைந்துங்[3] கலைகளிரண்டு
மாகத்தாளத்தின் விதியைம்பதெல்லாஞ்
சீலமுடன் தில்லைநகராடுந் தேவே சிதம்பரநாதா
வுனக்குந் தெரியுந்தானே (உருரு)

எ—து. தாளதசப்பிராணன் வருமாறு அவை காலம் — வடிவு — பிரஸ்த்தாரம் - சாதி - கிரியை — லயம் — யதி - கிரகம் - கதி — கலைகள் ஆகப்பத்து வகைக்கும் — ஐம்பது விதிக்கிரம முஞ் சொல்லுவனென்றவாறு.

காலமாவன

கடிய கணமிலவங் காட்டை நிமிடந்
துடிதுருதந் துய்யலகுத் தொன்மை—நெடிய
குருப்புலிதங் காகுவெனக் கூர்வடிவு பத்தும்
விருப்புறவே காலமென வேண்டு. (உருசா)

---

உருச. 1. இறைவனே தாள இலக்கணத்தைச் சொன்னான் என்பது புராணமரபு.

2. தாளதசப்பிராணன்—தாளத்தின் பத்து உயிர் நிலைகள். அவையாவன :—காலம், மார்க்கம், கிரியை, அங்கம், கிரகம், சாதி, கலை, லயம், யதி, பிரத்தாரம் எனக்கூறுவர்.

உருரு. ஆம் செய்யுளுரையில் சிறிது வேறுபடக்கூறியதனை ஒப்புநோக்குக.

உருரு. தாளத்தின் விதி ஐம்பதுக்குந்தொகை கூறுகின்றது. இப் பாட்டின் அடிகள் பிழைபட்டுள்ளன.

அடுத்த பாடலிற் காலப்பகுப்பு பத்தென்பதற்கு மாறாக 'காலவிதமொன்பானும்' என இச்செய்யுளிலுள்ள பாடம் சிந்திக்கத்தகுவதாம்.

உருசா. தாளசமுத்திர வெண்பா.

எ—து. கணம், லவம், காட்டை, நிமிடம், துடி, துருதம், லகு, குரு, புலிதம், காகு என இவை பத்தும் காலங்களாமென்றவாறு.

(வடிவு)

மதிகோ லினந்திகழ் முக்கோணம் வாய்த்த
சதுரமிவை தாளவடி வாகும்—பொதியமலைத்
தென்னன் புயல்தணித்த தீரா திருமடந்தை
மன்னை யிதுதான் மதி. (உருஎ)

எ.—து. துருதம் லகு குரு புலிதம் இவை நான்குந் தாளத்துக்கு வடிவாமென்று அகத்தியர் உரைத்தார் என்றவாறு. இனிப்பிரஸ்த்தாரமாவன.

சேருமே காங்கந் திவீ[1] திரிதி யஞ்சதுர்த்தம்
ஆரும்பஞ்சாங்க சடாங்க சதாங்கந்—தேரிலே
அட்டாங்கமோடு நவாங்கந் தெசாங்கமென
மட்டார் குழலாய் மதி. (உருஅ)

எ.—து. ஏகாங்கந் திவியாங்கந் திரியாங்கஞ் சதுராங்கம் பஞ்சாங்கம் சடாங்கம் சதாங்கம் அஷ்டாங்கம் நவாங்கம் தசாங்கம் என இவை பத்துவிதமும் பிரஸ்த்தாரமா மென்றவாறு.

கோலாதி யின்கீழ்க் குறைந்தவுருக் கொண்டடைவில்[1]
மேலா முருக்காட்டி வேண்டுவன[2]—நூலாற்
பெறுந்துணையும் வாமம் பெரியதுமுன் னிட்டு
வெறுந்துருதம் வந்தால் விடு[3] (உருகூ)

எ —து. துருதமேருவாகிய துருதாதிப் பிரஸ்தாரக் கிரமம் வந்தவழிக் கண்டுகொள்க.

---

உருஅ. 1 துவி என்னும் வடமொழியெண். துவி—இரண்டு.

உருகூ. 1 கொள்ளின்வல. 2 மேலாயுருக்காட்ட வேண்டுமேல். 3 விடும். பா. வே.

இது "சதுர்மேருப் பிரத்தாரமாகிய துருதாதிப் பிரத்தாரம் கூறுகின்றது. துருதாதிகள் தன்னினுஞ் சிறிய வடிவத்தைக் கொள்ளவேண்டினுல் தான் வலமாக நிற்கும். பெரிய வடிவத்தைக் கொள்ளவேண்டினுல் தான் இடமாக நிற்கும்" என்பது தாள சமுத்திர உரை.

மற்றுமிகர்ச் சண்மேரு வைத்த பிறப்பதனைச்
சற்று வெளிகாணச் சாற்றுவேன்—பற்றுடைய
முன்னைச் சதுர முறைமையால் மொய்த்திறங்கிப்
பின்னைப் பிரிந்தோடும் பேர்ந்து. (உகூ0)

எனவும்

பேர்ந்துவரு வாமம் பெரிய கடைமுடிவில்
வாய்ந்த விராமக்கோல் வரி(ன) தன்கீழ்—ஆய்ந்த
திளைத்தவன் கீழ்ப்பிறப்பு மில்லை யிதனிற்
கிளைத்துவல மாகவா மம். (உகூக)

வாழி பரதவிதி வாழிசிவநடனம்
வாழி யமரர்குழாம் வாழியே—வாழியிது
கற்றறிந்தோர் சொல்விப்போர் காதலுட னேநடனம்
வெற்றியுடன் செய்திடுவார் மேல். (உகூஉ)

பரத சாத்திரம் முற்றும்

---

உகூ0. "விராமத்துக்குக் கீழ்ப்பிறப்பின்மையால் துருதாதிகள் விராமத்துக்கு வலமாகவே வரும்" என்பது தாளசமுத்திரவுரை.

# சதுராங்கப் பிரத்தாரசார அந்தாதி*

## கலித்துறை

தருசது ராங்கப் பிரத்தார சாரவந் தாதிதன்னை
வருபுவி மீதில் வரைகவென் றேகரி மாமுகனைப்
பொருதனி யானை முகத்தானை வானவர் போற்றுமொரு
முருகனை நாளும் பணிந்தேத்தி யேத்தி மொழிகுவமே.

எ.-து. புவிமீதில் நினைத்தவையெல்லாங் கொடுக்கப்பட்ட கற்பக விருட்சத்தைப்போல வளர்ந்தேறவிரவுஞ் சதுராங்கப் பிரஸ்த்தார சாரமானதை அந்தாதிக் கலித்துறையாக விரிக்கும் பொருட்டுக் கயமுகாசுரனைப் போரிலே வென்ற தனி வாரணமாகிய விக்கினேசுரனையும் தேவர்கள் போற்றுதற்கு ஒருவனாகிய செவ்வேளையும் நாடோறும் பணிந்து பணிந்து தோத்திரஞ் செய்வாமென்றவாறு. (க)

தேமேவு கின்ற பிரத்தார சங்கைசொற் செய்யநட்டம்
பாமேவு முத்திட்டம் பாதாளத் தோடு பகர்துருதம்
மாமேருத் துய்ய லகுமேரு வன்குரு மேருவன்ன
தாமே புலுதஞ்சொல் லேறுசை யோகமுஞ் சாற்றுவமே.

எ-து. தேனைப்போல உருசிக்கப்படாநின்ற பிரஸ்த்தாரமாகிய தொகைக்குச் சங்கையென்றும் நட்டமென்றும் உத்திஷ்ட்ட மென்றும் பாதாளமென்றும் துருதமேரு, லகுமேரு குருமேரு புலுதமேரு சையோகமேரு வாகிய இவ்வொன்பது விதமும் விளங்க விரித்துச் சொல்குவ மென்றவாறு. (உ)

சாற்றிய கண்டப் பிரத்தாரஞ் சொற்சதுர் மேருவுக்குத்
தோற்றிய நட்டமுத் திட்டமுங் கூட்டித் தொகுத்ததொகை
யேற்றிய பத்தொன்ப தென்றே யிசைத்தன ரிப்புவிக்குள்
நாற்றிசை போற்றும் பரதநன் னூல்வல்ல நாவலரே.

---

*தாள இலக்கணத்தினை நூன்முறைப்படி யுணர்ந்த இசையாசிரியர்களால் தெளிவுபடுத்தற்குரியது இப்பகுதி.

எ—து. சாற்றப்பட்ட கண்டப் பிரத்தாரத்தினது சொல்லாவது சதுர்மேருவுக்குத் தோற்றரவாகிய இந் நட்டத்துக்கும் உத்திட்டத்துக்குமாகக் கூட்டப்பட்ட தொகை பத்தொன்பதென்றே யிசைத்தனர் நாற்றிசை போற்றும் பரதவியல் வல்லோர்களென்றவாறு. (ங)

நாவலர் சொற்படி யேபிரத்தாரம் நடத்தும் வகைப்
பூவிலக்கத்துத் துருதம் லகுக்குருப் பொற்புலுதம்
மூவடி வுற்றதிற் கீழ்ச்சுழி கோல்வில்லு மொய்த்திறங்கி
மேவுந் துருதத்தின் கீழ்ப்பிற வாது விளம்பிடிலே.

எ—து. வித்துவ சனமாயிருக்கிறபேர்கள் புகன்றபடிக்குப் பிரஸ்த்தாரவகையானது புவியில் தொகுக்கப்பட்ட தொகைக்குத் துருதம் லகு குரு புலுதம் இம்மூன்று வடிவமாகிய அதன் கீழாகச் சுழியுங்கோலும் வில்லும் மேவிநிரைக்க வரைந்ததிற் றாழ்வாகத் துருதமே பிறக்கில் மேலான உருக்கள் வாராதென்றவாறு. (ச)

விளங்கிய முத்த வுருக்களை வாமம் விதிக்கடையில்
இளங்கணை யாகுதல் வில்லா குதல்மின் னெனினுநின்ற
களங்கமில் லாத வுருக்கீழ்க் குறைவலங் காணவுருத்
தளங்கொளத் தீட்டிடத் தேசே ஷ முத்தத்தைத்
தாபித்திடே.

எ—து. பிரகாசத்தை விரிக்கப்பட்ட முத்தவுருவான லகுவாகுதல் குருவாகுதல் புலுதமாதல் மறுவற்ற இவற்றினை இடது பாரிசமுதலாக விதித்தும் அந்தத்திலிருந்த மூன்று வடிவான வுருவைக் கொண்டு தாழ வலது பாரிச முதலாக ஏற்றமான உருவைக் குறைத்தும் எழுதி நின்றசேஷத்தை வரைகவென்றவாறு. (ரு)

தாபித்து முத்தத்தை மிக்கவதற்கிடந் தான்வரைந்து
பாவித்தந் தங்கிம் முறைப்படி யேபிரத் தாரம்பண்ணித்
தேவுற்ற வங்குலம் நீளங் குறைவறச் செய்தடைவே
மேவித் துருத நிரைகண்ட போது விடச்செய்யுமே,

எ—து. தாபிக்கப்பட்ட மிக்கவுருவாகுமதனை வரியொழுங்காய் ஒன்றேன்றிற் கீழாக அந்தந்த முறைமையினாலே இடமாக வரைந்து பாவனைக் குறித்தான பிரஸ்த்தாரத்தின் வகையால் அவ்வங்கங்கள் குறையாமல் அடைவாகப்பூரித்துக் கோலானது கடையான பின்பு துருதவிரைகாணில் எழுதுவதொழிகவென்றவாறு. (சு)

சங்கைக்குற்பத்தி

செய்தே யெழுதி முடிந்திடு லக்கந் திகழுந்தியம்
பெய்தே யிடத்தி லடுத்த துபாந்தியப் பேறந்தியத்
துய்தான நாலா வதுதுரி யம்மென்று சொல்லுமினோ
மைதீரு மந்தியத் தாறுவதுசட்க மன்னிவிடே.

எ—து. செய்தியாக எழுதிமுடிந்த முதல் இலக்கமாவது அந்தியமென்றும் அதனுக்கு இடப்புறமாக வரையப்பட்ட இலக்கம் உபாந்தியமென்றும் இவ்வந்தியத்துக்கு நாலாவது துரியமென்றும் அவ்வந்தியத்துக்கும் ஆறுவது சட்கமென்றுஞ் சங்கைக்கு இலக்கங் கூட்டுக என்றவாறு. இவ்வந்தியத்துக்குத் திரிதியமும் பஞ்சமமும் சதுராங்கப் பிரஸ்த்தாரங் கூட்டுந் தொகைக்கு வாராவெனக்கொள்க வென்றவாறு. (எ)

சங்கைக்குப் பாதாளவகைக்கு அறைகீறுவது

ஆறு வரைநெடு கக்கீறி யங்கங் கறையெட்டுக்குக்
கீறு முதல்வரிச் சங்கைபன்னேழறை கீறிமுதல்[1]
வேறுபா தாளத் தினுக்கோ ரறை விட்டு வீதிபன்னு
றேறறை யொன்றுவிட் டிவ்வீதி பன்னீனந்
தெழுதச்செய்யே.

எ—து. சதுராங்கப் பிரஸ்தார வீதியாகிய சங்கைக்கும் பாதாள வகையிற் றுருதவரி லகுவரிக்குமாக அறைகீறுமாறுவன அவை வரலாறு. நீளமாக ஆறுவரையை நெடுகக் கீறி அங்கங்கு துண்டித்து எட்டுமாத்திரை மட்டுக்கு முதல்வரியிற் பதினேழு அறையாகச் சங்கைக்குக் கீறுவதெனக் கொள்க. இனியிதற்குக் கீழாகப் பாதாளத்துக்குத் துரிதவரிக்கு முதல்

---

1. கீறுமுதல் பா. வே.

வரியில் ஒரு அறை முன்வீதிக்குச் சரிவரக் கண்டித்துப் பதினாறு அறைவரைவது, அன்றியும் அதன்கீழாக லகுவரிக்கு முதல் வரியில் ஒரு வரைபோக்கிப் பதினைந்தறையாகக் கீறிவரைக வென்றவாறு. (அ)

சேர்ந்த வறையி னிரண்டறை போக்கித் திகழ்தெருவில்
ஆர்ந்தபன் மூன்றறை கீறிடு முன்பின் னறிந்திரண்டு
கூர்ந்தறை தள்ளி யிதுவொரு வீதியிற் கொள்பதினொன்
றேர்ந்தறை கீறுபா தாளசங் கைக்குத் தெருவைந்துற்றே.

எ—து. முன்சேர்க்கப்பட்ட வரிக்குத் தாழ முதல்வரியில் இரண்டறையைவிட்டுக் குருவரிக்கு இவ்வீதியில் அதற்குச் சரிவாகப் பதின்மூன்று அறைகீறுவது. திரும்பவு மிதற்குக்கீழாகப் புலிதவரிக்கு முன்புகன்ற வரியிலிரண்டறைபோக்கிப் பதினொரு அறையாகக் கீறுதல் முறைமை யென்றவாறு. இப்படி யழகியல ஆறுவரையையும் ஐந்து வீதியாகக் கீறி அறையமைக்கு தல் பாதாள சங்கைக் கியல்புடைத்து. இனி வேண்டிய மாத்திரைக்கும் இதனைத்தொடுத்து முற்றுமிதனை விடாமல் கீறி யறையமைக்க வென்றவாறு. (கூ)

சங்கைக்கு இலக்கங்கூட்ட

விடுமறை மாத்திரையேமுதல் வேண்டிய மாத்திரைக்குக்
கடவது சங்கை பதாகின்றபோததுக் காணுமதில்
தொடுமறைக் கொன்றந்த வொன்றுவ தந்தியந்
தோன்றிலதை
யிடுதுணைக் குப்பாந் தியப்பரப் பப்புறமேத்திக்கொண்டே.

எ—து. சங்கைவரிக்கு வகுத்துச் சொல்லப்பட்ட முந்தின வரையிலொன்றைத் தள்ளி யடுத்தவரையிற் காணுந் தொகை யாவது அரை மாத்திரைக்கு ஒன்றே வேண்டியது. அந்த வொன்றுதானே அந்தியமாம். அவ்வந்தியந் தோன்றில் அதற்குப் பிரதானமாகத் துணைக்கு உபாந்தியமே பிரதமமாகத் திரும்பவு முன் வரைந்ததற் கிடப்புறத்தில் அடுத்தாற்போலே யொன்றை யெழுதி முடிக்க வென்றவாறு. (ம)

கொண்டுவந் தொன்றுக் கிரண்டாகவேவரை கொள்ளிலது
கண்டிடு வந்திய பாந்திய மேத்திக்கண் டொன்றரைக்குத்
தண்டினை மூன்றிட வந்த்ய வுபாந்தியந் தன்னுடனே
பண்டெனச் சொற்றுரி யாபாவந் திரிதியம் பற்றெடுத்தே.

எ—து. மூன் சூத்திரத்தில் வரைந்துகொண்ட அந்திய வுபாந்தியமான வொன்றொன்றையும் அதற்கடுத்த வரையில் வலமாக ஒரு மாத்திரைக்கு இரண்டையுமெழுதி அந்த இரண்டு பேதமான அந்தியமு மதற்கடுத்த உபாந்தியமான வொன்றுங் கூட்டி அடுத்தவறையில் ஒன்றரை மாத்திரைக்கு மூன்றறையும் வரைவது. இந்த மூன்று பேதமான வந்தியமு முபாந்திய மாகிய விரண்டுந் திரிதியத்தைப் போக்கி இவ்வந்தியத்துக்கு நாலாவதான துரியத் திலக்கமொன்றுங்கூட்ட வென்றவாறு. (௰௧)

எடுத்துவந்தே யிரண்டுக்கா றெழுதந்த்ய வுபாந்தியமுந்
தொடுத்த துரிய மொரிரண் டரைக்குத் துலங்குபத்தாய்
நடத்தந்த வந்த்ய வுபாந்த்ய துரியநற் பஞ்சமத்தோ
டடுத்தது மூன்றுக்குப் பத்தொன்பதென்ன
வறிந்துகொள்ளே.

எ—து. மூன் சூத்திரத்தினில் எடுத்துத் தொகுக்கப்பட்ட தொகை யிரண்டு மாத்திதைக்கு ஆறறையுமெழுதி இந்த ஆறு பேதமான அந்தியமும் இதன் அடுத்தஉபாந்திய லக்கமூன்றும் துரியத்திலக்க மொன்றுமாக இரண்டரை மாத்திரைக்குப் பத்தையுமெழுதவும். இந்தப்பத்துப் பேதமான அந்திய மிதனை யடுத்த உபாந்தியம் ஆறும்துரியத்திலிரண்டும் பஞ்சமத்தைத் தள்ளிச் சட்கத்திலொன்றுமாக மூன்றுமாத்திரைக்குப் பத்தொன்பதுபேதமென்று அறிக வென்றவாறு. (௰௨)

அறிந்திடு மந்த்ய வுபாந்த்ய துரியம தானசட்கம்
செறிந்திடு லக்கமுப் பான்மூன்று முப்பத்து மூன்று
[செவ்வே
பெறுந்தொகை மூன்றரைக் கீழறை யொன்றுமுன்
[பேசினர்பால்
உறும்பர தாகம நூல்வழி கண்டிடு முத்தமரே.

எ—து. அறிவினாலே தொகுக்கப்பட்ட முன் சூத்திரத்திற் சொன்ன அந்தியமான பத்தொன்பதும் அதனையடுத்த உபாந்தியமான பத்துந் துரியத்தினில் மூன்றும் சட்கமான வொன்றும் ஆக மூன்றரை மாத்திரைக்கு முப்பத்துமூன்று பேதமாமென்று பரதாகமம் வல்லோர்கள் சொல்வரென்றவாறு. (யக)

உத்தம மிப்படி யந்திய மும்பின் னுபாந்தியமும்
ஒத்த துரியமுஞ் சட்கமுங் கூட்டி யொருதொகையாய்
எத்தனை மாத்திரைக் காயினுங் கண்டுகொ ளெட்டினுக்கு
அத்தியா ருயிரத் திருநூற்று முப்பது மாறு முண்டே.

எ—து. உத்தமமாக விந்தப்படியே முன்னந்தியமும் பின்னுபாந்தியமும் துரியமுஞ் சட்கமு மாகக் கூட்டி யொரு தொகையாக எத்தனை மாத்திரைக்குப் பிரஸ்த்தாரிக்கவேண்டும் அவ்வளவும் பிரஸ்த்தாரித்துக் கண்டு கொள்ளவும். இந்நூலுடையார் தொகுத்தது எட்டு மாத்திரைக்குக் கூட்டுந்தொகை ஆருயிரத்திருநூற்றுமுப்பத்தாறென்று விரித்துச் சொன்னாரென்றவாறு. (யச)

ஆறணியுஞ்சடை யார்சொன்ன சங்கையி லானபலன்
பேறெனு மந்திய மேதுரு தாதி பெறுமிடத்தில்
மாறெரு டுபாந்தியங் கோலாதி யாக வருந்துரியந்
தாரணி யுந்தனு வாதிசட் கம்புலு தாதியுண்டே.

எ—து. வேணியில் கெங்காபவானியைத் தரிக்கப்பட்ட சதாசிவனாவர் புகலப்படாநின்ற சங்கையிற்பெறும் பயன் அந்தியம் உபாந்தியம் துரியம் சட்கம் என இந்நாலிடத்தும் துரிதமாதியாக லகு குரு புலுதமென இந்நான்கிடத்தும் வருமென்றவாறு. (யரு)

நட்டத்துக்குச் சூத்திரம் –

உண்டினி நட்டம தேதெனி லுற்ற வுருவெடுத்துப்
பண்டுளம் வைத்தன்ன பேதமு மெப்படி பாரென்பது
கண்டுபின் கேட்ட விலக்கங் கழித்திட்டுக் கண்டலக்கங்
கொண்டந் தியங்கொண் டிடிலட் சணமென்று
கூறுவரே[1].

எ–து. உண்டாகிய பேதத்திலுற்ற பொருளை வரைந்து காட்டாமல் தனக்கு வேண்டின மாத்திரையில் இத்தனையாம் பேதமென்றும் எப்படியிருக்குமென்று கேட்டவிடத்தில் உள்ளத்திலுலே யோசித்து அவன் கேட்டஇலக்கத்தைக் கழித்து நின்ற சேஷத்தை அந்தியமுதலாகக் கொள்ளுதல் இலட்சண மென்றவாறு. (கசா)

கூறந் தியங்கொளிற் கோல்வருஞ் சேஷமொன்
றேகொடுத்து
மாறுந்து மந்திய முபாந்தியங் கொள்ளில் வருங்குருவா
மீறு மிதினிற் கிரண்டரைசேஷம் விடுமிலக்கம்
ஏறந் தியத்தொடு பாந்த்ய துரிய மெடுக்கில்மின்னே.

எ–து. இப்படிச் சொல்லப்பட்ட அந்தியங் கொள்ளில் லகு வரும். இதற்குமொருவரை சேஷந்தள்ளுவது அந்தியமும் உபாந்தியமும் வரில் குருவரும். இதற்கு இரண்டறைசேஷம் விடுவது. இலக்கம் ஏற்றமாக அந்தியமுபாந்திய துரியமு மெடுக்கில் புலுதம் வருமென்றவாறு. (கஎ)

மின்னே யிதற்கிங் கிரண்டறை சேஷம் விடுமிலக்கஞ்
சொன்னேனில் லாவிடில் மாத்திரைமுற்றுந்துருதமொடு
பின்னேயம் மாத்திரை யாவும் பிறந்திலக் கம்பிழைத்தால்
முன்னே சரிவரக் கண்டுகொள் நட்டமுறையிதுவே.

---

1. கொண்டிடு மந்தியங் கொண்டிலட் சணமென்று கூறுவரே.
பா. வே.

எ—து. முன்சூத்திரத்தின்படிக்குப் புலுதம்வரில் இரண்டுறைசேஷத்தைவிட்டு மின்னே இலக்கஞ்சொல்வது. இந்த லக்கத்திலே நில்லாவிடில் மாத்திரைமுற்றுந் துருதமுதலாக யாவும் பிறந்து இலக்கம் பிழைத்தால் முன்சங்கையில் கூட்டும் வகையாவன ஒருவன் சொல்லப்பட்ட மாத்திரையில் பேதத்தை விட்டு அடுத்தவரை யிலக்கமுதல் அந்தியமாகக்கண்டு சட்கபரியந்திரம் இலக்கங் கூட்டிச் சரிவரக்கண்டுகொள்வது நட்டத்துக்கு முறைமை யென்றவாறு. (௰அ)

உத்திட்டத்துக்கு

இதுவிட்டங் குத்திட்டம் பார்ப்பதிங் கேதெனி
லிந்நிலத்திற்
கதிபெற்ற மாத்திரை காட்டியிப் பேதமுங் கண்டு
சொல்லென்
றெதிருற்றுக் கேட்பதை நட்டத்தைப் போலவு
மேற்றிக்கொண்டு
துதிபித்தி மீந்தலக் கஞ்சொல்வ துத்திட்டந்
தொல்புவிக்கே.

எ—து. இதுவன்றியும் உத்திட்டத்துக்குப் பார்ப்பதிங்கெப்படி யென்னில் தான் நினைந்த மாத்திரையை வரைந்து இந்தப்பேதம் எத்தனையாம் பேதமென்று கண்டு சொல்லென்று எதிரியைக்கேட்கில் நட்டத்தைப் போலவு மேற்றிக்கொண்டு ஈந்து சொல்வது உத்திட்ட மென்றவாறு. (௰௯)

பாதாள வகைக்குச் சூத்திரம்

தொல்புவிக் குள்ளது பாதாள மின்னதென் றேதொகுக்கில்
வல்லசொற் பாவல ரேதுரு தம்லகு மன்னுகுருப்
பல்புகழ் பெற்ற புலுதஞ்சொல் நான்கும் பகுத்துரைத்த
தெல்லையில் சங்கையிவ் வாறென் றிசைக்குவ மிந்நிலத்தே.

எ—து. பழமை பொருந்தி யிருக்கப்பட்ட புவியானதுக் குள்ள பாதாள வகையானது தொகுக்கில் வல்லமையைப் பொருந்திய சொற்பாவலரே துருதவரி லகுவரி குருவரி புலுதவரி

இந்நான்கு வகைக்குமாக முன் கூறப்பட்ட அறையி லெல்லை யற்றபாதாள சங்கைக்கு இலக்க மடைப்பதற்கும் இவ்வாறென் றிசைக்குவம் இந்நிலத் தென்றவாறு. (உ0)

நிலந்தரு சங்கையை நீடறத் திட்டி நிரைத்ததன்கீழ்
அலங்கற வேஅறைக் கொன்றெழு தந்தவொன் றந்திய
[மாம்
பலம்பெறு மந்த்ய வுபாந்தியங் கூட்டிற் பகிரண்டாம்
இலங்குறு மொன்றுக் கிரண்டையு மேயெழு தென்றனரே.

எ—து. பூமியிலுள்ளோர் பகரப்படாநின்ற சங்கைக்கு முன்னறை கீறி யிலக்கமடைத்ததனை முதற்கொண்டும் இதன் கீழாகப் பாதாளத்துக்கும் ஒரு அறைபோக்கிக் கீறப்பட்ட முதலறையில் அரைமாத்திரைக்கு மொன்றே துருதவரியில் எழுதுவது. இந்த ஒன்றுதானே அந்திய மாகவும் மேல்வரி யின் உபரியொன்றுமே உபாந்தியமாகவும் அடுத்த வலப்புறத் தறையில் ஒரு மாத்திரைக்கு இரண்டு துருதம் பிறக்கும். இதற்கு இரண்டே வரைகவென்றவாறு. (உக)

என்றன ரந்த் யவுபாந்திய மொன்றந் தியத்துபரி
தன்றினை யஞ்சந்த் வஞ்சையு மொன்றரைக் கேசமைத்து
நின்றிடு மந்த்ய முபாந்திய மந்திய நேருபரி
யொன்றிய பத்தந்தப் பத்தை யிரண்டுக்கென் றுற்றனரே.

எ—து. முன் சூத்திரத்திற் சொன்ன இரண்டே யந்திய மாகவும் இதனையடுத்த உபாந்திய மொன்றும். அந்தியத்துபரி யிரண்டுமாக அஞ்சுவலமாக அடுத்த அறையில் வரைந்தால் ஒன்றரைக்கு மேவுந்துரிதமென அறிவது. இந்த அஞ்சுதானே யந்தியமாகவு மிதனையடுத்த விரண்டுதானே உபாந்திய மாகவும் அந்தியத்து மேலுமுபரி மூன்றுமாகப் பத்தும் இரண்டு மாத் திரைக்கும் வருந்துருதமென்றும் எழுத வென்றவாறு. (உஉ)

உற்றிடு மந்த்ய முபாந்த்ய துரியமந் தியத்துபரி
எற்று மிலக்க மிருபத் திரண்டை யிரண்டரைக்கே
முற்றுவி யந்த்ய முபாந்திய துரிய முடனுபரி
நற்றிசை நாற்பத்து நாலையு மூன்றுக்கு நாட்டுவதே.

எ—து. முன்சூத்திரத்திலுற்றுச் சொன்ன பத்தும் அந்தியமாகவும் அதற்கடுத்த அஞ்சுந்தானே உபாந்தியமாகவும் அந்தியத்து மேலுபரி ஆறும் அவ்வரியில் துரியத்திலொன்றுமாக இருபத்திரண்டும் அதற்கடுத்த அறையில் இரண்டரை மாத்திரைக்கு வருந் துருதமென எழுதுவது. இந்த இருபத்திரண்டே யந்தியமாகவும் அந்தியத்துக்கு நாலாவது துரியமிரண்டும் அதற்கடுத்த பத்தும் உபாந்தியமாகவு மிரண்டு மந்தியத்துக்கு மேலுபரி பத்துமாக நாற்பத்து நாலும் அடுத்த வரையில் மூன்று மாத்திரைக்கு வருந்துருதமென நாட்டப்படு மென்றவாறு. (உ௩)

நாட்டுக வந்த்ய முபாந்த்ய துரியம் நயந்துசட்கங்
கூட்டுக வந்த்ய வுபரியுங் கூட்டிக் குலவுதொகை
சூட்டுதொண் ணூற்றொன்று மூன்றரைக் கேவரை
மேதினியில்
தீட்டுக விப்படி யெம்மாத் திரைக்குந் தெரிந்தெடுத்தே,

எ—து. சூத்திரத்திற் புகலப்பட்ட நாற்பத்து நாலுமே அந்தியமாகவும் இதனையடுத்த இருபத்திரண்டுந்தானே உபாந்தியமாகவும் அந்தியத்துக்கும் நாலாவதான துரியமஞ்சும் அந்தியத்துமேலுபரி பத்தொன்பதும் அவ்வரியில் சட்க மொன்றுமாகக் கூடினதொகை மூன்றரை மாத்திரைக்குத் தொண்ணூற்றொரு துருதம் வருமென்று பூமியினில் தீட்டுகவென்றவாறு. (உ௪)

தெரிந்திடி விச்சங்கை யெட்டுக்கெம் மாத்திர மென்று
செப்பிற்
பரிந்திடு மூப்பத்து நாலா யிரத்துப் பகரெழுநூற்
றரும்பெழு பத்துட னொலென் றறைந்தன ரம்புவியில்
வருங்கவி நாவலர் முன்னூலின் வாறு வகுத்தபொற்பே.

எ—து. தெரியப்படாநின்ற சங்கையிற் கூடின பாதாள மானது துரிதவரிக்கு எட்டு மாத்திரைக்கு அந்திய உபாந்திய துரியமுஞ் சட்கமுங் கூட்டில் கூடினதொகை முப்பத்து நாலா யிரத்து எழுநூற்றெழுபத்துநாலு துருதம் பிறக்குமென்று புவியில்வருங் கவிநாவலர் முன்னூலின்படி விரித்துரைத்தா ரென்றவாறு.—இது இந்நூலுடையார் துருத வரிக்கு எட்டுமாத்திரைக்குக் கூடின தொகையென்று கண்டுகொள்க. இப்படி யெத்தனை மாத் திரைக்குச் சங்கையுடன் தொகைகூட்ட வேண்டும் அவ்வளவும் பாதாளத்துக்குக் கூடக் கூட்டிவரைக வென்றவாறு. (உ௫)

பேருந் துருத வரிக்கே வருந்தொகைப் பேறைலகுக்
கூறு முதலறைக் கொன்றுதி யாகக் கொண் டேவரையிவ்
வாறு குருவரிக் குத்தொகை யேவரை மன்னுயிர்க்குத்
தேறுந் தெருவழிக் கித்தொகை யாவுந் தெரிந்துணரே.[1]

எ—து, சங்கையிற் கூட்டின பாதாள முதலான துருத வரிக்கு இசைத்ததொகையை முன் புகன்றபடியே லகு வரிக்கும் ஒரு அறைவிட்டு இருபதில் ஒன்றுதியாக முற்றும் வரைந்தபடி யெழுதுவது. இதன்கீழ் இரண்டறை விட்டிருபதிலிதற்கற்ற தொகைப்படியே குருவரிக்குமெழுதுவது. அன்றியும் இதற் குக் கீழாக இரண்டறை விட்டிருக்கிற புலுதவரிக்கு முன் வரிப் பிரகாரம் பார்த்து வரைவது. இனிவேண்டிய மாத்திரைக்கு ஐந்து வீதி, முற்றுக்கும் அறையும் வரைந்து இலக்கமுங் கூட்டி யடைப்பதற்குற்றிடுமரபா மென்றவாறு. இவைசங்கை முதல் பாதாளத்தில் துருதவரி லகுவரி குருவரி புலுதவரி இந்த வரிக் குந் தொகைப்படி வழுவாமற் கூட்டிச் சதுராங்கப் பிரஸ்த் தாரத்தின் பேதங் கண்டு கொள்க வென்றவாறு. (உசு)

உணர்ந்திடு மந்திய மெல்லாந் துருத முபாந்தியமே
யிணங்கிய கோல்துரி யங்குருவாகு மிதற்கிடமாய்க்
குணங்கொளுஞ் சட்கம தெல்லாம் புலுத மெனக்குறித்தே
மணந்தருகின்ற சொற் பாதாளத் திற்கு வரும்பலனே.

---

உசு. 1. தெரிந்தெழுதே. பா. வே.

எ—து. சங்கையைப் போக்கி உணர்ந்து விரிக்கப்பட்ட அந்திய மானது துருதவரியாகவும் இதற்குத்தாழ வெழுதப் பட்ட லகுவரி தானே உபாந்தியமாகவும் இதற்குக் கீழாக வரையப்பட்ட குருவரிதானே துரியமாகவும் இதற்கப்பால் தாழ வெழுதப்பட்ட புலுதவரி தானே சட்கமாகவும் மணத் தைத் தருகின்ற பாதாளத்துக்குப் பலனை வீருகவும் வந்தறிக வென்றவாறு (உஎ)

துருதமேருவுக்கு

வீதிக்கு வீதியொவ் வோரறை விட்டுமே லாய்வலமே
பேதிக்கக் கீறிடு வேண்டிய மாத்திரை யேபிறங்கச்
சேதித் தறைவரைந் தேகீழ் வரிமுதற் சேருமறைக்
காதிக்கொன் றேயெழு தப்பால் துருதமி டந்தியமே.

எ—து. துருதமேருவுக்கு வீதிக்கு வீதி மேலாக ஒவ்வொரு அறைவிட்டு வரிக்கு வரி வலமாகக் கீறுவது, வேண்டிய மாத் திரைக்கு அங்கங்குக் கண்டித்துக் கீழ்வரி தொடுத்து மேலாக முற்றுங் கீறுவது. கீழ்வரி முதலறையி லொன்றே யிலக்க மெழுதுவது. அப்பாலறையில் துருதமிடுவது. இந்தத் துரு தத்தை அந்திய மாகக்கொள்வ தென்றவாறு. (உஅ)

அந்தியத் தப்பா லறைக்கு ளுபாந்திய மானவொன்று
முந்துமூன் றுமறை யில்வரை நாலா மறைதுருதந்
தந்திடஞ் சாமறைக் குப்பாந்த் யதுரிய
மாமொன்றொன் றும்
இந்த விரண்டை வரையா றினிற்றுரு தம்மெழுதே.

எ—து. முன் சூத்திரத்தினிற் புகன்ற அந்தியத்துக்கு அப் புறமான முந்தியவறைக்கு ளொன்றையு மூன்றுமறையில் துருத மிடுவது, அஞ்சாமறைக்குள் உபாந்திய மொன்றுந் துரிய மொன்றுமாக இந்த விரண்டையும் வரைவது. ஆறும் அறை யில் துருதமெழுதுவதென்ற வாறு. (உகூ)

எழுதிடு பாந்த்ய மிரண்டுந் துரியமொன் றுஞ்சட்கமும்
பழுதறக் கூட்டியே மூாமறை நாலேயும் பாலித்திடு
முழு திவ் வரிக்கிப் படியே வரையினி மேல்வரிக்குத்
தொழுது முதலறைக் கொன்றெழு தப்பாற் றுருதமிடே.

எ—து. முன் சூத்திரத்தினில் எழுதப்படாநின்ற அந்தியத் தப்பால் உபாந்திய மிரண்டுந் துரியமொன்றுஞ் சட்கத்தி லொன்றுமாக நான்கையுங் கூட்டி ஏழாமறையி லெழுதுவது, இந்தப் பிரகாரத்துக் கீழான முதல்வரி முற்றுக்கு மிலக்கங் கூட்டிவரைக. இனி மேல்வரிக்கு இதற்குமேலாக முதலறை யில் ஒன்றை யெழுதி அடுத்த விரண்டாமறையில் துருதம் வரைக வென்றவாறு. (௩௰)

இடுவ துபாந்திய மொன் றுந் துருதத்தின் கீழிலக்கங்
கொடுவதொன் ருக விரண்டுமூன் ருமறைக் குள்வரைநால்
அடுமறைக் கந்திய மிட்டே உபாந்திய மாந்துரியம்
படுமந் தியக்கீ ழிலக்கமொ டஞ்சும் பகரஞ்சிற்கே.

எ—து. முன் சூத்திரத்தினில் அந்தியத்தைத் தள்ளி உபாந் தியமான ஒன்றுந் துருதத்தின் கீழிலக்கமொன்றுமாக விரண்டு மூன்ருமறைக்குள் வரைவது. நாலாமறையில் துருதமிடுவது. இந்தத் துருதம் அந்தியமாக அப்பால் உபாந்திய மிரண்டுந் துரியமொன்றும் அந்தியக் கீழிலக்கமிரண்டுமாக அஞ்சையும் அஞ்சாமறையில் வரைகவென்றவாறு. (௩௧)

பகருமோ ராறறைக் கேதுரு தமிட்டப் பாலறையில்
தகவொடு பாந்திய துரியமுஞ் சட்கமு ... ...

... ...மந்தியக் கீழிலக்கம் நான்குமாகக் கூட்டிப் பன்னி ரண்டையு மேழா மறையிலெழுதி யெட்டா மறையில் துருத மிடுக. இதற்கு மேல்வரி முற்றுக்கும் வேண்டிய மாத்திரைக்கு முபாந்திய முந்துரியமுஞ் சட்கமும் அந்தியத்திற் கீழிலக்க மாகக் கூட்டி யெழுதுவது துருதமேருவுக்குச் சிறப்புடைத் தென்றவாறு. (௩௨)

லகுமேருவுக்கு

வரிக்கு வரிதொறு மேதா னிரண்டறை மாற்றிடுமேல்
விரிக்கவொன் றொன்றிற்கு மேலாக மாத்திரை வேண்டியவித்
தரிக்க வறைக்கறை துண்டித்துத் தான்வரை தானமுதற்
பரிக்குமொன் றந்திய முபாந்திய திரிதியப் பாலொன்றுமே.

எ-து. வரிக்குவரி இரண்டறைவிட்டு இரண்டறை வலமாகக் கீறி வேண்டிய மாத்திரைகளை விஸ்தரிக்கிற வகைக்கு அறைக்கறை துண்டித்து ஒன்றொன்றின் மேலாகக் கீறுவது. இதற்குத்தாழ முதல்வரி முதலறையிலொன்றை யெழுதுவது. இந்தவொன்றும் அந்தியமாகையினுலே அடுத்த வறையிலும் இந்தவொன்றையுமெழுதி இவ்வந்தியத்திற்கு உபாந்தியந் தன்னுகையினுலே மூன்றுமறையிலும் ஒன்றேயெழுதி யிந்த அந்தியத்துக்கும் உபாந்தியதிரிதியந் தவிர்க்கவேண்டியதாலே நாலா மறையிலும் ஒன்றேயெழுதி முடிப்பதென்றவாறு. (கூகூ)

ஒன்றுந் துரியமொன் றும்ரண் டஞ்சறைக் குள்ளிட்டிரண்
டன்றுந் துரியமொன் றையுமூன்று மாற்ற மாக்கிவ்வரித்
துன்றந் தியந்துரி யஞ்சட்க மேவச்செய் மேலவரிக்
கொன்றிட்டவ் வொன்று முபாந்தியக் கீழொன் றிரண்டிலுமே.

எ-து. மூன்சூத்திரத்தில் நிகழ்ந்த வொன்றுந் துரியம் ஒன்றுமாக இரண்டையும் அஞ்சாமறையிலெழுதி இந்தவிரண்டுந் துரியமொன்றுமாக விந்த மூன்றையும் ஆறுமறையிலெழுதி யிவ்வரிமுற்றுக்கு மந்தியமுந் துரியமுஞ் சட்கமுங் கூட்டி வரைவது. இதற்கு மேல்வரி முதற்கோட்டி லொன்றை யெழுதி இந்தவொன்று முபாந்தியக்கீழி லொன்றுமாக இரண்டையும் இரண்டாமறையில் வரைக வென்றவாறு. (கூச)

இன்பி லிரண்டு முபாந்தியக் கீழொன்று மாகவிம்மூன்
றன்பின்மூன் றுமறைக் குள்ளிட்ட மூன்று முபாந்தியக்கீழ்
அன்புறு நாலுநான் காமறைக் கஞ்சறை சாரந்தியங்
கொன்புனை துரியமு பாந்தியக் கீழுங் குறித்தியற்றே.

எ-து. முற்சூத்திரத்தினில் இன்பாகச் சொன்ன இரண்டும் உபாந்தியக் கீழிலக்க மொன்றுமாக இம்மூன்றும் மூன்று மறைக்குளெழுதி இந்த மூன்றும் உபாந்தியக் கீழிலக்க மொன்றுமாக நாலும் நான்காமறையில் வரைவது. அஞ்சாமறையில் அந்தியமுந் துரியமும் உபாந்தியக் கீழிலக்கமுங்கூட்டி ஏழையுங் குறித்து இயலாக வரைக வென்றவாறு. (௬௫)

இயலாக விந்த வரிக்கினி மேல வரிக்குமந்த்ய
முயல்வாந் துரியமுஞ் சட்க முபாந்தியக் கீழிலக்கஞ்
செயலாந் தொகையை வரைவது செய்லகு மேருவுக்கு
நயமாமிவ் வாறெனச் சொன்னு ரிசைவல்ல நாவலரே.

எ-து. மூன் சூத்திரத்தினில் இசைத்தபடியே யிந்த வரிக்கும் இதற்கு மேல் வரி முற்றுக்கும் அந்தியமுந் துரியஞ்சட்கமும் உபாந்தியக் கீழிலக்கமுந் தொகைபெறக் கூட்டி வரைதல் லகுமேருவுக்கு நயம்பெற வருவதெனச் சொன்னுர் இசைத்தமிழ் வல்ல புலவரென்றவாறு. (௬௬)

குருமேருவுக்கு

வந்தன வேண்டிய மாத்திரை மட்டும் வரிக்குவரி
தந்தன நாலறை விட்டுவிட் டேவரை சாரமென்மேல்
உந்திடக் கண்டித் தறைக்கறை கீறுடன் கீழ்வரியில்
முந்த முதலறைக் கொன்றெழு தந்திய மோடொன்றுமே.

எ-து. வரப்படாநின்ற வேண்டிய மாத்திரை மட்டுக்கும் வரிக்குவரி வலமாக நாலறை விட்டு ஒன்றொன்றின் மேலாக அறைக்கறை கண்டித்துக் கீறுவது. இதன் கீழ்வரி முதல் வரி முற்கோட்டில் ஒன்றெழுதுவது, இது வந்தியமாக அரைமாத்திரைக்கும் இரண்டாமறையிலு மொன்றே யெழுதுவதென்றவாறு. (௬௭)

மேவிடு மந்த்ய முபாந்திய மானவி ரண்டுமூன்றைப்
பாவு மறையில் வரைந்துநா லாமறைப் பாலந்தியந்
தாவு முபாந்திய மாமூன்று மேவரை தானந்தியம்
வாவு முபாந்திய மஞ்சா மறையில் வரையஞ்சையே.

எ—து. முன் சூத்திரத்தினில் மேவப்படாநின்ற வந்திய முபாந்தியமான விரண்டு மூன்றுமறையில் வரைந்தும் இந்த விரண்டு முபாந்திய மொன்றுமாக மூன்றும் நாலாமறையில் வரைவது. அந்திய மூன்றும் உபாந்திய மிரண்டுமான அஞ்சையும் அஞ்சாமறையில் வரைவதென்றவாறு. (௯அ)

அஞ்சு முபாந்திய மூன்றுகு மெட்டையு மாறறைக்குட்
டஞ்சுமிவ் வந்திய முபாந்திய சட்கமு மேபதினு
லுஞ்சிடு மேழறைக் கிவ்வீதி முற்றுக்கும் வீதியின்மேல்
விஞ்சு முதலறைக் கொன்றெழு தவ்வொன் றுபாந்தியமே.

எ—து. முன் சூத்திரத்தினில் விரவப்பட்ட அஞ்சும் உபாந்திய மூன்றுமாக எட்டையும் ஆறுமறையில் வரைவது. இனி யிவ் வந்திய முபாந்திய சட்கமுங் கூட்டிய தொகை பதினுலையும் ஏழாமறையில் வரைந்தும் இவ்வீதி முற்றுக்கும் இப்படி லக்கங் கூட்டி வரைவது. இதற்குமேல் வரியில் முதலறையிலொன்றை யெழுதி யிந்தவொன்று முபாந்தியமான வொன்றுமென்றவாறு. (௯௯)

என்னு மிரண்டு மிரண்டறைக் கேவரை யேரந்தியந்
துன்னு முபாந்திய மாமூன்றுங் கீழிற் றுரியமிரண்
டுன்னுமிவ் வஞ்சு மறைமூன்றிட் டிவ்வரி மேல்வரிக்கும்
பன்னுமித் தன்மை குருமேரு வுக்குப் பரிசதென்றே.

எ—து. முன் சூத்திரத்தில் மேல் வரிக்குப் பகரப்பட்ட ஒன்றொன்றுன விரண்டும் இரண்டா மறையில் வரைந்தும் இந்த விரண்டும் உபாந்திய மொன்றும் கீழ்வரித் துரியமிரண்டுமாக அஞ்சையும் மூன்றுமறையில் எழுதி யிவ்வரி முற்றுக்கும் இனி மேல்வரி முழுதுக்கும் அந்திய முபாந்தியமும் கீழ்வரித் துரியமுமாகச் சொல்லுங் குருமேருவுக்குப் பரிசு இத்தன்மைத் தாமென்றவாறு. (௨00)

புலுதமேருவுக்கு

தெருத்தொறும் வீதிக்கு வீதியோ ராறறை சென்றபின் [மேல்
வரித்தொ றறைக்கறை கண்டித்தெம் மாத்திரை மட்டுக் [குங்கீழ்
உரித்தா முதல்வரி முற்கோட்டி லொன்றிட்டவ் வொன் [றெடுக்கத்
தரித்தே யிதிரண்டு மூன்று மறையினிற் றுன்வரையே.

எ—து. வீதிக்கு வீதி ஆறறைவிட்டு மேலாக வரிக்குவரி கண்டித்துக் கீறி நினைத்திடு மாத்திரை மட்டுக்கும் வரைந்து கீழ்வரி முதலான முற்கோட்டிலொன்றை யெழுதி இதனை யெடுக்க இரண்டாமறையிலும் ஒன்றையுமெழுதி இவ்வந்திய முபாந்தியமான விரண்டு மூன்று மறையினிற் றுனே வரைக வென்றவாறு. (சசு)

வரைவ திரண்டு முபாந்திய மொன்றுமூன் றுமிதனைத்
திரமென்னு லாமறைக் கந்த்ய உபாந்தியஞ் சேர்துரியம்
விரவுமொ ராறஞ் சறைக்கிட்டு வந்த்ய முபாந்தியமுந்
துரிய மொடுபத்து மாறறைக் கேயெனச் சொல்லுவரே.

எ—து. முன்சூத்திரத்தினில் வரைந்த இரண்டான வந்தியமு முபாந்தியமொன்றும் இம்மூன்றையும் நாலாமறையி லெழுதி யிவ்வந்திய முபாந்திய துரியமுமாக ஆறும் அஞ்சறைக் குள்ளே வரைந்து இனியந்திய வுபாந்திய துரியமொடு பத்தும் ஆறறைக்கே வரைவதெனச் சொல்லுவ ரென்றவாறு. (சஉ)

சொல்வன வந்த்ய வுபாந்த்ய துரியத் தொகையினையே
மில்லறை பன்னெட்டு மேயிடு மிவ்வரிக் குத்தொகைதா
னல்லது மேல்வரி முற்கோட்டி லொன்றிட்டு நன்னதியம்
வல்ல வுபாந்தியந் தன்னோரிரண்டையு மன்னுடனே.

எ—து. சொல்லப்பட்ட நின்ற முன் சூத்திரத்து அந்திய வுபாந்திய துரியத்தையுங் கூட்டி யேழாமறையிற் பதினெட்டையும் வரைந்து இவ்வரி முற்றுக்கும் இப்படி லக்கங்கூட்டி

யடைப்பது. இனி மேல்வரிக்கு முதலறையிலொன்றை யெழுதி யிவ் வந்தியத்துடனே உபாந்தியமொன்றுங் கூட்டி யிரண்டையும் இரண்டாமறையில் வரைக என்ற வாறு. (சங)

உடனுரு மந்த்ய முபாந்தியங் கீழ்ச்சட்க
முன்தொகையைத்
திடமாக வஞ்சையு மூன்றறைக் கேவரை சேரந்திய
முடனே யுபாந்தியங் கீழ்வரிச் சட்க மொடுபத்தையும்
இடவே நினையறை நாலினி லந்த்ய வுபாந்தியமே.

எ-து. முன்சூத்திரத்துடனே ஆராயப்பட்ட அந்திய முபாந்தியமுங் கீழ்வரிச் சட்கமுங்கூட்டின லக்கம் அஞ்சையும் மூன்றறைக்கே வரைவது. இவ்வந்திய முபாந்தியக் கீழ்வரிச் சட்கமுமாகப் பத்தும் நாலாமறையில் வரைந்தும் இனியிவ்வந்தியமும் உபாந்தியமும் மேல்வருவன வென்ற வாறு. (சச)

இவ்வரி மேவுந் துரியமுங் கீழ்வரிச் சட்கமுமே
நவ்வு மிருபத் திரண்டையு மஞ்சறை நாட்டிவ்வரிக்
குவ்வெனு மேல்வரி முற்றுக்கு மித்தொகை கூட்டிவரை
செவ்வையி தாம்புலு தம்மேரு வுக்குச் சிறப்பிதென்றே.

எ-து. முன்சூத்திரத்திற் புகன்ற அந்தியமுபாந்தியமுமிவ்வரியிலுற்ற துரியமுங் கீழ்வரிச் சட்கமுங்கூட்டி இருபத்திரண்டையும் அஞ்சாமறையிலெழுதி இந்தவரிக்கும் இதற்கு மேல்வரி யனைத்திற்கும் இந்தப்பிரகாரம் இலக்கங்கூட்டி வரைதல் சிறப்பாம் புலுதத்துக்குமென்றவாறு. (சரு)

பெறவேயிதன்பலன் கீழ்ப்பந்திக் கோர்புலு தம்பிறவா
னிறமேலிற் பந்திகட் கோர்புலு தங்கொண்டு நேர்பெருகுந்
துறையே யிதற்கென்று சொன்னார்கள் மாதவத்தோர்
புவியிற்
குறைவேது மன்றி யிதன்மேற்றசை யோகங் குறிப்பனவே.
(சசு)

எ-து கலித்துறை.

குறிப்புற நின்றது சையோக மேருவின் கோடுசெல்விற்
செறிப்பி லரைமுத லிரட்டித்தெம் மாத்திரைக் குந்
தெரிந்து
மறிப்பி னிரண்டறை மேனின்ற நாற்கோடு கீழ்வரைந்து
பிறப்பி னிரண்டறை மேல்விட்டுக் காணப்
பெறும்வலனே. (சஎ)

வலமேவி மேனின்றங் கோரறை கீழள வும்வகுத்துக்
குலமேவு மேலதி லிரண்டறை விட்டொரு கோடுவலந்
தலமேவி மேனின்று கீழளவே வரை சாற்றுமதிற்
பலமேவு மோரறை வீட்டிணைக் கோடிப்
படிவகுத்தே. (சஅ)

வகுத்ததி லோரறை விட்டுமுற் கோடு பரிந்துவலந்
தொகுத்திணைக் கோடுவிட் டோர்கோடு கீறித்
துணைவிடுத்தே
மிகுத்திடு[1] மூன்றறை யொவ்வொன்று
விட்டுவிட் டேவரைந்து
செகத்தினி லிந்த வறைகளின் பேரைத் திருத்துவமே. (சகூ)

திருத்திய வாம முடிவினில் நாற்பந்தி செப்பிடிலோ
பொருத்து துருதம் லகுக்குருச் செய்ய புலிதமொவ்வொன்
றுருத்தெழுந் தெட்சணத் தோர்பந்தி கொம்பு லகுவுதவுங்
கருத்ததின் தெட்சணத் தோர்பந்தி கொம்புவிற்
காண்பதுவே. (ருo)

காண்பதிற் றெட்சணத் தோர்பந்தி காண்புலு தம்பிறக்கு
மாண்பி னதனுடன் சேர்பந்தி கோல்குரு வந்துதிக்கும்
பூண்பெறு தெட்சணத் தோர்பந்தி யம்புலு தம்வருமே
சேண்பெற வோர்பந்தி வில்லுப் புலுதந் திகழுவதே. (ருக)

சகூ. 1 மிகுத்தது. பா. வே.

திகழ்வலத் தோர்பந்தி கொம்பம்பு விற்றெட் சணம்
பந்தியிற்
புகழ்விழி யம்பு புலுதம் வரும்வலப் பொற்பந்தியில்
மகிழ்சுழி வில்லுயிர் வந்துறுங் காணும் வலப்பந்தியிற்
பகழியும் வில்லும் புலுத மூமேவரும் பண்பிதுவே. (ருஉ)

பண்பினிற் றெட்சண வந்ததி லோர்பந்தி யார்த்திடிலோர்
கண்கணை வில்லுயிர் காண்பதுவே யொன்று காணிவிரண்
டெண்பெறு மூன்றொரு நாலிந்த வங்க[1] மெழுமறைகள்
தண்பெறு நாலு மிருமூன்று நாலுந் தனித்
தொன்றுமே. (ருங)

தனித்திடத் தேறுத பந்தியி லொவ்வொன்று தான்வரைந்து
குனித்திலபந்தியி லொன்றைவிட் டொன்று குறித்துவந்த
பிணைப்பொ றபந்தியில் மூன்றொழித் தொவ்வொன்று
பெற்றிடவே
இனிச்சொலப் பந்தியி லைந்தொழித் தொன்றிலக்கம்
வரையே. (ருச)

வரைசேர் தலபந்திக் கந்த்ய வுபாந்திய மும்மருவி
உரைசேரு மந்த்ய சமானத பந்தி யுடன்லபந்தி
நிரைசேரும் லக்கந் தொகைசேரக் கூட்டி நிறுத்தியபின்
தரைசேர் தகப்பந்திக் கந்த்ய துரியமுந் தந்திடுமே. (ருரு)

தந்திடு மந்திய சமான தபந்தி கபந்தியினு
முந்தி யிலக்க முறையெடுத் தேவரை முன்னரதப்
பந்தி யலந்திய சட்கமு மந்திய பன்னுசம
முந்து தபந்தி பந்தியிலக்க முடனுணரே. (ருசு)

உணரே லகபந்தி தன்னி லுபாந்திய மொண்துரியங்
குணரே யுபாந்திய மான சமானத்திற் கூர்லபந்தி
யிணரே கபந்தி யில்லக்கங் கூட்டுக வின்னிலத்திற்
புணரே லபந்திக் கேயினி லக்கம் புணர்ந்திடுமே. (ருஎ)

---

ருங. வந்த. பாவெ.

புனைந்த வுபாந்திய சட்க முபாந்தியம் போற்றுசமம்
வனைந்த லபந்தி பபந்தி யிலக்கம் வகைவரைந்து
முனைந்தந் தகபந்திக் கெல்லாந் துரிய மொடுசட்கமும்
நினைந்த துரியச் சமான பபந்தி நியமத்திடே. (ருஅ)

நியமமும் சட்கச் சமான ககப்பந்தி யும்நிரைத்துத்
துயரலக் கங்கள்காணு வறைதனைச் சூனியஞ்செய்
தியல்தரு மாறறைத் திவியாட் சரம்வரு மென்றனர்பா
வியனறி வாளர் புவிமீதி லென்றும் விளங்கிடவே. (ருகூ)

விளங்குறு மிக்க தலகபந் திக்கு மிகுமிலக்கங்
கொளும்படி யந்த்ய முபாந்த்ய துரியங்
கொணர்ந்த பின்னர்த்
துளங்கு துரிய சமான தலபந்தி தோன்றுலக்கம்
உளங்கொ ளுபாந்த்ய சமான தலபந்தி
யோங்குறுமே. (சூ0)

ஓங்குறு மந்த்ய சமான லக(பந்தி) யுற்றெடுத்தே
பாங்குறு லக்கம் தலகபந்திக்குப் பரிந்தெழுதித்
தாங்கு தலபந் தருபந் தியக்க முபாந்த்யசட்கந்
தேங்குறு சட்கச் சமான தலபந்தி சேருவதே. (சூக)

சேருமு பாந்த்ய சமான தலபந்தி சென்றெடுத்துப்
பாரினி லந்த்ய சமானத்தி லேலல பந்திநிறைத்
தோரு மிலக்க மனைத்துந் தலபந்தி யுள்வரைந்து
நேருந் தலகப பந்தி யிலக்கம் நிறுத்துகவே. (சூஉ)

நிறுத்துக வந்த்ய துரியசட் கத்தினில் நின்றலக்கங்
குறித்திடு சட்கச் சமான தகபந்தி கொள்துரியஞ்
செறித்த சமானத் தபந்தி யிலக்கமுஞ் சேரந்தியம்
பிறித்த சமான தகபந்தி தன்னிற் பிறந்ததுமே. (சூங)

பிறந்த விலக்க மனைத்துந் தகம்பெறு பந்தியினில்
நிறைந்திடத் திட்டி லகப பந்திக்கு நெருங்கிலக்கஞ்
சிறந்த வுபாந்த்ய துரிய சட்கத்துடன் சென்றெடுத்து
உறும்படி சட்கச் சமான லகப முகந்துகொள்ளே. (௬௪)

உகந்த துரிய சமான லகப்பந்தி யும்மெடுத்து
மிகுந்த வுபாந்திய மான கபந்தியு மேவுலக்கந்
தகும்படி யந்த லகபபந் திக்குச் சமைத்தெழுது
செகந்தனில் வாமத்தில் நாலறை யேதிரி, யாட்சரமே. (௬௫)

சரமே தலகப பந்தி யிலக்கந் தனைப்பகரில்
உரமேவு மந்த்ய வுபாந்த்ய துரிய முடன்சட்கமுந்
திரமேவு சட்கச் சமானத் தலகந் திகழிலக்கந்
துரமேவு துரியச் சமான தலபமுந் துன்னுகவே. (௬௬)

துன்னு முபாந்திய நின்ற சமானத்திற் சூழ்தகபம்
பன்னு மிலக்கமுங் கண்டெடுத் தேபின் பயிலந்தியம்
உன்னு சமான லகபபந் திக்கு ளுரியலக்கம்
மன்னு தலகப பந்திக் குரைத்தனர் மாதவரே. (௬௭)

மாதவர் சொன்ன சதுராட் சரம்வரு பந்தியொன்றே
போதுறு தெட்சணம் வந்தத்தில் நின்று பொலிவுபெறும்
பேதக மின்றி யறைகளின் லக்கம் பிழைகளின்றி
மூதுரை பெற்றது சையோக மேரு முடிந்ததுவே. (௬௮)

அந்திய வுபாந்திய துரிய ஷட்கத்தையும் அந்தியத்தினுப ரியையும் பாதாள சங்கை யந்தியபாபம் பிரதமதுரியபாபந் திரியஞ் சட்கபாபம் பஞ்சமம் எனக்கொள்க வென்றவாறு.

சதுரங்கப் பிரஸ்தாரம் முற்றும்.

---

இதன்பின் இந்நூலின் எட்டாம் பாடலும், ஒன்பதாம் பாடலும்.

அரைக்கொன்ருன் றுக்கிரண் டாமொன் றரைக்குமூன்
ருகுமிரண்
டுரைக்குமொ ராறு மிரண்டரைக் கேபத்தொண்
மூன்றினுக்கு
கிரைக்குபத் தொன்பது மூன்றரைக்கே முப்பான்
மூன்ருருநான்
கிரைக்கு மறுபது நூற்ருரு நாலரைக் கிவ்வைந்துக்கே.

நூற்றுத்தொண் ணூற்ருன்று அஞ்சரைசாதல்
மூந்நூற்றறுபா
னேற்றிடு மாறுக் கறுநூற் ருருபது மாறரைக்குத்
தோற்றிடு மாயிரத் தெண்பத்தொன் பான்சொலு
மேழினுக்கு
வீற்ரு யிரத்துத் தொளாயிரத் தைம்பது மேவிடுமே

ஏரேழுரைக்குமு வாயிர நானூற்றெண் பத்தஞ்செட்டுக்
காராரு மாரு யிரத்திரு நூற்றுமுப் பானிருமூன்
ருேராய்சங் கைக்கெட்டு மாத்திரைக் கேயுரைத்
தோமிதனைத்
தேராய்பின் வேண்டிய மாத்திரைக் கிப்படி தேர்ந்தறியே.

துருத வரிக்கொன் றிரண்டைந்து பத்திரு பத்திரண்டு
வருமொரு நாற்பத்து நான்குதொண் ணூற்ருன்று
மன்னூற்றெண்பான்
தருமொரு மூந்நூற்றெண்பத்தெட்டு மாறுநூற்றுத்
தொண்ணூற்றெட்டதாய்ப்
பொருமா யிரத்துமூந் நூற்றறு பானெனப்
போற்றினரே

போற்று மிரண்டா யிரத்தறு நூற்றிரு பத்திரண்டு
வீற்றவை யாயிர நாற்பத்தொன் றென்பதி னாயிரத்தொ
டேற்றறு நூற்றுமுப் பான்பதி னெண்ணு
யிரத்துமுந்நூற்
றேற்றுமுப் பத்தொன்ப தாமெனநாடுந் தொகைப்பிறிவே

பிறிவற்று முப்பத்து நாலா யிரத்தெழு நூற்றெழுபான்
குறியுற்ற நான்கையு மாத்திரை யெட்டுக்குக் கூறுகின்றார்
செறிவுற் றிடுகின்ற பாதாளத் திற்குத் திகழ்ந்தலக்கம்
அறிவுற்ற சொற்றமிழ் வல்லோர் பரதத்தை
யாய்ந்தெடுத்தே.

என்ற பாடல்களும், உகூம் பாடலும்,

சீருற்ற வந்த்ய வுபாந்த்ய திரிதியஞ் சேர்துரியந்
தாருற்ற பஞ்சமஞ் சட்கமீ திற்றசங் கைக்குற்றது
பேருற்ற வந்த்ய முபாந்த்ய துரியம் பெருஞ்சட்கமும்
ஏருற்ற சொற்சது ராங்கத் தொகைக்கிங் கிசைந்திடுமே

உற்றிடு சங்கைக்கு வீதிபன் னேழுறை யொண்துருதம்
பற்றும்பன் னுறைக் கோலுக்குப் பன்னைந்து
பார்க்கிற்குரு
நற்றிடு வீதிப்பன் மூன்றறை யாந்தெரு நாட்டிலுயிர்
பெற்றிடும் பன்னொன்று மாத்திரை யெட்டுக்குப்
பேசரையே

என்ற பாடல்களும் தொடர்பின்றி எழுதப்பட்டுள்ளன.

# தாண்டவம் நிலக்கடை

தக்கத்தொங்கா — திக்கத் தொங்கா — தக்கத்தொங்கா — திக்கத் தொங்கா — தக்கத் திக்கத்தொ, த — டெகுணங்கி தொ — தடெகிண த்தொங்கா — டெகித தாடென — செஞ் செண்ணக குண்ணகசெம் — ணகருண்ணகசெம் — ணக குண்ணக செம்ததா — தக்கத் தொங்கா — திக்கத் தொங்க — தகததொங்கா — திககத் தொங்கா — தக்கா திக்கிகதொ — டெகுணங்கி — தொதனுடகிணதொங்கா — டெகிததடென.

ஒத்த சமநிலை யுடல்பிறிவு மண்டல
மடிதர வறத்தினை மடிப்பு வகுப்பு
வாத்திய முங்கண் டித்தனை ஒக்க
ஆடியின்ன முண்டோ யெரியினங்கா ளென்றீசர்பேச
நின்ருள் காளி யெண்ணங் குலைந்தே
குத்தலிள வீச்சுச் சுத்தத்துடன் தாளெறிதல் கொண்டோ
தெண்டா பாதவிதங் கொண்டது கண்டு
பங்கில் சத்தி யுமையம்மை நின்று
தாளெடாதே காளியென்ருர்
காலைத் தூக்கிலவள் வெட்கி நாணியே
அத்தனுர் காளியுடன் ஆலங்காட்டி லாடி யென்ற
சுத்த நாடக வித மிருந்தவாறே.

திருநாட்டியம்

அத்தனு ரர்லங்காட்டி லாடுமரனுர்வேத
சுத்தனுர் வெள்ளிமன்றில் நித்தனுர் இத்திறம்
பாடிய ஈசர்எம்முடைய தாண்டவத்தை
யெப்படிக்கண்டுமகிழ்ந்தீ ரென்னீரென்பவர்
சத்தியமாக் கண்டோமென்று வானவர்கள் தாமுரைக்க

சற்றுங்கண்டீ ரில்லையென்று தம்பிரான்சொல்ல
முத்தமிழ் வள்ளுவன்கண்டான் அவன்பக்கல் செல்லு
மென்முன்
ஒத்துட னிவர்கள் கூடி யவனைக்கேட்கப்
புத்திழை நெருடும் புல்லன் அறிவேனோ தம்பிரான்கள்
பொற்குழை நக்கிய கூத்தன் புதுமை தன்னை
அத்தனூர் ஆலங்காட்டி லாடுமரனூர் வேத
சித்தனூர் வெள்ளிமன்றில் நிர்த்தனூரே.

இராகம் வயிரவி.

சதி—தக்கத் தொகிடதக - திக்கத் தொகிடதக - தக்கத் தொ - திக்கத்தொ - திக்கு தக்க தகதத குக்கு திகுதிகு திக்கு தொங்கு தொங்காகக தொங்கு தொங்கத் தொம்.

மார்க்கம்

கந்தமலர் சூடிய சடையிடைக் கங்கையு மதியும் நின்றிலங்கப்
புயமணி(ந்) தமாலை யிலங்கக் காளகண்ட நின்றொளிவிடவே
வந்துமுனிநடமது காண வானவர்கள் தேவர்கள்
தும்புருத நாரதரிசை பாடத்
தத்தித் தொங்தோ தொங்தோமென் றுடினாரே—

ஐயர் கலியுக மெய்யனூர் திருவம்பல வைகையடியுண்ட
மார்க்கமே
ஆடினாரே — மிக்க — நாடியோர் புகழ நளினவில் லடியார்கள்
நன்னா நானன நகரித்த எனப்பாடி—ஆடினாரே.

பெத்தை யத்தியக் கைதொழு மால்திருப்
பேசிக் கூப்பிடச் சிரத்திற்கைகூப்பியே
சுத்த சங்கீத நாரதர் பாடவே
சோதி வெண்சுடர் தண்சுடரொளிரவே
தத்தை நேர்மொழி சங்கரி திரிசூலி
தன்னில் கைத்தானந் தேயத்தாள மொத்துஞ்சொல்

தெத்ததெய் தாகத தித்திதெத் தெய்தெத்தெ
தித்ததெத்தெதித தெத்தெ தெத்ததெ தெத்ததெ

தித்தெயெனுஞ் சத்த மாடினரே—திருநடமாடினரே.

மஞ்சஞ் சுங்குழல் பிறையணி வாணுதல் – வாமத்தாடவே
வெண் மதியுடன் சடையா டடி தொழவே

விரிவிழி யுமையாள் தாளம் பிடிக்க
மன்றிலாடிய மார்க்கமே – தக்கிட கிடதிகத

பந்தம் பன்னிருவர் பிடிக்கப் பார்கோலமது வள்ளுவர்காண
பாருவு மேருவும் வாரியுஞ் சூழவே
ஏழுரை நாழிகையிவை சுழலத்

தொந்திமென்று மத்தளங் கொட்டவே தக்கை யிடக்கை
யுடுக்கையுடன் – தக்கிடகிடதிகி – திக்கிடகிடதிகி –
தொங்கிடகிடதிகி – நங்கிடகிடதிக –

என்று சங்கர ராடினரே.

காரணமொன்று கண்டேன் கருணையாலென்னை
யாண்டுகொண்ட
பூரண வல்லி பங்கா புண்ணிய புனிதாபோற்றி
நாரணனும் நான்முக னுந்தேடியுங் காணுத
நாயகா ஞானமூர்த்தியே
ஆரணிசடையுள்ளானே அரகரா நமசிவாயம்.

திருமானம் – தக்கிடகிடதிகி –

தரு

அம்பர முனிவர்கள் சே சேயெனவே –
ஆனந்தக்கூத்து மழகர் செஞ்சேசென
தாகதகதிகதி செஞ்சேசென – சென்னிச் சேடன்
கரத்தாட விண்ணோர்தொழும்

நாகையில் மேவிய கஞ்சனஞ்சணி விலிடியார்களிக்
காமயானை சேவிக்கமாவிரு செஞ்சேசென – தாகத ததிததிததி

செஞ்சென செஞ்செ சென செனக்கிட குககுந்தாரி செஞ்செ சென செஞ்செனத் தெஞ்சன னெனப்பாடி யாடினரே — திரு நடமாடினரே —

இராகம் — நாத நாமக்கிரியை.

சதி — செம்செகணக செகணக செம் செகணக செகணக — செஞ்செஞ்சென — செகணக செகணக — செம்செம் — செகணக செகணக செஞ்செகணக செஞ்செகணக செஞ்செசெம்—.

கறுத்த சட்டையும் அக்குவடமுங் காதிலே கமலத் தோடுமாய்க்
காலிற்சிலம்பு டமருகமுங் கையிற்கபால சூலமும்
அறுக்கச் சொன்ன பாலகன்றன்னை யழைக்கச் சொன்னவர் [தாமே
திரு வாத்தியின் கீழ் வீற்றிருந்த ஆனந்த வயிரவனார்.

கஞ்சுளியும் டமருகமுங் கையிற்கபால சூலமுங்
கொஞ்சு சதங்கை சிலம்பு கிண்கிணி குவியென சிறுத்தாளுடன்
செஞ்செ செனனெனவே சிறுத்தொண்டர் வாழ்மடந் தேடியே
வஞ்சகமென்றிப் பிறப்பையறுத்திட வந்தாராதி வயிரவனார்.

கறுத்த கண்டமுஞ் சிவந்தகுஞ்சி யுங் காதிலே வெள்ளை [முத்திரையும்
நிறுத்திக் கையில் கபாலசூலமு நிறும்மானமாகவே
சிறுத்தொண்டர் தம்மை யமுதுகேட்கச் சிறுவனைக்கறி யாகவே
அறுத்துச் சமைத்த பிள்ளையை மீள அழைத்தாராதி வயிரவனார்.

திருமானம் :—

ஆட்டையெடுத்து வனத்திலொளித்து ஆருமறிய வல்லரோ
அந்தமான பழனிமலையில் வந்துநின்ற வடிவுடன்
ஓட்டையெடுத்து ஓட்டையேந்தி யொருத்தியுடனே யுண்கையாய்
உதைத்தகாலை உளித்துவிடும் வனத்திலாடும் வயிரவனார்

வல்ல காட்டானந்தம் வயிரவம் வயிரவம்
மற்றுமுள்ள ஆனந்தம் வயிரவம் வயிரவம்
தில்லைக் காட்டானந்தம் வயிரவம் வயிரவம்
சிதம்பர ராடிய வயிரவமே.

செங்காட்டங் குடியெல்லா மானந்த மானந்தஞ்
சிறுத்தொண்டன் மடமெல்லா மானந்த மானந்தம்
பங்காட்டில் நடப்பது மானந்த மானந்தம்
பவனிக்குள் வருவது மானந்தமே.

## இராகம் முப்பத்திரண்டுக்கும் விருத்தம்

இருக்கதனிற் செனித்தது பூபாள வயிரவி குலம்
வேதியர் மெய்துப்பே
மருக்கமழ் பூபாள மேவும் வேளாகிரி பவுளிமாதினோடே
திருக்குலவு மலகிரியைச் செப்பும் வயிரவிதனையே சேர்குறிஞ்சி
தருக்குயர் தேவக்கிரிகை மேகரஞ்சி ராகமெட்டுஞ்
சாற்றுந்தானே. (க)

பன்னுமெசுரிற் செனனம் சிராக மிராகபஞ்சரி நிறம்பொன்
மன்னுகுலஞ் சத்திரியர் சிராக மேவிடு மிந்தளத்தினோடே
கன்னலெனு முகாரி பாடிலையினையே கருதுமிராக பஞ்சரிக்கு
மன்னுசங்க ராபரணந்தேசி லளித்தையுமிராக
மாகுமெட்டே. (உ)

சாமவேதத்தி லுதித்து வந்தன மாளவி பச்சையினி நிறந்தான்
நாமவசியன் வசந்தனையும் ராமக்கிரி வராளியோடே
சாமந்தமெனப் புகலுமாளவிக்குக் கெவுடகுச் சரிதேசாட்சி
யாமிந்து விளங்கு குண்டக் கிரிகையென விராகமெட்டா
யறையுந்தானே. (ஙு)

சேருமதர் வணத்துதித்தோர் வங்காளம் நாட்டை
சூத்திரராஞ்சாதி
கூரும்நிறம் வெண்மை வங்காளங் கொளுங்கன்னட கெவுளை
குமரியோடே
தீருங்காம்போதி தனுசியெனலாம் நாட்டையினைச்
சேர்கேதாரஞ்
சாருநாரண கெவுளை யாயிலியோடி ராகமெட்டுஞ்
சாற்றுந்தானே. (௪)

இவை ஆணிராகமெட்டும் பெண்ணிராகம் இருபத்தி ஞன்குமாக முப்பத்திரண்டிராகமும் முற்றும்.

## வங்கிய இலக்கணம்

உலகிலெண் மூங்கி லுயர்கருங் காலி
இலகு சந்தனஞ் செங்காலி வெண்கலத்துள்
உத்தம மூங்கில் மத்திமம் வெண்கலஞ்
சந்த மீறுமரந் தானிவை கூறில்
ஐந்துமா முயர்நிலத் தாரநின் றோங்கி
வந்துறி லியங்காமல் மயங்காமல்
இளமை மாமுதுமை யிலாவகை தேர்ந்து
வளமைநேர் நன்னாள் மதித்தவன் குறுகி
ஆண்டொரு நூறு மானநன் மரமாய்க்
கீண்டுகண் படுதல் திருகுத லிலாமல்
முற்றிய மரத்தை மூறுடன் தரித்துக்
குற்றமிலாதாய்க் கொண்டொராட் பருமம்
வெட்டியெடுத்து மென்னிழ லதனில்
இட்டுவைத்தோ ராண் டின்பின் இலக்கணந்
தன்னாற் பிண்ட மிருபது பெருவிரல்
முன்னாஞ் சுற்றளவொடுநால் விரலே
யாமர மித்துளை யளவுநெல் லரிசி
யோர் பாதிமரம் நிறுத்திக் கடைக

---

'குழல்—வங்கியம்; அதற்கு மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலியென ஐந்துமாம்...இவற்றுள் மூங்கிலிற் செய்வது உத்தமம்; வெண்கலம் மத்திமம்; ஏனைய அதமமாம். மூங்கில் பொழுது செய்யும்; வெண்கலம் வலிது; மரம் எப்பொழுதும் ஒத்து நிற்கும். இக்காலத்துக் கருங்காலி சந்தனம் இவற்றாற் கொள்ளப் படும்; கருங்காலி வேண்டுமென்பது பெருவழக்கு. இவை கொள்ளுங்கால் உயர்ந்த ஒத்தநிலத்திற் பெருக வளர்ந்து நாலுகாற்று மயங்கின் நாதமில்லையா மாதலான் மயங்கா நிலத்தின்கண் இளமையும் நெடும்பிராயமு மின்றி ஒரு புருடாயுப்புக்க பெரிய மரத்தை வெட்டி ஒரு புருடாகாரமாகச் செய்து அதனை நிழலிலே ஆற இட்டு வைத்துத் திருகுதல் பிளத்தல் போழ்ந்துபடுத லின்மையை யறிந்து ஓர் யாண்டு சென்றபின் இலக்கணவகையான் வங்கியஞ் செய்யப் படும். இதன் பிண்டியிலக்கணம்:—நீளம் இருபதுவிரல்; சுற்றளவு நாலரை விரல். இது துளையிடுமிடத்து நெல்லரிசியில் ஒரு பாதி மரன் நிறுத்திக் கடைந்து வெண்கலத் தாலே அணசு பண்ணி இட முகத்தையடைத்து வலமுகம் வெளியாக விடப்படும்.

ஊளதுளைப் பரப்பு மொருவிரல் வெண்கலம்
அணைசிறு விடமுக மடைத்தால் வலமுகம்
வெளியாய்த் தூர்முகத் திருவிரல் நீக்கி
ஒளிசேர் முதல்வாய்க்கேட்டுமிம் முதல் வாய்க்
கேழங்குலம்விட் டேவளை வாயினும்
தாழ்விலா திருவிரல் நீக்கி யிதனடு
நின்ற விரலெட்டினுமெட் டுத்துளை
துன்றிரு பக்கத் துளையீரிரண்டாய்
விட்டிடு முன்னூல் மேவிடு துளைமுகங்
கிட்டு முத்திரையெனக் கிளர்ந்ததைத் தள்ளி
யேழ்துளையினுஞ்சுட் டாவிரல் நடுவிரல்
நீளணி விரலொடும் நிகருறும் வலக்கைப்
பெருவிரலொழியப் பிறங்கு நால் விரலும்
மருவவேழ் விரலும் வயங்கவே கண்டை
சேர்த்ததில் வில்லை திகழ் சீவாளங்
கோத்தப்புல் லூசி கொடுத்து வாய்வைத்துச்

---

இனித்துளையள விலக்கணம்:—அளவு இருபது விரல். இதிலே தூம்பு முகத்தின் இரண்டு நீக்கி முதல்வாய் விட்டு இம்முதல் வாய்க்கு ஏழங்குலம் விட்டு வளைவாயினும் இரண்டுநீக்கி நடுவினின்ற ஒன்பது விரலினும் எட்டுத் துளையிடப்படும். இவற்றுள் ஒன்று முத்திரை யென்று கழித்து நீக்கி நின்ற ஏழினும் ஏழுவிரல் வைத்து ஊதப்படும். துளைகளின் இடைப்பரப்பு ஒரு விரலகலங் கொள்ளப்படும்.

இவ்வங்கியம் ஊதுமிடத்து வளைவாய் சேர்ந்த துளையை முத்திரையென்று நீக்கி முன்னின்ற ஏழினையும் ஏழுவிரல் பற்றி வாசிக்க. ஏழுவிரலாவன:—இடக்கையிற் பெருவிரலும் சிறு விரலும் நீக்கி மற்றை மூன்றுவிரலும், வலக்கையிற் பெருவிரலொழிந்த மற்றை நான்கு விரலும் ஆக ஏழுவிரலுமென்க.

இவ்வங்கியத்து ஏழு துளைகளில் இசை பிறக்குமாறு:—அஃது எழுத்தாற்பிறக்கும். எழுத்து சரிகமபதநி என்பன. இவ்வேழெழுத்தினையும் மாத்திரைப் படுத்தித் தொழில் செய்ய இவற்றுள்ளே ஏழிசையும் பிறக்கும். ஏழிசையாவன:—சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம் நிடாதம் என்பன. இவை பிறந்து இவற்றுள்ளே பண் பிறக்கும்.

(சிலப்பதிகாரம், அரங்கேற்றுகாதை, அடியார்க்குநல்லார் உரை)

சரிகம பதநீ யெனுஞ்சத் தெழுத்தாற்
பரிவுறு நாதப் பண்ணது பிறக்க
ஏழிசை பிறக்கு மிதனுள்ளே சுத்தஞ்
சூழ்முத லாரிய கீதமே துலங்க
ஐவகை காந்தார மத்திமம் பஞ்சமம்
தைவத நிடாதந் தன்னுளே ராகந்
துளையினல் நிகழுஞ் சுருதியைந் தென்ன
விளைவுறு சத்தமிதற் கெல்லாம் பொருந்தும்
தாய மேளமெனத் தான்புவி வாணீ
ருயே தெய்வ மாமிதன் பெருமை
செங்கண்மா லுவந்து சிறப்புட னூதும்
வங்கிய மென்றே வழங்குவ மிதற்கே.

வங்கிய லட்சணத்துக்கு அகவல் முடிந்தது முற்றும்

## மத்தள இலக்கணம்

### அகவல்

வேம்பு பலாக் கருங்காலி செங்காலி
ஆம்பல செம்மர மாத்தியா மொன்றில் [1]
ஆரநீரி லண்டைய தின்றிப்
பேராக் காற்றிற் பெருவெயி லின்றிக்
கன்றிய தன்றிக் கண்முற்ற லன்றி [2]
யின்னளா றன்றி யிடர்கண் மற்றின்றிப்
பின்னிலை சிபுத்தல் பீறுபொத் தன்றி
விரவிய மரத்தில் விளங்கிய மரமாய்ப்
பரவியன்னுளிற் பண்ணுதல் துவக்கிப்
பிண்டத்தி லரைவிற் பெருமைய தாக்கிக்
கண்டத்தி லரைவிரற் கனமுடைத்தாகி
இடது முகத்திலிடம் பதினுல் விரல்
வலது புறம் பதின்மூவிரல் மானம்
பரந்தெழுந் திரண்டு பக்கமு மொத்துத்
திரண்டெழு நாற்பத் தெண்விரல் நீளமாய்
இரும்பினுல் வாரினு லியற்சக்கிரவளையம்
பொருந்திட வுயர்ச்சி பொத்துப் புறத்திற்
சூட் டிளைப்பில்லாச் சுகமா யப்பசு
மாட்டினிலாறு மாதக் கன்றின்
நோயில் நுடங்கா நொடியில் மரித்த
தோலினுல் மூடித் துளைபதினுறு

மத்தளத்திற்குரிய மரங்களின் இயல்பும் அவற்றைக் கொள்ளும் முறையும் மத்தளத்தின் வடிவும் அமைக்கும் முறையும் பிறவும் கூறுகின்றது.

1. அத்தியா மொன்றில் பா. வே.

2. கன் முற்றலன்றி பா. வே.

சுத்த மத்தளத்திற் றேன்றச்செய்து
சுத்தபேரி சல்லி மத்தளத்திற்
பதினாறு விரல்மே லிருபத்திரன்கு
நடுவினி லிரட்டை படுநற்றுளையாய்க்
கோத்திள வாரிற் கோழூத் திரிகமாய்
வார்த்துளை தோறும் வலித்துற வரிந்து
குண்டலிப் புறங்களிற் கோளுற வெண்வீரற்
றண்டிமா னங்குலந் தன்னிற்சுற்றி
அரையமை நாணு மழகுற வமைத்து
இருகூருகி யிசைந்த பூதியும்
ஒருகூருகி புணரா வண்ணமுங்
கூட்டிய பதத்திற் கொள்கை யறிந்து
வாட்டிய சக்கிர மாக வளையம்
வாமந்தன்னில் மார்ச்சனை யிட்டுப்
பூமிதெக்கணத்திற் பொற் கணமிட்டு
நாதமறிந்து நன்னிலை பார்த்து
மோதிய தத்தித்தொன் னென்னு முறையிற்
பாட லெழுத்துப் பதிந்து நாதம்
நீடிய வெழுந்து நெறிமுதலறிந்து
சுத்தமுந் தேசியுந் தோன்றத் தெரிந்து
மத்திம முடுக்கம் விளம்பித மிவற்றின்
வண்ணமா மூவகை மத்தளந் தனக்கு
நண்ணிய தேவதை நந்திகே சுரனெனத்
தாங்கிய கைகள் தான் பிறைக்கையா
யோங்கிய பெரியோ ருரைத்தன ரிவற்றை
அரனார் தாண்டவமாட நந்திகே
சுரனார் கொட்டிய சுத்த மத்தளமே.

மத்தளலட்சணம் முற்றும்.

## அஷ்டகணம்

○ பகணமே யாதிகுருப் பான்மதியந் தெய்வம்
புகலரிய நன்மை புகழாம்—மகணம்
நிலையாகு மூன்றுகுரு நீணிலமே தெய்வந்
தொலையாத செல்வமெனச் சொல்.

எ—து ஒரு குரு இரண்டுலகுநேர் — ஆக நாலுமாத்திரை இதற்குத் தெய்வம் சந்திரன், நல்ல புகழாகிய கீர்த்தியாம். மகணத்துக்கு மூன்று குரு — ஆறுமாத்திரை. இதற்குத் தெய்வம் பூமி, மிகுதியாகிய செல்வமுண்டாமென்றவாறு. (௧)

○ ஆதிலகுயகண மானபுனலே கடவுள்
ஏத மறத்தழைத்த லேபலமாம்—போதம்
முழுதி லகுநகண மொய்சுவர்க்கந் தெய்வம்
பழுதறும் ஆயுப் பலம்.

எ—து. யகணத்துக்கு ஒரு நேர் இரண்டு குரு—ஆக அஞ்சு மாத்திரை. இதற்குத் தெய்வம் அப்பு-குற்றமின்றித்தழைத்தல் இதன் பலம். நகணத்துக்கு மூன்றுலகு-மூன்று மாத்திரை. இதற்குத்தெய்வம் சுவர்க்கம். இதன்பலன் ஆயுள் வர்த்திக்குமென்றவாறு. (௨)

○ சேரும் நடுக்குருவே செப்புஞ் செகண மொளி
கூரிரவி தெய்வங் கொடும்பிணியாங்—காரிகையாய்
ஈற்றுக் குருச்சகண மென்னுங் கடவுளது
காற்றுப் பரதேசங் காண்.

---

○ இக்குறியிடப்பட்டன தாள சமுத்திர வெண்பாக்களாகும்.

௧. பகணம் ⌊ | |   மகணம் ⌊⌊⌊

௨. யகணம் | ⌊⌊   நகணம் | | |

எ—து. செகணத்துக்கு லகு குரு லகு. ஆக மாத்திரை நாலு. இதற்குத் தெய்வம் ஆதித்தன். இது நோய்க்கிடம். சகணத்துக்கு மிரண்டு நேர்குரு—ஆக நாலுமாத்திரை. இதற்குத் தெய்வம் வாயுவு. இதற்குப் பரதேசம் போதல் பலமென்றவாறு. (௩)

O நடுவிலகு வந்தால் நயக்கும் ரகணங்
கடவுள்பணி சாவுபலன் காட்டு—முடிவிலகு
எண்ணுந் தகண மெழிலம்பரங் கடவுள்
பண்ணுமிடி யே பலம்.

எ—து. ரகணத்துக்குக் குரு-லகு-வில் ஆக மாத்திரை ரு. இதற்குத் தெய்வம் சேஷன். இதன் பலன் மரணம். தகணத்துக்கு இரண்டு வில்—லகு. ஆக மாத்திரை ரு. இதற்குத் தெய்வம் ஆகாசம். இதற்குப்பலம் வறுமையென்றவாறு. (௪)

மகணமது பூமி யகணமது செல்வமாம்
பகணமதி நகணஞ் சொர்க்கஞ்—தகணம்வான்
சேர்செகண மாதித்தன் சீர்ச்சகணமே வாயு
மாரகணமே நாகமாம். (௫)

அஷ்டகண முற்றும்.

---

(௩) செகணம் । ㄣ ।. சகணம் । । ㄣ,
(௪) ரகணம் ㄣ । ㄣ. தகணம் ㄣ ㄣ ।.

## தாண்டவம் பதினாறுவன *

கலித்துறை

ஆதியனுப் பிரகாசமும் பீடம் புட்பாஞ்சலிமிக்
காது புயங்கமுந் தேசியுந் தேசியொத்துக்கருதும்
நீதிநிழல்வைப்பு வகுப்புடன் வாக்கியம் நேர்கவுத்தம்
ஓதனுக்குத் தெண்ட பாதமு மீரெட்டென்றோதினரே.

[1] அகமார்க்கம் பதினாறுக்குந் தரு வரலாறு விபரம் :—

தரு. திருமாலயனும் வானவருந் தேவேந்திரனும் நாரதனும்
வருமாதவஞ்சேர் முனிவோரும் வந்துவணங்கி மனமகிழக்
கருமாமுகில்சே ரளகமயிற் கன்னியொரு பாகத்துறையும்
அரனா ராலங் காடதனில் அன்பால் நடித்த ஆதியிதே. (க)

வெண்பா

ஆதிதனக் காதியா மாவன்ன பின்னமுடன்
ஓதும் லலிதை யுயர்சட்டம்—போதத்
தணிசரப லீலை யரங்கமுட னுத்தீக்
கனமுடனே தீபகமாங் காண். (உ)

---

* தாண்டவம், நிருத்தம், நாட்டியம் எனக் கூத்து விகற்பத்தினை மூன்றாக வகுத்துரைப்பர் சிலப்பதிகார வுரையாசிரியர். இவற்றுள் 'நாட்டியம் என்றது புறநடத்தை' எனக் குறிப்பிடுதலால் முன் கூறிய தாண்டவம் என்பது அகமார்க்கப் பொருள்பற்றி வரும் என உய்த்துணர்தல் கூடும். இடையேயுள்ள நிருத்தமென்றது அகச்சுவை முதலியன கலவாத சுத்த நிருத்தத்தினை.

1 இது நூற்றெட்டுக் கரணமுடைத்து எனவும் சொக்கம் என்னும் பெயருடையதெனவும் சிலப்பதிகார வுரையாற் புலனும்

இராசதம், தாமதம், சாத்துவிகம் என்னும் அகச்சுவைபற்றித் தோன்றும் உணர்வு அகமார்க்கப் பொருளாகும் " இவ்வகத்துணர்வு பற்றித் தோன்றியனவே திருவாலங்காட்டில் இறைவன் ஆடிய ஆதி என்னுங் கூத்துமுதலாகத் தெண்டபாதம் என்பதீறாகவுள்ள பதினாறு தாண்டவங்களுமாம். இவற்றை மெய்க்கூத்தென்பர். இவை சாந்திக்கூத்தின்பாற் சார்த்தியுரைக்கப்படும். ''நாயகன் சாந்தமாக ஆடிய கூத்துச் சாந்திக்கூத்தெனப்படும்'' என அடியார்க்கு நல்லார் கூறுவது இங்கு ஒப்புநோக்குதற்குரியது

தரு:—கூத்து நிகழுங்கால் இடையிடையே அவ்வாடலுக் கேற்பத் தந்து இசைக்கப்பெறும் இசைப்பாடல் தரு என வழங்கப்பெறும். தந்து உரைத்தலைக் குறிக்கும் தரவு என்னுந் தமிழ்ச் சொல் பேச்சுவழக்கில் தரு எனச் சிதைந்து வழங்கியதாதல் வேண்டும்.

முகில்—மேகம். அளகம்—கூந்தல்
கன்னியென்றது உமாதேவியை. (க)

ஆதி என்னும் தாண்டவத்திற்கு உரிய தாளங்களாவன:- ஆதிதாளம், வன்னபின்னம், லலிதை, சட்டம், சரபலீலை, அரங்கம், உத்தீக்கணம், தீபகம் என்பனவாம். (உ)

தரு-செகம் வானளவோ ரடியாகச் செய்த திருமாலிசை கூற
நகமான துவோர் தனுவாக நத்தார் புரஞ்செற்றிட விமையோர்
முக மாதியமுக மாதியாக முதலான துவுங் களிகூற
அகமார்க்கத் தாலாலங்காட்டி லரனுராடும் அனுவிதுவே (௯)

வெண்பா

அனுவுக்குக் காருதியு மாய்தற்பனமுங்
கனமாங் கிரீடை குடுக்க—மினமாகுங்
குந்த முடனே குளிரிலகு சேகரமு
குந்தமிவை யேழுங் குறி. (௪)

தரு-படியாற் சிறந்த இருநாழி பாடியளந்த நெற்கொண்டு
மடியா தூலகை வளர்த்தருளும் வாலகெவுரி யொருபாகன்
துடியாற் சிறந்த விருகரஞ்சேர் சோதி திருவாலங்காட்டின்
அடியார்க் கெளியா னகத்தொளியான்
ஆடும்பிரகாச மிதுதானே. (௫)

வெண்பா

பிரகாசமரங் காபரணம் பின்னிரதி தாளங்
தகாதுதியங் கந்துரங்கந் தன்னொ—டுகாதுவரும்
நிச்சா ருகம்பங்கம் நேருமிரு மூன்றுமென
வைச்சார் பொதிய முனிவன். (௬)

---

௯. செகம்வான் அளவு ஓரடியாகச் செய்த திருமால் என்றது அவர் மாவலிச் சக்கரவர்த்தியிடம் மூவடி மண்வேண்டித் தன் அடியால் தாவியளந்த கதையினைக் கருதியது. திருமால் இசைபாட இறைவன் நடித்தான் என்பது கருத்து. நகம்-மலை, மேரு. தனு-வில் நத்தார்-விரும்பாத் பகைவர்.

௪. அனு என்னும் தாண்டவத்திற்கு உரிய தாளங்கள் :—காருதி தற்பணம், கிரீடை, குடுக்கம், குந்தம், இலகு சேகரம், முகுந்தம் என்னும் இவையேழுமாகும்.

௫. என்றும் இளையாளாகிய உமாதேவியார் காஞ்சி நகரத்தில் எழுந்தருளி இறைவனருளால் இருநாழி நெல்லைக்கொண்டு எல்லா அறங்களையும் வளர்த்தருளிய புராண வரலாறு இச்செய்யுளிற் குறிக்கப்பட்டது.

பிரகாசம் என்னுந்தாண்டவத்திற்குரிய தாளங்கள்:—அரங்காபரணம், இரதிதாளம், துதியங்கம், துரங்கம், நிச்சாருகம், அபங்கம் என்னும் ஆறுமாம்.

தரு—கையார் பாசங் கொடுங்காலன் கரியவடிவைக் கண்டடியேன்
னையா வகை [1] தந் தெனையாண்ட நளினப் பதத்தான் [2] மழுவெடுத்தான்
பையா டரவுங் [3] கடுக்கையு [4] நற் பாகீரதி [5] யுந் தரித்த பிரான்
ஐயா னன [6] னலங்காட் டாடும் பீடமிதுதானே. (எ)

வெண்பா

பீடமே சச்சபுடம் பேசரிய செம்படையும்
நாடுமிடை யொர்த்துடனே நல்லோர்கள்—தேடும்
பெரியதொரு காரிகையும் பின்னுஞ் சதுமுகனும்
கருணை யதிரதியாங் காண். (அ)

தரு—இனியதவஞ்செய் திருநாற்பத் தெண்ணுயிரமா மிருடிகளும்
முனிவர் குழாமும் வாசவனும் முளரிக்கணனும் வேதாவும்
அனைவோர் வந்தஞ் சலிபுரிய அருள்சேர் திருவாலங் காட்டில்
புனிதன் றனியே நடித்தருளும் புட்பாஞ்சலியு மிதுதானே. (௯)

வெண்பா.

புட்பாஞ் சலிபார்ப் பதிலோச னன்பொருந்தும்
நட்பான கோகுலமு நாடுமே — தட்ப
மணிகண்ட கங்காள மாமிராச சூடா
மணியுடன்மாத் தாண்டமென வை.

---

(எ) 1. வருந்தாதபடி, 2. நளினப்பதத்தான்—தாமரைமலர் போலும் திருவடிகளையுடையான். 3. பை ஆடு அரவு எனப்பிரித்துப் பொருள் கூறுக. பை—படம். அரவு-பாம்பு. 4. கொன்றை. 5. கங்கை. 6. ஐந்து முகங்களையுடையான். ஆனனம்—முகம்.

(அ) பீடம் என்னும் தாண்டவத்திற்குரிய தாளங்கள் :—சச்சபுடம், செம்படை, காரிகை, பின்னசதுமுகன், கருணையதி, இரதி இவ்வாறுமாம். இவற்றுள் செம்பை, காருகி என்பன செம்படை, காரிகை என ஏடுகளிற் சிதைந்து காணப்படுகின்றன.

(௯) வாசவன்—இந்திரன். முளரிக்கண்ணன்—திருமால். வேதா—பிரமன்.

(ய) புட்பாஞ்சலி என்னுந் தாண்டவத்திற்குரிய தாளங்களாவன :—பார்ப்பதிலோசனம், கோகுலப்பிரியம், கண்டகங்காளம், இராச சூடாமணி, மாத்தாண்டம் என்பனவாம்,

தரு—பிறைசேர் பணிலச் சடாமகுடப் பெம்மான்
கைமான் தரித்தபிரான்
கறைசேர் கண்டன் கங்காளன் காலகாலன் கபாலத்தான்
மறைசேர் ஒலியும் மணவொலியும் மாறுத் திருவாலங்
காட்டின்
நறைசே ரிதழித் தொடையீசன் நடிக்கும் புயங்க
மிதுதானே. (௰க)

வெண்பா.

புயங்கந் தனக்குப் புகல்சமதா ளத்தொ
டியங்குசிங்க நாதணி டேங்கி—வியன்கொடுகம்
வைத்தா னிவைநான்கும் வண்பொதிய மாமுனிவன்
இத்தா ரணிமகிழ வே. (௰உ)

தரு—ஆதி நடுவீறில்லாத அகண்ட பரிபூரணன் அடியார்
கேதந் தவிர்த்தன் புடனுளுங் கிள்ளை மொழிமா
துமைபாகன்
சீதமதி சூடிய சடையன் தேவன் திரிபுராந்தகன் விந்து
நாதன் திருவா லங்காட்டில் நடித்த தேசியிதுதானே. (௰ங)

வெண்பா

தேசிகெச லீலை திரிபின்னம் நாந்தியுடன்
மாசிலிடோம் புள்ளி மகரந்தம்—நேசந்
தருதாள மைந்துமெனத் தண்பொதியந் தன்னில்
வருமா முனிவனுரைத் தான். (௰ச)

---

(௰க) பணிலம்-சங்கு, சடையிற் கங்கை நீருண்மையாற் சங்கும் உளதாதல் பெறப்படும். கறை – நஞ்சினது கறுப்பு. நறை - தேன். இதழித்தொடை – கொன்றை மாலை.

(௰உ) புயங்கம் என்னும் தாண்டவத்திற்கு உரிய தாளங்கள் :- சமதாளம், சிங்கநாதம், டேங்கி, வியன்கொள்துகம் (?) இவை நான்குமாம்.

(௰ங) கேதம் - துன்பம், கிள்ளை - கிளி, சீதமதி – குளிர்ந்த திங்கள், திரிபுராந்தகன் – திரிபுரத்தினை அழித்தவன்.

(௰ச) தேசி என்னும் தாண்டவத்திற்குரிய தாளங்களாவன :- கெசலீலை, திரிபின்னம், நாந்தி, டோம்புள்ளி, மகரந்தமென்பனவாம்.

தரு

முன்னுன் மறைதேடரியபிரான் மூவாமுதலாம்[1] உமைபாகன்
கன்னு ரமுதாய்[2] விடமதனைக் கருதியயிலுங்[3] கறைக்கண்டன்
ஒன்னுர்[4] புரஞ்செற் றிடநகைத்த வோராயிரநாமத் தொளிரு
மன்னுந்திருவா லங்காட்டான் ஆடுந்தேசியொத்திது
தானே. (௰ரு)

வெண்பா

தேசியொத்துக் கண்பாஞ் செகற்சம்பை யும்புவியில்
நாசமில்லா வாழன்ன நாதமுடன்—நேசந்
தருசன்னி மாசனையுந் தாவுமெக் கதாளந் [1]
துருதசே கரமுமெனச் சொல். (௰சு)

தரு

பாரோர் வானே ரந்தரர்கள் பரவிப்பணியும் பரப்பிரமன்
சீரா ரிரத கிரி[1]யாளன் செம்பொன்மேருச் சிலையனையான்
தாரா ரிதழிச் சடைமுடியான் தவத்தோர் தவமாந் தனி
முதலான்
ஆரார் போகத் தாலங்காட்டி லரனுராடும் நீதியிதே. (௰எ)

நீதி யிரச்சு கிபஞ்சிலக்கு மீசன்மலர்
மாதே பிரகாச மட்டமுடன்—ஓதுமரங்
கப்பிர தீபகம் விட்டிமகங் காளத்தொ
டப்பணிசொல் பூர்ணகங்கா ளம். (௰அ)

---

௰ரு. 1. மூவாமுதல்—கெடாத முழு முதற்பொருள்.

2. 'கன்னலாரமு தாய்' எனற்பாலது கன்னுரமுதாய் எனச் சிதைந்துவந்தது. கன்னல் ஆர் அமுது—கருப்பஞ்சாறு.

3. அயிலும்—உண்ணும்.

4. ஒன்னுர்—பகைவர்.

௰சு. தேசியொத்து என்னுந்தாண்டவத்திற்குரிய தாளங்களாவன: செகற்சம்பை, அன்னநாதம், சன்னிமாசனை, எக்கதாளம், துருத சேகரம் என்பனவாம்.

௰எ. 1. இரதகிரி—வெள்ளிமலை

௰அ. நீதியென்னுந் தாண்டவத்திற்குரிய தாளங்களாவன:—இரச்சுகம்; இலக்குமீசன், பிரகாச மட்டம், அரங்கப்பிரதீபகம், விட்டிமகங்களாம், பூர்ணகங்காளம் என்பனவாம்.

### தரு

தண்ணு ரறுகோ டிதுழிதும்பை தளவங்[1] குவளை[2] சாதிபிச்சி
நண்ணு ரரவச் சடிலத்தான் நாடற்கரிய நவநாதன்[3]
பண்ணு ரிசைகேட் டரக்கனுக்குப் பார்வானளித்த
பண்பாளன்[4]
அண்ணு மலையாலங்காட்டில் அரனுராடும் நிழலிதுவே. (௰௯)

### வெண்பா

நிழல்வீர விக்கிரமம் நேயத் துடனே
யெழில்சேர் வனமா லிகையும்—அழகா
யுளவசந்த தாள மொருமூன்று மென்றே
வளமை யுட னுரைத்தான் மால். (௨௰)

### தரு

சிரபேதம் பன்னுன்கு திஷ்டிசேர்பேதம் பன்னைந் தொடங்கந்
தருமேள கிரியை பதினுறுஞ்சாற்று மறுபானுறுகையும்
வருகாற் ருெழில்நாற் பான்மூன்று மருவுங்கரணம்
நூற்றெட்டும்
அரிதாம் பொருளுற் ருலங்காட்டி லரனுடும்
வைப்பிதுதானே. (௨௧)

---

௰௯. (1) தளவம்—முல்லை, (2) குவளை—நீலோற்பலம், (3) நவநாதன்—சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசுரன், உருத்திரன், திருமால், அயன் எனும் ஒன்பது வகையாய் நின்ற தலைவன்; என்றது இறைவனை, நவம்—ஒன்பது. இவ்வொன்பது வகையினுள் முதல்நான்கும் இறைவனது அருவத்திருமேனி; நடு நின்ற சதாசிவம் என்பது அருவுருவத் திருமேனி; பின்னுள்ள நான்கும் உருவத்திருமேனி (சித்தியார் சுபக்கம் ௧௱௪), 4. இராவணன் பாடிய இசைகேட்டு அவனுக்கு நிலவுலக ஆட்சியையும், வானுலக ஆட்சியையும் வழங்கியருளியவன், 'பண்ணுரிசைகண்டு' என்றும் பாடம்.

௨௰. நிழல் என்னுந் தாண்டவத்திற்கு வீரவிக்கிரமம், வனமாலிகை, வசந்தம் என்னும் மூன்று தாளங்களும் உரியனவாம்.

௨௧ சிரவகை பதினுன்கு, கண்வகை பதினைந்து, அங்கக்கிரியை பதினுறு, கைவகை அறுபத்தாறு, காலினுற் செய்யுந்தொழில் நாற்பத்துமூன்று, கரணம் நூற்றெட்டு இவை பொருந்த இறைவன் வைப்பென்னுந் தாண்டவத்தை யாடினுர் என்றவாறு.

### வெண்பா

வைப்புக் கிராசதா ளத்துடனே மாமயிலே
முப்புலியெண் மல்லிகா மோதகமும்—தப்பாமற்
கற்றவி லம்புடனே காற்கடந்த தாளமுட
னற்றதொரு தாளமுநான் காம். (உஉ)

### தரு

தாரா கணஞ்[1]சேர் மதியரவு தங்குங்கங்கா நதிச்சடிலன்
ஓராயிரம் பூதப்படையோ டுயருங்காளி மனமயரப்
பேரா ரகமார்க் கத்தொழிலைப் பெரிதாப் பேயாப் பிறித்திலங்க
வாரானுமதா யாலங்காட்டி லரனுராடும் வகுப்பிதுவே. (உ௩)

### வெண்பா

வகுப்பு விலோகிதம்பின் வாழுஞ்சீ ரங்கந்
தகைப்புடைய தோர்மதனன் தாள—மிகப்பாரோர்
நண்ணு திரியச்சிரமிந் நான்குவரு மென்றுரைத்தார்
தண்ணளிசேர் கும்பமுனி தான். (உ௪)

### தரு

முடிகாணுதா னடிகாணு முராரி[1]காண அண்டருடன்
படி[2]மீதுறுவோர் பற்பலரும் பாடி வணங்கிப் பரவியிடத்
துடியூடனலு மழுமானுந் தோதீந் தீந்தோமெனவதிர
அடியார்க் கெளியானுலங்காட்டி லரனுராடும்
வாக்கியமிதே. (உ௫)

---

உஉ. வைப்பு என்னுந் தாண்டவத்திற்குரிய தாளங்கள் இச் செய்யுளிற் குறிக்கப்பட்டுள்ளன.

உ௩. (1) தாராகணம்—விண்மீன்கூட்டம்,

உ௪. வகுப்பென்னுந் தாண்டவத்திற்கு விலோகிதம், சீரங்கம் மதனன், திரியச்சிரம் என்னும் இந்நான்கு தாளங்களும் உரியவாம்.

உ௫. (1) முராரி—திருமால். (2) படி--பூமி.

வெண்பா

வாக்கியஞ்சீ னந்தனஞ்சொல் வாழ்பிரிதி சிங்கனந்தன்
தாக்கியவா ரோகிமட்டந் தன்னுடனே—வாக்கினுற்
சாற்றும் பரிக்கிரமஞ் சட்பிதா புத்திரிதம்
ஏற்றுமிரு மூன்றுமா மென். (உகூ)

தரு

தக்கித் தக்கிட கிடதகிதா தாதிரதுரதா தங்கிடதா
திக்கித் திக்கிட கிறகிறட திகிதிகி தகதக திகததகீ
தொக்கத் திதகீ தொகதொங்கா தொங்தோங்தொங்தோ
மென்றதிர
அக்கொக் கணியா லங்காட்டா னுடுங்கெவுத்த மிதுதானே (உஎ)

வெண்பா

கவுத்துவமுக் கோலொரொற்றுக் காண்செய் படையென்
றுவைத்துவா னுடுமதை யோர்ந்து—பவித்திரமாய்
ஆடினுள் காளியிதற் காகவுளச் சூதாக
வூடினுள் வாடி யுனி. (உஅ)

தரு

காதார் குழைநெக்கிட[1]வவனே கடிதிற்[2]காணுதெடுத் தணியும்
போதார் பாதன் வேதாந்தப் பொருளா னொருநா ளறியா தான்
சாதா ரித்தே சாக்கிரிகாந் தாரீ சீகா மரவிசைசேர்
ஆதா ரத்தா லாலங்காட்டில் அரனுராடுந் துணுக்கிதுவே. (உகூ)

வெண்பா

துணுக்குச்சாங் காப்பிரியஞ் சொற்கமல லோசன்
கணுக்கினிய நேர்தட்டங் கண்ண—னணிக்கம்
வருதெய் வசிகா மணிபடிமட் டஞ்சீர்
தருசெம்பொற் கோட்டமிவை தான். (௩0)

---

உகூ. வாக்கியம் என்னுந்தாண்டவத்திற்குச் சீனந்தனம், பிரிதி, சிங்கனந்தன், ஆரோகி மட்டம், பரிக்கிரமம், சட்பிதாபுத்திரிகம், என்னுந் தாளங்கள் உரியனவாம்.

உஅ. கவுத்துவம் என்னும் தாண்டவத்திற்கு முக்கோல்களும் ஓரொற்றும் அமைந்த தாளமும் செம்படையும் உரியன.

உகூ. (1) நெக்கிட—நெகிழ்ந்துகமல. (2) கடிதில்—விரைவில்

௩0. துணுக்கு என்னுந் தாண்டவத்திற்குச் சாங்காப்பிரியம், கமலலோசன், கண்ணன், தெய்வ சிகாமணி, படிமட்டம், செம்பொற் கோட்டம் என்னுந் தாளங்கள் வருவனவாம்.

வெண்பா

தெண்டபர தந்தனக்குச் சேர்சம்பை தாளமென
அண்டர்பிரா னன்பா லருள்செய்தான்—வண்டிசைகள்
நீடுமா லங்காட்டில் நித்தனுர் காளியுட
ஞடுபொருள் தாளமிவை தான். (௬௧)

வெண்பா

அண்டர்பிரா னம்பலத்தி லாடிப் பரதவிதங்
கொண்டதெல் லாம்பரவை கொண்டதற்பின்—தெண்டபதங்
கட்டினுன் அண்டரெல்லாங் காணுப் பதங்காணக்
கிட்டினு ரண்டத்தைக் கீண்டு. (௬௨)

ஆதியக மார்க்கவகை யம்பலத்தா ஞடும்விதம்
வாதிஞெடு காளிநட மாடுமதைச்—சோதியுன்னி
அண்டத்தைக் கீண்டயன்மால் யாவருங்கண் டேயிறைஞ்சத்
தெண்டபதஞ் சேர்த்தான் சிரம்.[1] (௬௩)

அகமார்க்கப் பொருள் தாண்டவம் பதினுறுக்கும் தருவும் தாளவெண்பாவும் முற்றும்.

---

௬௧. தெண்டபரதம் என்னும் தாண்டவத்திற்குச் சம்பை தாளம் உரியது.

௬௩. இச்செயலை ஊர்த்துவ தாண்டவம் என வழங்குவர்.

## பதினெண்தேசம்

### கலித்துறை

சிங்களஞ் சோனகஞ் சாவகஞ்சீனந் துளுக்குடகங்
கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கங் கலிங்கம்வங்கம்
கங்கமகதங் கவுடங் கடாரங் கடுங்குலிசங்[1]
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்புவி தாமிவையே. (க)

### வெண்பா

கடல்கிழக்குத் தெற்குக் கரைபொருவெள் ளாறு
குடதிசைக்குக் கோட்டைக் கரையாம்—வடதிசைக்கு
யேனாட்டுப் பெண்ணை[1] யிருபத்து நாற்காதஞ்
சோனாட்டுக் கெல்லையெனச் சோல்[2] (உ)

பாண்டிக்கு மேல்திசையே பன்றிமலை கீழ்கடலாம்
ஆண்டகையாய் தெற்கே யலைகடலாம்—நீண்ட
வடதிசைக்கு வெள்ளாறு மால்வழுதி நாட்டின்
இடமிதனைச் சொன்னா ரிவை. (ந)

---

க. சிங்களம்முதல் குலிசம் என்பது ஈருகவுள்ள பதினேழு நாடுகளும் தமிழகத்தைச் சூழ்ந்து விளங்கும் நாடுகளாம். 1. கடுங்குசலங்—பா. வே.

உ. சோழநாட்டின் எல்லைகூறுகிறது :—கிழக்கேகடல், தெற்கே பாண்டி நாட்டையடுத்து ஓடும் வெள்ளாறு, மேற்கே கோட்டைக் கரையென்னும் ஊர், வடக்கே தென்பெண்ணையாறு இவை சோழநாட்டின் எல்லைகளாம். 1. வடதிசையிலேனாட்டுச்செய்யான் பா. வே. 2. சோனாட்டு எல்லை யென்றேசொல் —பா. வே.

ந. மேற்கே பன்றிமலை, கிழக்கே கடல், தெற்கே கடல், வடக்கே வெள்ளாறு என்பன பாண்டிநாட்டின் எல்லைகளாம்,

வடக்குப் பருமலையாம்[1] வைகாவூர் தெற்குக்
குடக்குவெள் ளிப்பொருப்பங் குன்றங்[2]—கிழக்குக்[3]
களித்தண் டலையளவு காவிரிசூழ் நாட்டிற்[4]
குளித்தண் டலை[5]யளவுங் கொங்கு. (௪)

செங்கமா மேற்கு வடக்குநதி சேயாறு
பொங்கு கடல்கிழக்குப் பூண்முலையாய்—சங்கமூர்
வெள்ளாறு தெற்கு விளங்கு மகதையருக்
குள்ளான நாடென் றுரை. (௫)

சேயாறு தெற்குத் திருவேங்கடம் வடக்கு
மாயா கடல்கிழக்கு வாணுதலாய்—தூய
இடபகிரி மேற்கு விதுதொண்டை நாட்டின்
அடைவதனைச் சொன்னா ரவை. (௬)

நந்திமலை மேற்கு வடக்குநதி பெண்ணையாஞ்
சிந்துநெல்லிப் பட்டுடனே சேர்கிழக்கு—முந்திப்
பெருமலையே தெற்காம் பிறங்கு முரசற்
குரைசெயும்நா டென்றே யுரை. (௭)

---

௪. (1) பெரும்பாலை. (2) குடக்குப்பொருப்பு வெள்ளிக்குன்று. (3) கிடக்கு (4) நாட்டுக். (5) குழித்தண்டலை பா. வே.

குளித்தண்டலை இக்காலத்துக் குளித்தலை என வழங்கும்.

வெள்ளிப்பொருப்பங்குன்றம்-இக்காலத்து வெள்ளியங்கிரியென வழங்குவது.

௫. மேற்கே செங்கண்மா (செங்கம்), வடக்கே சேயாறு, கிழக்கே கடல், தெற்கே வடவெள்ளாறு (நிவாநதி) இவை மகத நாட்டின் எல்லைகளாம்.

௬. தெற்கே சேயாறு, வடக்கே திருவேங்கடம் (திருப்பதி), கிழக்கே கடல், மேற்கே இடபகிரி இவை தொண்டை நாட்டின் எல்லைகளாம். இப்பழம் பாடலால் வடக்கே திருவேங்கடம் முடிய வுள்ள நிலப்பகுதி தொண்டைநாடாகும் என்பது துணியப்படும்.

௭. மேற்கே நந்திமலையும் வடக்கே வடபெண்ணையாறும் கிழக்கே சிந்துநெல்லிப்பட்டு என்னும் ஊரும் தெற்கே பெருமலையும் முரசர் நாட்டின் எல்லைகளாம்.

காஞ்சிதிருக் கோவலூர் காவிரிப்பூம் பட்டினமாம்
வாஞ்ச மதுரைவளர் வஞ்சிநக—ராஞ்ச
முரசர் பதியரங்க முற்றுந் தமிழுக்
கரசர் பதியென் றறி. (அ)

தமிழ் நாட்டின் எல்லை விரிவு பிரமாணங் கண்டு கொள்க.

கற்றதுகை மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகிறாள்[1]—வெற்ற[2]
வெறும்பந் தயம்பேச[3] வேண்டாம்[4] புலவீர்
எறும்புந் தனகைக்கெண் சாண்.[5] (௬)

---

அ. இப்பாடல் தமிழகத்திலுள்ள நாடுகளின் தலைநகர்களைத் தொகுத் துரைக்கின்றது.

1. யோதுகின்றாள். 2. வெற்றி, மெத்த. 3. கூற. 4. வேண்டா. 5. எறும்புந்தன் கையாலெண் சாண். பா. வே.

இப்பாடல் ஔவையார் பாடியதென்பர். இதனைப் பரத சங்கிரக நூலாசிரியர் என்ன தொடர்பில் தொகுத்தார் என்பது விளங்கவில்லை.

# *பொருத்தவியல்பு

பகர்செய்யுள் மங்கலஞ்சொல் லெழுத்துத் தானம்
  பாலுண்டி வருணநாட் கதியே யென்றுய்ப்
புகரில்கண மெனப் பத்தும் பிறங்கு கேள்விப்
  புலவர்புகல் முதன்மொழிக்குப் புகல்வர் செம்பொற்
சிகரகிரி யெனப் பணைத்துப் புடைத்து விம்மித்
  திரண்டெழுந்து வளர்ந்திளகிச் செறிந்த கொங்கைத்
தகரமலர்க் குழற்கருங்கட் குமுதச்செவ்வாய்ச்
  சரிவளைக்கைக் கொடியென்னத் தயங்கு மாதே (க)

மாமணிதேர் புகழமுத மெழுத்துக் கங்கை
  மதிபருதி களிறுபரி யுலகஞ் சீர்நாட்
பூமலைகார் திருக்கடல்நீர் பழனம் பார்சொற்
  பொன்றிகிரி பிறவுமுதல் மொழிச்சீர்க்காகும்
நாமவகை யுளிசேர்தல் பொருள தின்மை
  நலமிலதாய் வைத்தல் பல பொருளாய்த் தோன்றல்
ஆமினிய சொல்லீறு திரிதல் போலும்
  ஆதிமொழிக் காகாவா னந்தமாமே. (உ)

---

*இத்தலைப்பிலுள்ள பதினொரு பாடல்களும் கி. பி. 16-ஆம் நூற்றாண்டினரான பரஞ்சோதியார் என்பவராலியற்றப்பட்ட சிதம்பரப்பாட்டியலில் பொருத்தவியலைச் சார்ந்தனவாகும். இசை நாடகப் பாடல்களை இயற்றுவோரும் அந்நூலிற் சொல்லிய பொருத்தங்களை மேற்கொள்ளவேண்டும் என்பதனை அறிவித்தற்பொருட்டு அந்நூற் பகுதி இங்கு எடுத்துச் சேர்க்கப்பெற்றுளது.

க. மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உண்டி, வருணம், நாள், கதி, கணம் என இப் பத்துவகையானும் செய்யுளுக்குப் பொருத்தம் கொள்ளப்படும்.

இச்செய்யுளின் பின்னிரண்டடிகளும் மகடூஉ முன்னிலை.

உ. மா, மணி, தேர், புகழ், அமுதம், எழுத்து, கங்கை, மதி, பரிதி, களிறு, பரி, உலகம், சீர், நாள், பூ, மலை, கார், திரு, கடல், நீர், பழனம், பார், சொல், பொன், திகிரி என்பனவும் இவற்றின் பொருளோடு தொடர்புடைய பிற சொற்களும் செய்யுளுக்கு முதலில் வரும் மங்கலச் சொற்களாம். இன்பமில் ஓசைப் பிரிவாகிய வகையுளிசேர்தலும் பொருளில்லாதனவும் நன்மையில்லாதனவும். அதுவோ இதுவோ என்று ஐயுறத்தக்க பலபொருளுடையனவும் ஈறுதிரிந்தனவும் ஆகிய சொற்களும் செய்யுளின் முதன்மொழிக்கு ஆகாதனவாம்.

ஆனவெழுத் தொன்பதே ழைந்துமூன்றும்
ஆகாதெட் டாறுநான் காதிச் சீர்க்கே
ஊனமில்லா அஆவும் இஈ ஐயும்
உஊ ஔ எஏயும் ஒஓவுந்தான்
தானமதை வகையாமந் தாதி தன்னில்
தலைவன்பேர் முதலெழுத்துப் பாலனாதி
மேனிரையெண் ணிற்பால குமார ராசர்
வேண்டிடும் வேண்டாவிருத்த மரணந்தானே. (௬)

மருவுகுறி லாணெடில்பெண் ணவரவர்க்கா மதுவே
மயங்கினுமாம் வரலாகா பேடொற் றுய்தம்
உரியகச தநபமவ வேழோ டாதி
யுயிர்க்குறில்நான் கிவையமுத மாதிச்சீர்க்கும்
அரியதசாங் கத்தயற்கு நலம தாகும்
அமுதமொழித் தல்லாத வெழுத்துங் கான்மாத்
திரையளபஃ கேனமுடன் மூன்று நஞ்சாய்ச்
செப்புமெழுத் திவையெல்லாந் தீதாமென்பர். (௭)

---

௬. ஒன்பது, ஏழு, ஐந்து, மூன்று ஆகிய எழுத்துக்களையுடைய சீர்கள் முதன்மொழிக்கு உரியன. எட்டு, ஆறு, நான்கு ஆகிய எழுத்துக்களையுடைய சீர்கள் முதன்மொழிக்குப் பொருந்தாதனவாம்,

அஆ, இஈ ஐ, உஊ ஔ, எஏ, ஒஓ என்னும் இவை முறையே தலைவன் பேர் முதலெழுத்து வருமாயின் பால, குமார, இராச, விருத்த, மரணம் என ஐவகைத் தானமாம். பால குமார ராசர் எனும் இவை மூன்றும் வேண்டப்படும். விருத்த, மரணம் விலக்கு தற்குரியன. 'உஊ-வும், எஏ-யும், ஒஓ ஔ-வும்' என்பது சிதம்பரப் பாட்டியலிலுள்ள பாடம்.

௭. குற்றெழுத்து ஆண்பால், நெட்டெழுத்து பெண்பால், இவை அவரவர்க்கே வரினும் விரவிவரினும் பொருந்தும். ஒற்று. ஆய்தம் என்பன ஆண் பெண் இரண்டிலும் சேராத பேடு எழுத்துக்கள். இவை முதன் மொழிக்குப் பொருந்தாதனவாம்; க ச த ந ப ம வ என்னும் ஏழு எழுத்துக்களுடன் அ இ உ எ என்னும் நான்கும் அமுதவெழுத்துக்களாம். இவை முதற்சீர்க்கும் தசாங்கத்திற்கும் நன்கு பொருந்துவன. இவையொழிந்த பிற எழுத்துக்களும் கால் மாத்திரையுடைய மகரக்குறுக்கம், அளபெடை, ஆய்தம் இம் மூன்றும் நஞ்செழுத்துக்களாம்.

ஈதிலுயி ரீராறு முதலொற்றாறுந்
திருமறையோர்க் கடைவேயொற் றாறும்வேந்தர்க்
கேதிலவ றனக்கள்வணி கர்க்காகு மற்றை
யெழுத்துளவை சூத்திரர்க்கா மியன்ற சாதி
ஓதிமன் றன் படைப்புயிரே யரன்மால் செவ்வேள்
உம்பர்கோன் பருதிமதி மறலி நீர்க்கோன்
காதலள கேசன்முத லிவ்விரண்டாய்க்
கம்முதல்மூ வாறொற்றுங் கருதிச் செய்தார். (௫)

கருதுமுயி ரடைவேநான் கைந்து மூன்று
கார்த்திகையே பூராட முத்தி ராடம்
உரைதருகவ் வரியினான் கிரண்டு மூன்று
மூன்றோண மாதிரையே புணர்தம் பூசம்
இருமைகொள்சவ் வரியினான் கைந்து மூன்றங்
கிரேவதி யசுபதி பரணி ஞகர மூன்றும்
வருமவிட்டந் தகரமிரண் டேழு மூன்று
வளர்சோதி விசாகமே சதய மன்னும். (௬)

---

௫. பன்னீருயிரும் க் ங் ச் ஞ் ட் ண் என்னும் ஆறொற்றும் அந்தணர்க்காம், த் ந் ப் ம் ய் ர் என்னும் ஆறும் அரசர்க்காம், ல் வ் ற் ன் என்னும் நான்கும் வணிகர்க்காம், ழ் ள் என்னுமிரண்டும் பின்னவர்க்காம். பிரமனாற் படைக்கப்பெற்றவை பன்னிரண்டுயிர்களும். ககர முதலாகவுள்ள மெய் பதினெட்டும் முறையே இவ்விரண்டாய் அரன், மால், முருகன், இந்திரன், சூரியன், சந்திரன், இயமன், வருணன், குபேரன் என்னும் ஒன்பதின்மராற் படைக்கப்பட்டன.

௬. அ ஆ இ ஈ—கார்த்திகை, உ ஊ எ ஏ ஐ—பூராடம், ஒ ஓ ஔ—உத்திராடம், க கா கி கீ—திருவோணம், கு கூ—திருவாதிரை, கெ கே கை—புநர்பூசம், கொ கோ கௌ—பூசம், ச சா சி சீ—இரேவதி, சு சூ செ சே சை — அசுவினி, சொ சோ சௌ—பரணி, ஞ ஞா ஞெ—அவிட்டம், த தா — சோதி, தி தீ து தூ தெ தே தை—விசாகம், தொ தோ தௌ—சதயம்.

சதிர்திகழ்நவ் வினிலாறு மூன்று மூன்றுந்
தருமனுடங் கேட்டையே பூரட்டாதி
திதமிகுபவ் வரியினுன் கிரண்டோ டாறுத்
திரமுதன்மூன் ருமவ்வி லாறு மூன்று
மிதின்மூன்று மகமாயி லியம்பூரந்தான்
யவ்வியாவுத் திரட்டாதி யூயோ மூலம்
உதவியவம் முதனுன்கு மொழிந்த நான்கும்
உரோகணியாம் மிருகசீ ரிடமாம் பேர்நாள். (௭)

பேர்நாளுற் பவநாளாதல் மூவொன்பான்
பிரித்தொன்று மூன்றைந்தே முாகா தெட்டாங்
கூரிராசியும் வயினு சிகமு மாகா
குறில் வன்மை யீறெழிக்கில் வானோர்க்காகும்
நேர்நெடிலின் முதனுன்கீ றில்லா மென்மை
நிலமக்கள் கதிமுதற்சீர்க்காகும் ஒஓ
ஏர்மருவும் யரலழற விலங்காமற்ற
வெழுத்து நரகர் கதிமுன்னிது வாராதால். (அ)

வானிலகு நேர்குருவே நிரையாம் வெண்சீர்
வரில்நபத வகணநாட் பரணிமும் மீன் [1]
ஊனமிலாப் புனர்பூசம் பூசம் வாணுள்
உற்றபுகழ் சூனியம் நோய் பலன்களாகுந்
தேனனையாய் வஞ்சிச் சீரடைவே நான்குந்
திகழ்சரம யகணநாட் சோதியாரல் [2]
தானமுறு கேட்டை சதயந்தான் கேடு
சாவுதிரு மகிழ்ச்சி பலன் தரத்தொடங்கும். (௯)

---

௭. ந நா நி நீ நு நூ--அனுடம், நெ நே நை—கேட்டை, நொ நோ நௌ--பூரட்டாதி, ப பா பி பீ--உத்திரம், பு பூ--அத்தம், பெ பே பை பொ போ பௌ--சித்திரை, ம மா மி மீ மு மூ--மகம், மெ மே மை--ஆயிலியம், மொ மோ மௌ--பூரம், ய யா—உத்திரட்டாதி, யூ யோ--மூலம், வ வா வி வீ உரோகிணி, வெ வே வை வௌ --மிருகசீரிடம்.

௯. 1. மும்மீன்—மிருகசீரிடம் 2. ஆரல்—கார்த்திகை.

துறக்கமதி வான்பருதி காய்ச்சீர் முன்னுஞ்
சூழ்காற்றுத் தீ நிலநீர் கனிச்சீர் பின்னும்
நிறுத்தகண மிவ்விரண்டாம் அகவற் சீரின்
நேரீறு வெள்ளைச்சீர் நிரைவஞ்சிச்சீர்
சிறப்புடையிவ் விரண்டுமாங் கணப்பேர் மற்றுந்
திகழியற்சீர்க் கயன்திருக்கோக்கருடன் முன்னும்
வெறுத்தபின்னுமாமென்ப திறைவனுட்கு
மேவுகண நாட்பொருத்தம் வேண்டுமாதோ. (௰)

ஆவதுமங் கலத்தேற்ற பரியாயச் சொல்
லடைகொடுத்து முதற்சீருக் கடுத்தசெய்யுண்
மேவுமுதலிடைகடை மங்கலச்சொல் வைத்தல்
விதியெழுத்துப் பால்வருண மயங்குமென்ப
வாவுமுதல் நற்கதியால் முன்னோர் நூலின்
மங்கலத்தால் நஞ்சுசில வமுதமாகுந்
தூவமுத மெனிற்கதியிற் பழுது போமேற்
றொடர்கலப்பா மிம்மரபின் றொடக்கஞ் சொல்வாம். (௧௧)

பொருத்த வியல்பு முற்றும்.

---

௰. கணம் எனினும் சீர் எனினும் ஒக்கும். முதற்கண்வருஞ்சீர் தேமாங்காயாயின் வான்கணமெனவும், கருவிளங்கனியாயின் நிலக்கணமெனவும், புளிமாங்காயாயின் சந்திரகணமெனவும், கூவிளங்கனியாயின் நீர்க்கணமெனவும் வழங்கும். இவை நான்கும் நல்லன என்பர். முதற்கண்வருஞ்சீர் கருவிளங்காய் ஆயின் அந்தரகணமெனவும் கூவிளங்காயாயின் சூரியகண மெனவும் தேமாங்கனியாயின் வாயுகணமெனவும் புளிமாங்கனியாயின் தீக்கணமெனவும் வழங்கும். இவைமுதற்சீராகவரின் தீதென்பர். நேரீற்று மூவசைச்சீர் வெண்சீர் எனவும் நிரையீற்று மூவசைச்சீர் வஞ்சிச்சீர் எனவும் வழங்கும். தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் இயற்சீர் நான்கிற்கும் முறையே அயன், திரு, கோ, கருடன் தெய்வமாமெனவும் கூறுவர்.

௧௧. முன் சொன்ன வற்றிற்குப் புறனடை.

முதன்மொழிக்குச் சீராவன

+தேர்மா மணிபுகழ் கங்கை பருதிசொற் சீருலகம்
பார்நாள் களிறு மலர்பூத் திருப்பழ னம்பரிநீர்
காரார் கடல்பொன் றிகிரி யெழுத்து மதிகடவுள்
தாராருந் தோகை விசும்பு கயல்முர சஞ்சங்கமே.

எ.-து. இந்தச் சீர் முப்பத்துமூன்றும் பாட்டுடைத்தலைவனுக்கு முதன்மொழிக்காமென்றவாறு.

* அஆவும் பாலன் இஈ ஐயுங் குமாரனும்
உஊஒள வும்ராச னும்பொருந்தும்—எஏ
விருத்தன்ஒ ஓமரண மென்றல் பொருந்தா
திருந்துமுதன் மாமொழிக்குச் சீர்.

எ.-து. இவை யைந்தில் பாட்டுடைத்தலைவனுக்குப் பால குமாரன் இராசன் இந்த எழுத்து முதன்மொழிக்குப் பொருந் தும். விருத்த மரணமும் பொருந்தாவென்பாதாம். (௨)

---

+தேர் முதலாகச் சங்கம் ஈறுகச் சொல்லப்பட்ட இச்சொற்கள் எல்லாம் பாட்டில் முதன்மொழியாக வருதற்குரிய மங்கலமொழி களாம்.

*அ ஆ – பாலப்பருவம், இ ஈ ஐ – குமாரப் பருவம், உ ஊ ஒள – இராசப்பருவம், எ ஏ – விருத்தப் பருவம் ஒ ஓ – மரணம். இவ்வைந்து தொகுதியுள் பாட்டுடைத் தலைவன் பெயரின் முத லெழுத்தமைந்த தொகுதியைப் பாலப் பருவமாக்கொண்டு அது முதலாக ஐந்து தொகுதியையும் முறையே எண்ணி விருத்த மரணம் என்பவற்றுக்குரிய எழுத்துக்களைப் பாடல் முதற்கண் விலக்குவது பிற்காலப் பாட்டியல் நூலுடையார் மரபாகும்.

# தேவதைரூப அவிநயம் *

மதிநதிச் சடிலர் வயங்குநன் னடத்தின்
கதியுறு பதினு ருங்கையிற் கவினத்
தேவதைரூபந் திகழுரைக் கவினயப்
பாவனை பாரிற் பகர்வன் விநாயகன்
ஆறுமுகவன் அயன் அரி அரன் மதன்
கூறுமிராமன் குலிசனே டையன்
உமைமந் தாகினி யுயர்திரு நாமகள்
அமைவுறு விந்தை யவமிகு சேட்டை
பிராமி நாராயணி பெறுகெவு மாரி
வராகி இந்திராணி மாயேசு வரியும்
அன்ன சாமுண்டி யமரர் காடுகாள்
பன்னுறுவசி ரதி பாற்பொது வர்மகள்
ஏரு மாதித்தன் எழில்மிகு சந்திரன்
வாகினங் காரகன் மலிபுதன் வியாழன்
தங்கிய சுக்கிரன் தயங்கிடு சனியும்
பொங்கு மிராகு புகழ்கே தக்கினி
அந்தக னிருதி யாரும் வருணன்
வந்த வாயு வளனிறை குபேரன்
ஈசா னன்னே டிவர்கள்நாற் பான்மூன்
றேசாத் தேவதைக் கிவையவி நயவிதிச்
சொல்லார் கணபதி தொகுங்காப் பாகுமுன்
அல்லார் குழல்கேள் அரும் பொருள் வகையே (க)

---

* தெய்வங்களின் உருவங்களைப் புலப்படுத்தும் மெய்ப்பாடுகளைக் கூறுவது.

க. இவ்வகவல் அவினயத்திற்குரிய தெய்வங்களின் பெயர்களைத் தொகுத் துரைக்கின்றது.

விநாயக னிலையே மேவு துதிக்கை
தனுது கரத்திற் றங்குறை கரமுந்
தத்தந் தொழில்கொடு தற்பண மாகி
யொத்த பதஞ்சம நிலையுறுவதுமே. (க)

விசாக னிலையே விளங்கிரு கையும்
உசாவுறு கத்திரி யாக்கி யுயர்த்தி
ஈராறு கரமுக மியல்புடன் காட்டல்
பாரா முறைபதம் பகரு மென்றனரே. (உ)

பிரமனிலையே பேசி லிடக்கை
விரவிய பதும கோசம் விளங்க
வலக்கை சந்தங்கிஷம் மார்புடன் பொருந்த
நலத்தகு பாதம் நற்சம னிலையே. (ந)

நெடுமால் நிலையே நிகரி லிருகரத்
தொடுதிரி பதாகைத் தொடுதோள் நிறுத்தி
இருகர மபய வரதமு மிசைய
மருவு சமனில வனபத முறுமே. (ச)

ஈசுவர னிலையே யெழில்வலப் பாதம்
மாசில் சதுர மாகி வயங்க
இடக்கை யிடக்கா லேந்திட வாம
நடிப்பொடு புசங்கமாய் நலமுட னிசைய
வலக்கை யராள மாகமற் றைக்கரம்
நிலைப்படு தன்ஞெழில் நிகழ்த்துமென் றனரே. (ரு)

இராம னிலையே இடக்கை சிகரம்
விராவிய வலக்கை மேம்படு கடகம்
போதுகு மேனிப் புனிதமாங் கமலப்
பாதஞ் சமனில யெனப்பகர்ந் தனரே. (சா)

இந்திர னிலையே யிடக்கை யராளம்
வந்திட நெற்றி வயங்க வலக்கை
திரிபதா கமதாய்த் திகழமேற் போய்விளி
கருதவரல் சிகரங் காட்டலென் றனரே. (எ)

---

க. தனுது—தனது.
உ. விசாகன்—முருகன்.

ஐய னிலையே யணிபெற இடக்கை
கொய்யுமலர் பற்பம் கோச மாக்கிக்
கடகா முகம்வலக் கையுற மதனின்
இடமுறு சதுரநிலை யென்றுரைத் தனரே (அ)

உமைநிலை யுரைக்கி லுயர்முலை நேரே
யமர்கட காமுக மாக விடக்கை
வலக்கை பதாகம தாக விகசிதப்
படுத்தி மேதினி நோக்கி விளித்து
அடுத்ததொரு பாதமுன் னுகுமென் றனரே. (௯)

மந்தா கினிநிலை மருவிலா யிரமுகம்
வந்திடு பானிற மாகுமெவ் வெவர்மன
முற்றுடன் கோடலினுலப்பில வனைத்தும்
பெற்றிடும் பதாகம் பெறும்பத நடையே. (௰)

திருமகள் நிலையே சேர்வ திடக்கை
கருதுங் கடகங் கபித்தம் வலக்கை
கவின்புனை வடிவுங் கருணைகூர் விழியுந்
தவம்புரி செல்வம் தருந்தின மும்பதம்
வையகத் தோரை வனப்பினு விலங்கச்
செய்யுமென்று செப்பினர் புலவர். (௰௧)

நாமகள் நிலைமை நவில்பத நடையே
யேமுறு கடக மிடக்கை வலக்கை
சதுர மாகித் தணந்துகி ரனைய
மதுரவாய் புனைதல் எனவகுத் தனரே. (௰௨)

---

அ. ஐயன்—ஐயனார்.

௰. மந்தாகினி—கங்கை.

௰௧. திருமகள்—இலக்குமி.

௰௨. நாமகள்—சரசுவதி.

விந்தை நிலையே மேவு மிடக்கை
மூந்து கடக முறையும் வலக்கை
சூசி யாகச் சுழல விழிதெற
ஆசில் நடைபத மாகு மென்றனரே. (௰௩)

சேட்டை நிலையே சேரிடங் கடகம்
நாட்டலர் பல்லவம் நாடும் வலக்கை
காதுங் கூர்விழி கலகம் விளக்குமென்
பாதங் கொடுநடை பாவுமென் றனரே. (௰௪)

பிராமி நிலையே பேசி விடக்கை
விராய சதங்கிஷங் கடகம் விளப்ப
வலக்கை யன்ன மாகப் பதாகம்
நலத்தகு மோர்பதம் நடையெனப் பகரே. (௰௫)

நாரா யணிநிலை நவிலிடக் கைமுலை
நேராய்க் கடகம் நிகழ்த்தி வலக்கை
திரிபதாகம் தரச் செயக்கணம் புடைசூழ்
உறமகிழ் பதநடை யுகக்குமென் றனரே. (௧௬)

கவுமாரிநிலை கருதும் வலக்கை
நவமா நடைபத முருவி லேற்றுப்
பதாக மாகப் பகரி லிடக்கை
விதாவித வளைவை மேவு மென்றனரே. (௧௭)

சீர்வராகிநிலை செறியஞ் சலிக்கையை
நேராய் நிறுத்தித் திரிபதாகையை
உய்த்துநெஞ் சருகே உயரவுந் தாழவும்
வைத்த லெனவே வகுத்துரைத் தனரே. (௧௮)

---

௰௩. விந்தை—துர்க்கை.

௰௪. சேட்டை—மூதேவி.

௰௫. பிராமி—சத்தமாதர்களுள் ஒருத்தி.

இந்திராணிநிலை யியம்பிடி லிடக்கை
வந்துகடக மாக வலக்கை
யலர்பல் லவமா யணிபெறப் பதநடை
யிலக வைத்த லெனவிளம் பினரே. (கக)

மாயேசு வரிநிலை வலக்கை யபய
மேயே ரிடக்கை விசைபுரி கடகக்
கைதனைப் பிடித்துக் கமலமென்பதமே
வையமீ தொன்றும் வகையதென் றனரே. (உ0)

சாமுண்டி நிலையே தயங்கு மிடக்கை
தோமில் பற்பம் கோசந் துலங்க
வலக்கை சிகரமாக விளங்க
மலர்க்கு நிகர்பத மதுகுஞ் சிதமாய்
வாய்தனை மடித்தே மதமுறும் பார்வை
ஆயது விளைத்த லாகுமென் றனரே. (உக)

தேவர்கள் நிலைப்பதம் திகழா விடமாய்
மேவிய வராளம் சுவஸ்த்தம் விளைத்தே
யிருகரமுங்கன லெழுகை போல
விழவி லெடுத்த லெனவிளம் பினரே. (உஉ)

காடுகாள் நிலையே கருதில்வா மக்கரம்
நீடு கடகமாய் நேர்முக நிறுத்தி
மன்சகோரமதாய் வலக்கை தாழ
வின்புறை பாத மன்னுமென் றனரே. (உங)

உறுவசி நிலைமை யுரைக்கிற் பாதம்
பெரிது மிடக்கை பெட்புறு கடக
வலக்கை யராளம் வரிநிகழ் நயனம்
நலத்தகத் திரித்த லெனநவின் றனரே. (உச)

---

ம்ரு. முதல் உக. வரையுள்ள சூத்திரங்களில் முறையே பிராமி, நாராயணி, கவுமாரி, வராகி, இந்திராணி, மாயேசுவரி, காளி ஆகிய சப்தமாதர்கள் நிலைபற்றிய அவினயங்கள் கூறப்பெற்றுள்ளன.

உங. காடுகாள் – காடுகிழாள் என்பதன் சிதைவு. காடுகிழாள் —கொற்றவை.

உச. உறுவசி – ஊர்வசி.

இரதி நிலைமை யிடக்கை காங்கூலந்
தருதல் வலத்துச் சார்கட கக்கை
பொருந்தி வீரம் புறைவடிவம்புகழ்
திருந்த மனத்திற் றிகழ நினைத்துக்
காதலன் மேலே கண்ணுற நோக்கிப்
பாதப் பெருவிரல் பார்த்தலென் றனரே. (உரு)

பொதுவர் மகளிர் பொருந்து நிலைதான்
விதமாய் விழியெண் டிக்கும் விளக்க
இடக்கை கடகமா யியல்பொடு மிளிர
மதர்க்கப் பிடித்து ம(று)த்து மெங்கணும்
பதாகை மேவப் பகருமென் றனரே. (உசா)

ஆதித்தனிலை யலர்க்கர மிரண்டும்
மோதிர கடக முகத்தில்வைத் தேவிழி
சீர்பெறப் பார்த்துத் திகழ்பதஞ் சமமா
யேருற நிற்றலெனவிளம் பினரே. (உஎ)

சந்திர னிலையே தண்பிறை யிடமே
முந்து கடக மாகி வலக்கை
சூசியாய் வளைத்துச் சுதைமுக மலர்பூண்
டாசில் பதஞ்சம மாகுமென் றனரே. (உஅ)

அங்கா ரகனிலை அணிகர மிரண்டுந்
தங்குஞ் சூசியுஞ் சந்தங்கிஷமு
முன்னாய்ப் பிடித்து மொழிபதஞ் சமமாய்
மன்னி நிற்றலெனவகுத் தனரே. (உகூ)

புந்திநிலைமை புகலி லிடக்கை
தந்திடு மராளஞ் சாரலர் பத்மம்
வலக்கை பேறும் பிறதர மண்மகள்
நலத்தகு பதஞ்சம னுடுமென் றனரே. (௩௰)

---

உரு. இரதி – மன்மதன் தேவி.
உசா. பொதுவர்மளிர்—ஆயர்குலப் பெண்கள்.
உஎ. ஆதித்தன்–சூரியன்
உகூ. அங்காரகன்–செவ்வாய்
௩௰. புந்தி–புதன்.

வியாழ னிலையே விளம்பில் வலக்கை
வயாவுறு மான்றலை யாகில் வலக்கை
அமர்ந்தசந் தங்கிஷ மாய்முனம் பிடித்து
நிமிர்ந்து நேரே நிற்றலென் றனரே. (௩௧)

வெள்ளி நிலைமை விளம்பிடக் கரங்கள்
தெள்ளிய சந்தங் கிஷமாய்ச் சிறக்க
முகந்தம் பிக்க மொய்விழி யமைத்தே
திகழ்ந்த தென்று செப்பினர் புலவர். (௩௨)

சனிதன் னிலையே தழலெழக் கண்கள்
பனிபடு மென்மலர்ப் பாதங் குந்தி
யந்தமா யிருகை யலர்பல் லவமுஞ்
சந்தங் கிஷமுமாய்த் தகவர்த் தனைசெய
வந்திடு மென்று வகுத்துரைத் தனரே. (௩௩)

இராகுவி னிலையே யிருபதங் குந்தி
விராய தரைமிசை மருவ விருகையில்
சற்ப சீரிஷஞ் சந்தங்கிஷமு மாய்ப்
பொற்புற நெஞ்சிற் பொருந்தலென் றனரே. (௩௪)

கேது நிலையே கேடி லிடக்கை
பேதமில் சூசி பெறுஞ்சந் தங்கிஷந்
தலைமா ரிருத்தித் தலைமிசை நேரே
நிலையாய் நிற்ற லெனநிகழ்த் தினரே. (௩௫)

அக்கினி நிலையே அனுங்கத் திரிகர
மிக்க சிரமேல் மேவ வலக்கை
ஓங்கிய பாத முயர்த்திக் காட்டிப்
பாங்குடன் சமனிலை பயிற லென்றனரே. (௩௬)

அந்தக னிலையிடக் கைசூசியதாய்ச்
சுந்தர வலக்கை தோன்ற மற்றக்கால்
சமனிலை யாய்க் கோறல் சார்ந்திடக் கண்கன்
அமருமா றென்றறி ஞோரறைந் தனரே. (௩௭)

௩௧. வியாழன்—தேவகுரு.
௩௨. வெள்ளி—அசுர குரு.
௩௭. அந்தகன்—இயமன்.

நிருதிதன் னிலைமை நேடிடி விடக்கை
மருவு பிறைக்கையை வைத்து வலக்கை
யிலதை யாக்கி யிருபதஞ் சமமாய்த்
தலமுற நிற்ற லெனச்சாற் றினரே (௩அ)

வருணன் தன்னிலை வலக்கை யபயம்
பொருவி லிடக்கை பொற்புடன் பதமாய்க்
கவிழ்ந்து சமபதங் கம்பித்ததிகை
உவந்து வருமென் றுரைத்தன ரிதற்கே. (௩௯)

அளகை வாழ் குபேர னருநிலை யுரைக்கில்
வளமிக வளர்தன மலிவுறப் படைத்து
இயக்கர்க் கிறையா யீசன் தோழமை
நயப்புறு முரிமை நண்ணியங் கதக்கை
கொண்டாகிக் குறித் தணிபதங்கொ
டெண்டிசை புரக்கு மென்றன ரிதற்கே. (௪0)

வாயுவி னிலைமை வலிமிகப் பொருந்தி
யேயு முருத்திசை யெங்கணுங் கருவிக்
கருமை நிறமாய்க் காணரா ளக்கை
பெருமை பெறுமெனப் பேசுவ திவைக்கே. (௪௧)

ஈச னிலைமையெண் டிக்குளா ரெவர்க்கு
மாசுறு தகற்றி வண்மைகள் நல்கி
யேருமுத் தலைவே லேந்திய கைகொடு
பாரசை யாப்பதம் பரவுமென் றனரே. (௪௨)

தேவதைகளுக்கு ரூப அவினய விதி முடிந்தது முற்றும்.

---

௩அ. நிருதி—திக்குப்பாலகருள் ஒருவன் (தென்மேற்குத் திசை யிவனுக்குரியது).

௩௯. வருணன்—மேற்றிசை காவலன்.

௪0. அளகை—குபேரனுக்குரிய அளாகாபுரி நகர்.

*சந்ததமும் புரியும் அனுஷ்ட்டாநவிதியின்பூசைத் தத்துவ
ரூபம்

செந்தமிழின் விருத்தமுமுன் சேர்பரத விரிவனைத்துந்
தேர்ந்துபொன்னின்

அந்தமெனப் பரதசார சங்கிரகந் தன்னொடவி னயக்
கிரந்தம்

நந்திசெய் தறம்வளர்த்தான் ஆசிரியத்தாற்புவிமேல்
நாட்டினனே.

---

*நாடோறும் செய்தற்குரிய கடமைகளைவிளக்கும் அனுட்டான விதி என்னும் நூலையும் சிவவழிபாட்டு முறை தத்துவரூபம் என்னும் பொருள்பற்றிய செந்தமிழ் விருத்தப் பாடல்களையும் முன்னர்ப் பொருந்திய பரசாத்திர விரிவெல்லாவற்றையும் ஆராய்ந்து வியாமுன் என்னுந் தேவகுருவின் துணிபு இதுவெனப் பரதசாரசங்கிரகம் என்னும் நூலுடன் அவினயக்கிரந்தம் என்னும் இந்நூலினையும் நந்தி பெருமான் முன்னுட்செய்தளித்ததுபோல அறம்வளர்த்தான் என்னும் ஆசிரியன் ஆசிரியப்பாவினாற்செய்து இவ்வுலகில் நிலைநிறுத்தினான் என்பது இச்செய்யுளிற் கூறிய பொருளாகும். இச்செய்யுளிற் குறிக்கப்பட்ட அவினயக் கிரந்தமென்பது மேற்கூறிய தேவதைகளுக்குரிய அவினய விதியினையே என எண்ண வேண்டியுளது. எனவே பரதசங்கிரகமாகிய இந்நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் அறம்வளர்த்தான் என்பதும் அவ்வாசிரியர் செய்த வேறுநூல்கள் அனுட்டானவிதி தத்துவரூபம் முதலியனவாம் என்பதும் இவ்வாசிரியர் சிவவழிபாட்டு முறைகளிற் கருத்துடைய நல்ல சைவர் என்பதும் உய்த்துணரற்பாலனவாம்.

# இராகம் முப்பத்திரண்டுக்கும் வெண்பா

*ஆண்ட வயிரவிபூ பாளஞ்சீ ராகமுடன்*
*தாண்டவிவி ராகபஞ்ச ரம்வசந்தன்—வேண்டியதோர்*
*மாளவிவங் காளம் வரும்நாட்டை யிவ்வெட்டும்*
*மேளமிகு மாணிராக மென்.* (க)

*வீசியதே வக்கிரியை மேகரஞ்சி யேகுறிஞ்சி*
*பேசில் வயிரவியின் பெண்ணாகும்—மாசில்*
*பலமா மலகிரி பௌளிவேளாகிரி*
*பெலமாம்பூ பாளத்தின் பெண்.* (உ)

*இந்தளமு காரிவல் லாத்தி யிவைமூன்றுஞ்*
*சந்தச்சீ ராகத்தின் தையலாம்—நந்தாத*
*வாச லளித்தைசங்க ராபரணம் வண்மையுள்ள*
*தேசிரா கத்தின தென்.* (ங)

*காணும் வராளிநா மக்கிரி கௌசியம்*
*பேணின் வசந்தத்தின் பெண்ணாகும்—வேணிலாக்*
*குண்டக் கிரிகெவுடங் குச்சரி மாளவியின்*
*பெண்டாட்டி யென்னப் பெறும்.* (ச)

---

க. பயிரவி, பூபாளம், சீராகம், ராகபஞ்சரம், வசந்தன், மாளவி, வங்காளம், நாட்டை என்னும் இவை யெட்டும் ஆணிராகம் எனப்படும்.

உ. தேவக்கிரியை, மேகரஞ்சி, குறிஞ்சி, இம்மூன்றும் பயிரவியின் மனைவிமார்களாம். மலகரி, பவுளி, வேளாகிரி இவை பூபாளத்தின் மனைவிமார்களாம்.

ங. இந்தளம் முகாரி, வல்லாத்தி இம்மூன்றும் சீராகத்திற்குரிய மகளிராம். லளிதை, சங்கராபரணம் தேசி என்பன ராகபஞ்சரத்திற் குரிய மகளிராம்.

ச. வராளி, நாமக்கிரி, கவுசியம் என்பன வசந்தத்திற்குரிய மகளிராம். குண்டக்கிரி, கெவுடம், குச்சரி என்பன மாளவி ராகத்தின் மனைவிமார்களாம்.

கா்ம்போ திதனுசி யாங்கன் னடகவுளை
தேன்பாவு வங்காளத் தின்தெரிவை—மேம்பாடா
மாயிலி நாரா யணகெவுளை கேதாரந்
தூய்நாட்டை யின்பெண்ணுய்ச் சொல். (ங)

முப்பத்திரண்டு ராகம் முற்றும்.

---

ங. காம்போதி, தனுசி, கன்னடகவுளை என்பன வங்காளத்திற்குரிய மகளிராம். ஆயிலி, நாராயணகெவுளை, கேதாரம் என்பன நாட்டை ராகத்தின் மனைவிமார்களாம்.

## பிரம்புலட்சணம்*

மூலமே வேதா முளைத்தண்டு மாவிஷ்ணு
ஓலைமுள் ளான துருத்திரனுஞ்—சால
எழுந்தகணு மாகேச னேயா மதனிற்
கொழுந்து சதாசிவமாய்க் கூறு. (௧)

அஞ்சுகணு வீசன் அதனடு வேநெடுமால்
விஞ்சிடுமஞ் சக்கரத்தால் மெய்ப்பிலற்றை—யஞ்சப்
பிடித்த கவுத்தமே பேசிஉல கெண்ண
எடுத்தவ னேவேதா வென். (௨)

அச்சமற ஆதிநின்று ஆடியதோர் தாண்டவத்தை
மெச்சுமதி மின்னைமிக வாட்டுவிக்க—முச்சாண்
அரைப்பிரம்பு மும்மூர்த்தி யாங்கவுத்து வத்தைத்
தரைக்குளெவ ரும்புகழத் தாக்கு. (௩)

ஆதி யொருசா ணதிற்றிரு மாலிருசாண்
நீதிப் பிரம னிலையரைச்சா—ணோது
மதுவார்ந்த கூந்தல் வரிநெடுங்கண் மாதே
இதுபிரம் பென்றே யெடு. (௪)

---

* நாடக அரங்கிற் பயிற்சிக்குரிய பிரம்பின் இலக்கணம் கூறும் பகுதி.

௧. மூலம் :—வேர். வேதா-பிரமன். பிரம்பின்வேர் பிரமாவாகவும் அதன் முளைத்தண்டு திருமாலாகவும் ஓலை முள் முதலியன உருத்திரனுகவும் அதன்கண் பொருந்திய கணு மகேசனுகவும் அதன் தளிர் சதாசிவனுகவும் கூறுதல் மரபென்பதாம்.

௨. அஞ்சக்கரம்—திருவைந்தெழுந்து. கவுத்தம் – கை.

௩. ஆதி—சிவன். மெச்சுமதிமின்—வியக்கத்தக்க அறிவையுடைய பரதத்தைப்பயிலும் பெண். முச்சாண் அரைப்பிரம்பு—மூன்றரைச்சாண் நீளமுள்ள பிரம்பு.

௪. ஆதி—சிவன். சிவனுக்கு ஒருசாணும் திருமாலுக்கு இரண்டு சாணும் பிரமனுக்கு அரைச்சாணும் ஆக அமைந்தது அப்பிரம்பென்பது கருத்து.

தானெடுத் தாட்டுவிக்குந் தக்கபர தப்பிரம்பி
லூன்படுத்தி ரண்டங் குலங்குறைந்து—மான்படுத்துங்
கண்ணியே யோரங் குலமே றினுமாகா
தன்னிலே சாவென்று சாற்று. (ரு)

எண்ணும் படிகேளா யெண்ணஞ் சிரண்டுவிரற்
பண்ணுபர தப்பிரம்பைப் பற்றினல்—பெண்ணமுதே
வான்தழைக்கும் பான்மதிகோ வையகமும் வாழ்வுண்டாம்
கோன்தழைக்கு மென்றே குறி. (சா)

வேத்திரத்தின் பாத விதமாம் விதிபரத
சாத்திரத்தின் மட்டளவுஞ் சாணளவும்—பாத்திரத்தின்
மண்டலத்தின் காலளவும் வைத்த படியளவுங்
கொண்டடிப்பார் கோலா லடி. (எ)

நட்டுவற்கு மூன்றரைச் சாண் நந்திக் கிரட்டிப்பு
முட்டிபுகும் பார்ப்பார்க்கு மும்மூன்றே—நிட்டையுடன்
பட்ட வரையெழுப்பும் பஞ்சாட் சரத்தோர்க்கு
மெட்டிலகு லட்சணமென் றெண். (அ)

பிரம்பு லட்சணம் முற்றும்.

---

ரு. இப்பிரம்பின் அளவில் ஓரங்குலம் குறைந்தாலும் கூடினு லும் சாவு முதலிய கேடுண்டாம் என்பது கருத்து.

சா. எண்ணஞ்சு இரண்டு விரல் பண்ணும் பரதப்பிரம்பு—நாற் பத்திரண்டு விரல் அளவாகச் செய்தமைத்த பிரம்பு. இத்தகைய பிரம்பால் நட்டுவன் ஆடல் பயிற்றுவித்தால் மழைபொழியும் நாட் டில் நல்ல வாழ்வுண்டாகும். அரசனும் நீடுவாழ்வான் என்பது கருத்து.

எ. வேத்திரம்—பிரம்பு.

அ. நட்டுவனுக்கு மூன்றரைச்சாண் அளவுள்ள பிரம்பு, நந்திக்கு ஏழுசாணளவு, பார்ப்பார்க்கு ஒன்பதுசாண், திருவைந் தெழுத்தை மந்திரித்துத் திருநீறணிவிக்கும் மாந்திரிகர்களுக்கு எண் சாண் அளவு என இவ்வகையாகப் பிரம்புகொள்க என்பது கருத்து.

*உடையே உமையாளாய் ஒசந்ததட்டு மகா தேவியாய்
நெடியகச்சு வாசுகியாய் நித்திச்சு
முத்தி அயன் மொலே கெச்சை முருகனென்று
பத்தி உன்னின் றெடுத்தாள் சத்தி—

*கஞ்ச மென்றுங் கொலத்துதிப்பெ னகலம் காண்பன்
கையொத்திக் கொம்பன்லயங் காட்டா நிற்பன்
விஞ்சுவெகு மானத்துக் கொடை யரர்வன்
மின்னுளேக் கால்பிடிப்பான் கைக்கோளனுவன்
வெஞ்சமுடன் ஒன்றுென் றடித்துப் பட்டு
மிகவலறிக் கூப்பிட்டுவர விளங்கும் பேச்சால்
அஞ்ச லென்னு சிவன்வடிவே ஆவிர்பின்
அரியதவம் பெற்றிடுவீர் ஆர்சொல்லீரே.

*வாழி பரதவிதி வாழி சிவன்நடனம்
வாழி யமரர்குமாம் வாழியே—வாழியிது
கற்றறிந்தோர் சொல்விப்போர் காதலுட னேநடனம்
வெற்றியுடன் செய்திடுவார் மேல்.

பரதசாத்திரம் முற்றும்

ஆகச்செய்யுள் வெண்பா விருத்தம்-கலித்துறை-அகவல் தரு - சதி - நிலக்கடை உள்படத்தொகை ௬௭௩ம்-சிவன்மலே யாண்டவர் துணே. சாரங்கசுவாமியார் பாதமே துணே. சிவமயம்.

---

*இவ்விரண்டு செய்யுட்களும் மிகவும் பிழைபட்டிருப்பதால் உண்மைப் பொருள் துணிய இயலவில்லை.

*இச்செய்யுள் பரதசங்கிரக நூலின் இறுதியிலுள்ள வாழ்த்துப் பாடலாகும். இதனல் இந்நூல் இதனுடன் நிறைவு பெறுகின்றதென்பது புலனும். இதன் இறுதியில் பாடற்றெகை குறித்துள்ளமையும் இதனை வலியுறுத்தும்.

# தாளவியல்

கொட்டாட்டுப்பண் குறித்துரைத் திடலயம்
விட்டிடாத் தாளவகை விளங்கிட வைங்கரன்
மட்டார் பொற்பதம் மலரிட் டிறைஞ்சிநூற்
றெட்டாய தாளத் தியலிசை நுகர்வமே.

பூமாதர் சச்ச புடத்திற் கிரண்டுதனு
நாமா தியல்நேர் நறும்புலித—மேமேவ
அட்டதிக்கோர் போற்றுமறி வுக்கறிவோர் தாளமிதற்
கெட்டன மாத்திரையா மே.

| ப ப | ஒ மா—அ. (௧)

சாச புடமே தனுவொடு சகண
மாசறு மாத்திரை யாறே யாகும்.

ப | | ப மா—௬, (௨)

சற்பிதா மின்கால் தகணமோ ரணியே
நற்புலித மாத்திரை நான்மூன் றுமே,

ஒ | ப | ப ஒ மா—௰௨. (௩)

சம்பொற் கேட்டம் சர்ப்பங் கணமின்
இம்பர்புகல் மாத்திரை யீரா றுமே.

ஒ ப ப ப ஒ மா—௰௨. (௪)

---

தாள இலக்கணம் கூறும் இந்நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

உற்கட் டிதமே யொருவி லிருபிறை
சொற்புல வீரே சொல்லாறு மாத்திரை.

ப ப ப  மா—௬. (௫)

ஆதி தாள மாகு மொருலகு
ஓதிய புலவீ ரொன்றே மாத்திரை.

|  மா—௧. (௬)

தற்பண நயன சக்கரந் தனுவே
மைப்பொரு குழலாய் மாத்திரை மூன்றே.

O O ப  மா—௩. (௭)

சச்சரி கண் துடி கண்கோ லெனமுறை
வைச்சிவை பதினெண் மாத்திரை யாமே.

O ல | O ல | O ல | O ல | O ல | O ல | O ல | O ல |

மா—௰அ. (௮)

சிங்க லீலைகோல் திரிதிகை சுழிநேர்
மங்கள மானே மாத்திரை மூன்றரை.

1OOO1  மா—௩இ. (௯)

கந்தற் பன்கதிர் மதிகா லிருபிறை
வந்த பாகத்தின் மாத்திரை யாறே.

OO1 ப ப  மா—௬. (௰)

சிங்கவிக் கிரமஞ் சிலைபுரநேர் மின்கால்
பங்கமில் சாபமின் பதினாறு மாத்திரை.

ப ப ப | ஒ | ப ஒ  மா—௰௬ (௰௧)

---

எ. நயனம்—கண். கண் இரண்டாதலின் நயனசக்கரம் என்றது இரு சுழிகளையுணர்த்தி நின்றது.

சீரங்கஞ் செவ்வே செகணமுயி ராகு
மேரங்கொள் மானே யெட்டே மாத்திரை.

| | ட ஒ | மா—அ (௰உ)
(| | ட | ஒ)

இரத லீலை யிருநேர் சிலையிணை
சரச மொழியாய் சண்முக மாத்திரை.

| | டி டி மா—௬ (௰௩)

ஆரங்கங் கதிர்மறை யருகிற் சிலையே
வார்தங்கு முலையாய் மாத்திரை நான்கே

0000 டி மா—௪ (௰௪)

பரிக்கிற மிருகண் பகரிரு நேர்சிலை
யரிக்குழல் மானே யஞ்சே மாத்திரை.

00| | ட மா—௫ (௰௫)

பிறத்தி யாங்கம் பிணைசிலை யகண
மறத்துணை விழியாய் மாத்திரை யெட்டே,

டட | ட | மா—அ. (௰௬)

கெசலீலை மூன்றுநேர் கீற்றுக் காலால்
இசையு நாலேகால் மாத்திரை யாகும்.

| | | H மா—௪வ. (௰௭)

திரிபின்னங் கால்சிலை சேர்பணி யாகும்
அரிமின் குழலாய் ஆறே மாத்திரை.

| டஒ மா—௬. (௰அ)

---

௰௩. சண்முகம் என்றது இங்கே ஆறு என்னும் எண்ணைக் குறித்தது.

வீரவிக் கிரம மிருகா லிருசுழி
வார மிக்கசிலை மாத்திரை யஞ்சே.

I I O O ı_ மா—ரு. (௰க)

அன்ன லீலைகா லம்பொற் றிரண்டினும்
இந்நிலம் இரண்டரை மாத்திரையாமே.

ı_ ı_ மா—உஇ. (உ௰)

வன்ன பின்னம் மதிகதிர் கணைசிலை
நன்னிலம் புகழும் நாலே மாத்திரை.

O O I ı_ மா—ச. (உக)

இராச சூடாமணி யிணைக்கண் நகணம்
இருமதி கோல்பிறை யெட்டே மாத்திரை.

O O I I I O O I ı_ மா—அ. (உஉ)

அரங்கத் தியோதன மொருசிலை ககணம்
வரந்தரு சேஷன் மாத்திரை பத்தே.

ı_ ı_ ı_ | ஒ மா—௰. (உங)

இராச தாளங் குருமின் னிணைமதி
பராசர்வில் லம்புயிர் பனிரண்டு மாத்திரை.

ı_ ஒ O O ı_ | ஒ மா—௰உ. (உச)

சிங்கவிக் கிறீடத மிணைநேர் பணிசிலை
புங்கவன் கணைசிலை புலிதம் பிறையுயிர்
பங்கமில் மாத்திரை பதினெட் டாகும்.

I I ஒ ı_ | ı_ ஒ ı_ ஒ மா—௰அ. (உரு)

வன்ன மாலி மறைசுழி யிருகோல்
இன்னகொம் பிணைகுரு வேழே மாத்திரை.

O O O O I I O O ı_ மா—எ. (உசா)

சதுரந் தகணஞ் சந்திர னிணையுயிர்
மதுரமொழி மின்னே மாத்திரை யெட்டே.

ட 1100 ஒ மா—அ. (உஎ)

திறிதியச் சிரவன்னஞ் சேர்கோ லொருவிழி
யறிவிருநேர் வக்கிர மாத்திரை யஞ்சரை.

ட 1100 ஒ மா—ருஇ. (உஅ)

மிச்சிர மும்மதி விழிமேற் றுடியும்
அச்சமில் மும்முறை யாருயிர் சிலைமதி
மெச்சிரு சிலையிணை நேர்பிறை யுடனே
வைச்சிரு பதுதான் மாத்திரை கால்குறை.

000ல 000ல 000ல ஒட00டட1ட மா-ய௲௸ (உகூ)

அரங்கப் பிரதிபக மரிய தகணம்
பரஞ்சிலை கணைபணி பத்தே மாத்திரை.

ட 11ட1ஒ மா—ய. (௩ய)

அன்ன நாதங்கோ லாருயி ரிருசுழி
பின்னுறு புலிதம் பெறுமெட்டு மாத்திரை.

| ஒ00ஒ மா—அ. (௩க)

சிங்க நாதஞ் சிறுகோ லிருகுருத்
தங்குநேர் தனுமாத் திரைதா னெட்டே.

1டட1ட மா—அ. (௩உ)

மல்லிகா மோதகம் வருமிரு காலுடன்
நல்ல மறைசுழி நாலே மாத்திரை.

110000 மா—ச. (௩௩)

---

